சைவ சித்தாந்தம்

(SAIVA SIDDHANTA)

டாக்டர் முத்துராமன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சைவ சித்தாந்தம்

டாக்டர் முத்துராமன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—657

சைவ சித்தாந்தம்

(மேற்பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்

டாக்டர் முத்துராமன், எம்.ஏ., பிஎச்.டி.,
தத்துவத்துறைத் தலைவர்,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—October, 1975

T.N.T.B.S. (C.P.) No. 657

© Government of Tamilnadu

SAIVA SIDDHANTA

DR. MUTHURAMAN

Price Rs. 5-10

Published by the Tamilnadu Text-book Society under the Centrally sponsored scheme of production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture) New Delhi.

Printed by
Nathan & Company,
Main Road, Velacheri,
Madras—600042

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினைந் தாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தை யும் தமிழிலேயே கற்று வருகின்றனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய் துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்று விப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும், சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டம் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **'சைவ சித்தாந்தம்'** என்ற இந் நூல் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **657**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **692** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப் படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும், கலையியற் பாடங்களை யும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களை யும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளி தாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ், எங்கும் தமிழ்' என்ற குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு, தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களை யும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

			பக்கம்
1.	சைவ சித்தாந்தத்தின் அமைப்பு	...	1
2.	சிவஞானபோதம்	...	5
3.	அளவை இயலும் அறிவளவை இயலும்	...	13
4.	ஆன்மாவின் உண்மை	...	26
5.	ஆன்மாவின் இயல்புகள்	...	31
6.	பாசத் தளைகள்	...	38
7.	கட்டுண்ட ஆன்மாக்களின் நிலைமை	...	57
8.	இறை உண்மை	...	82
9.	சிவ — சத்தி மகிமை	...	96
10.	பண்டைத் தமிழர் சமய வாழ்க்கை	...	110
11.	சமய வாழ்வில் குருவின் சிறப்பு	...	138
12.	சைவ சமய நெறிகள்	...	145
	மேற்கோள் நூற்பட்டியல்	...	165
	கலைச்சொற்கள்	...	168

(சென்னைக் காட்சிமனையாளர் உரிமை பெற்றது)

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். — திருக்குறள்

1. சைவ சித்தாந்தத்தின் அமைப்பு

உலகம் என்று குறிப்பிடும்பொழுது, உலகில் வாழும் எல்லா உயிரினங்களைக் குறிப்பிட்டபோதிலும், அவற்றில் சிறப்பாகச் சுட்டிக்காட்டப்படுவது ஆறு அறிவைப் பெற்ற மானிட உயிர் களைத்தான். மனிதன் மற்ற உயிரினங்களிலிருந்து வேறுபட்டு விளங்குவதற்குக் காரணம் ஆறு அறிவையும் ஒருங்கே அமையப் பெற்றிருப்பதாகும். அதனால்தான், மனிதன் உயர்திணையில் வைக்கப்பட்டுள்ளான். தான் பெற்றுள்ள ஆறுவது அறிவாகிய பகுத்தறிவாலும், அதனைச் செம்மையாகப் பயன்படுத்துவதாலும் மனிதன் மனிதனாகிறான்; இல்லையேல், மற்ற உயிரினங்களுக்குச் சமமாகி விடுகிறான்! எனவே, பகுத்தறிவைப் பயன்படுத்திச் சிந்தனையைச் சீராக வளர்க்கும்போதுதான், மனிதன் தன்னுடைய நிலையை அடைவதற்கு மட்டுமல்லாமல், மற்றவர்களைப் பற்றி உணர்ந்துகொள்வதற்கும், அவ் வுண்மையை உலகத்திற்கு எடுத்துச் சொல்வதற்கும் தகுதியடைகிறான். அதன் பயனாகவே தான் வாழும் நிலையையும், தன்னைப் போன்றோர் வாழும் நிலையையும் தன்னலமற்ற நிலையிலிருந்து சீர்தூக்கிப் பார்க்கிறான். அதன் விளைவாகவே உலகவாழ்வின் உண்மைநிலையை உணருகிறான்; அதாவது மானிடவாழ்வு என்பது எதிர்பாராமல் ஏற்படும் ஓர் நிகழ்ச்சி (Accident) அல்லவென்றும் அதனை ஊக்குவிக்கும் உயர்ந்த கோட்பாடுகளையும், அவற்றிற்கெல்லாம் மூலமாக உள்ள உண்மைப்பொருளையும் உணருகிறான். அந்த உண்மைப் பொருளை ஒரு மனிதன் எந்த அளவுக்குத் தன்னுடைய வாழ்க்கையில் உணர்ந்துகொள்ள முற்படுகிறானோ அந்த அளவுக்குத் தன்னுடைய ஆன்மிக வாழ்க்கையையும் உயர்த்திக்கொள்ளுகிறான்; அதன் விளை வாக மற்றவர்களுக்கும் பயன்படுகிறான். அந் நிலையில்தான் பிறருடைய வணக்கத்திற்கும் உரியவனாகிறான்.

ஒரு மனிதன் எப்பொழுது பிற மக்களால் போற்றப் படுகிறான்? தான் புரிந்த செயல்கள் தன்னலமற்றனவாய், அச்

செயல்களினால் பிறருக்கு நன்மைபயக்கும்போதுதான், பிறருடைய வாழ்த்துக்கும் வணக்கத்திற்கும் உரியவனாகிறான். இப் பேருண்மையைச் சில உதாரணங்கள் மூலமாக விளக்க முற்படுகிறேன்: சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்துவிட்டுச் சென்ற புத்தரையும், அதன் பின்பு வாழ்ந்த இயேசுவையும், முகமது நபியையும் மக்கள் வாழ்த்துகின்றனர்; வணங்குகின்றனர். ஏன்? அப் பெரியோர்கள் விட்டுச் சென்றுள்ள செல்வம் மனித இனத்திற்கே பயன்படும் அழியாச் செல்வமாகும். அவ்வாறான அழியாச் செல்வங்களைப் பெறுவதற்கு, மனிதன் தன்னுடைய சிந்தனையைப் பயன்படுத்தும்போதுதான், மக்கள் இனத்திற்கே அவன் ஒரு வழிகாட்டியாய் அமைகிறான். இந் நிலையைத்தான் நம் முன்னோர்களாகிய பண்டைத் தமிழ் மக்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெற்றிருந்தனர் என்ற உண்மை, அவர்கள் விட்டுச் சென்றுள்ள அழியாச் செல்வங்களாகிய தொல்காப்பியம், திருவள்ளுவம், திருமந்திரம் போன்ற நூல்களிலிருந்து தெரிய வருகின்றது. அந் நூல்களிலேயே கூறப்பெற்றுள்ள கருத்துகளை ஆழ்ந்து ஆயும்பொழுது, அக் காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் வாழ்வின் நிலைகளையும் ஒருங்கே சேர்த்து இயக்கும் மேலான ஒரு பொருள் உண்டென்பதை உறுதியாக நம்பினர்; அதனைப் பற்றிய தீவிரமான ஆராய்ச்சிகளையும் செய்யத் தலைப்பட்டனர். அதன் விளைவாக, அம் மேலான பொருள் மனிதனுடைய சிந்தனைக்கு அப்பாற்பட்டதென்றும், அப் பரம்பொருளே யாவற்றையும் இயக்குகிறதென்றும் உணர்ந்தனர். எனவேதான், அப் பொருளுக்கு 'உள்ளத்தைக் கடந்தது' என்னும் கருத்தில் 'கடவுள்' என்றும், எல்லாவற்றையும் இயக்குவது என்னும் கருத்தில் 'இயவுள்' என்றும், எக் காலத்தும் நிலைத்திருப்பது என்னும் கருத்தில் 'இறைவன்' என்றும் பெயரிட்டு வழங்கினர்.[1] இப் பெயர்கள் தமிழில் காணப்படும் மிகவும் பழமையான சொற்கள் என்பதும் கவனிக்கற்பாலது. இதற்குச் சான்றாக மொகஞ்சோதாரோ முத்திரைகளில் 'கடவுள்' என்னும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளதைப் பாதிரியார் ஹெரஸ் என்பார் எடுத்துக்கூறியுள்ளார்.[2] மொகஞ்சோதாரோவில் கண்டெடுக்கப்பட்ட திருஉருவம் ஒன்று, கடவுள், பசுபதி என்னும் கருத்தினைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்துள்ளது என்பதைப் புதைபொருள் ஆராய்ச்சி வல்லுநர் ஒப்புக்கொண்டுள்ளனர். மேலும், அத் திருவுருவம் யோகத்தில்

[1] தொல்காப்பியம்—பொருளதிகாரம்—சூத். 4.

[2] தமிழ் இந்தியா — ந. சி. கந்தையாப்பிள்ளை, பக். 192. குறிப்பு—தமிழர் சரித்திரம், பக். 19.

அமர்ந்திருக்கும் திருக்கோலத்துடனுமுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவற்றிலிருந்து, அக் காலத்தில் வாழ்ந்த மக்கள் சிந்தனையைச் செம்மையாக வளர்த்ததோடுமட்டுமல்லாமல், அவற்றை அடக்கியாளும் செயல்முறைகளையும் அறிந்திருந்தனர் என்பதும், உயிர்களின் உண்மை நிலை, உலகத்தின் தன்மை, இவ் விரண்டினையும் அதிட்டித்து நிற்கும் இறைவனின் பெருமை ஆகிய முப்பொருள் உண்மைகளையும் உணர்ந்திருந்தனர் என்பதும் நன்கு புலனாகும். அம் முப் பொருள்களே உலகின் அடிப்படை உண்மைகளாகும். அப் பொருள்களுக்கு இலக்கணம் கூறி, அவற்றின் சிறப்பான கருத்துகளை வளர்த்தவர்கள் பொதுவாகப் பண்டைத் தமிழ் மக்களென்றும், சிறப்பாகச் சித்தர்களென்றும் குறிப்பிடுவர். உதாரணமாகக் கூறுவோமாகில், முப் பொருள்களின் தன்மைகளை வரையறுத்து முறைப்படுத்தப் பட்டதே சைவ சித்தாந்தம் என்று திருமந்திரம் எடுத்துக் கூறுகிறது.

சடப்பொருளாகிய உலகம், சித்துப் பொருள்களாகிய உயிர்கள், இவற்றை இணைத்து இயக்கும் இறைவன் ஆகிய முப் பொருள்களில் முதலிடம் பெறுவது இறைவனாகும். அது மனிதனின் சிந்தனைக்கு அப்பாற்பட்டதாக விருந்தாலும் அதனைக் 'கடவுள்' என்றும் 'கந்தழி' என்றும் தொல்காப்பியம் பெயரிட்டழைக்கிறது. அக் கருத்தினையே உவமானத்தின் மூலமாகத் திருவள்ளுவரும் விளக்கிக் கூறியுள்ளார்:[3] 'எவ்விதம் எழுத்துகளெல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளனவோ அதைப்போலவே, உலகமும் ஒரு முதற்பொருளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.' இவ்வெடுத்துக்காட்டின் மூலமாக இறைவனின் முழுமுதல்தன்மையையும், அடிப்படை அமைப்பையும், எல்லாவற்றிலும் நிறைந்தும் மேலோங்கியும் நிற்கும் இறை உண்மையையும் வள்ளுவப் பெருமகனார் உணர்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அம் முழுமுதற்பொருளை, 'சிவம்' என்று குறிப்பிட்டனர் சைவப் பெருமக்களாகிய மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகியோர். இப் பெரியோர்கள் சைவசமய குரவர்கள் என்று பழங்காலத்தில் போற்றப்பட்டனர். இவர்களுடைய சேவைகளும் வாழ்க்கை வழிமுறைகளும் பின்பு விளக்கமாக விவரிக்கப்படும். இப் பெரியோர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பே தேவாரம், திருவாசகம் என்று வழங்கப்படுகிறது. தேவர்களின் தேவனாகிய சிவபெருமானுக்கு அணிவிக்கப்பெற்ற புகழ்மாலை என்பதே தேவாரம் என்பதன் பொருளாகும்.

[3] **அகர முதல வெழுத்தெல்லா மாதி**
பகவன் முதற்றே உலகு. — திருக்குறள் (1)

இவ்வாறு தமிழ் மொழியோடும் தமிழர் மரபுகளோடும் இணைந்து, பழங்காலந்தொட்டு வளர்ந்துவந்த சைவசமயக் கருத்துகள் 13ஆம் நூற்றாண்டில் மீண்டும் மறுமலர்ச்சி பெற்று ஓர் உன்னதத் திருப்பம் அடைந்தன என்று கூறினால் அது மிகையாகாது. ஏனென்றால், 13ஆம் நூற்றாண்டு, சைவசமயக் கருத்துகள் வலிமைபெற்று வளர்ச்சியடையத் தொடங்கிய காலமாகும். அதன் விளைவாகவே சைவ சித்தாந்தம் புத்தொளியும் புதுமலர்ச்சியும் பெற்றதெனலாம். அதற்குத் துணைபுரிந்த சைவப் பெரியோர்களுள் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவர் மெய்கண்ட தேவர் என்பவராவார். அவர், இறையருளால் இயற்றிய நூல் 'சிவஞானபோதம்' என்பதாம். அவருடைய காலத்திலேயே தோன்றிய பல சைவத் தமிழ் நூல்களுள் சிவஞானபோதமே முதலிடம் பெற்றிருப்பது என்பதையும் வாசகர்கள் கவனத்திற் கொள்ளவேண்டும். மெய்கண்டதேவர் 1234ஆம் ஆண்டில் தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருவெண்ணெய்நல்லூரில் வாழ்ந்த ஒரு சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவர் என்பதும், அவருடைய இயற்பெயர் சுவேதவனப் பெருமாள் என்பதும் சரித்திரச் சான்றுகளாகும்.

மேலும், சிவஞான போதத்தின் கருத்துகளை விவரித்து விளக்க எழுந்த சிவஞானபாடியம் என்னும் நூல் 1750-ல் எழுதப்பட்டதாகும். அதனை இயற்றியவர் சிவஞானமுனிவர் என்பவராவார். அறநூல்களாகிய நாலடியார், திருக்குறள் முதலியவற்றின் கருத்துகளை மேற்கோளாகக்காட்டி, சிவஞானமுனிவர் தம்முடைய நூலை அமைத்திருக்கிறார் என்பதும் கவனிக்கற்பாலது. அக் காலத்திலேயே புகழோடு அமைந்து சைவசமயக் கருத்துகளைத் தமிழ்மக்களிடத்திலே பரப்பிவந்த திருவாவடுதுறை ஆதீனத்துடன் சிவஞான முனிவர் மிகவும் தொடர்புகொண்டவர் என்பதும், சைவசித்தாந்தத்தின் தத்துவ உண்மைகளை விவரித்து விளக்கும் அரிய பல இலக்கிய இலக்கண நூல்களைத் தமிழில் இவர் எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கனவாம்.

2. சிவஞானபோதம்

சிவஞானபோதம், முப் பொருள்களின் உண்மையையும் அவற்றின் இலக்கணத்தையும் எடுத்துக்கூறும் பொதுப்பகுதியை யும், வீடுபேற்றிற்குரிய ஞானநெறியினையும் அதன் பயனையும் எடுத்துக்கூறும் சிறப்புப் பகுதியையுமுடைய முழுமுதற் சைவ சித்தாந்த நூலாகும். பன்னிரண்டே சூத்திரங்களைக் கொண்ட இந் நூலின் அமைப்பும் அவற்றின் ஆழமான தத்துவக் கருத்து களும் ஊன்றிக் கவனிக்கற்பாலன. தமிழ்மொழிக்கு எவ்வாறு பன்னிரண்டு உயிர் எழுத்துகள் அமையப்பெற்றுள்ளனவோ, அதைப் போன்றே இந் நூலும் பன்னிரண்டு சூத்திரங்களையுடையதாகும். ஒவ்வொரு சூத்திரத்திற்கும் கருத்துரை விளக்கப்பட்டிருப்பதுடன் அச் சூத்திரத்தின் பகுதிகளைக் காரண உதாரணங்களோடு கூடிய அதிகரணங்களாகவும் அமைத்து இந் நூல் வடிவுபெற்றுள்ளது. உதாரணங்களாகக் கூறப்பட்டுள்ள செய்யுள்கள் எண்பத்தொரு வெண்பாக்களாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவையடக்கம் ஒரு வெண்பாவாலும், காப்பு ஒரு வஞ்சித்துறையாலும் கூறப் பட்டுள்ளன. முதல் மூன்று சூத்திரங்கள் பிரமாணவியலைக் குறிப்பதாகும். அடுத்த மூன்று சூத்திரங்கள் இலக்கணவியலைக் குறிப்பதாகும். ஏழு, எட்டு, ஒன்பது ஆகிய சூத்திரங்கள் சாதன வியலைப்பற்றியதாகும். இறுதியில் உள்ள மூன்று சூத்திரங்களும் பயனியலைப் பற்றியதாகும்.

இனி ஒவ்வொரு சூத்திரத்திலும் சொல்லப்பட்டுள்ள கருத்துகளைச் சுருக்கமாக விவரிப்போம். முதற் சூத்திரத்துள் இறை உண்மையும், எல்லாவற்றையும் ஒடுக்கி மீளத் தோற்று விக்கும் முழுமுதற் கடவுள் சிவமே என்பதும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன. இரண்டாவது சூத்திரத்துள், இறைவன் ஆன் மாக்களுடன் தொடர்புகொண்டுள்ளமையும், அதன் காரணமாக ஆன்மாக்கள் தங்களுடைய வினைப்பயனை நுகரும் முறைமையும், மலபந்தத்தினால் உயிர்களுக்கு ஏற்படும் பிறப்பு இறப்பு முதலிய

நிகழ்ச்சிகளும் கூறப்பட்டுள்ளன. சட உலகத் தோற்றம், ஒடுக்கம் ஆகியவற்றிற்குக் காரணமான மலங்களாகிய இருவகை மாயை, ஆணவம் ஆகியவற்றின் தன்மைகளை முதற்சூத்திரத்துள்ளும், இருவினை உண்மையை இரண்டாம் சூத்திரத்துள்ளும் குறிப்பிட்டுள்ளதும் கவனிக்கற்பாலது. மூன்றும் சூத்திரத்தில், ஆன்ம நிச்சயம் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. நான்காம் சூத்திரத்தில், ஆன்ம இலக்கணம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மல மறைப்பால், ஆன்மா, அறிவு விளங்கப்பெறுத நிலையில், பசு எனப் பெயர்பெற்று, கேவல அவத்தையில் நிற்பதாயும், தத்துவங்களோடு கூடிய நிலையில் அது சகல அவத்தையில் நிற்பதாயும், மலபந்தங்கள் நீங்கிய நிலையில் அது சுத்தாவத்தை அடைகின்றதென்றும் கூறப்பட்டுள்ளது. அவத்தைகளைச் சுட்டிக்காட்டிய முறையிலேயே அவை நனவு, கனவு, துயில், துரியம், துரியாதீதம் எனப்படும் ஐவகை நிலைகளையும் பெற்றுள்ளனவாம் என்பதும் கவனிக்கற்பாலது. ஐந்தாம் சூத்திரத்தில், தத்துவங்களெல்லாம், முன் குறிப்பிட்ட அவத்தைக்குள்ளாகும் ஆன்மாவின் தொழில் செய்வதற்கண் கருவியாகி நிற்குந்தன்மை கூறப்பட்டுள்ளது; அதன்மூலமாக, பாசவியல்பும் சொல்லப்பட்டுள்ளது. அந் நிலையில், ஆன்மாக்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆறுஞ் சூத்திரத்தே சட உலகின் நிலையாமையைக் குறிப்பிட்டு, அதனை அசத்து என்றும், இறைவனே சத்து என்றும், அதுவே என்றும் நிலைத்து நிற்பதென்றும் உண்மைகள் வெளியிடப்பெற்று, இறைவனின் தன்மைகளும் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளனவாம். இதுகாறும் கூறியவற்றிலிருந்து, முதல் ஆறு சூத்திரங்களும், முப்பொருள்களின் பொதுவியல்புகளை உணர்த்துதலால் அவை பொதுவெனப்படும். பின் ஆறு சூத்திரங்களிலும் முப்பொருள்களின் சிறப்பியல்புகளைக் கூறுவதால் அவை உண்மை எனப்படுமாம்.

ஏழாஞ் சூத்திரத்துள் அசத்தாகிய உலகத்தையும், சத்தாகிய இறைவனையும் குறிப்பிட்டு, இவ் வுண்மையை உணர்ந்த ஆன்மா, இறைவனையே அணுகவேண்டிய சாதனைகள் கூறப்பட்டுள்ளன. எட்டாஞ் சூத்திரத்துள் ஓர் அழகான உவமானத்தின்மூலமாகத் தத்துவ உண்மைகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன: ஆன்மா ஐம்புலன்களின் வழியே செல்லுதலால் தன்னையும் தலைவனையும் (இறைவனை) அறியாது நிற்குமாம்; அவ் வைம்பொறி வழிகளினின்று நீங்கி ஒருமுகமான தவநிலையில் நின்றால்தான் உண்மைப் பொருளை உணரமுடியுமாம். அத் தவநிலையிலுள்ள ஆன்மாவுக்கே, இறையருளால் குருவின் உபதேசம் கிடைக்கப் பெறுமாம். இவ்வாறு பற்றறுத்தல், ஞானபோதனை பெற்று

நற்சாதனைகள் புரிதல் முதலியன எட்டாஞ் சூத்திரத்தில் உபமானத்தின்மூலமாகச் சொல்லப்பட்டுள்ளன. இவை யாவற்றினுலும் ஆன்மாவுக்கு ஏற்படும் நன்மைகள் ஒன்பதாம் சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு நற்சாதனைகளைத் தொடர்ந்து அநுட்டிப்பதின் பயனுக ஆன்ம சுத்தியும் ஞானவிளக்கமும் ஏற்படவிருக்கின்றன. அந் நிலையில் உபாசனையும் தேவைப்படுகிறது. முக்கியமாகத் திருவைந்தெழுத்தைக் கணித்தல் வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இவை யாவற்றின் முதற்பயன் மல உபாதைகளால் ஆன்மா பாதிக்கப்படமாட்டா என்பதே பத்தாம் சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது. மலநீக்கத்தின் மறுபக்கம் ஆன்மா சிவப்பேறு எய்துவதே என்ற உண்மை பதினென்ருஞ் சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளதாகும்; இதனைச் சீவன் முத்திநிலை என்று கூறுவர். அவ்வுயரிய நிலை எய்தியபோதிலும், முத்தன் சமூகத்தில் இருந்துகொண்டே நற்பணிகளைச் செய்துவர வேண்டுமென்றும், அப் பணிகள் யாவும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்யப்படவேண்டுமென்றும் பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன. சுருங்கக்கூறின், பொதுவாக, நல்லோர் சேர்க்கையும், சிறப்பாகச் சைவ அன்பர்களின் கூட்டுறவும், அவர்களுடைய திருவேடமும், திருக்கோயிலும் எல்லாம் வல்ல இறைவனின் அருட்சாயலே எனக் காணும் வழிபாடும், சிவப்பேற்றினை நிலைநிறுத்துவான் நிகழுமென்பது பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் குறிப்பிட்டுள்ள உண்மைகளாகும். இவ்வாறு பதினுன்கு சைவசித்தாந்தத் தமிழ்ச் சாத்திரங்களுள் முதலாவதாகக் கருதப்படும் சிவஞானபோதம் விளக்கிக் கூறப்பட்டது.

பதினுன் சாத்திரங்களும் பின்வருவன :

1.	சிவஞானபோதம்	..	மெய்கண்டதேவர்
2.	சிவஞான சித்தியார்	..	அருணந்தி சிவாசாரியர்
3.	இருபா இருபஃது	..	அருணந்தி சிவாசாரியர்
4.	உண்மை விளக்கம்	..	மனவாசகங் கடந்தார்
5.	திருஉந்தியார்	..	உய்யவந்த தேவர் (திருவியலூர்)
6.	திருக்களிற்றுப்படியார்	..	உய்யவந்த தேவர் (திருக்கடவூர்)
7.	திருவருட்பயன்	..	உமாபதி சிவாசாரியர்
8.	சிவப்பிரகாசம்	..	,,

9. போற்றிப் பஃறொடை .. உமாபதி சிவாசாரியர்
10. வினா வெண்பா .. ,,
11. கொடிக்கவி .. ,,
12. நெஞ்சுவிடு தூது .. ,,
13. உண்மைநெறி விளக்கம் .. ,,
14. சங்கற்ப நிராகரணம் .. ,,

மேலே குறிப்பிட்டுள்ள பதினான்கு சைவசித்தாந்த சாத்திரங்களைப் பற்றியும், அவற்றில் சிவஞானபோதம் எவ்வாறு முக்கியமளிக்கப்பெற்றுள்ளதென்பதையும் எடுத்துக்காட்டுவதற்குச் சைவப் பெருமக்களால் காலங்காலமாகக் கையாளப்பட்டுவரும் ஒரு பழமையான வெண்பாவை வாசகர்களின் கவனத்திற்குக் கொணர்கிறேன்:

'உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் — வந்த அருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று.'

இவ் வெண்பாவில் பதினான்கு நூல்களும் அழகாகத் தொகுத்துக் கூறப்பட்டு, சிவஞானபோதத்தின் முதன்மை, 'உயர்போதம்' என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இப் பதினான்கு சாத்திரங்களை 'மெய்கண்ட சாத்திரங்கள்' எனவும் கூறுவர் சைவப் பெருமக்கள். இவற்றிலிருந்து, சைவ சித்தாந்தக் கருத்துகளை விளக்குவதற்கும் விரித்துரைப்பதற்கும், இப் பதினான்கு சாத்திரங்களே போதும் என்பதும் உணரற்பாலது. ஏனென்றால், சித்தாந்த சாத்திரங்கள் ஆகமங்களின்[4] கட்டளைகளை ஏற்றுக் கொள்கின்றன; வேத[5] வாக்குகளை மதிக்கின்றன; உபநிடதக்[6]

[4] ஆலயம் அல்லது கோயில் அமைக்கும் முறைகளையும், அங்கு இறை வழிபாடு செய்யப்படவேண்டிய முறைகளையும் விவரித்துக்கூறும் நூல்கள் ஆகமங்கள் எனப்படும். அவையன்றி மனிதனின் சமய வாழ்வின் தன்மைகளையும், தத்துவ வாழ்வின் எல்லையையும் விளக்கிக்கூறும் நூல்களும் ஆகமங்களில் உள்ளனவாம். அதனாற்றான் சிவாகமங்கள் இருபத்து எட்டு என்றும், அவற்றிற்கு உபஆகமங்கள் இருநூற்று எட்டு இருந்தனவென்றும் சைவப் பெருமக்கள் கூறுவர்; அவையாவும் இருமொழியிலும் (தமிழ், சமஸ்கிருதம்) எழுதப்பட்டிருந்தனவென்பர்.

[5] வேதங்கள் நான்கு: இருக்குவேதம், யசுர்வேதம், அதர்வண வேதம், சாமவேதம் என்பனவாம்.

[6] உபநிடதம் என்றால் 'மறை' என்று பொருளாகும். ஏனென்றால், அவற்றில் கூறப்பட்டுள்ள கருத்துகள் மனித வாழ்க்கையின் அடிப்படையை விளக்குவதாகும். ஆன்மாவின் உண்மையையும், இறைவனின் பெருமை

கூற்றுகளை மறுப்பதில்லை. ஆனால், சைவசித்தாந்தக் கருத்துகள் ஆகமங்களையோ, வேதங்களையோ அல்லது உபநிடதங்களையோ மூலமாகக்கொண்டு விளங்குவனவாகும் என்ற கூற்றுக்கே இட மில்லை என்பதும் வாசகர்கள் கவனிக்கற்பாலது. சுருங்கக்கூறின், சைவசித்தாந்தக் கருத்துகள் பண்டைக்காலத் தமிழ்மக்களின் சமய வாழ்க்கையினை கட்டிக் காப்பாற்றிவந்த கற்றூண்கள் என்று கூறினால் அது மிகையாகாது. பண்டைக்காலத்தில் அக் கருத்து கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் திகழ்ந்தன; சங்க இலக்கி யங்களிலும், தொல்காப்பியர் இலக்கணத்திலும் மிளிர்ந்தன என்பது மட்டும் நிச்சயமாகக் கூறமுடியும். சிவஞானபோதம் தவிர ஏனைய சைவசித்தாந்த சாத்திரங்கள் பதின்மூன்றைப் பற்றி யும் விளக்கமான செய்திகள் அடிக்குறிப்புப் பகுதியில் கொடுக்கப் பட்டுள்ளன என்பதை வாசகர்கள் கவனிக்கவும்.[7]

யையும் எடுத்துக்கூறுகின்றன; யோகத்தைப்பற்றியும் கூறுகின்றன; ஓங்காரத்தை உச்சரிக்கும்படி வலியுறுத்துகின்றன. சடஉலகின் உட்பொருள் மாயை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்வாறு உபநிடதங்களில் கூறப் படும் கருத்துகள் எல்லாக் காலத்திற்கும், எல்லா மக்களுக்கும் பொது வானவை என்று குறிப்பிடுகிறார் மேல்நாட்டு அறிஞர் ராபர்ட் எர்னஸ்ட் ஓம் என்பார்.

7 பதின்மூன்று சித்தாந்த சாத்திரங்கள் :

1. சிவஞான சித்தியார்

சிவஞான சித்தியார் அருணந்தி சிவாசாரியரால் இயற்றப்பட்டது. இந் நூல் புறச்சமயங்களின் கருத்துகளை அளவிடும் பரபக்கமும், சித்தாந்த சமயத்தின் மெய்ப்பொருளை விளக்கும் சுபக்கமும் ஆகிய இரண்டு பெரும் பகுதிகளைக் கொண்டதாகும். சுருங்கக்கூறின், சிவஞான போதத்தின் பன்னிரண்டு சூத்திரங்களின் தத்துவக் கருத்துகளை, பன்னிரண்டு அதிகாரங் களில் விரித்துரைப்பதே சுபக்கமாகும். பரபக்கத்துள், புறச்சமயங்களும், புறப்புறச்சமயங்களுமே ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. ஆகமங்களை ஒப்புக்கொண்ட சமயங்கள் புறச்சமயங்களெனவும், ஆகமங் களை ஒப்புக்கொள்ளாத சமயங்கள் புறப்புறச் சமயங்களெனவும் குறிப் பிடப்பட்டுள்ளனவாம்.

புறப்புறச் சமயிகளுள் நான்கு மூலப்பொருள்களையே (basic elements) —மண், நீர், காற்று, தீ—உலகின் அடிப்படை உண்மைப் பொருளாகக் கொள்ளும் உலோகாயதரும் (Charuvaka); சௌதிராந்திகர், யோகசாரர், மாத்தியமிகர், வைபாடிகர் ஆகிய நால்வகைப் பௌத்தரும் (Buddhists); நிகண்டவாதி, ஆசீவகன் என்ற இருவகைச் சமணரும் அடங்குவர் என்ப தாம். புறச்சமயத்துள் பாட்டாசாரியர், பிரபாகரர் என்ற இரு மீமாஞ்ச கரும்; சத்தப்பிரமவாதம், கிரீடப்பிரமவாதம், பாற்கரியவாதம், மாயா வாதம் ஆகிய நால்வகை ஏகான்மவாதமும், சாங்கியமும், பாஞ்சராத்திர மும் அடங்கும் என்பதாம். நிற்க, நியாயம் (Nyaya), வைசேடிகம் (Vaisesika), யோகம் (Yoga) ஆகிய மூன்றும் புறச்சமயத்துள் சேர்க்கப்படினும், அவை மூன்றும், இறைவனை முதல்வனாகக் கொள்வதால், அவற்றின் தத்துவக் கருத்துகள் கண்டிக்கப்படவில்லை என்பதும் கவனிக்கற்பாலது.

2. இருபா இருபஃது

இந் நூலையும் ஆக்கியோர் அருணந்தி சிவாசாரியரே. இஃது வெண்பா, ஆசிரியப்பா என்னும் இருவகைப் பாக்களால் அமைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொன்றிலும் பத்துப்பாக்கள் உள்ளன. மெய்கண்ட தேவருக்குப் புகழ்மாலை சூட்டுமுகத்தான், சைவசித்தாந்த உண்மைகள் அழகான முறையில் விளக்கப்பட்டுள்ளன.

3. உண்மை விளக்கம்

இந் நூலை இயற்றியவர் மனவாசகங்கடந்தார் என்பார் ஆவர். இந் நூல் ஐம்பத்துமூன்று வெண்பாக்களையுடையது. சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கைகளை வினா—விடை முறையில் அமைத்து விளக்கம் தரப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தகும். முப்பத்துஆறு தத்துவங்கள், ஆணவமலம், இருவினை, ஆன்மா ஆகியவற்றின் இயல்புகள்; இறைவனின் பெருமையும், ஐந்தெழுத்தின் சிறப்பும் விளக்கப்பட்டுள்ள தன்மையும் குறிப்பிடத்தக்கனவாகும்.

4. சிவப்பிரகாசம்

உமாபதி சிவாசாரியர் இயற்றிய சிவப்பிரகாசமானது சிவஞான போதத்திற்குச் சார்பு நூலாயுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் பாயிரத்துள் திருக்கயிலாய பரம்பரை ஆசிரியர்கள் இன்னுரென்பதும், சைவ நூல்களின் இயல்பும், திக்கை (Initiation) வகைகளும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் விவரிக்கப்பட்டுள்ளன வென்பது வாசகர்களின் கவனத்திற் குரிய செய்திகளாகும். சிவப்பிரகாசம் பொது வென்றும் சிறப்பென்றும் இரு பகுதிகளையுடையதாய், நூறு விருத்தங்களாலாகிய நூலாகும். சைவ சித்தாந்தத்தின் முதல் நூலுக்குச் சார்பு நூலாதலின், இதனைப் பன்னிரண்டு சூத்திரப்பகுதிகளாகவும் பிரித்துக்கூறுவது மரபு. பாயிரம் பன்னிரண்டு பாக்களாலாயது. பாயிரத்துக்குப் பின் வந்த முதற் சூத்திரமாகிய ஆறு பாடல்களில் இறைவனின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அதற்கடுத்த முப்பத்திரண்டு – 32 – பாக்கள் இரண்டாஞ் சூத்திரமாக அமைகின்றன. அதனுள், ஆன்ம இலக்கணமும், பாச இலக்கணமும் விரிவாகக் கூறப் பட்டுள்ளன. ஆன்மாவின் பொது இலக்கணம் ஒரு பாட்டாலும், எஞ்சிய பாட்டுகளிலே பாச விலக்கணமும் கூறப்பட்டுள்ளது. இவ்விதமாக, முதல் ஐம்பது பாடல்களும் பொதுவியல்புகளாக அமைந்துள்ளன.

பின்னர் வரும் ஒரே பாடலில் உண்மை அதிகாரத்திற் கூறப்படுவன வற்றைத் தொகுத்து அமைத்திருப்பது, பின்வரும் ஆழமான கருத்துகளுக்கு முன்கூட்டியே அமைத்த சுருக்கமான விளக்கமாகும். பின்வரும் எட்டுப் பாடல்களும் மூன்றும் சூத்திரமெனப்படும்; அதனுள் ஆன்மாவின் ஐந்தவத்தை இலக்கணம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்று பாடல்களும் நான்காஞ் சூத்திரமாகும். அதனுள் கேவலம், சகலம், சுத்தம் என்ற மூன்று அவத்தைகளின் தன்மைகளும் தெளிவாக விளக்கப்பட் டுள்ளன. அடுத்த ஐந்து பாடல்களும் ஐந்தாஞ் சூத்திரமாகும்; அதில் இறைவன் ஆன்மாக்களோடு தொடர்புகொள்ளும் முறையும், ஆன்மாக்கள் மலமறைப்பால் வினைப்பயனை நுகருமுறையுங் - காட்டப்பட்டுள்ளன. பின்னுள்ள ஆறுஞ் சூத்திரமாகிய ஒரே பாடலும் ஒரு சூத்திரமாகும்; அதில் இறைவனின் கருணையும், அதன் விளைவாகக் குருவாய் வந்து ஆன்மாக்களுக்கு ஞானம் நல்கும் முறையும் கூறப்பட்டுள்ளன. அடுத்த இரண்டு பாடல்களும் ஏழாஞ்சூத்திரமாகும்; அவற்றில் ஞானம் பெறுதற் குரிய ஆன்மநிலை எடுத்துக் கூறப்பட்டுள்ளது. பின் ஐந்து பாடல்களும் எட்டாஞ்சூத்திரமெனப்படும்; இவற்றில் ஞானத்தின் பயனை ஆன்ம தரிசனம் கூறப்பட்டுள்ளது. அடுத்த நான்கு பாடல்களும் ஒன்பதாஞ் சூத்திரமாகும்; இவற்றில் ஆன்ம சுத்தி விளக்கப்பட்டுள்ளது. பத்தாம் சூத்திரமென்னும் பகுதியுள், பாசநீக்கம் விளக்கப்பட்டு, அதற்கு இன்றி யமையாத ஐந்தெழுத்தின் அருள் நிலையும் கூறப்பட்டுள்ளன. பதினொன்று

பன்னிரண்டாம் சூத்திரப் பகுதிகளில் வீடெய்தியோர் தன்மையும் கூறப் பட்டுள்ளது. நூலின் இறுதிச் செய்யுள் இரண்டிலும் சித்தாந்தக் கருத்தும் அதனை விளக்கும் முறையும் கூறப்பட்டுள்ளன. நூலின் மங்கல வாழ்த்து உட்பட நூற்றொரு பாடல்களால் அமைந்தது சிவப்பிரகாசம்.

5. திருவருட்பயன்

குறள் வெண்பாக்களாலாகிய இந்நூலை இயற்றியவர் உமாபதி சிவாசாரியர் ஆவர். இந் நூல் பத்து அதிகாரங்களுடையது. ஒவ்வோர் அதிகாரத்திலும் பத்துக் குறள் அமைந்துள்ளன. இறைவனது இயல்புகளை எடுத்துக்கூறும் முதலதிகாரம் 'பதிமுதுநிலை' என்னும் பெயருடையது. மற்ற அதிகாரங்களின் பெயர்களும் இவ்வாறே அவை எடுத்துக்கூறும் பொருள்களின் இயல்பை விளக்குந்தன்மையனவாம்: கட்டுண்ட ஆன்மாவின் இயல்பு, இருண்மலநிலை, அருளுருநிலை, அறிவுநெறி, ஆன்ம விளக்கம், இன்புறுநிலை, ஐந்தெழுத்தின் மகிமை, வீடெய்தியோர் தன்மை முதலியனவாம்

6. வினாவெண்பா

இந் நூலையும் இயற்றியவர் உமாபதி சிவாசாரியர் ஆவர். பதின் மூன்றே பாடல்களைக்கொண்ட இந் நூலில், தமது குருவாகிய மறைஞான சம்பந்தரிடம் சைவசித்தாந்த சாத்திர உண்மைகளை வினவும் முறையில் கருத்துகள் கூறப்பட்டுள்ளன.

7. போற்றிப் பஃறொடை

இந் நூலையும் இயற்றியவர் உமாபதி சிவாசாரியர் ஆவர். இதனில் ஆன்மா தொழிற்படுமுறைமை உணர்த்தப்பட்டுள்ளது; அதன் வாயிலாகத் தமக்குச் சிவானுபவம் அளித்த குருமூர்த்தியைப் பஃறொடை வெண் பாக்களினால் வாழ்த்துவதாக அமைந்த நூலாகும் என்பர்.

8. கொடிக்கவி

இந் நூலையும் இயற்றியவர் உமாபதி சிவாசாரியர் ஆவர். இதனில் சிவமந்திரங்களினியல்புகளை உணர்த்துவதாய்த் தில்லையிலே கொடியேறும் பொருட்டுப் பாடிய பாடல்கள் அமைந்துள்ளன,

9. நெஞ்சுவிடு தூது

இந் நூலையும் இயற்றியவர் உமாபதி சிவாசாரியர் ஆவர். இதனில் ஆசிரியர் தமது திருவுள்ளத்தை மறைஞான சம்பந்தர்பால் மாலை வாங்கும்படி தூது அனுப்புகிறார். அதன் மூலமாகப் பன்முறைப் பொருள் முடியையும் இனிது விளக்குகிறார். இந்நூல் கலிவெண்பாவினால் இயற்றப் பெற்றுள்ளது என்பதும் கவனிக்கற்பாலது.

10. உண்மைநெறி விளக்கம்

இந் நூலையும் இயற்றியவர் உமாபதி சிவாசாரியர் ஆவர். இதனில் பத்துக்கருத்துகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தத்துவரூபம், தத்துவக் காட்சி, தத்துவசுத்தி, ஆன்மவடிவம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்னும் தத்துவங்களை விளக்கும் நூலாகும்.

11. சங்கற்ப நிராகரணம்

இந் நூலையும் இயற்றியவர் உமாபதிசிவாசாரியர் ஆவர். அகச் சமயங்கள் பலவற்றினது கொள்கைகளைக் கூறி, அவற்றைச் சைவசித்தாந்தக் கருத்துகளின் அடிப்படையில் மறுக்கும், விரிவான விளக்கங்களைக்கொண்ட நூலாகும். இந் நூலில் மறுக்கப்பட்ட கொள்கைகள் பின்வருவனவாம்: மாயாவாதம், ஐக்கியவாதம், பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சங்கிராந்தவாதம், ஈசுர அவிகாரவாதம், நிமித்தகாரண பரிணாம வாதம், சுத்த சைவ வாதம் முதலியனவாம். சுருங்கக் கூறுமிடத்து உமாபதி சிவாசாரியர் இயற்றிய சங்கற்ப நிராகரணம் மாற்றாரின் கொள்கைகளை மறுப்பதோடல்லாமல், சைவசித்தாந்தக் கொள்கைகளின் சிறப்பைச் செந்தமிழில் நயமிக்க இருபது அகவற் பாக்களால் அமைத்துள்ளது தமிழ் மொழியின் சிறப்பையும் எடுத்துக்காட்டுவதாகும் என்பதை வாசகர்கள் உணர்வார்களாக.

12. திரு உந்தியார்

இந் நூலை இயற்றியவர் திருவியலூர் உய்யவந்த தேவர் என்பர். பதினான்கு சைவசித்தாந்த சாத்திரங்களில் முதன் முதலில் தோன்றிய நூல் திருஉந்தியார் என்பதும் குறிப்பிடத்தகும். இது நாற்பத்தைந்து பாடல்களைக்கொண்ட செய்யுள் நூலாகும். பாடல்கள் ஒவ்வொன்றும் மும்மூன்று அடிகளைக்கொண்ட செய்யுள் வடிவில் அமைந்து, மூன்றாவது அடி 'உந்தீபற' என்று முடிவடைகிறது. இவற்றில் இறைவனின் பெருமையும் சிறப்பும், பக்குவ ஆன்மாக்களோடு தொடர்புகொண்டுள்ள தன்மையும் எளிய உதாரணங்களுடன் எடுத்துக்கூறி விளக்கப்பட்டுள்ளன.

13. திருக்களிற்றுப்படியார்

இந் நூலை இயற்றியவர் திருக்கடவூர் உய்யவந்த தேவர் ஆவர். இவர் திருவியலூர் உய்யவந்த தேவரின் மாணவராகிய ஆளுடைய தேவநாயனாரின் மாணவராவர். இது நூறு நேரிசை வெண்பாக்களைக் கொண்டுள்ளது. இறைவன் தாயும் தந்தையுமாய் உள்ளவன் என்ற உண்மையை முதல் செய்யுளிலேயே 'அம்மையப்பரே உலகுக்கம்மையப்பர் என்றறிக' என்று குறிப்பிட்டுள்ளது கவனிக்கற்பாலது. ஆன்மாக்களின் நல்வாழ்விற்கு இறையருளின் இன்றியமையாமை ஐந்தாவது செய்யுளில் அழகாகக் கூறப்பட்டுள்ளது.

'ஆகமங்கள் எங்கே அறுசமயம் தானெங்கே
யோகங்கள் எங்கே உணர்வெங்கே—பாகத்(து)
அருள்வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு.'

3. அளவை இயலும் அறிவளவை இயலும்

கண் பார்வை இழந்தவன் குருடன்; அவனால் இயற்கையைக் கண்டு மகிழமுடியாது. கேட்கும் திறனில்லாதவன் செவிடன்; அவனால் இசை இன்பத்தைக் கேட்டு மகிழமுடியாது. அதைப் போலவே, அளவைஇயல் நூலறிவைப் பெறாதவன், ஓரளவு சிந்திக்க இயலுமென்றாலும், அவனுடைய சிந்தனையானது சரியா அல்லது தவறா என்று நிச்சயமாகத் தெரிந்துகொள்ள முடியாது. அதிலும் முக்கியமாகத் தத்துவக் கருத்துகளை அறிந்துகொள்வதற்கும் ஆராய்ச்சி செய்வதற்கும் அளவை இயல் அறிவு மிகவும் தேவையானது என்று கூறினால் அது மிகையாகாது. அதற்குரிய முக்கியக் காரணங்களில் ஒன்றைமட்டும் வாசகர்களுக்கு நினைவுபடுத்த முற்படுகிறேன். அளவை இயல், மனிதனின் சிந்தனை எவ்வாறு செயல்படுகிறதென்பதோடல்லாமல், சிந்தனை இவ்வாறுதான் செயல்படவேண்டும்; அப்போதுதான் அளவை இயல் அறிவளவை இயலுடன் இணையமுடியும்; அந் நிலையில்தான் அடிப்படை உண்மையையும் உறுதியாகத் தெரிந்துகொள்ள முடியும் என்பதாம். இக் கருத்தின் ஆழமான பொருளைப் பின்வரும் விளக்கங்களிலிருந்து வாசகர்கள் உணர்ந்துகொள்ள முடியும் என்று நம்புகிறேன்.

அளவை இயல் என்பதனைத் தருக்கம், நியாயம் என்றும் குறிப்பிடுவதுண்டு. எனவே, தருக்கநூலறிவு தேவையான அளவு பெற்றுக்கொள்ளாதவன், தத்துவக் கருத்துகளைச் சரியாகப் புரிந்துகொள்ள இயலாது என்றே கூறலாம். இவ் வுண்மையைத் தத்துவம் படிக்கும் மாணவ மாணவியர் தெரிந்துகொள்வர் என்று நம்புகிறேன். எனினும், சிலர் அளவை இயலைப் பற்றித் தெரிந்துகொள்ளாமலேயே தத்துவப் பாடங்களைப் படிப்பதோடல்லாமல், அதில், சிறப்பெய்துவதும் உண்டு; அவ்வுண்மை ஒருசிலருக்கே பொருந்துவதாகும்.

மனிதன் தோன்றிய காலம் முதல் தன்னுடைய சிந்தனை வாழ்க்கையில் ஏதோ ஒரு வகையில் தருக்க நெறிமுறைகளைக் கடைப்பிடித்தே சிந்தனையை வளர்த்திருக்கிறான் என்பதைத்தான், பண்டைத் தமிழ்மக்களின் வாழ்க்கை வரலாறு எடுத்துக்கூறு கிறது. முக்கியமாகக் கல்வி அறிவு வேட்கையுள்ள அனைவரும், கற்கத் தகுந்த நூல்களுள் தருக்கநூலும் ஒன்றாகும். உதாரண மாகக் கூறுவேண்டுமெனில், 'கற்க கசடறக் கற்பவை' எனக் கூறிய திருவள்ளுவர், தருக்கநூலையும் 'கற்பவை'களுள் ஒன்றாகக் கருதி னார் என்றே கூறலாம். இவ்வாறாகத் தருக்கநூலறிவின் தேவை யினையும் முக்கியத்துவத்தையும் கருதியே அதனைக் 'கண்'[8] எனப் போற்றினர் திருவள்ளுவர். நம் பண்டைத் தமிழ் மக்கள் எண் என்ற சொல்லுக்கு வேறு அருத்தங்கள் உண்டாயினும், எண் என்பது தருக்கவியலறிவையே குறிக்கும் என்பதையும் தெளி வாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.[9] மேலும், தருக்கநூற் பயிற்சி யானது அறிவுவேட்கையுடைய அனைவருக்கும் எவ்வளவு இன்றி யமையாதது என்பதையும் எடுத்துக்காட்டுவதற்கே 'ஆற்றின் அளவு அறிந்து கற்க' என்று விளைந்து அதன் பயனையும் 'அவை யஞ்சா மாற்றங் கொடுத்தற் பொருட்டு' என்றும் சுட்டிக்காட்டி யுள்ளார் திருவள்ளுவர்.[10] அன்றாட வாழ்க்கையில் பொதுவாகப் பொருள்களை எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை அளவுகளினால் அளந்தறிகிறோம். அதைப்போலவே, சிறப்பாகச் சிந்தனை வாழ்வில் கட்செவிப் புலன்கட்கு அப்பாற் பட்ட அடிப்படை உண்மைப் பொருள்கள் பலவற்றையும் ஐய மறத் தெரிந்துகொள்வதற்குத் துணையாதல் பற்றித் தருக்கநூலும் அளவை நூல் அல்லது அளவை இயல் எனப் பெயரிட்டழைக்கப் படுகின்றன.

பண்டைத் தமிழகத்தில் புலவர் பெருமக்கள் மெய்ப் பொருளை அறியும் ஆர்வத்தில், தங்களுடைய சிந்தனையில் தோன் றிய வினாக்களை எழுப்பியும் அவற்றிற்குப் பதில் காணும் தன்மை யில் (தருக்கம் நடத்தினர்) விவாதங்கள் நடத்தியும் வந்தனர்; அதன் விளைவாகத் தருக்கநூலில் மிக்க ஈடுபாடு கொண்டிருந் தனர் என்பதனைக் கீழ்க்காணும் செய்யுள்கள் நன்கு விளக்குவ தாகும்.[11]

8 எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு. (குறள் 392)

9 காண்டல் அனுமானம் கதைஅருத்தா பத்திஇவை
ஈண்டிசைத்த எண் எனவே எண்.
தருக்க இயல் விளக்கம் – ந. ரா. முருகவேள் பக்கம் 4

10 ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு. (குறள் 725)

11 தருக்க இயல்விளக்கம்—ந. ரா. முருகவேள். பக். 5-6.

'வினவும் செப்பும் வழாஅல் ஓம்பல்'
'வினவும் செப்பே வினு எதிர் வரினே'

என்ற கூற்றுகளிலிருந்து தொல்காப்பியனுர் தருக்கநெறிமுறைகளைப் போற்றியவர் என்பது புலனுகிறது. மேலும்,

'ஒப்பும் உருவும் வெறுப்பும் என்று
கற்பும் ஏரும் எழிலும் என்று
சாயலும் நாணும் மடனும் என்று
நோயும் வேட்கையும் நுகர்வும் என்றுங்கு
ஆவயின் வரூஉம் கிளவி யெல்லாம்
நாட்டிய மரபின் நெஞ்சு கொளின் அல்லது
காட்ட லாகாப் பொருள என்ப,'

எனவரும் பொருள் இயல் சூத்திரத்தால், தொல்காப்பியனுர் அளவை இயலுக்கு அடிப்படையான பிரத்தியக்கத்தோடு (Pratyakara-Perception) அனுமான அளவையும் (Anumana - Inference) உடன்படுத்திக் காட்டியுள்ளது கவனிக்கற்பாலது. மேலும்,

'எடுத்த மொழி இனம் செப்பலும் உரித்தே'

என்றதனுல் அருத்தாபத்தி அளவையையும் (Arthapatti - Presumption),

'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்'

என்றதனுல் சம்பவ அளவையும் (Accident) தொல்காப்பியர் சுட்டியுள்ளனர் என்பதாம்.

தருக்கவியல் பயிற்சியின் முக்கியத்துவத்தைத் திருவள்ளுவர் தம்முடைய முதற் குறட்பாவிலேயே எடுத்துக்காட்டியுள்ளார் என்ற கருத்தினைப் புலவர் முருகவேள் வலியுறுத்தியுள்ளது வாசகர்களின் கவனத்திற்குரியதாகும். தருக்க நெறிகளாகிய மேற்கோள் — ஏது — எடுத்துக்காட்டு — ஏற்றல் — முடித்தல் என்னும் ஐவகை உறுப்புகளில் அமைத்து அவ் வுண்மையைப் புலவர் முருகவேள் கீழ்க்கண்டவாறு விளக்கியுள்ளார்.[12]

1. எழுத்தெல்லாம் (ஆதி) அகரத்தை முதலாக உடையன.
2. இயக்கப்படுதலின், யாது யாது இயக்கப்படுவது அது வது தன்னை இயக்கப்படுவதும் ஒரு பொருளை முதலாக உடையது;

[12] தருக்க இயல் விளக்கம்—ந, ரா. முருகவேள்-பக்கம் 7-8.

3. குடம்போல;
4. எழுத்தெல்லாம் ஆதி அகரத்தால் இயக்கப்படுகின்றன.
5. ஆதலின் எழுத்தெல்லாம் ஆதி அகரத்தை முதலாக உடையன.

1. உலகு ஆதி பகவனை முதலாக உடையது,
2. இயக்கப்படுதலின், யாது யாது இயக்கப்படுவது அது வது தன்னை இயக்கப்படுவதும் ஒரு பொருளை முதலாக உடையது,
3. எழுத்துகளெல்லாம் போல;
4. உலகு ஆதிபகவனால் இயக்கப்படுகின்றது,
5. ஆதலின், உலகு ஆதிபகவனை முதலாக உடையது.

மேலும்,

'பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடிரண் டும்அறி யேனையே'

எனத் திருவாசகத்துள் மாணிக்கவாசகரும் அருளிச் செய்திருப்பது பண்டைத் தமிழகத்தில் பட்டி மண்டபங்கள் பல இயங்கிவந்தமையையும் அங்கே சமயவாதங்கள் அவ்வப்போது நிகழ்ந்து வந்தமையினையும் எடுத்துக்கூறி, அவற்றிற்குத் தருக்க நூலறிவு எவ்விதம் பயன்பட்டது என்பதனையும் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறு தொல்காப்பியனார், திருவள்ளுவர் ஆகிய சான்றோர்களின் காலந் தொட்டு தமிழர்களின் சிந்தனையுலகில் தருக்கநூற் பயிற்சி தங்கு தடையின்றி வளர்ந்து, மக்களிடையே பரவிப் புகழ்பெற்றிருந்ததென்பது நன்கு விளங்கும்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் தருக்கநூல் பெற்றிருந்த பெருமையை உணர்ந்தோம். அப் பெருமை சைவசித்தாந்த சாத்திரங்களில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ள சிவஞான சித்தியாரிலும் நன்கு எடுத்துக் கூறப்பெற்றுள்ளது என்பதும் கவனிக்கற்பாலது.

'அருளினால் ஆகமத்தே அறியலாம் அளவினாலும்
தெருளலாம் சிவனை ஞானச் செய்தியாற் சிந்தையுள்ளே
மருளெலாம் நீங்கக் கண்டு வாழலாம் பிறவி மாயா
இருளெலாம் இரிக்கலாகும் அடியரோ டிருக்கலாமே'.

இச் செய்யுளின்மூலமாகத் தத்துவக் கருத்துகளை அறிந்துகொள்வதற்கும், சிறப்பாகச் சைவசித்தாந்தக் கருத்துகளை நன்கு அறிந்து

கொள்வதற்கும், அளவை இயலறிவு எவ்வளவு அவசியம் என்பதையும், அதில் தமக்கு எவ்வளவு ஈடுபாடு என்பதனையும் அருணந்தி சிவாசாரியர் சுட்டிக்காட்டியிருக்கிறார். அவருடைய காலமும், மெய்கண்டாருடைய காலமும் 13ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியாகும். சிவஞான சித்தியார் சுபக்கத்தின்கண், 'அளவை இயல்' என்னும் பெயராலேயே பதினான்கு செந்தமிழ்ச் செய்யுட்களில் தருக்கநூற் கருத்துகளை அளித்திருக்கிறார். சித்தாந்தத்தின் அடிப்படை உண்மைகளாகிய இறைவன், ஆன்மாக்கள், உலகம் ஆகிய முப் பொருளையும், காண்டல் (Perception) கருதல் (Inference), உரை (Scripture) என்னும் அளவைகளால் ஆன்மா (சிற்சக்தியால்) அறியமுடியும் என்பதாம். முப்பொருளுண்மைகளை அளந்தறிவதற்குத் தேவைப்படும் அளவைகளின் இயல்பையே அப் பதினான்கு செய்யுள்களால் விளக்கிக் கூறியுள்ளார்.[13]

இச்சை (will), செயல் (action), அறிதல் (knowing) ஆகிய மூன்றனுள், அறிதல், ஆன்ம சிற்சத்தி எனவும் ஞானசத்தி எனவும் கூறப்படுமாம். அளவை இயலின் நோக்கம் என்னவென்

[13] சிவஞான சித்தியார்:

'அளவை காண்டல் கருதல் உரை
அபாவம் பொருள் ஒப்பு ஆறென்பர்;
அளவை மேலும் ஒழிவு உண்மை
ஐதிகத்தோ டியல்பென நான்(கு)
அளவை காண்பர்; அவையிற்றின்
மேலும் அறைவர். அவையெல்லாம்
அளவை காண்டல் கருதல் உரை
என்றிம் மூன்றின் அடங்கிடுமே.'

இச் செய்யுளைப் பரிமேலழகர் கீழ்வருமாறு விளக்கியுள்ளார்; 'அளவையாவன: பொறிகளாற் காணும் காட்சியும், குறிகளான் உய்த்துணரும் அனுமானமும், கருத்தா மொழியாகிய ஆகமமும் என மூன்று. ஒப்புப்பற்றியுணரும் உவமையும், இங்ஙன மன்றாயின், இது கூடாதென உணரும் அருத்தாபத்தியும், உண்மைக்கு மாறாய இன்மையும் என இவற்றைக் கூட்டி ஆறு என்பாரும் உளர். இவையும் ஒருவாற்றான் அவற்றுள்ளே அடங்குதலின், மூன்று என்றலே கருத்து.' (குறள். 242 உரை)

அருணந்தி சிவாசாரியர் குறிப்பிட்டுள்ள பத்துவகை அளவைகளையும், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார், தாம் இயற்றியருளிய மணிமேகலையின்கண் குறிப்பிட்டுள்ளார் என்பதும் கவனிக்கற்பாலது.

'காண்டல், கருதல். உவமம், ஆகமம்
ஆண்டைய அருத்தாபத்தியோடு இயல்பு
ஐதிகம் அபாவம் மீட்சியொழி வறிவு
எய்தியுண்டாம் நெறி என்றிவை தம்மாற்
பொருளின் உண்மை புலங்கொளல் வேண்டும்.' (மணி. 27 : 9–13)

இவ்வளவைகள் பத்தையும் ஒப்புக்கொண்டவர் வேதவியாசர்; எட்டு அளவைகளை மட்டும் ஒப்புக்கொண்டவர் கிருதகோடி; ஆறு அளவைகளை

ருல், மனிதன் சிந்தனைசெய்யும்பொழுதுதான் அறிவைப்பெறஇயலு மென்றும், செம்மையாகச் சிந்தனை செய்யும்போதுதான் உண்மை அறிவைப் பெறவியலும் என்றும் அறிவுறுத்துவதாம். எனவே, அளவை இயலானது தன் குறிக்கோளாகிய உண்மை அறிவை அடையும் பொழுது, அதுவே, அறிவியலாக மாறுகிறதாம்; இதனையே அறிவு அளவியல் என்றும் அறிவாராய்ச்சியல்(Epistemolo-gy) என்றும் கூறுவர். இவ்வாறு எபிஸ்டிமாலஜி என்னும் சொல் அறிவளவை இயல் அல்லது அறிவாராய்ச்சியியல் என்பதாம். இச் சொல் கிரேக்கச் சொற்களால் உண்டானதென்பர். 'எபிஸ்டிமே' என்ற சொல் 'அறிவு' என்ற பொருளுடையதாம்; 'லோகஸ்' என்ற சொல் 'இயல்' அல்லது 'முறைப்படுத்தல்' என்னும் பொருளுடையதாம்.

பண்டைக்காலக் கிரேக்க நாட்டுச் சிந்தனையாளர்களுள் சோபிஸ்ட்ஸ் (Sophists) என்பார் அக் காலத்தில் நிலவிய (500 கி.மு.) தத்துவக் கொள்கைகளைப்பகுத்தறிவை மட்டும் பயன் படுத்தி ஆராயத் தொடங்கியதன் விளைவாக, விவாதங்களும், சொற்போர்களும் ஏற்பட்டனவாம். அந் நிலையில், அளவை இயலும், அளவை அறிவியலும் முக்கியத்துவம் பெறுவது இயற்கை யல்லவா? அவ்வித நிலைமைகள் நம் பண்டைத் தமிழகத்திலும் நிலவின என்பது முன்பே உதாரணங்களுடன் விளக்கப்பட்டுள் ளன. இச் சரித்திரக் குறிப்புகளிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு முக்கிய உண்மை பின்வருமாறு : தத்துவக் கருத்து கள் ஒன்றோடொன்று முரண்படும்பொழுது, எக் கொள்கை சரியானது என்று நிச்சயிக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கே அளவை இயலும்,

---

மட்டும் ஒப்புக்கொண்டவர் சைமினி. இக் கருத்துகளும் மணிமேகலையில் கூறப்பட்டுள்ளன :

'வேத வியாசனும் கிருத கோடியும்
ஏதமில் சைமினி எனும் இவ்வாசிரியர்
பத்தும் எட்டும் ஆறும் பண்புறத்
தத்தம் வகையில் தாம் பகர்ந்திட்டனர்.' (27 : 5–8)

இவ்வாறு பத்துவகை அளவைகள் மெய்பொருளியலில் பயன் படுத்தப்பட்ட போதிலும், அவற்றில் மூன்று அளவைகளே மிகவும் முக்கிய மானதும் தேவையானதுமாகும் என்பது சித்தாந்தத்தின் துணிபு. இக் கருத்து எவ்வாறு பொருந்தும் என்பதனையும் விளக்கியுள்ளனர், அப் பத்துவகை அளவைகளுள் பிரத்தியக்கம் என்னும் அளவைக்குள் அபாவம் (இல்லாமை) அடங்குவதாகும்; அனுமானம் என்னும் அளவைக்குள் அருத்தாபத்தி, உபமானம், பாரிசேடம், சம்பவம், சுபாவம் ஆகிய ஐந்தும் அடங்கும்; உரை (ஆகமம்) என்னும் அளவைக்குள் ஐதிகம் அடங்கும். எனவேதான் பிரத்தியக்கம், அனுமானம், ஆகமம் ஆகிய மூன்று அளவை களே வலியுறுத்தப்பட்டுள்ளனவாம்.

அறிவளவை இயலும் இன்றியமையாத சாதனங்களாகின்றன. உதாரணமாகக் கூறுவோமாகில், ஓர் குறிப்பிட்ட தத்துவக் கருத்தை ஏற்பதற்கோ அல்லது மறுப்பதற்கோ காரணம் யாது? பலப்பல கொள்கைகளில் உண்மையான கொள்கை எது என்று நிச்சயிப்பது எவ்வாறு? சுருங்கக்கூறின், உண்மையை அறிவதற்குப் பயன்படும் உரைகல் எது? எல்லா வினுக்களுக்கும் விடைகள் பெற வேண்டுமென்ருல், அறிவளவை இயலேயும், அளவை இயலேயும் இணைத்துப் பயன்படுத்தும்போதுதான் உண்மை விளங்கும் என்ப தாம். எனவே, அடிப்படை உண்மையை (Metaphysics) அறிந்து கொள்வதற்கு அளவைஇயலும் (Logic) அறிவளவை இயலும் (Epistemology) இணைந்து செயல்படவேண்டுமாம்; அப்பொழுதுதான் உண்மையை உள்ளவாறே உணர முடியுமாம். இப் பேருண்மையைச் சைவசித்தாந்தம் ஏற்றுக்கொண்டுள்ளதை வாசகர்கள் கவனிப்பார்களாக! இப் பேருண்மையை அருணந்தி சிவாசாரியர், அளவை இயல் பகுதியில் சுட்டிக்காட்டியுள்ளதும் கவனிக்கற்பாலது. அதனுல்தான், ஆன்ம அறிவு விடயங்களே நோக்கி ஓடும் முறையே பிரமாணமாகிறதென்று கூறியுள்ளார். இவ்வாறு ஆன்மாவின் ஞானசத்தி பிரமாணமாகிறதென்பதும் கவனிக்கற்பாலது. ஆன்ம சிற்சத்தியாகிய பிரமாணத்தால் அறியப்படுவது பிரமேயமாம். பிரமேய ஞானம் பிரமிதி எனவும், அதனேப் பெறுவதைப் பிரமாதா எனவும் கூறுவர். இந் நிலேயில் பொதுவாக இந்தியத் தத்துவ வரலாற்றைச் சிறிது ஆழமாக ஆராய்வோமாளுல் சில முக்கிய கருத்துகள் நன்கு தெரிய வருகின்றன. அவற்றில் அளவை இயலேப் பற்றி மட்டும் ஒரு சில கருத்துகள் குறிப்பிடத்தக்கனவாம்.

வேதங்களின் முதன்மையை ஒப்புக்கொள்ளாத தரிசனங்களே நாத்திக தரிசனம் என்று கூறுவர். அவற்றில் சைனம், பௌத்தம், சாருவாகம் ஆகியவை அடங்கும். அத் தரிசனங்களிலும் அளவை இயலுள் குறிப்பாகக் காட்சி அளவைக்கு முக்கியத்துவம் கொடுக் கப்பட்டுள்ளது கவனிக்கற்பாலது. ஆத்திக தரிசனங்கள், நியா யம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாஞ்சகம், வேதாந்தம் ஆறும் அளவை இயலுக்கும் அறிவு அளவை இயலுக்கும் முக்கி யத்துவம் கொடுத்துள்ள காரணத்திஞல்தான் அவற்றை மெய்ப் பொருளியலின் முதற்படியிலேயே அமைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அதன் மூலமாகத் தத்துவக் கருத்துகளே நிர்ணயிப்பதற்குப் பயன்படும் அதிமுக்கிய கருவிகள் பிரமாணங் களாகும் என்பதனேயும் வலியுறுத்தியுள்ளனர். இவ் வடிப்படை உண்மைகளே ஒப்புக்கொண்டுள்ள சித்தாந்திகள், பிரமாணங்களின் எண்ணிக்கையைக் கூடிய அளவு குறைத்து, அவற்றின் தன்மை

களைத் தெளிவுபடுத்தியும் அமைத்திருப்பதை வாசகர்கள் ஊன்றிக் கவனிப்பார்களாக.[14] இனிச் சைவசித்தாந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மூன்று பிரமாணங்களை விவரித்து விளக்குவோமாக.

I. காட்சி அளவை (பிரத்தியக்கம் — Perception)

ஐயமும் திரிபுமின்றிப் பொருள்களின் உண்மை நிலையைக் கண்டறிவது காட்சி அளவை எனப்படும். ஐந்து வெளி இந்திரியங்களினால் நாம் பெறும் அறிவு: கண்ணால் வண்ணமும், மூக்கால் மணமும், செவியால் ஓசையும், நாவாற் சுவையும், தோலால் ஊறும் உள்ளவாறு அறிதல் என்பதாம். இவ்வாறு அறிந்துகொள்ளும் காட்சி அளவையானது இருவகைப்படும்: முதலாவது, நிர்விகற்பக்காட்சி எனப்படும். இதனால் ஏற்படுவது ஒரு பொருளைப்பற்றிப் பொதுவாகத் தெரிந்துகொள்ளும் நிலை என்பதாம். எனவே, இதனைப் 'பொதுமைக் காட்சி' எனவும், 'எழுவாய்க் காட்சி' எனவும் கூறுவர். இரண்டாவதாக நிகழ்வது, 'சவிகற்பக் காட்சி' எனப்படும். ஒரு பொருளின் பெயர், குணம், பொருண்மை ஆகியவற்றைத் தெளிவாக அறிந்துகொள்வது சவிகற்பக் காட்சி என்பதாம். இது நிற்க, தோன்றுவது குற்றியோ மகனோ? இப்பியோ வெள்ளியோ? பழுதையோ பாம்போ? என ஒன்றின்கண் தெளிவு ஏற்படாது இருக்கும் நிலை ஐயம் (doubt) என்பதாம். இந் நிலையைச் சரியாக ஆராயாது துணிந்துவிடுதல் திரிபு என்பதாம். இவ்விதமாகத் தோன்றும் நிறைபெறாத நிலைகளெல்லாம் நிறைவும் அடைந்த பின்புதான் காட்சி அளவை ஒரு பிரமாணமாகக் கருதப்படுகிறது என்ற உண்மை வாசகர்கள் கவனிக்கற்பாலது. அந் நிலையில் பிரமாணம் என்பதும் உண்மை என்பதும் வெவ்வேறல்ல என்பதாம்.

பிரமாணமாகக் கருதப்பட்ட காட்சியளவையானது நான்கு வகைப்படுமாம்: வாயிற்காட்சி, மானதக்காட்சி, தன் வேதனைக் காட்சி, யோகக்காட்சி. 'காண்டல், வாயில், மனம், தன் வேதனை யோடு யோகக்காட்சி என ஈண்டு நான்காம்' என்பது சிவஞான சித்தியார். வாயிற்காட்சியாவது தோல், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளைத் துணையாகக் கொண்டு விடயங்களைப் பொதுவாக அறிவதாம். இதனை 'இந்திரியக்காட்சி' எனவும் கூறுவர். ஐம்பொறிகளின் வாயிலாகச் சேகரித்த விடயங்களை மனத்தின்கண் மாசறத் தெரிந்துகொள்வது மானதக் காட்சி

[14] 'பிரமாணம் இலக்கணம் இரண்டானும்
பொருளுண்மை பெறற்பாற்று'
மாதவச் சிவஞான சுவாமிகள்—மாபாடியம் — 4ஆம் சூத்திரவுரை.

யாகும். மானதக் காட்சிக்கே சவிகற்ப உணர்வும் நிகழும் என்பதும் கவனிக்கற்பாலது. மானதக் காட்சியில் தெரிந்துகொண்ட பொருள்களினுல் இன்பம் துன்பம், விருப்பு வெறுப்பு முதலிய உணர்ச்சிகளுக்கும் உட்பட நேரிடுவதால் இதனைத் 'தன் வேதனைக் காட்சி' என்பர். எனினும் அவ்வித உணர்ச்சிகளுக்கு உட்படாமல் நிகழ்ச்சிகளின் உண்மைநிலையை உள்ளவாறு உணரப்பெறுவது 'யோகக்காட்சி' எனப்படுமாம். இதனைப் பெறுபவர் மிகச் சிலரே. ஏனென்ருல், அரிய தவங்களைச் செய்து, மனத்தைக் கட்டுப்படுத்தி அதனைச் சமமான நிலையில் வைத்திருப்போரே, இன்ப துன்ப நெகிழ்ச்சிகளுக்கு உட்படாமல் உண்மைகளை உள்ளவாறே உணர முடியும் என்பதாம்.

II. கருதல் அளவை (அனுமானம் — Inference)

'அனுமானம், அவினுபாவம் பேசுறும் ஏது கொண்டு மறை பொருள் பெறுவதாகும்' என்பது சிவஞான சித்தியார். ஓரிடத்தில் நிகழும் புகையுண்மையைக் கொண்டு, நெருப்பானது புகையுடன் நிகழும் தன்மையாதலின், யாண்டுப் புகையுண்டோ, ஆண்டு நெருப்பும் உண்டு எனத் தெளிதலாகும். எனவே, அனுமானம் என்பது ஐம்பொறிகளைக் கொண்டு கண்கூடாக அறியப்படுவ தன்றி, அதனைவிட்டு நீங்காது உடனுய் நிகழும் ஏதுவைக்கொண்டு மறைந்து நிற்கும் பொருளைக் கருதியுணர்தல் என்பதாம். அனுமானம் இருவகைப்படுமாம் : அவையாவன, (1) தன் பொருட்டனுமானம், (2) பிறர் பொருட்டனுமானம்.

'பக்கம் மூன்றில் மூன்றேதுவுடைய பொருளைப் பார்த்துணரத்தக்க ஞானம், தன்பொருட்டாம் அனுமானம்' என்பர். பக்கங்கள் மூன்ருவன, பக்கம், சபக்கம், விபக்கம் என்பனவாம். ஐயம் துணிபற காயப் பொருள் இருக்கும் இடம் பக்கம் — மலை — என்பர். எடுத்துக்காட்டாக அமையும் துணியப்பட்ட பொருள் இருக்கும் இடம் சபக்கம் — அடுக்களை — என்பதாம். துணிவதற்குப் பொருள் இல்லாத இடம் விபக்கம் — மடு — என்பர். இம் மூன்றனுள், பக்கம் சபக்கம் இரண்டும் பொருள் உண்டென அறிவதற்கு இடமாம்; விபக்கம் பொருள் இல்லை என்று அறிவதற்கு இடமாகும். மூன்று ஏதுக்களாவன : சகசம், காரியம், அநுபலத்தி என்பனவாம். இம் மூன்று ஏதுக்களைப் பற்றி, மணிமேகலையில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.[15] சகசம் என்பது

[15] அனுமானத்தினை முதல், எச்சம், பொது என மூன்று வகையாகக் கூறப்பட்டுள்ளது. அவை மணிமேகலையில் (27 : 29–36) பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளன :

இயல்பாகத் தோன்றும் ஏது என்பதால், 'மா' என்ற சொல் மரத்தை உணர்த்துவது. காரியம் என்பது புகை முதலிய காரியங்கள் நெருப்பு முதலிய காரியங்களை உணர்த்துவது. பனி இல்லாமை முதலிய காரணங்களினால், குளிர்வாராமை முதலிய செயலின்மைகளை உணர்த்துவது அநுபலத்தி (இன்மை) ஏது எனப்படும். இல்லையென்னும் உணர்வுக்குப் பொருளாவது அனுபலத்தி ஏது; உள்ளதென்னும் உணர்வுக்குப் பொருளாவது உபலத்தி ஏது. உணர்ச்சி மூவகைப்படுதலின் ஏதுக்களும் மூவகைப் பட்டனவாம். முன்னிலைப்பொருளை இயல்பேதுவும் (சகசம்), மறைந்துள்ள பொருளை உபலத்தி என்னும் காரிய ஏதுவும் (காரியம்), இல்லாத பொருளை அநுபலத்தி (இன்மை) ஏதுவும் உணர்த்தி நிற்கும் என்பதாம்.

தான் உணர்ந்ததனைப் பிறருக்கும் தெரிவிக்கும்படி சொல்வது பிறர்பொருட்டனுமானம் என்பதாம். அஃதும், இருவகைப்படு மாம்: உடன்பாட்டுப் பிறர்பொருட்டனுமானம், எதிர்மறைப் பிறர்பொருட்டனுமானம் என்பதாம்.

'இம் மலை நெருப்புடையது
புகையுடைமையால்,
யாது யாது புகையுடையது
அது அது நெருப்புடையது
அடுக்களைபோல்'

என்பது உடன்பாட்டுப் பிறர்பொருட்டனுமானம்.

'இம் மலை புகையுடைத்தன்று
நெருப்பின்மையால்,
யாது யாது நெருப்பிலது
அது அது புகையிலது
தாமரைப் பொய்கைபோல்'

என்பது எதிர்மறைப் பிறர்பொருட்டனுமானம்.

---

(1) 'முதல் என மொழிவது கருக்கொள் முகில்கண்டு
இது மழை பெய்யும் என இயம்பிடுதல்'.

(2) 'எச்சம் என்பது வெள்ள ஏதுவினால்
நிச்சயித்து அத்தலை மழைநிகழ்வு உரைத்தல்'.

(3) 'பொது எனப்படுவது சாதன சாத்தியம்
இவைஅந் நுவயம் இன்று யிருந்தும்
கடந்திகழ் யானைக் கானஒலி கேட்டோன்
உடங்கெழில் யானை அங்குண்டென உணர்தல்'.

உடன்பாடும் எதிர்மறையுமாக வரும் இவ்விரு பிறர் பொருட்டனுமானங்களையும் ஐந்து உறுப்புகளால் இணங்க வைத்துக் கூறுதல் தருக்க நெறிமுறையாகும் என்று மணிமேகலை சுட்டிக்காட்டுகிறது.[16] அவ்வைந்து உறுப்புகளாவன : மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு, ஏற்றலும், முடித்தலுமாம். இவ்வைந்து உறுப்புகளையும் உதாரணங்களுடன் விளக்குவோமாக.

உடன்பாட்டுச்சொல்

1.	மேற்கோள்	—	இம் மலை நெருப்புடையது.
2.	ஏது	—	புகையுடைமையால்,
3.	எடுத்துக்காட்டு	—	யாது யாது புகையுடையது அது அது நெருப்புடையது அட்டில்போல,
4.	ஏற்றல்	—	இம் மலையும் புகையுடையது.
5.	முடித்தல்	—	ஆதலின், இம் மலை நெருப்புடையது.

எதிர்மறைச்சொல்

1.	மேற்கோள்	—	இம் மலை புகையுடைத்தன்று.
2.	ஏது	—	நெருப்பில்லாமையால்,
3.	எடுத்துக்காட்டு	—	யாது யாது நெருப்பில்லாதது அது அது புகையில்லாதது தாமரைப் பொய்கைபோல,
4.	ஏற்றல்	—	இம் மலையும் நெருப்பில்லாதது,
5.	முடித்தல்	—	ஆதலின், இம் மலை நெருப்புடைத்தன்று.

இவற்றைத் தவிர, மேலும் மூன்றுவித அனுமானங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனவாம். அவையாவன : பூர்வகாட்சி

[16] மணிமேகலை (29 : 57-63) — சீத்தலைச் சாத்தனர்:

"பக்கம் ஏது திட்டாந்தம் உபநயம்
நிகமனம் என ஐந்துள; அவற்றில்
'பக்கம்' இம்மலை நெருப்புடைத்து என்றல்;
'புகையுடைத்து ஆதலால்; எனல் பொருந்து ஏது;
'வகையமை அடுக்களைப்போல்' திட்டாந்தம்;
உபநயம் 'மலையும் புகையுடைத்து' என்றல்;
நிகமனம் 'புகையுடைத்தே நெருப்புடைத்து' எனல்".

அனுமானம், கருதல் அனுமானம், உரை அனுமானம் என்பன்வாம் மணத்தையும் மலரையும் ஒருங்கே ஓரிடத்திற் கண்டறிந்தவன், மற்ருேர் இடத்தில் மணம் கமழும் ஏதுவைக்கொண்டு, அங்கும் மலர் உண்டு என உணர்ந்துகொள்வது பூர்வகாட்சி அனுமான மாகும். இதனில் காணும் உண்மை நேரில் காணுவிடத்தும், அதன் தன்மையிலிருந்து (மணத்திலிருந்து) ஊகித்து உணர்ந்து கொள்வதென்பதாம். இதனையே 'போது நாற்றத்தால் அறிதல் பூர்வகாட்சி அனுமானம்' என்றும் குறிப்பிட்டுள்ளனர். ஒருவன் கூறும் சொற்களைக்கொண்டு அவனுடைய அறிவின் திறன், பண்பு முதலியவற்றை அறிதல் கருதல் அனுமானமாகும். 'ஓதும் உரையால் அறிவின் அளவு உணர்தல் கருதல் அனுமானம்' என்றும் குறிப்பிட்டுள்ளனர். இதனுல் தெளியும் உண்மை யூகத் திற்கே உரித்தாகும் என்பர். அறநூல்களில் கூறப்பட்டுள்ள வற்றைக்கொண்டு, கூறப்படாத பொருளையும் ஒப்புமை பற்றிக் கருதி உணர்ந்துகொள்ளுதல் உரையனுமானமாகும். உதாரண மாக, இப் பிறவியில் நாம் எய்தும் இன்ப துன்பங்கள், முற்பிறவி யில் நாம் செய்த நல்வினை தீவினைகளின் விளைவே என்று அறநூல் அறிவித்தால், அவற்றின் தொடர்ச்சியாக, இனிவரும் பிறவி யிலும், நம் செயலுக்கேற்ப, நல்வினை, தீவினை விளையும் என்று ஊகித்தல் உரையனுமானமாகும்.

III. உரை அளவை (ஆகமம் — Scripture)

காட்சி அளவையும், கருதல் அளவையும் விடயங்களின் உண்மைகளை அறிந்துகொள்வதற்குத் துணையாயிருந்தபோதிலும் அவ் வுண்மையை நிச்சயப்படுத்துவதற்கு ஆகமவாக்கே சிறந்ததும் உயர்ந்ததுமாகும் என்பர் சைவ சித்தாந்திகள். இக் கருத்தின் மூலமாகத்தான் அளவை இயல், அறிவளவை இயல், அடிப்படை இயல் (Logic, Epistemology and Metaphysics) ஆகிய மூன்றும் ஒன்ருேடொன்று இணைக்கப்பெற்று, உண்மையை அறிவ திலும் அதனை உறுதிப் படுத்துவதிலும் நிச்சயமான நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதை வாசகர்கள் கவனிப்பார்களாக. ஏனென்ருல், காட்சி அளவையும், கருதல் அளவையும் பிழைபட நேரலாம்; ஆனுல், ஆகம அளவை அவ்விதத் தவறுகளை நீக்கி, உண்மையை உள்ளபடியே எடுத்துக்கூற முடியும். ஏனென்ருல், எல்லாம்வல்ல இறைவனருளால் ஆகமங்கள் தோற்றுவிக்கப்பட் டனவாம். இக் கொள்கையை வலியுறுத்தும் தொல்காப்பியனு ரின் கூற்றும் கவனிக்கற்பாலது : 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல் நூலாகும்.' அதனுல்தான், 'காட்சி அனுமானம் விட்டபொருள் விளக்குவது ஆகமமே' என்று அறிவுறுத்தியுள்ளார் அருணந்தி சிவாசாரியர். ஆகமங்

களின் தூய்மையையும், பெருமையையும் வலியுறுத்தி மேலும் கூறுகிறார் அருணந்தி சிவாசாரியர்:

'பழுதிலா மறை கண்டநூல் பழுதின்றியுண்டது பாரின்மேல்
மொழிவர் சோதிடம் முன்னி இன்னது முடியும் என்பது
[முன்னமே
அழிவிலாதது கண்டனம் அவையன்றியும் சில ஆகமங்களின்
எழுதியோர்படி என்று கொண்டிரு நிதியெடுப்பதும்
[எண்ணிடே.'

இவ்வாறு, உண்மைப் பொருளை உறுதியாக உணர்த்துவதில் ஆகமங்களுக்குச் சிந்தாந்திகள் அளித்துள்ள சிறப்பைக் கருதியே உரையளவையை ஆகமப் பிரமாணம் என்றும், சத்தப் பிரமாணம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.[17] ஆகமமாவது ஆப்த வாக்கியம் எனப்படும். ஆப்தனவன், மக்கள் நலங்கருதியே உண்மைப் பொருளைக் கூறுபவன். ஆகமங்களில் கூறப்பட்டுள்ள உண்மைகளை அறிந்துகொள்வதற்குச் சில இன்றியமையாத தேவைகள் உண்டாம். அவையாவன : அவாய்நிலை, தகுதி, அண்மை, கருத்து என்பனவாம். அவாய்நிலையாவது, ஒரு சொல் தன் பொருளை விளக்குவதான மற்றொரு சொல்லை அவாவி நிற்றல் (ஆ கிடந்தது); தகுதியாவது, ஒரு சொல் மற்றொரு சொல்லைச் சென்று தழுவுதற்குத் தகுதியுடையதாதல் . (நீரால் நனை); அண்மையாவது, சொற்களை இடையீடின்றிப் பொருளமையக் கூறுதலாம்; கருத்தாவது, தாம் கூறும் சொல்லின் உட்பொருள் குறிப்பாம். மேலும், ஆகம அளவையானது, தந்திரம், மந்திரம், உபதேசம் என மூவகைப்படுமாம். அறநூல்களையும், மெய்ப் பொருளியல் நூல்களையும் முன்னோடுபின் முரண்படுதலின்றி உண்மைகளை உணர்த்தவல்லன தந்திரவுரையாகும்; புலன்களைக் கட்டுப்படுத்தி மனம் முதலிய கருவிகளை அடக்கி, மெய்ப்பொருளை வழிபடும் திறனை அறிவுறுத்துவது மந்திரவுரையாகும்; மெய்ப் பொருளின் அருளியல்புகளைத் தான் உணருமாறும், பிறருக்கு உணர்த்துமாறும் செய்தல் உபதேசவுரையாகும்.

[17] மணிமேகலை (27 : 43-44):

'ஆகம அளவை அறிவன் நூலாற்
போக புவனம் உண்டெனப் புலங்கொளல்,'

4. ஆன்மாவின் உண்மை

சைவ சித்தாந்திகள் உலகு என்று குறிப்பிடும்பொழுது எல்லா உலகங்களையும், அவற்றில் வாழும் எல்லா உயிர்களையும் குறிப்பிடுகின்றனர் என்பது உண்மை. எனினும், உலகினை அறிவுடைய பொருளென்றும் அதனைச் சித்து என்றும், அறிவில்லாத பொருளென்றும் அதனை அசித்து அல்லது சடம் என்றும் கூறுவர். இவ்வாறு உலகினை இருவகைப்படுத்தி, அதில் அறிவுள்ள பொருள்களுக்கு முக்கியத்துவம் தருவது ஏனென்றால், அறிவுடைய பொருள்களே தம்மை உணரும் தன்மை பெற்றனவாம்; நித்தியமானவையாம். அறிவில்லாத சடப் பொருள்கள் பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உண்டாவனவாம்; எனவே, அவை மாற்றங்களுக்கும், பரிணாமங்களுக்கும் உட்பட்டு இயங்குவனவாம். இவற்றிலிருந்து, சித்துப் பொருள்கள் அவ்விதச் செயற்கை மாற்றங்களுக்கு உட்படாதவை என்ற உண்மையும் தெளிவாகின்றன. சடப் பொருள்களோடு தொடர்பு கொண்டிருந்தபோதிலும், அவற்றிலிருந்து வேறுபட்டவையாக, தம்மைத்தாமே பிரித்துப் பாகுபாடு செய்யும் அறிவுத்திறன் சித்துப் பொருள்களுக்கே உண்டு என்பதும் சொல்லாமலே விளங்கும். சித்துப் பொருள்கள் சடப்பொருளோடு சேர்ந்துள்ள நிலையில், 'உயிர்' என்றும் 'சீவன்' என்றும் சித்தாந்திகள் குறிப்பிடுவர். சடப்பொருளின் சேர்க்கையிலிருந்து விடுபட்டுத் தன் இயற்கை நிலையை எய்தும்பொழுது அதனை 'ஆன்மா' என்றும் குறிப்பிடுவர். பஞ்சபூதங்களின் சேர்க்கையாலாகிய உடலில், அவற்றின் வேருக ஆன்மா உண்டு என்பதும், அது பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உண்டாகும் அறிவு நிகழ்ச்சி அல்லவென்பதும், சித்தாந்தத்தின் சிறப்புக் கொள்கையாகும். இதனை விரிவாக விளக்குவோமாக.

பஞ்சபூதங்களின் சேர்க்கையாலுண்டாவது அறிவு என்றால், அச் சேர்க்கையாலாகிய அறிவு — உயிர், உடலைவிட்டு என்றும் நீங்கவியலாது. ஆனால், உடல் சவமாய்க் கிடக்க, அறிவு—உயிர்,

நீங்குகையால், அது பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உண்டாவது அன்று என்பது பெறப்படும். உடலின் தொடர்புகளோடு இயங்கும் பொழுது உயிர் அல்லது சீவன் என்றும், கட்டற்ற நிலையில் ஆன்மா என்றும் குறிப்பிடுவர் சித்தாந்திகள். எனினும், காந்தம் இரும்பை ஈர்க்கும் நிலையை ஒப்பிட்டு, ஈர்க்கும் அறிவு சடமாகிய காந்தத்திற்கு உண்டாவதுபோல, பஞ்சபூதங்களின் சேர்க்கையே ஆன்ம அறிவென்று கொள்ளலாமல்லவா என்றும் வினவலாம். இக் கூற்று பொருத்தமற்றது என்பதனைச் சிறிது ஆழ்ந்து சிந்தித்தால் தெரியவரும். இரும்பைக் காந்தம் ஈர்ப்பது தன்னுடைய தொழிலால்தானேயன்றி அறிவாலன்று. தனக்கு அருகே அமையப் பெற்ற இரும்புத் துண்டையே அன்றி, பிறவற்றைத் தேடிப் போய் ஈர்க்கவல்லதன்று; அவ்விதம் தன் அருகே அமைந்த இரும்புத்துண்டைப் பற்றிய பின்பும் அதனை விடவல்லதும் அன்று. இவ்வாறு பற்றவோ அல்லது பற்றியதை விட்டகலவோ அதற்கு அறிவு கிடையாது. இந் நிலையில் காந்தத்தினை ஆன்மாவுக்கு உவமையாகக் கூறுவது பொருத்தமில்லை என்பது நன்கு விளங்கும். எனவே, பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உண்டாகிய தேகத்தின் குணமே அறிவு என்றுகொள்வது தவறாகும். மேலும், வெற்றிலை, பாக்கு, சுண்ணம் ஆகிய மூன்றும் சேர்ந்த காலத்துச் சிவப்பு நிறம் உண்டாவதைப்போல, அறிவு — ஆன்மா — நிகழ்தல் கூடாதோ வென்றும் வினவலாம். வெற்றிலை, பாக்கு, சுண்ணம் ஆகியவற்றின் சேர்க்கையில் சிவப்பு நிறம் என்னும் ஒரே தன்மையைக் காண்கிறோம்; அம் மூன்றின் சேர்க்கையைத் தவிர்த்துத் தனியாகச் சிவப்புநிறம் அமைவதில்லை. ஆனால், பஞ்சபூதங்களின் சேர்க்கையாலுண்டாகும் தேகம் ஒரே தன்மையைப் பெறவில்லை; புலன், பொறி, குணம் எனப் பல்வேறு தன்மைகளைப் பெற்றுள்ளது. அவ்வாறுள்ள தேகத்தை அதிட்டித்தும், அதனின்று வேறாகவும் நிற்கவல்லது அறிவு — ஆன்மா என்பது கவனிக்கற்பாலது. அதனால்தான், பஞ்சபூதங்களின் சேர்க்கையாலுண்டாய தேகம் உறங்கும் காலத்தும், சவமாய்க் கிடந்த காலத்தும், அறிவு தோன்றுவதில்லை. எனவே, பஞ்சபூதங்களின் சேர்க்கை அறிவன்று என்பது சொல்லாமலே விளங்கும் உண்மையாகும். எனினும், சவமாய்க் கிடந்தது, பிராணவாயுவானது நீங்கியதாலன்றோ என்றும் வினவலாம். இக் கருத்தினைச் சிறிது விரிவாக விளக்குவோமாக.

உயிருள்ள தேகம் உறங்கும்பொழுது பிராணவாயு உடலோடு பிரியாது நின்று இயங்கியபோதும், அங்கு அறியாமைதான் நிலவியது; எனவே, பிராணவாயு அறிவன்று. ஆகவே, அறிவானது சடக்காரியமன்று. சடத்தின் காரியம் சடமேயல்லாது

சித்தாகாது. ஏனெனின், காரணம் எவ்வாறே அவ்வாறே காரியமாம் என்பது சித்தாந்தத் தருக்க நூல் துணிபாகும். ஆனால், சடத்தையே இயக்குவதால், புலன்களின் வழியே போகத்தை அனுபவிப்பதாய்த் தனிப்பொருளொன்று இத் தேகத்தில் இயங்குகிறது; அதுவே ஆன்மா. கட்டுண்ட நிலையில் அணுத் தன்மையைப் பெற்று உடலில் வியாபகமாய் உள்ளது. பொதுவாக உடல் முழுவதும் வியாபகமானாலும், சிறப்பாகச் சிரம், நெற்றி, கண்டம், மார்பு, உந்தி, குய்யம் முதலிய இடங்களில் ஆன்மா வியாபகமாயுள்ளதென்பதாம். இதனை உயிர் என்றும், சீவன் என்றும் பொதுவாகக் குறிப்பிட்டு, பசுவென்று அழைப்பர் சித்தாந்திகள்.

சிவஞான போதத்தின் மூன்றும் சூத்திரத்தில் ஆன்மாவின் உண்மையை அழகாகவும், விரிவாகவும் விளக்கி நிரூபித்துக் காட்டுகிறார் மெய்கண்டதேவர்.[18] அச் சூத்திரத்தின் பொது விளக்கவுரை கீழ்க்கண்டவாறு: தேகமே உண்மை; அதனைத் தவிர்த்து வேறு எந்தவிதமான உண்மைப் பொருளுமில்லை என்று கூறி ஆன்மாவின் உண்மையை மறுப்பதில், அவ்வாறு மறுத்துக் கூறுபவன் உண்மை என்பது சொல்லாமலே விளங்குவதாகும். சுருங்கக் கூறின், 'இல்லை' என்று மறுப்பவன்தான் ஆன்மா. என்னுடைய தேகம், என்னுடைய கை என்பனபோன்ற கூற்றுகளின் வாயிலாக, தேகமும், அதனைப் பெற்றிருக்கும் ஆன்மாவும் வேறுபடுத்திக் குறிப்பிடப்படுகின்றன. எனவே, தேகத்தைத் தவிர்த்து அதனை இயக்கும் ஓர் பொருள் உண்டு என்பது சொல்லாமலே விளங்கும் உண்மையாகும். மேலும், ஐம்புலன்களின் மூலமாக வெளி உலகத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகளை அறிந்துகொள்கிறேன் என்று கூறுவதிலிருந்து, ஐம்புலன்களைத் தவிர்த்து மற்றொரு பொருளும் உண்டு; அதுதான் ஆன்மா என்பதாம்.

மேலும், புலன்கள் ஒன்றறிந்தது மற்றொன்று அறியாமையால், இவ் வைந்தையும் ஒருங்கே அறிவதே ஆன்மா என்பர். அறியும் தன்மை சித்துப் பொருளாகிய ஆன்மாவுக்கே உண்டு; ஐம்பொறிகள் சடப்பொருள்களாகையால் ஒவ்வொன்றாகவோ, அவை ஐந்துமோ இணைந்த காலத்தும் தாமாகவே அறியமாட்டாவாம். எனவே, 'நான் அறிந்தேன்' என்னும் கூற்றில், ஆன்மாவாகிய 'நான்' ஐம்புலன்களின் வாயிலாகக் கிடைத்த விடயங்களை

[18] சிவஞான போதம் — சூத். 3.

'உளதில தென்றலின் எனதுட லென்றலின்
ஐம்புல ஒடுக்கம் அறிதலிற் கண்படில்
உண்டிவினை யின்மையின் உணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தநுவினுள் ளான்மா.'

ஐம்பொறிகளின் மூலமாக அறிந்தேன் என்பதே பொருளாகும். அவ்விதம் அறிந்ததை நினைவில் வைத்துக்கொள்வதும் ஆன்மாவே. அதனால்தான் நனவு வாழ்க்கையிலும், கனவு வாழ்க்கையிலும் ஏற்படும் நிகழ்ச்சிகளை நினைவில் வைத்துக்கொள்வதும் ஆன்மாவே. இதன்மூலமாக ஐம்பொறிகளின் வாயிலாக மட்டுமல்லாமல், தானாகவே விடயங்களை அறிந்துகொள்ளவும், நினைவில் ஏற்றுக் கொள்ளவும் ஆன்மாவால் முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஐம்பொறிகளின் துணை இல்லாமலேயே விடயங்களை அறிந்து கொள்ள முடியும் என்பதற்கு அத்தாட்சி கனவு நிகழ்ச்சிகள்; ஏனென்றால், கனவில், ஐம்பொறிகளோ, மனமோ தொழிற் படுவதில்லை. இருந்தபோதிலும், சூக்கும தேகத்தோடு, சிற்சத்தி யின் துணையால், ஆன்மாவானது கனவு நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டு, அந்த நிகழ்ச்சிகளை அனுபவித்து, அவற்றினை நினைவில் வைத்துக்கொள்கிறது. கனவு நிகழ்ச்சிகளில் ஏற்பட்ட இன்ப துன்பங்களையும் நினைவில் வைத்துக்கொண்டு, அதனை நனவு வாழ்க்கையில் எடுத்துக்கூறும் சித்துப்பொருள் ஆன்மாவாகும்; ஏனென்றால், இன்ப துன்ப நிகழ்ச்சிகள் சடப்பொருளாகிய தேகத் திற்குப் பொருந்தா; பிராண வாயுவுக்கும் பொருந்தா; எனவே, சித்துப் பொருளாகிய ஆன்மா உண்டு என்பது தெளிவு. அனு பவித்தல், அறிதல் ஆகிய தன்மைகள் சித்துப்பொருளுக்கே உண்டு. ஒவ்வொரு மனிதனும் — ஆணும் பெண்ணும், நிகழ்ச்சி களை அனுபவித்து, அவற்றின் உண்மையை அறிகின்றனர்; எனவே, ஆன்மாவைப் பெற்றிருக்கின்றனர் என்பதாம். இவ்வித மாகத் தேகத்தைத் தவிர்த்தும், ஐம்புலன்களைத் தவிர்த்தும், ஐம்பொறிகளைத் தவிர்த்தும், மனம், புத்தி, சித்தம், அகங் காரம் ஆகியவற்றிற்கெல்லாம் மேலாக, அவைகளனைத்தையும் ஆட் கொண்டு இயக்கும் சித்துப்பொருளே ஆன்மா என்பதாம். அதன் உண்மையைக் கருதல் அனுமானத்தின் மூலமாகத்தான் நிரூபிக்க முடியும்; ஐம்பொறிகளைக்கொண்டு கண்கூடாக அறியப்படுவதன்றி அதனை விட்டு நீங்காது நிகழும் ஏதுவைக்கொண்டு மறைந்து நிற்கும் சித்துப்பொருளைக் கருதி உணர்தல் என்பதாம்.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து ஆன்மாவின் உண்மையை நிரூபித்துக்காட்டுவதற்கு அளவை இயலும் அறிவளவை இயலும் ஒன்றிணைந்து செயல்படுகின்றன என்பதும் அதனால்தான், அவை அடிப்படை இயலைச் (Metaphysics) சுட்டிக்காட்டுகின்றன என்ப தும் தெரியவருகின்றன. அடிப்படை உண்மைகள் ஐம்புலன் களுக்கு அப்பாற்பட்டவை; அவற்றினை ஊகித்து உணரமுடியுமே யன்றிக் கண்கூடாகக் காணவியலாதாம். அவ்வாறு ஊகித்து அறிவதற்கும் சில முறைகளைக் கையாளவேண்டுமாம். அதற்காகத்

தான் முதற்படியில் செம்மையான சிந்தனையையும் (Logic) இரண்டாவது படியில் அறிவளவை இயலையும் (Epistemology) அமைத்து, அவை இரண்டும் ஒருங்கிணைந்து செயல்படும்பொழுது தான் உண்மைப் பொருளை (Metaphysics) ஊகித்து உணர முடியும் என்பர். அடிப்படை இயலையும் உண்மைப் பொருளையும் வெவ்வேறாகக் கருதவேண்டியதில்லை என்பதும் கவனிக்கற்பாலது. ஏனென்றால், உண்மைப்பொருள் என்பதே அடிப்படைத் தத்துவ மாகும். அடிப்படைத் தத்துவம் ஐம்புலன்களுக்கு அப்பாற் பட்டது; அதனால்தான் கருதல் அனுமானத்தின் துணையோடு ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட பொருளை ஊகித்து உணர வேண்டியுள்ளது.

5. ஆன்மாவின் இயல்புகள்

'அளவிடற்கரியவாய், மல இருளில் அழுந்தியிருப்பவாய், சார்ந்ததன் வண்ணமாய், சுதந்திரமின்றியும், அதிருப்தி கொண்டதாயும், அறிவித்தால் அறியவும், சிற்றறிவும், சிறுதொழிலும் உடையனவாய் யிருப்பவை.'

அளவிடற்கரியது என்றதனுலே ஆன்மாக்கள் பல என்பதும் சைவசித்தாந்திகள் ஒப்புக்கொண்டுள்ள உண்மையாகும். எனினும் பல நிறமணிகள் கோத்த வெண்மையான சரட்டில், அவ்வம்மணிகளின் நிறம் வேறுபட்டுத் தோன்றினும், சரடு ஒன்றேயாயிருத்தல்போல, ஆன்மா ஒன்ருயிருந்து தேகங்கள் பலவாகும் என்று ஏன் ஒப்புக்கொள்ளலாகாது? கண்கூடாகக் காணப்படும் பல தேகங்களுள்ளும் ஒரே ஆன்மா இருப்பது உண்மையாயின், ஒருவன் எண்ணின எண்ணமே ஏனையோரும் கொள்ளவேண்டும்; அவ்விதம் நிகழ்வதை நாம் காண்பதில்லை. மேலும், மணிகள் கோத்தச் சரட்டின் ஓர் பாகத்தைப் பிடித்து ஆட்டினுல், மற்றெல்லா மணிகளும் அசைதல்போல, ஓர் தேகத்தில் ஆன்மா நோயினுல் துடிக்கும்போது, ஏனைய தேகங்களும் துடிக்கவேண்டும்; அவ்விதமும் நிகழ்வதில்லை. அவற்றிற்கு மாருக, ஒவ்வொரு சீவனும் எண்ணங்கள் வெவ்வேருய், அறிவுநிலையும் வெவ்வேருய் இருத்தலினுலே, சரீரந்தோறும் ஆன்மா வெவ்வேருயிருத்தல் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும் உண்மையாகும். எவ்விதம் தேகங்கள் அளவிடற்கரியனவோ அதைப்போலவே ஆன்மாக்களும் அளவிடற்கரியனவாம்.

மலவிருளில் அழுந்தியிருப்பவை என்ருல், குற்றமும் குறையும் வாய்ந்தன என்பது பொருளாகும்; அதனுல்தான், உயிர் என்றும், பசு என்றும் அழைக்கப்படுகின்றன. காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாச்சரியம், விருப்பு வெறுப்பு, பொய்யை மெய்யென்றும், மெய்யைப் பொய்யென்றும் கொள்ளு

தல், பிறரை நிந்தித்தல் ஆகிய குறைகள் மலவிருளில் அழுந்தியிருக்கும் ஆன்மாக்களிடம் ஏற்படும் குறைகளாகும். இக் குறைகள் சடப்பொருளாகிய தேகத்தைப் பற்றினவாகும். முன்வினை காரணமாக, அத் தேகத்தைப் பற்றிய ஆன்மாவும், மேற்குறிப்பிட்ட குற்றங்களுக்கு இலக்காகிவிடுகிறது. இதுதான் சார்ந்ததன் வண்ணமாதல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கருத்தினை மிகவும் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார் திருவள்ளுவர்:

'நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு. (452)

சேர்ந்த நிலத்தின் இயல்பால், நீர் வேறுபட்டு அந் நிலத்தின் தன்மையைப் பெறுவதாகும்; அதைப்போன்றே, மக்களுடைய அறிவு அவர்கள் பிறந்து வளர்ந்த சூழ்நிலைகளின் இயல்பினை உடையதாம் என்பர்.

பொதுவாகக் கூறுவோமாகில், நாம் நினைத்த காரியங்களெல்லாம் நினைத்தவாறே செய்ய முடிவதில்லை என்பது அன்றாட வாழ்க்கையில் நாம் காணும் அனுபவங்களாகும். இதற்குச் சரியான விளக்கம் சுதந்திரமின்மை என்பதேயாகும். அதைப் போலவே, எவ்வளவு செல்வங்களைப் பெற்றிருந்தபோதிலும், இன்னும் அதிகம் வேண்டும் என்ற அதிருப்தி மனப்பான்மையே மக்களிடையே பல நிலைகளிலும் மேலோங்கி நிற்பதைக் காணலாம். தானே அறியும் திறனில்லாமல் மற்றொருவர் அறிவித்தபோது தான் அறிவதால், ஆன்மாவிற்கு இயற்கையுணர்வு இல்லை என்பதாம். இவ்விதமாக எல்லாவற்றையும் அறியும் திறனில்லாமையினால் சிற்றறிவும், யாவற்றையும் செய்யும் வல்லமையில்லாமையினால் சிறுதொழிலும் உடையதாம் ஆன்மா. இந் நிலையில், தானாக அறியும் திறனில்லாத சிற்றறிவும் — ஆன்மாவும் — அறிவே இல்லாத சடப்பொருளும் — தேகம் — எவ்விதம் இணைந்தன என்ற முக்கியமான வினா எழுகின்றது. அதற்குப் பொருத்தமான விடைதரும் வகையில்தான் சிந்தாந்திகள் இறைவனை ஒப்புக்கொள்கின்றனர்; சிவம் என்றும் ஈசுவரன் என்றும், பதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது கவனிக்கற்பாலது. இதனைப் பற்றி விளக்குவோமாக.

உலகம் சித்துப்பொருளென்றும், சடப்பொருளென்றும் இருவகைத்து என்பதை முன்பே குறிப்பிட்டோம். அவற்றில் சடம் அறிவற்ற பொருளாதலால் அவற்றின் ஐம்பூதங்களாகிய மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பவையே தேகமாய்க் காரியப்பட்டுச் சித்துப்பொருளைப் பொருந்துதல் இயலாது. சித்துப்

பொருளோ அறிவித்தால் அறியும், அசைவித்தால் அசையும் இயல்புகளையுடையதாம். இந் நிலையில் தானே அறிந்தும், ஐம் பூதங்களைக் காரியப்படுத்தியும் அதனால் உண்டாய தேகத்தில் வந்து புகுதல் என்பது நிச்சயமாக இயலாதது. எனவே, சடமாகிய தேகத்தோடு சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய ஆன்மாவைக் கூட்டிவைத்து இயக்குவதற்குச் சர்வ வல்லமை பெற்ற மற்றொரு பொருளும் அவசியம் என்பது தெளிவு. அப் பொருளினை, பரம் பொருள் என்றும், இறைவன் என்றும், கடவுள் என்றும் பொது வாகக் கூறுவர்; சைவ சித்தாந்திகள் அதனைச் சிவம் என்று அழைப்பர்.

சிவஞானபோதத்தின் மூன்றும் சூத்திரத்தில் ஆன்மாவின் உண்மையை நிரூபித்துக்காட்டிய மெய்கண்டதேவர், நான்காம் சூத்திரத்தில், ஆன்மாவின் இயல்புகளை விளக்குகிறார்:

'அந்தக் கரண மவற்றினொன் றன்றவை,
சந்தித்த தான்மாச் சகச மலத்துணரா
தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே.'

மனம், புத்தி, சித்தம் ஆகிய அந்தக்கரணங்களோடு இயைபு கொண்டிருந்தபோதிலும், அவற்றிலிருந்து வேறுபட்டது ஆன்மா வாகும். சித்துப்பொருளான ஆன்மாவின் அறிவு பிரகாசிக்காம லிருப்பதற்குக் காரணம், ஆன்மாவானது ஆணவ மலத்துடன் இணைந்திருப்பதே. அதனால்தான், தன் உண்மை நிலையை அறி யாது, அந்தக்கரணங்களைத் தாமே என்று எண்ணி, அதனால் ஏற்படும் ஐவகை அவத்தைகளுக்குள்ளாகின்றன. அந் நிலையில். ஆன்மாவுக்கும் அந்தக்கரணங்களுக்கும் உள்ள தொடர்பு எப்படிப்பட்டதென்றால், ஓர் அரசனுக்கும் அவனுடைய மந்திரி களுக்கும் இடையில் ஏற்படும் உறவைப் போன்றதாகும் என்ப தாம். அரசனும் மந்திரிகளும் என்ற உவமானத்தைக்கொண்டு ஆன்மாவுக்கும் அந்தக்கரணங்களுக்குமுள்ள உறவை விளக்கும் முறை, மிகவும் பொருத்தமானதாகவும், பயனுடையதாகவும் அமைந்துள்ளது கவனிக்கற்பாலது. உவமானத்தின் வரையறை களையும், அதன் பயனையும் மனத்திற்கொண்டு, மேற்கொண்ட கருத்தினை விளக்குவோமாக.

அந்தக்கரணங்கள் என்று குறிப்பிடுவது மனம், புத்தி அகங்காரம் , சித்தம் ஆகியவற்றினிடையே வெளி உலகிலிருந்து ஐம்புலன்கள் விடயங்களைப் பெறுவது, கேட்டல், தொடுதல், பார்த்தல், சுவைத்தல், முகர்தல் முதலியவற்றின் மூலமாகத் தான். இவ்வாறு கிடைத்த விடயங்களைப் பகுத்துணர்தல்

மனத்தின் செயலாகும். அவ்வாறு பகுத்துணர்ந்ததனை நிச்சயிப்பது புத்தியின் தொழிலாகும். உதாரணமாக, இதுதான் சத்தம்; இதுதான் தின்பண்டம் என்பன போன்றவை, பொருள்களின் தன்மைகளை நிச்சயப்படுத்துகின்றன; இது புத்தியின் தொழிலாகும். இந் நிலையில் மனம் என்ன செய்ததென்று புத்திக்குத் தெரியாது; அதைப்போலவே, புத்தியின் தொழில் மனத்திற்குத் தெரியாது. அவ்வாறு புத்தியினுல் நிச்சயிக்கப்பட்ட பின்புதான் அந்த விடயமானது நிச்சயமும் உறுதியும் பெற்று ஒருமைப்பாடு எய்துகிறது. இதனைத்தான் அகங்காரம் என்று கூறுவர். உதாரணமாகக் கூறுவோமாகில், 'இதனை நான் தேர்ந்தெடுத்தேன்' என்ற கூற்றில் 'நான்' என்பது அகங்காரத்தைக் குறிப்பதாகும். இந் நிலையில் அந்த முழு விடயங்களையும் எண்ணிப்பார்க்கும் நிலைக்குத்தான் சித்தம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரைக்கும் தரப்பெற்றுள்ள விளக்கங்களிலிருந்து, ஒரு விடயத்தினை எவ்விதங்களில் பெற்று அறிந்து கொள்கிறேம் என்பதைத் தெரிந்துகொண்டோம். ஆனல், அவை யாவற்றையும் சேகரித்து ஒன்றுபடுத்தி, நிச்சயித்து உறுதிப்படுத்துவதும் அதன் விளைவாக உண்மை எது என்று உணரச் செய்வதும் ஆன்மாவின் தொழிலே. எனவே, அந்தக்கரணங்கள் ஒவ்வொன்றும் ஒரு செயலையே செய்ய முடிகிறதாம்; அவ்வாறு செயல்படும் யாவற்றையும் ஒன்று சேர்த்து, அவற்றின் உண்மைப்பொருளை உணர முடிவது ஆன்மாவின் செயலால்தான். இக் கருத்தினையே, மந்திரிகளிடமிருந்து எல்லாச் செய்திகளையும் கேட்ட பின்பு, அவற்றினை உறுதிப்படுத்துவதும், உண்மையாக்கப்படுவதும் அரசரால்தான் என்ற உவமானத்தால் விளக்கப்பட்டதும் கவனிக்கற்பாலது.

அந்தக்கரணங்களின் துணைகொண்டு விடயங்களை அறிவதாயிருந்தபோதிலும், அவற்றிலிருந்து வேறுபட்டதே ஆன்மா என்பதை விளக்கிறேம். இவ்வாறு சித்துப் பொருளாகிய ஆன்மா சடப்பொருள்களாலாகிய அந்தக்கரணங்களிலிருந்து வேறுபட்டது என்னும் கருத்தினை மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார் அருணந்தி சிவாசாரியர்.[19] அவருடைய விரிவான விளக்கத்தில் ஆன்மா

[19] சிவஞான சித்தியார் — செய்யுள் 190:

'உணர்வன கரணம் என்னில்
ஒன்றை யொன்றுணரா வெவ்வே
றணைதரும் செயல்கள் நான்கும்
அறிந்தவை அடக்கி ஆக்கிப்
புணருமுட் கருவி ஆக்கிப்
புறக்கரு வியினும் போக்கி
இணைதரும் இவற்றின் வேருய்
யான் என தென்ப தான்மா'.

தனித்து இயங்கும் சித்துப்பொருள் என்பது மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், யோகப் பயிற்சிகளில் தேர்ச்சி பெற்ற சான்றோர்கள், அந்தக்கரணங்களின் துணையில்லாமலேயே ஆன்மாவின் சிறசத்தியால் வெளிஉலக விடயங்களைத் தெரிந்து கொள்ள முடியும் என்பதையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது கவனிக்கற் பாலது. இதனையொத்த கருத்துகளை இன்னும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எடுத்துக் கூறியுள்ள சைவப் பெரியோர்களுள் மறைஞான தேசிகரும், நிரம்பவழகியரும் குறிப்பிடத்தக்கவர்.

ஐம்புலன்களின் வழியாக வெளிஉலக விடயத்துணுக்குகள் ஆன்மாவைச் சென்றடைந்த பின்புதான் அறிவுநிலை ஏற்படுகிறது. இவற்றிலும், முதன்முதலில் ஏற்படும் பொதுவான அறிவு நிலைக்கு 'வாயிற் காட்சி' என்றும், அதனை அடுத்து நிகழும் அறிவு நிலைக்கு 'மானதக் காட்சி' என்றும் பெயர். இந் நிலையில்தான் ஐம்புலன்களின் மூலமாகக் கிடைத்த விடயங்களோடு மனம் தொடர்புகொண்டு, அவற்றினை ஒழுங்குபடுத்துகிறது. இதனை அடுத்து ஏற்படும் நிலையைத் 'தன்வேதனைக் காட்சி' என்று குறிப்பிடுவர். இந் நிலையில்தான் புத்தியானது விடயங்களை நிச்சயித்து, அதன் பின்பு அவற்றினைச் சித்தம் உறுதிப்படுத்திய நிலையில்தான் ஆன்மாவால் உண்மை விளங்கி அறிவுநிலை உண்டாகிறதாம். இவ்வாறு அறிவு எவ்விதம் ஏற்படுகின்றது என்பதை ஆழ்ந்து கவனிக்கும்பொழுதே ஆன்மாவின் முக்கியத்துவம் நன்கு விளங்கும். ஆன்மாவின் சிறப்பை அவ்வாறு உணரும்போது வேறுசில முக்கியமான செய்திகளையும் வாசகர்கள் கவனத்திற் கொள்ளவேண்டும்.

சடப் பொருளாலாகிய ஐம்புலன்கள் எவ்விதம் வெளிஉலகிலிருந்து விடயத்துணுக்குகளைப் பெறுகின்றனவோ அதைப் போலவே ஐம்பொறிகளும் சடப்பொருளாகவே அமைந்து விடயங்களை ஐம்புலன்களினின்று பெற்றுக்கொள்கின்றன. அந் நிலையில் எந்தவிதமான அறிவுச் செயல்களிலும் அவை ஈடுபடுவதில்லை என்பதும் கவனிக்கற்பாலது. இதன்மூலமாக, அறிவுச் செயலுக்குச் சித்துப் பொருளாகிய ஆன்மாவே தகுதியுடைத்தென்பது சொல்லாமலே விளங்கும் உண்மையாகும். எனவே, தேகத்தில் ஆன்மாவின் இருப்பில்லாமல் ஐம்புலன்களோ, ஐம்பொறிகளோ செயற்படுவதென்பதே இயலாது என்பதும் தெளிவு. அறிவுப் பொருளாகிய ஆன்மா, சடப்பொருள்களோடு தொடர்புகொள்வதினாலேயே, சடப்பொருளைப் போலவே செயற்பட்டு, அறிவு நிலையை ஏற்படுத்தி நிற்கும் என்பதாம். எனவே, ஆன்மா

அறிவுப்பொருளாக இருப்பதோடு மட்டுமல்லாமல், சடப்பொருளாகவும் செயற்படமுடியும் என்பதும் கவனிக்கற்பாலது. ஆகவே, அறிவுபெறுவதற்காக, ஆன்மா இருவித நிலைகளிலும் — அறிவு நிலை, சடப்பொருள் நிலை — செயல்பட முடிகிறது என்பதும் தெளிவு. இவ்வுண்மைதான், 'சார்ந்ததன் வண்ணமாதல்' என்று முன்பே குறிப்பிடப்பட்டது. சுருங்கக்கூறின், அறிவுநிலையெய்தி ஞானம் பெறுவதில், ஆன்மாவானது சித்தாகவும், அசித்தாகவும் செயல்படுகிறதென்பதாம்; அந் நிலையில்தான் ஆன்மா, அடிப்படை இயலில் (Metaphysics) அமையும் பொருளாகவும், அதன் காரணமாகவே, கருத்தளவை (Inference) மூலமாகத் தான் அறியத்தக்கது என்பதும் விளங்கும்.

சடப்பொருளாகிய தேகத்தில் சித்துப்பொருளாகிய ஆன்மா இருப்பதால்தான் தேகம் இயங்குகிறது; அதிலுள்ள எல்லா இந்திரியங்களும் செயல்படுகின்றன என்பது இதுகாறும் விளக்கப்பட்டன. கண்ணால் காணும் தேகத்தைத் தூலசரீரம்என்றும் கண்ணால் காணவியலாததும், கனவு உலகத்தில் சஞ்சரிப்பதுமான தேகத்தைச் சூக்கும சரீரம் என்றும் கூறுவர். மலபந்தங்களால் சூழப்பெற்ற ஆன்மா, ஐந்து அவத்தைகளில் உழலும் என்றும் முன்பே கூறப்பட்டது. சைவசித்தாந்தத்தில் மலம் அல்லது பாசம் என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதும் அதன் தன்மை, பயன் முதலியனவும் பின்வரும் பகுதியில் விளக்கமாக விவரித்துக் கூறப்படும். மலங்களின் தொடர்பால் கட்டுண்ட ஆன்மா, உயிர் என்றும் சிவன் அல்லது பசு என்றும் பெயர்கொண்டு ஐந்து அவத்தைகளில் உழலும் நிலைகளைச் சிறிது ஆய்வோம்.

முதல் நிலையை நனவு என்றும் சாக்கிரம் என்றும் கூறுவர். மக்களின் பொதுவான வாழ்க்கை இந் நிலையில்தான் இயங்குகிறது. எனவே, இந் நனவு வாழ்க்கையில் ஐம்புலன்களும், ஐம்பொறிகளும் ஆன்மாவின் தொடர்புடன் இயங்குகின்றன; அதன் காரணமாகவே வெளிவுலக அனுபவங்களையும் நாம் பெறுகிறோம். இரண்டாவது நிலையைக் கனவு என்றும் சொப்பனம் என்றும் கூறுவர். இந் நிலையில் ஐம்புலன்கள் செயற்படுவதில்லை; சூக்கும சரீரம்தான் ஆன்மாவுடன் இணைந்து செயல்படுகிறது. மூன்றாவது நிலையைத் துயில் என்றும் சுழுத்தி என்றும் கூறுவர். அந் நிலையில் செயல்படுவது பிராணவாயுவும், சித்தமுமே. நான்காவது நிலையைத் துரியம் அல்லது பேருறக்கம் என்று கூறுவர். இந் நிலையில் செயல்படுவது பிராணவாயு — சுவாசம் ஒன்றே. ஐந்தாவது நிலையைத் துரியாதீதம் என்றும் உயிர்ப்படக்கம் என்றும் கூறுவர்.

இந் நிலையில் ஆன்மா மட்டும் செயல்படுகிறதென்பதாம். கட்டுண்ட நிலையிலிருப்பதால், ஆன்மாவுக்குப் புருடன் என்றும் பெயரிட்டுக் குறிப்பிடுவர். ஐந்தாவது நிலையில் இயங்கும் ஆன்மா உவமானத்துடன் விளக்கப்பட்டுள்ளது. படைசூழ ஊர்வலம் வந்தபின் அரசர் அரண்மனையில் நுழைந்து தன் அந்தப்புரத்தை அடையும் வரையில் படைக்காவலர்கள் முதற்கொண்டு மந்திரிமார்கள் யாவரும் ஒருவர் பின் ஒருவராகத் தத்தம் நிலையில் நின்றுகொள்ள, கடைசியாக அரசர் மட்டும் தன்னுடைய அந்தரங்க அறையில் நுழைந்து தாம் மட்டும் இருப்பதே, ஐந்தாவது நிலையில் உள்ள ஆன்மாவின் நிலைமையாம். அந் நிலையிலும் அரசருடைய அறைக்குக் காவலன் இருப்பதைப்போலவே ஆன்மாவுடன் பிராணனும் (சுவாசமும்) இருத்தல் கவனிக்கற்பாலது. ஐந்தாவது நிலையாகிய உயிர்ப்படக்கத்திலும் கண்கூடாகக் காணப்படுவது தேகத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் சுவாசம் ஒன்றே. அதன்மூலமாகத்தான் தேகத்தில் ஆன்மா உண்டு என்பதும் அறியப்படுகின்றது. இதன் காரணமாகத்தான் அடிப்படை மெய்ப்பொருளாகிய ஆன்மா, அனுமானத்தின் மூலமாகத்தான் ஊகிக்கப்படமுடிகிறதென்பதும், முன்பே குறிப்பிடப்பட்டது. சித்துப் பொருளாகிய ஆன்மா, சடப்பொருளாகிய தேகத்துடன் தொடர்புகொண்டதால், அதன் இயக்கநிலை மாறி, சடப்பொருளின் நிலைகளாகிய அவத்தைகளில் உழலுகின்றன; அதற்குத் துணைபுரிபவையே பாசத்தளைகளாம்.

6. பாசத் தளைகள்

(i) ஆணவம்

செம்பிற் களிம்பு போல அநாதியாகவே ஆன்மாவுடன் இணைந்து நிற்பதால் இதனைச் சகசமலம் என்று குறிப்பிடுவர்; ஆன்மாவினுடைன அறிவு முழுவதையும் மறைக்கும் மலங் களில் தலையாயது ஆணவமலமாகும். இதற்குப் பொருத்த மான உதாரணம் இருள் என்பர். ஆணவமாகிய இருள் தன்னை யும் காட்டாமல் பிற பொருள்களையும் காட்டாமல் மறைப்ப தாகும் என்று உமாபதி கூறுகிறார். எவ்விதம் இருளானது ஒன்றுயிருந்து பல கண்களையும் மறைக்கின்றதோ, அவ்வாறே ஆணவமலமானது எண்ணிறந்த ஆன்மாக்களோடும் கூடிநின்று, அவற்றின் உண்மை நிலைகளை மறைத்து நிற்பதாம். மனித னுடைய செயல்களில் பலவிதங்களிலும் ஆணவம் வெளியிடப் படுகின்றது. முக்கியமாக எட்டு விதங்களில் செயல்படுத்துவதைக் கொண்டு, அதனை ஆணவத்தின் எட்டுக் குணங்களென்றே கூறுவர். அவையாவன: தன்னையொழிய மற்றெவரும் ஒவ்வாதவர் என்று நினைப்பது; யாதொன்றைப் பற்றியும் சங்கற்பிப்பது; யாவற்றிற் கும் கோபம்கொள்வது; விரோதம் நினைப்பது; எந்தப் பொருளை யும் இச்சித்தல்; பிறரைத் துன்புறுத்துவதில் விருப்பங்கொள்ளல்; துயர்வந்த காலத்து 'ஓ' என்று அலறல்; எச் செயலைச் செய்யு மிடத்தும், சொல்லுமிடத்தும் 'நான்' என்ற பெருமிதத்தை வலியுறுத்தல், யாதொன்றுக்கும் சிரித்துக்கொண்டே திரிதல் முதலியனவாம்.

சிவஞான சித்தியாரில் இரண்டாம் சூத்திரத்தில் ஆணவ மலத்தின் தன்மைகளை அருணந்தி சிவாசாரியர் விளக்கியுள்ளார்:

'ஒன்றதாய் அநேக சத்தி யுடையதாய் உடனுய் ஆதி
யன்றதாய் ஆன்மாவின்தன் அறிவொடு தொழிலையார்த்து
நின்று போத் திருத்துவத்தை நிகழ்த்திச் செம்பிற்களிம்பேய்ந்
தென்றுமஞ் ஞானங் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே.'

ஆணவமலம் அளவிடற்கரிய சத்தியுடையது; அதனால்தான், எண்ணிறந்த உயிர்களோடு அநாதியாகவே இணைந்து நின்றுள்ள தாம். இந் நிலையை விளக்குவதற்காகவே செம்பிற்களிம்பு உவமானமாகக் கூறப்பட்டுள்ளது; செம்பின்கண் களிம்புபோல, என்று உடலோடு உயிர் தொடர்புகொண்டதோ அன்றே தானும் அதனோடு விரவி நிற்கும் பொருளானது ஆணவமலம் என்பர். கருவி கரணங்களோடு கூடாது கிடந்த நிலையிலும் ஆன்மாவின் அறிவுச் செயல்வினைவுகளைச் சிறிதும் விளங்கவொட்டாது மறைப் பது ஆணவமலமாகும்; இந் நிலையில் ஆன்மாக்களின் வியாபகத் தன்மை விளங்கவொட்டாது மறைத்து ஒடுக்கி அணுத்தன்மை பெறச்செய்வதால் ஆணவம் எனவும், ஆன்மாக்களுக்குக் குற்றம்-பந்தம் ஏற்படுத்துவதனால் மலம் எனவும் கூறப்பட்டன. கண் ணொளியை விளங்கவொட்டாது மறைக்கும் புறவிருளாகிய பூத விருள்போல, ஆணவம் ஆன்மாக்களின் சிற்சத்தியை — ஞானக் கண்ணை மறைக்கும் அக இருள் என்றும் கூறுவர். இக் கருத் தினைத் திருவள்ளுவரும் வலியுறுத்தியுள்ளது கவனிக்கற்பாலது:

'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.'

இருள் என்று குறிப்பிட்டு, அதனின்றும் நீங்குவதற்கு உறுதுணை யாக அமைவது இறைவனே என்னும் கருத்தும் கவனிக்கற் பாலது. எவ்வளவு வலிமையுடைய சத்தியானாலும் அவை யாவும் இறைவனின் ஆணைக்குட்பட்டதே என்ற கருத்தே வலி யுறுத்தப்பட்டுள்ளதாம். இவ் வுண்மையை வலியுறுத்தும் முறை யிலேயே வினையுண்மையும் (கன்மம்) சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

(ii) கன்மம்

கன்மம் செயல்படுமுறையும் இறைவனின் ஆணைக்குட்பட் டதே என்ற கருத்தினை இரண்டாம் சூத்திரத்தில் எடுத்துக் கூறுகிறார் மெய்கண்டதேவர்:

'அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வாவு புரிய வாணையின்
நீக்க மின்றி நிற்கு மன்றே.'

பொதுவாகக் கூறுவோமாகில், ஆன்மாக்கள் தொடர்பு கொள்ளும் தேகங்களுக்கும், அவற்றின் நன்மை தீமை முதலிய வற்றிற்கும் காரணமாயிருப்பது கன்மம் எனப்படும். தேகங்களின்

பேதங்களுக்கும், அவற்றின் தோற்றம் மறைவு முதலியவற்றிற்கும், ஆன்மாக்கள்தோறும் சென்று பொருந்துவதாய், மனம், வாக்கு, செயல் ஆகிய முக் கரணங்களாலும் செய்யப்படும் இயல்பினையுடையது; அதனால்தான் கன்மத்தை இருவினைப் பயன் என்றும் குறிப்பிட்டுள்ளனர். தொழிற்படு முறையினால் கன்மத்திற்கும் மாயைக்கும் மிக்கத் தொடர்பு உண்டாம். உதாரணமாகக் கூறுவோமாகில், தேகங்களின் மறைவுக் காலங்களிலே, மாயை காலத்தினாலே சென்று பொருந்துவதாய், மாயையோடு கூடிக் காரியப்படுவதாய், அரூபமாய்ச் சடமாய் உள்ளது என்பதாம். சித்தாந்திகள், கன்மத்தை முளைக்கும், மாயையை உமிக்கும், ஆணவத்தைத் தவிட்டிற்கும் உவமானமாகக் கூறுவதும் உண்டு. அவ்வுவமானத்திலிருந்து, பாசத்தளைகள் ஒன்றோடொன்று எவ்விதம் இணைந்து ஆன்மாவுடன் தொடர்புகொள்கின்றன என்பதும் கவனிக்கற்பாலது.

தேகங்களோடு தொடர்புகொண்டுள்ள ஆன்மாக்களின் மனம், வாக்கு, செயல் ஆகிய நடவடிக்கைகளுக்கு முதற்காரணமாயிருப்பதாலேயே கன்மத்தைக் காரணமலம் என்றும் குறிப்பிடுவர். செயல்கள் முடிவடைந்து மறைந்தபோதிலும், அவற்றிலிருந்து தோன்றும் சத்தி, சூக்குமமாக நிலைத்து நிற்கிறதாம்; ஆகவே, முதற் காரணமாய் அமைந்து, மாயையுடன் தொடர்பு கொள்வதால், கன்மத்தை மலம் என்றும் குறிப்பிடுவர். தேகங்களோடு தொடர்புகொண்ட ஆன்மாக்கள் புரியும் நன்மை தீமை ஆகிய செயல்களும் மறையலாம்; அத் தேகங்களும் அழிவெய்தலாம். ஆனால், அவற்றிலிருந்து தோன்றும் சூக்குமமான சத்தி நிலைத்து நிற்பதால், அவற்றின் தன்மைக்கேற்ப மற்றத் தேகங்கள் அமையப்பெறுவதாலும், அதன் விளைவாகத் தொடர்ச்சியான வாழ்க்கை ஏற்படுவதாலும், சூக்குமமாக இயங்கும் கன்மம் பல பிறவிகளுக்குக் காரணமாகிறது என்ற உண்மை கவனிக்கற்பாலது. அதனால்தான் பிறவிக்கு மூலகாரணம் கன்மம் என்று முன்பே கூறப்பட்டது. தொடர்ச்சியாக ஏற்படும் பல பிறவிகளை ஓடும் நதிக்கு ஒப்பிட்டுக் கூறுவதும் உண்டு. அவ்வுவமானத்தின் பொருள் என்னவென்றால், ஆணவ மலத்துடன் ஒன்றாக இணைந்துள்ள ஆன்மாவை, மாயை மலத்துடன் இணைத்து, அம் மலங்களின் வன்மை குறையும் வரையில் பலப்பல பிறவிகளை எய்தும் வண்ணமாய் இயலும் வன்மைபெற்றது கன்மம் என்பதாம்.

செயற்படுமுறையால் கன்மம் மூவகைப்படுமென்பர். அவை முறையே 'சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் எனப்படுமாம். இம் மூன்றும் ஒன்றையொன்று இணைபிரியாமல் தொடர்பு

கொண்டு செயற்படுவது என்பதும் கவனிக்கற்பாலது. கன்மத்தின் முக்கியத்துவத்தை வாசகர்கள் நன்ருக அறிந்துகொள்வதற்காக, அதன் மூன்று பிரிவுகளின் தன்மைகளை எடுத்துச்சொல்ல விழைகிறேன். சஞ்சிதமாவது : அநாதிதொட்டு ஏற்படும் பிறப்புகள்தோறுஞ் செய்த வினைக்களஞ்சியமாயிருப்பது; அதன் ஒரு பகுதியே நிகழ்காலத்தில் பெற்றுள்ள பிறவியாகும். இதனையே பிராரத்துவம் என்று குறிப்பிடுவர். முன்வினைப் பகுதியில் பக்குவப்பட்டு இப் பிறவியில் அனுபவிக்கப்படும் பலனுய் வருவது, பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு என்னும் ஆறு பலன்களையும் கொடுப்பதாம். பிராரத்த கன்மம் மேலும் மூன்று பிரிவுகளாகவும் விவரிக்கப்பட்டுள்ளது. அவையாவன : ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம், ஆதியான்மிகம் என்பனவாம். மாதாவின் கருப்பத்தில் உண்டாகும் விசனம், பிறப்பு, நரை, திரை, வேதனை முதலியவை ஆதிதெய்விகத்தால் உண்டாவனவாம். குளிர், வெப்பம், மழை, காற்று, மின்னல், இடி முதலியவற்ருல் ஏற்படும் தீமைகள் ஆதிபௌதிகம் எனப்படும். வியாதிகளிஞலும், மற்றவர்களாலும் ஏற்படும் தீமைகள் ஆதியான்மிகம் எனப்படும்.

சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் ஆகிய மூன்று பிரிவுகளும் ஒன்றையொன்று இணைபிரியாத் தொடர்புடையனவென்பதை முன்பே குறிப்பிட்டோம். அவற்றின் தன்மைகள் மேலும் விரிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளன. வினைப்பயனுகக்[20] குறிப்பிட்ட தேகத்தைப் பெற்ற ஆன்மா செயற்படும்பொழுது ஏற்படும் நிகழ்ச்சித் தொகுப்பை ஆகாமியம் என்பர்; மறு பிறவிக்காக அவை பயன்படும்பொழுது அதனைச் சஞ்சிதம் என்று குறிப்பிடுவர்; அப் பிறவியிலிருந்து மற்ருெரு பிறவிக்காகப் பயன்படும்பொழுது அதனைப் பிராரத்துவம் என்பர். நிகழ்காலத்தில் ஏற்படும் இன்ப துன்பங்களுக்குப் பிராரத்த கன்மமே காரணமாகும்; இந் நிலையில் ஏற்படும் நிகழ்ச்சிகளுக்கு ஆன்மா கட்டுப்பட்டே நடக்கவேண்டியிருந்தாலும், வருங்காலத்திற்காக, நற்காரியங்களைச் செய்வதற்கு ஆகாமியத்திற்கு — ஆன்மாவுக்குப் பூரண உரிமை உண்டு. இவ் விளக்கத்திலிருந்து கன்மக் கோட்பாடுகள் ஆன்மாவின் சுதந்திரத்திற்கு இடையூருயிருப்பதில்லை என்பதும் தெளிவு. இருந்தபோதிலும், பிராரத்த கன்மத்தின் செயற்படு முறையில் ஒரு விதத் தவிர்க்கமுடியாத நிலைமை இருப்பதும் கவனிக்கற்பாலது. சுருங்கக்கூறின், பிராரத்த கன்மம், தன்னுடைய செயலை நடத்தியே தீரும் என்ற உண்மையும் சொல்லாமலே விளங்குவதாகும்.

[20] Essentials of Hinduism in the light of Saiva Siddhanta by S. Sabaratna Mudaliar, P. 196.

உதாரணமாகக் கூறுவோமாகில், மனிதனுகப் பிறந்துவிட்ட பின்பு அதில் மாற்றம் செய்யவியலாது. எனினும், தாம் பெற்ற மானிட வாழ்வைத் தெய்வ வாழ்க்கையாக மாற்றுவதற்கு மனிதனுக்குப் பூரண உரிமையுண்டு. அதைப்போலவே, அரிதாகப் பெற்ற மானிட வாழ்க்கையை மிருக வாழ்க்கையாக வாழவும் மனிதனுக்குப் பூரண உரிமையுண்டு. இவ்விதமாகப் பகுத்தறிவும், பண்பும் நிறைந்த நோக்கத்துடன் கன்மத்தின் தன்மைபன்மைகளை ஆய்ந்து அறிவோமாஞல், நிச்சயமாக அவற்றின் கடுமைப் போக்கிலிருந்து விலகுவது மட்டுமல்லாமல், வெற்றியும் காண இயலும் என்பதே சித்தாந்தத்தின் சீரிய முடிபாகும்; அதுவே இறைவனின் திருவுள்ளமுமாகும். அந்த உயரிய அடிப்படையில் இறைவனின் ஆணையாகவே கன்மம் செயல்படுகிறதென்ற உண்மையை முன்பே குறிப்பிடப்பட்டதும் கவனிக்கற்பாலது.

இருந்தபோதிலும், ஐரோப்பியத் தத்துவ நெறிகளில் ஈடுபாடுகொண்ட சிந்தனையாளர்கள் சிலர் கன்மத்தை விதி என்று கூறத் தலைப்படுகின்றனர். அதன் காரணமாக, மனிதனின் சுதந்திர உரிமையையும் சந்தேகக்கண் கொண்டு நோக்குவதும் உண்டு. இப் பரிதாப நிலையை நீக்கி, உண்மை நிலையை நிலை நாட்டவேண்டியது நம் கடமையாகும். பொதுவாக இந்திய தரிசனங்களில் கர்மா (Karma) என்றும், சைவசித்தாந்தத்தில் கன்மம் அல்லது வினைப்பயன் என்று கூறப்படுவதும், நாம் (மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்ருலும்) செய்யும் செயல்களினுல் ஏற்படும் நியதிக்குட்பட்ட ஓர் கோட்பாட்டினையே கன்மம் என்று அழைப்பதைக்காட்டிலும் அதனை வினைப்பயன் என்று குறிப்பிடும்பொழுது, அக் கோட்பாட்டின் பொருள் நன்கு விளங்குவதாகும். ஏனென்ருல், மனத்தாலும், சொல்லாலும், காயத்தாலும், செய்யப்படும் செயல்களுக்கொவ்வப் பயன் விளையும் என்பதாம். அப் இப்பயனை பிறவியிலேயேயும் பெறலாம்; அவ் வாறில்லையேல், அடுத்த பிறவியிலும் பெறக்கூடும் என்பர். இதன் மூலமாகக் கன்மமும், மறுபிறவியும் (rebirth) ஒன்றுக்கொன்று பிணைப்பு உடையது என்பதும் கவனிக்கற்பாலது. மறு பிறவிக் கொள்கையைப் பற்றி விளக்கமான கருத்து பின்பு தரப்படும். இவ்வாறு, கன்மம் இயங்கும் விதத்திலும், அதன் பயன்களை — நன்மை, தீமை — நுகரச் செய்யும் முறையிலும் ஒரு சட்டத்தைப்போன்றே செயல்படுகிறதென்ற உண்மையை அறிந்து கொள்ளவேண்டும். எவ்விதம் ஒரு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதி அதை அநுசரிப்போர்க்குப் பொருந்துமோ அதைப்போலவே, தாம் முன்பு செய்த செயல்களின் பயனைத் தாமே பின்பு அனுபவிக்கவேண்டும்; அனுபவித்தே தீரவேண்டும்

என்ற கூற்றில் கடுமையும் கண்டிப்பும் காணப்படுவது உண்மை. ஆனால், அக் கண்டிப்பின் காரணம், கன்மத்தைத் தவிர்க்க முடியாத விதி என்று விளக்கம் தருவது சைவ சித்தாந்தத்தின் மரபுக்குப் பொருந்தாவாம். ஏனென்றால், கன்மம் சடப்பொருள்; தானாகவே இயங்காது; எனவே, ஓர் இயக்குநர் தேவைப்படுகிறது; இயக்குநரே இறைவன் என்று கூறுவர். அதனால்தான், கன் மத்தை இறைவனின் ஆணை என்று சுட்டிக்காட்டியுள்ளார் மெய் கண்டதேவர். இவ் வுண்மையை மனத்திற்கொள்வோமாகில், கன்மத்திற்கு அதிக முக்கியத்துவம் தரப்படுவதோ அல்லது மனி னின் சுதந்திரத்தைக் குறை கூறுவதோ அவசியமற்றவை என்பது என்பது சொல்லாமலே விளங்கும். நற்காரியங்களைச் செய்வதில் மனிதனுக்கு நிச்சயமாகச் சுதந்திரம் உண்டு. நல்லனவற்றைத் தேர்ந்தெடுப்பதும், தீயனவற்றைக் களைவதும்தான் மனிதனின் கடமை; அக் கடமையை உணர்வதும், அதனை வாழ்க்கையின் வழிகாட்டியாக அமைத்துக்கொள்வதும் நல்வாழ்வுக்கு, சமய வாழ்வுக்கு இன்றியமையாத அமைப்புகளாகும்.

மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளுக்கும் மக்களிடையே காணப்படும் பல்வேறு குறைபாடுகளுக்கும் பொருத் தமான விளக்கம் பெறவேண்டுமென்றால், அதற்கு மையமாக உள்ளது கன்மம் என்பர். மனிதனுக்கு மனிதன், அறிவிலும், ஆற்றலிலும், அழகிலும், அமைப்பிலும், நடை உடை பாவனை களிலும், வேறுபாடுகளும் வித்தியாசங்களும் உள்ளமையை நாம் காண்கிறோம். அவற்றிற்கெல்லாம் காரணம் சூழ்நிலைகளின் பாதிப்பே என்று பொதுவாகக் கூறுவர் உளநூல் வல்லுநர்கள். ஆனால், எவ்வாறு அவ்விதச் சூழ்நிலைகள் அமையப்பெற்றன என்ற கேள்விக்குப் பொருத்தமான பதிலைத்தர இயலாது; அதற் குப் பொருத்தமான, அர்த்தமுள்ள பதிலைத் தருவது கன்மமே. ஏனென்றால், அவரவர்கள் புரிந்த செயலின் தன்மைகளுக்கேற்ப, தேகங்களையும், சூழ்நிலைகளையும் பெறுவதே இறைவனின் ஆணை; அதுவே கன்மம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முன் பிறவியில் நிறைவேறாத ஆசைகள், எடுத்த பிறவியில் நிறைவேறுவதற்குத் தூண்டுகோலாக அமைந்துவிடுகின்றன என்பதையும் கன்மம் வலி யுறுத்துகிறது. அதைப்போலவே, முன் பிறவியில் செய்த தீய செயல்கள் அவற்றின் பயனை அடுத்த பிறவியிலும் தருவதுண்டு. மிக்க வன்மை பொருந்திய தீய செயல்களாக இருந்தால், அவற் றின் வன்மை தணியப் பல பிறவிகளும் எடுக்கவேண்டியிருக்குமாம். இக் கருத்தினையே, நெஞ்சயைள்ளும் சிலப்பதிகாரமும், நெஞ் குருகும் கோவலனின் வாழ்க்கையால் எடுத்துக்காட்டுகின்றது. எனினும், அவ்விதப் பரிதாபகரமான முடிவுகள் ஏற்படுவது

கன்மத்தினுலேயே என்பது உண்மையானுலும், அதுவே முடிந்த முடிபன்று. இந்நிலையில்தான் கன்மத்திற்கும் மேம்பட்டு விளங்கும் ஓர் பொருள் உண்டு என்பது நாம் உணரற்பாலது. காரிய காரணங்களின் தன்மைகளைப் பொறுத்துப் பயன்களைப் பெறுவதற்குக் கன்மம் துணைசெய்கிறது. சித்தாந்த ரீதியிலே விளக்குவோமானுல், ஆவண மலமும் — நான் என்ற துணிவும், மாயை மலமும் — என்னுடைய தேகம் என்ற தன்னலமும் ஒன்றுகூடிய காலத்தில், அவற்றின், முடிபாகிய மலநீக்கம் பெறுவதற்கே கன்மம் இவ்விரண்டு மலங்களோடு சேர்ந்து செயல்படுத்துகிறது. ஆனுல், அச் செயலின் நோக்கம், ஆன்மாவின் நல்வாழ்விற்காகவே என்பது கவனிக்கற்பாலது. இந்நிலையில் மலங்களின் செயலும், அவற்றின் பயன்களும் உணரற்பாலது; ஏனென்றுல் மலங்கள் செயல்படுவதால், அவற்றின் வன்மை குறைந்து முடிவில் மலங்களே வலுவிழந்து விடுவதால், ஆன்மாவின் உண்மைநிலை தானுகவே பிரகாசிக்கும். அதனுல்தான், மலங்களின் தொகுப்பை நிலைத்து நிற்கும் முப்பொருள்களில் ஒன்றுகவே சித்தாந்திகள் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதும் கவனிக்கற்பாலது. மேலும், ஆணவம், மாயை ஆகிய மலங்களைச் சேர்த்துச் செயல்படுத்துவதும்' ஆன்மாவின் நன்மைக்காகவே என்ற அடிப்படையில் கன்மம் 'திரோதாயி' என்றும் பெயரிட்டழைக்கப்படுகிறதாம். இவ்வாறு பல கோணங்களிலிருந்தும் ஆய்ந்தால், கன்மத்தின் இயல்பும், நன்மைகளும் நன்கு விளங்குவதாகும். ஆகவே, மனித வாழ்க்கையில் காணப்படும் பல்வேறு சிக்கல்களுக்குச் சிறந்த விளக்கம் தருவது மட்டுமல்லாமல், செம்மையான முடிபுகளையும் தரவல்லது கன்மமே. மேலும், மனத்தாலும், சொல்லாலும், காயத்தாலும் நாம் புரியும் செயல்கள் வீண்போவதில்லை என்பதும், அவற்றிலும் நற்காரியங்கள் நிச்சயமாக நல்ல முடிபுகளையே தரவல்லன என்பதும் கன்மம் உணர்த்தும் உண்மையாகும். இந் நிலையில் அவரவர்கள் புரிந்த நல்வினை, தீவினைக்கேற்ப, அவரவர்களே அவைகளை அனுபவிக்கவேண்டும் என்ற கருத்தினை உணர்ந்து இவ்வுண்மையை உணர்ந்த பெரியோர்களும், சான்றோர்களும், மற்றவர்களுக்காகவே சேவை புரிந்து வாழ்ந்து காட்டியுள்ள நல்வழியை நாமும் பின்பற்றி இல்லறத்தை நல்லறமாக அமைத்துக்கொள்ளல் நம் கடமையாகும்.

கன்மமும் மறுபிறவியும்

முற்பிறவியில் செய்த நன்மை தீமைகள் எடுத்த பிறவியில் பயன்விளைவிக்குமாம்; அதைப்போலவே, இப் பிறவியில் செய்த நன்மை தீமைகளும், நிறைவேருத ஆசைகளும் அடுத்த பிறவிக்கு

வித்தாகும் என்பர். இவ்வாறு மறுபிறவிக் கோட்பாட்டின் உண்மை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இக் கருத்தினை இரண்டாவது சூத்திரத்திலேயே சுட்டிக்காட்டியுள்ளார் மெய்கண்டதேவர் :

'இனி இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்துவருமென்றது
தோற்றமு மீறும் உள்ளதற்கல்லது உளதாதலின்மையான்.'

முற்பிறவியில் செய்த வினைப்பயன் நுகர்வதற்கு ஆன்மாக்கள் பல பிறவிகளை எடுப்பதும், அப் பிறவிகளின் தன்மை, தராதரம் ஆகியவற்றைக் கண்காணிப்பதும் கன்மத்தின் வலிமையைப் பொறுத்ததேயாம். எண்பத்துநான்கு இலட்சம் பிறப்பு வேறுபாடுகள் உண்டென்றும், அவை புல்பூண்டு செடிகொடிகளைத் தவிர்த்து, நீரில் வாழ்வனவும், நிலத்தில் ஊர்வனவும், பறப்பனவும், நான்கு காலால் நடப்பனவும், கடைசியாக மானிட வாழ்வும் கொண்டதாகும் என்ற கருத்தினைச் சிவஞான சித்தியாரில் விளக்கமாகவே எடுத்துக் கூறப்பட்டுள்ளதும் கவனிக்கற்பாலது.

ஆன்மா குடிகொள்ளும் தேகத்தைத் தூலதேகம் என்றும் சூக்கும தேகம் என்றும் இருவகையாகப் பிரித்துக் கூறுவர். தூலதேகம்தான் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அழிவுக்கும் பொருந்தும். எனவே, அவ்வித மாற்றங்களுக்குக் கட்டுப்படாத நிரந்தரமான தேகம், சூக்கும தேகம் என்பதாம். இத் தேகம், கனவு உலகத்தில் தங்குதடையின்றி எங்கும் பிரவேசித்துப் பிரயாணம் செய்வதை நாம் அறிவோம். இத் தேகமே மறுபிறவிக்கும் தொடர்பு ஏற்படுத்துவதாம். அவ் வுண்மையை எடுத்துக்காட்டுவதற்கே, பாம்பு தன்னுடைய உறையை நீக்கிவிட்டு வேறொரு உறையை ஏற்படுத்திக்கொள்ளும் உவமானம் கையாளப்படுகிறது. ஆன்மா ஒரு தேகத்திலிருந்து மற்றொரு தேகத்திற்குச் செல்கிறதென்றால், தூலதேகம்தான் மாறுகிறது; சூக்கும தேகம் மாறுவதில்லை. அதுவே, கன்மத்தின் வலிமைக் கேற்ப பல பிறவிகளை ஏற்படுத்துவதுமாம். இவ்வாறு ஆன்மா பல பிறவிகளில் உழன்று அறியாமையில் மூழ்கியிருக்கும் நிலையை மிகவும் உருக்கமாக விளக்கியுள்ளார் பட்டினத்தார் :

'தந்தைய ராகியும் தாய ராகியும்
வந்தி ராததும் இல்லை முந்து
பிறவா நிலனும் இல்லை அவ்வயின்
இறவா நிலனும் இல்லை பிறிதில்

என்னைத் தின்னு உயிர்களும் இல்லை, யான் அவை
தம்மைத்தின்னு தொழிந்ததும் இல்லை — அனைத்தே
காலமுஞ் சென்றது யான் இதன் மேலினி
இளைக்கு மாறிலேனே!'

—இணைக்குறளாசிரியப்பா 11-12.

பட்டினத்தாருடைய கூற்றிலிருந்து நாம் அறியும் உண்மைகள் பலவாம் : ஆன்மாக்கள் மானிடப் பிறவியில் மட்டும் உழலுவதில்லை; வேறு பலதரப்பட்ட பிறவிகளிலும் உழன்று வினைப்பயனை நுகருகின்றன என்பதாம். மற்றோர் உண்மையும், இந் நிலையில் வாசகர்களுக்குச் சுட்டிக்காட்ட விழைகிறேன். பழங்காலத்தில் சித்தர்களால் கையாளப்பட்டு வந்தது கூடுவிட்டுக் கூடுபாய்தல் என்ற வித்தையாகும். அதன் அடிப்படைத் தத்துவம் என்னவென்றால், ஆன்மாக்கள் பல பிறவிகளிலும் மானிடராகவே பிறக்க வேண்டுமென்பதில்லை; வினைப்பயன்களின் வன்மை மென்மைக்குத் தக்கவாறு பல்வேறுதரப்பட்ட பிறவிகளையும் எடுக்கவேண்டியுள்ளது என்பதாம். நிற்க, புலன்களைக் கட்டுப்படுத்தி யோக நித்திரையில் அமரும் வல்லமை பெற்ற சித்தர்கள், ஒரு தேகத்திலிருந்து மற்றொரு தேகத்திற்குள் நுழைவதும் சாத்தியம் என்ற கருத்தினையும் வலியுறுத்துமாம். இவ்வாறாகக் கன்மத்தின் தன்மைக்கேற்ப, மாயையின் துணைகொண்டு ஆன்மாவின் வாழ்க்கைப் பயணத்தை நடத்தியேதீரும் என்பது மாற்ற முடியாத உண்மை என்று சித்தர்களே ஒப்புக்கொண்டிருக்கின்றனர். எனினும், இவ்வித நடவடிக்கை யாவும் இறைவனின் திருவுள்ளப்படியே நடைபெறுகின்றன என்ற சித்தாந்தக் கருத்தினையும் வலியுறுத்தியுள்ளனர். அதனால்தான் கன்மத்தை இறைவனின் ஆணை என்றே குறிப்பிட்டனர்; அவ்வாணை இறைவனின் திருவருளுக்குக் கட்டுப்பட்டதே என்ற கருத்தினை அழகாக எடுத்துக் கூறியுள்ளார் தாயுமானவர் :

'கர்ம பந்தத்தினாற் கன்ம பந்தம் பெறக்
கற்பித்த துன்னருளே.'

(iii) மாயை

மும் மலங்களில் ஒன்றாகிய மாயை சைவசித்தாந்தத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது. ஏனென்றால், மாயை என்று அழைக்கப்படுவதே அதன் தொழில் முறையால்தான்; மாய் — அழித்தல், ஐ — ஆக்குவித்தல். உலகம் தோன்றுவதும் அழிவதும் ஆகிய மாற்றங்

கள் மாயையின் தொழிலே என்பதாம். உலகம் என்று குறிப்பிடும் போது, அதன் பொருளை மெய்கண்டதேவர், முதற்சூத்திரத்தி லேயே கூறியுள்ளார்:[21] 'அவன், அவள், அது' என்று சுட்டப்படும் பிரபஞ்சமே உலகமாம். ஆகவே, மாயை என்பது உலகத்தின் தோற்றம், இருப்பு, அழிவு ஆகியவற்றிற்குக் காரணமாக அமைந் துள்ளது என்பதாம். இவ்வாறு உலகமாகிய காரியத்திற்கு முதற் காரணமாகி, ஆன்மாவின் அனாதிபந்தமாகிய ஆணவத்தோடு கூடி கன்மத்தின் துணையோடு செயற்படுவதாம்; அது அசுத்தமாயை, சுத்தமாயை என இருவகைப்படுமாம்.

அசுத்த மாயை

ஆணவ கன்ம மலங்களுடன் கலந்து சுத்தாசுத்தக் காரியப் பிரபஞ்சத்திற்கு முதற் காரணமாயிருப்பதே அசுத்த மாயை என்று கூறுவர். அசுத்த மாயை, மோகினி என்றும் அழைக்கப்படும். அது, தனு, கரண, புவன, போகம் எனும் நான்கு விதங்களில் செயற்படுமாம். அவ்வாறு செயற்படுதலில் ஒன்றையொன்று ஒவ்வாத முறையிலேயே செயற்படுமாம். ஆணவ கன்ம மலங்களைக்கொண்டு ஆன்மாக்களைக் கட்டுப்படுத் தும் வினைப்பயனை நுகர்வதற்கும், ஆன்மாக்கள் தன்னிடத்தே பொருந்துவதற்கிடமாயும், சடமாய், சர்வ வியாபகமாய் விளங்கு வதாம். இதில் காலம், நியதி, கலை, வித்தை, இராகம் தோன் றும். இதனைப் பஞ்சகஞ்சுகம் என்று கூறுவர். இவற்றோடு கூடிய ஆன்மா பஞ்சகஞ்சுகன் என்றழைக்கப்படுமாம்.

காலம், நேரம், பருவம், என்பவை ஒருபொருட் பன்மொழி என்பர்; அதாவது ஒரே பொருளைக் கொண்டுள்ள பல சொற்கள் என்பதாம். காலம் என்பது நிகழ்காலம், இறந்தகாலம், வருங் காலம் என மூவகைப்படும். எத் தொழிலும் இம் மூன்று காலங்களுக்குட்பட்டே நடைபெறும். ஒரு செயல் எவ்வாறாயினும் ஏற்படலாம் என்பதைத் தவிர்த்து, இவ்வாறாகத்தான் அமைய வேண்டுமென்று ஏற்படுவதே நியதி என்று கூறப்படும். உதாரண மாக நியதி என்பது இன்னகாலத்தில் இன்ன போகம் புசித்தல் என்றும், நன்மை அல்லது தீமை பயக்குமென்றும் நிச்சயிப்ப தாகும். நியதியுடன் தொடர்புகொண்டதே கலை. கலையின் பயன் என்னவென்றால், ஆணவம் சிறிது சிறிதாக வன்மை

[21] சிவஞானபோதம் — சூத்திரம் 1:

'அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதா
மந்த மாதி யென்மனார் புலவர்.'

குறையும் வண்ணம் கிரியையை எழுப்பி, சுக துக்க போகங்களை புசிப்பிக்குமாம். அந் நிலையில்தான் வித்தையும், இராகமும் தோன்றுகின்றன. அவற்றின் பயனாக அறிவுப் பிரகாசம் ஏற்பட்டு, கன்மத்திற்குத் தக்கவாறு புசித்ததைச் சிறிதாக்கி, இன்னும் பெறவேண்டும் என்ற இச்சையும் ஏற்படும். மேற்கூறிய ஐந்து தத்துவங்களோடு கூடிய ஆன்மா விடய அனுபவங்களிலேயே ஆழ்ந்திருப்பதால், புருட தத்துவம் எனவும் பெயர்பெறும். இதுகாறும் கூறியவற்றிலிருந்து, ஆணவ, கன்ம மலங்களினுதவியால் ஆன்மாவைக் கட்டுப்படுத்தி, பிறவிச் சுழற்சியில் இயங்கிக் கொண்டேயிருப்பதற்கு அசுத்தமாயை அடிப்படையாய் அமைந்து செயல்படுகின்றது என்பது நன்கு விளங்கும். செயல்படு முறையால்தான் அசுத்தமாயை என்றே பெயர் உண்டாயிற்று என்பதும் கவனிக்கற்பாலது. அவ்விதம் அசுத்தம் நீங்கும்போதுதான், அதாவது மாற்றங்களையே உண்டுபண்ணிக் கொண்டிருக்கும் நிலைமை செயலற்றுப்போகும் நிலையில்தான் சுத்தமாயையின் தன்மையை நாம் உணரமுடியும்.

சுத்த மாயை

ஆணவ கன்மங்களுடன் கலவாது சுத்த காரியப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாய் இருப்பதே சுத்த மாயை எனப்படும். மாயைக்கு இயல்பான தன்மையாகிய மயக்குதல், சுத்தமாயைக்கு இல்லை என்பதும் கவனிக்கற்பாலது. எனவேதான், அசுத்த மாயையை அதிட்டிப்பதே சுத்தமாயையாம். இது நித்தியமாயும் வியாபகமாயும் அருவமாயும் உள்ளது என்பதும் கவனிக்கற்பாலது. இதனை குடிலை எனவும் விந்து எனவும் அழைப்பர். சுத்தமாயையினின்று தோன்றும் தத்துவங்கள் பின்வருமாறு: முதலில் தோன்றுவது நாதம்; இதனைச் சப்தம் என்றும் கூறுவர். அதனின்று தோன்றுவது விந்து; பின், சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை ஆகிய மூன்றும் ஒன்றிலிருந்தொன்றாகத் தோன்றுமாம். இவ்வைந்தும் சிவதத்துவங்களென்றும், சுத்தத் தத்துவங்களென்றும் அழைக்கப்படும். இத்தத்துவங்களை முறையே அதிட்டித்து நிற்கும் கர்த்தாக்கள், சிவம், சத்தி, சதாசிவம், மகேசுவரன், உருத்திரன் ஆவர். மேற்குறிப்பிட்ட விந்துவிலே சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் வாக்குகள் நான்கும் தோன்றுமாம். அவற்றிலிருந்து ஐம்பத்தொரு அட்சரங்களும், எண்பத்தொரு பதமும், சப்த கோடி மகாமந்திரங்கள் ஆகிய யாவற்றையும் தெரிவிக்கும் ஆகம வேத சாத்திரங்களும் தோன்றின என்பதாம்.

இனி சூக்குமாதி வாக்குகளின் தன்மைகளைப் பற்றி விவரிப் ரிப்போம். சூக்குமை பரசரீரத்தினுள் (நாத) ஒலிவடிவினதாய், நாபியடியாய் வந்து பொருந்தி வெவ்வேறாய் வரும் அட்சரங் களினுடைய உருவ அமைப்புகள் தோன்றும் முறைமை தெரி யாதவாறு மறைத்து நிற்குமாம். உதாரணமாக, மயில்முட்டைக் குள் நீரானது புறம்பே மயிலின் நிறமாய் உருவகித்துத் தோன்று தலும், அதனையே உடைத்துவிட்டால், அது தண்ணீர் ஆகிவிடு தல் போலவாம். பரசரீரம் என்னவென்பதைச் சிறிது விவரிப் போம். மும்மலங்களின் பிணைப்பால் சுழன்றுகொண்டிருக்கும் ஆன்மாக்களுக்கு அசுத்த மாயையில் காரண சரீரம் என்னும் ஒன்று உண்டாம். அதனை ஆனந்தமய கோசம் எனவும் கூறுவர். வித்தியா தத்துவத்தில் பஞ்சகஞ்சுகம் என்னும் பரசரீரம் ஒன்று உண்டாம்; இதனை விஞ்ஞானமயகோசம் எனவும் கூறுவர். கலையில் தோன்றிய அவியக்தமும் வியத்தமுமாகிய உருவங்களைப் பெற்ற குணசரீரமும் ஒன்று உண்டாம். இதனை மனோமயகோசம் எனவும் கூறுவர். இவை மூன்றும் பரசரீரம் எனப்படுமாம்.

பைசந்தி என்பது நினைவுமாத்திரமாய் நிற்கும் நிலை; வடிவு பிராணம்; தானம் உந்தி. மத்திமை என்பது அட்சரங்களி னுடைய உருவங்களைப் பிராணவாயுவுடன் கூடி ஒழுங்குபடுத்து தலாம்; அந்நிலையில் அவற்றின் பொருள் விளங்காமையால் அவை செவிக்கு விடயமாகாவாம். எனவே, தொனியுடன் உள்ளறிவு மாய், ஆன்மாவிடத்திலே நிற்கும்; முக்கியமாக நெஞ்சிலும், கண்டத்திலும், தானத்திலும் நிலையுறும் என்பதாம். இந் நிலையில் அட்சரங்களாக, ஒலிப்பிக்கும் செயல் இல்லாது, இயங்கும் என்ப தும் கவனிக்கற்பாலது. வைகரி என்பது முன்பு குறிப்பிட்ட பிராணவாயுவோடும் கூடிவந்து உதான வாயுவில் தொடர்பு கொள்ளும். அந்நிலையில் அவற்றின் பொருள் செவிப்புலனுக்கு உணர்த்தப்படும்; அதன் விளைவாக எண்ணங்கள் நினைவில் அமை யும் என்பதாம். தானம், தாலுமூலம். இவ்வாறு சுத்தமாயை யில் பல தத்துவங்களும் தோன்றி ஆன்மாக்களைப் பிணைத்துக் கொண்டபோதிலும் அவற்றிற்கு மயக்க நிலைமை உண்டாக்குவ தில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும், சுத்தமாயை யில் தோன்றும் பல தத்துவங்களில் முக்கியமானது சிவதத்து வங்கள் அல்லது சுத்த தத்துவங்கள் என்பதாம். அவற்றின் செயல்களினால் ஆன்மாக்களுக்கு நன்மையே உண்டாகின்றன என்பதும் கவனிக்கற்பாலது. உதாரணமாக, நாதம், ஆன் மாக்களுக்குக் கலைஅறிவை யெழுப்பி ஞானத்திற்கு வழிகோலு மாம்; விந்து, அவர்களுக்குத் தொழிலை எழுப்பிக் கிரியையாய்ச் சக்திக் கிடமாகுமாம். சாதாக்கியம், ஞானமும் கிரியையும் கூடி

அனுக்கிரகத்திற்கு வழிகோலுமாம். ஈசுவரம், ஞானங்குறைந்து கிரியை அதிகரித்தலால், அது திரோபவத்துக்கிடமாம். சுத்த வித்தையால் ஞானம் அதிகரித்து அதனால் இறையருளுக்கு இலக்காகுமாம்.

இந்திய தரிசனங்களில் மாயையின் முக்கியத்துவம்

இந்திய தரிசனங்களில், முக்கியமாக ஆத்திக தரிசனங்களென்று கூறப்படும்[22] நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாஞ்சகம், வேதாந்தம் ஆகியவற்றில் மாயை விரிவாக விளக்கப்பட்டுள்ளது. சைவசித்தாந்தத்தில், மாயை இறைவனின் அருட்சத்தியாகவே கருதப்படுகிறதென்ற உண்மை முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. மாயையின் செயல்பாட்டினால் அசுத்தமாயை என்றும், சுத்தமாயை என்றும் கருதப்பட்டுள்ளது. சுத்தமாயை என்ற சொல்லே தூய்மையை விளக்கி நிற்பதாம். அந் நிலையில் தான் அது இறைவனால் அதிட்டிக்கப்படுவது என்பதும் நன்கு வலியுறுத்தப்பட்டது. அசுத்தமாயை, சுத்தமாயையினால் அதிட்டிக்கப்படுவதாம். அந் நிலையில், ஆன்மாவுக்கு அதன் கன்மத்திற்கேற்றவாறு தேகம், புவனம் ஆகிய யாவற்றையும் அமைக்கிறதாம்; அந்த அமைப்பில், மயக்கம் உண்டாகிறது. அதனைத்தான் மாயை என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர். இந் நிலையில் மாயை என்பது இடம், காலம், காரணகாரியங்களுக்குட்பட்டுச் செயல்படுமாம். எனவே, மாயை ஆன்மாக்களின் கன்ம பலன்களைத் தருவதற்காகவும், அவற்றை அனுபவிப்பதின் பயனாக ஆன்மாக்கள் மலமறைப்பிலிருந்து தூய்மை பெற்று நற்கதியடையத் தகுதிபெறுகின்றனவாம். இவையனைத்தையும் மாயையே அமைத்துக் கொடுப்பதால், உலகத்திற்கு முதற்காரணம் மாயை என்று சித்தாந்திகள் கூறுவர். உலகம் தோன்றுவது, இருப்பது, மறைவது ஆகிய யாவும் மாயையின் செயல் என்று கூறுவதும் மேற்குறிப்பிட்ட விளக்கத்தின் அடிப்படையில் அமைந்ததாகும். சைவசித்தாந்தத்தின் இந்த அடிப்படைக் கொள்கையை வேறுதரிசனங்களின் மாயைக்கொள்கையுடன் ஆய்வோமாக.

[22] நியாய தரிசனத்தை இயற்றியவர் கௌதமர் ஆவர், இவருக்கு அட்சபாதர் என்ற பெயரும் உண்டு. வைசேடிக தரிசனத்தை இயற்றியவர் கணாதர் ஆவர். சாங்கிய தரிசனத்தை இயற்றியவர் கபிலர் ஆவர். யோக தரிசனத்தை இயற்றியவர் பதஞ்சலி என்பவராவர், மீமாஞ்சக தரிசனத்தைப் பூர்வ மீமாஞ்சகம் என்றும் கூறுவதுண்டு; இதனை இயற்றியவர் சைமினி என்பாராவர். வேதாந்தமே உத்தர மீமாஞ்சகம் என்றும் அழைக்கப்படுவதுண்டு. இதனை இயற்றியவர் வியாசர் ஆவர். வேதாந்தத்தில் மூன்று அமைப்புகள் உண்டு. அவை அத்துவைதம், விசிட்டாத்துவைதம், துவைதம் என்பனவாம். பிரம்ம சூத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டனவே அம் மூன்று அமைப்புகளும்; அவற்றை முறையே தொகுத்துக் கூறிய பெரியோர்கள் சங்கரர், இராமாநுசர், மாதவர் என்பராவர்.

நியாய தரிசனத்தைப் பின்பற்றுபவர்கள் நையாயிகர் எனப் படுவர். இத் தரிசனத்தில் குறிப்பிடவேண்டிய சிறப்புச் செய்தி இதன் பெயரே; நியாயம் என்றால் தருக்கம் என்றும் அளவையிய லென்றும் ஆன்வீச்சிகம் என்றும் பொருள்படும். இவ்வாறு அளவையியல் அறிவுக்கு முதல்இடம் கொடுக்கப்பட்டிருப்பதால், இத் தரிசனத்திற்கே நியாயம் என்று பெயரிட்டழைக்கப்படுகிறது. கௌதமரால் எழுதப்பெற்ற நியாய சூத்திரம் என்ற மூலநூலில் நியாய தரிசனத்தின் தத்துவக் கொள்கைகள் எடுத்துச் சொல்லப் பட்டுள்ளன; அக் கொள்கைகளை வைசேடிக தரிசனமும் ஒப்புக் கொள்கின்றது. நையாயிகர் உலகத்தின் தோற்றம், மறைவு, முதலியவற்றிற்குக் காரணம் அணுக்களே என்று கூறுவர். இக் கூற்றை மறுத்துக் கூறுவர் சித்தாந்திகள். ஏனென்றால், அணுக் கள் சடப்பொருளாம்; அவை காரியங்கள் மட்டுமே. எனவே, அக் காரியங்களுக்கு ஒரு காரணம் தேவைப்படுகிறது; அதுவே மாயை என்பர். சித்தாந்தத்தில் மாயை என்பது நிரந்தரமாக நிலைத்து நிற்கும் இறைவனின் அருட்சத்தியாம். அதுவே உலகத் தோற்றம், மறைவு முதலியவற்றிற்குக் காரணமாகும் என்பர். சித்தாந்தத்தின் கொள்கையை ஆதரிக்கும் கருத்துகள் வேதங் களிலும், உபநிடதங்களிலும் காணப்படுகின்றன என்பதும் கவ னிக்கற்பாலது. உதாரணமாக, சுவேதாச்வதார உபநிடதம் கூறுகிறது : 'பிரகிருதி என்பதே மாயை என்று அறிந்துகொள். இவ்வாறு சடப்பொருளாகிய உலகத்திற்கு முதற்காரணம்-Material Cause– மாயை என்பது தெளிவு. இக் கருத்து பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட ஓர் உண்மையாகும். உதாரணமாக, வித்திலிருந்துதான் செடி முளைத்து மரமாகிறது; ஆனால், அவ் விடத்திலேயே மிகவும் நுண்ணிய அமைப்புகளோடு இலை, தளை முதலியவை அடங்கி நிற்கின்றன; அவை வெளிப்பட்டு வளர்ச்சி பெறுவதே மரமாகக் காணப்படுகிறது. அதைப் போலவே, சடப்பொருளாகிய உலகம் அவியக்தமாக மாயையில் அமைந் திருந்து, வெளிப்பட்டு முழுத் தோற்றம் பெறுகிறது; அதனை வியக்தம் என்று குறிப்பிடுவர். ஆகவே, தோன்றும் உலகம் திடீர் என்று ஏற்பட்டதன்று; அது முன்பே மாயையில் அடங்கியிருந்தது என்று சொல்லலாம். பின்பு வெளிப்பட்டு முழுத்தோற்றம் பெறு வதும், அதன் பின்பு ஒடுங்கி அடங்குவதும் மாயையிலேயாம். இக் கொள்கையை அளவியல் முறைப்படியும் நிரூபிப்பதற்கு சற்காரியவாதம் என்பதனையும் சித்தாந்திகள் ஏற்றுக்கொண் டுள்ளனர். சற்காரிய வாதம் என்பதன் தாற்பரியம், காரிய மாகிய (effect) உலகம், காரணமாகிய (Cause) மாயையில் முன்பே இருந்தது; எனவே உலகத் தோற்றம் உண்மை; அதற்கு மூலகாரணம் மாயை என்பதும் உண்மை. இன்னபிற சுவையான

கருத்துகளை ஞானப்பிரகாசர் போன்றோர் மிகவும் தெளிவாகவ் விளக்கிக் கூறியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கனவாம்.

சற்காரியவாதம் சைவசித்தாந்தத்தில் ஓர் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது என்பதை வாசகர்கள் கவனத்திற் கொள்ளவேண்டும். ஏனென்றால், காரணமும், காரியமும் அவற்றின் செயல்களினுல்தான் வேற்றுமைகளைக் கொண்டுள்ளனவாம் என்ற கருத்தினைச் சற்காரியவாதம் வலியுறுத்துகிறது. முதலில் தோன்றுவதே காரணம்; அவற்றிலிருந்து தோன்றுவது காரியம்; இவை இரண்டிற்கும் இடையில் உள்ளது காலம் (Time). அவ்வாறு தோன்றிய நிலைக்குப் பின் ஏற்படுவதே இருப்பு (Existence) . அதற்குத் தேவையானது இடம் (Space). இவையனைத்தும் இயற்கையாக ஏற்படும் மாறுதல்கள்; இவை நிரந்தரமாக இயங்கிக்கொண்டே இருப்பவை; இவற்றில் தோற்றம், இருப்பு, மறைவு ஆகியவை அடங்கும். நிரந்தரமாக இயங்கிக்கொண்டே இருப்பதால் இதனை 'இயக்கம்' (movement) என்று குறிப்பிட்டு, அதனை ஓடும் நதிக்கு ஒப்பிட்டுக் கூறுவர். இவ்விதமாக, நிரந்தரமாய் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும் இயக்கத்திற்கு, மூலகாரணம் மாயை என்பதாம். இருப்பதைப்போலவே தோற்றமளிப்பதும், மறைந்ததைப்போலத் தோற்றமளிப்பதும் மாயையின் தன்மைகளாம். அவற்றை அதிட்டித்து நிற்பது சுத்தமாயை; அதுவே இறைவனின் அருட்சத்தியாம்.

சாங்கிய தரிசனத்தின் தத்துவக் கொள்கைகளை அமைத்துக் கொடுத்தவர் கபிலர் ஆவார். அவர் கூறிய கருத்துகளைக் கொண்டதே 'சாங்கிய காரிகை' என்னும் நூலாகும். அந் நூலை ஆக்கியோர் ஈஸ்வர கிருஷ்ணன் என்பவராவர். இத் தரிசனத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகளை யோக தரிசனம் ஏற்றுக்கொள்கிறதாம்; அதனுல்தான் கருத்துகளோடு மட்டும் அமைந்த சாங்கிய தரிசனம், அனுபவமாகிப் பயன் அடைவது யோக தரிசனத்திலேதான் என்றும் கூறப்பட்டுள்ளது. சாங்கியர் உலகத்திற்கு மூலகாரணம் பிரகிருதி என்று கூறுவர். இதனை மறுத்துச் சித்தாந்திகள் அதற்கு விளக்கம் தருகின்றனர். பிரகிருதி என்பது முக்குணங்களின் தொழிலே. அம் முக் குணங்கள் சத்துவ, ராசத, தாமத (Sathva, Rajasa, Tamasa) என்பனவாம். இவற்றின் சேர்க்கையால் அமைந்ததே பிரகிருதி. இக் குணங்களின் சேர்க்கையில் மாறுதல்கள் ஏற்படுமாம்; அதன் விளைவாகப் பிரகிருதியின் தன்மையும் பாதிக்கப்படுமாம். அந் நிலையில் பிரகிருதியின் தன்மை நிரந்தரமானதன்று; எனவேதான், பிரகிருதி உலகத்திற்கு முதற்காரணமாகா என்பர்.

இவற்றைத் தவிர, இந்திய தரிசனங்களில் முக்கியமாகக் குறிப்பிடவேண்டியது வேதாந்தமாகும். பிரம்ம சூத்திரம் என்று வழங்கப்படும் வேதாந்த சூத்திரத்தை விரித்துரைத்து விளக்கம் கூறியவர்களுள் மூன்று ஆசிரியப் பெருமக்கள் குறிப்பிடத்தகுந்தவ ராவர்: சங்கரர், இராமானுசர், மாதவர் ஆவர். இம் மூவரும் மாயையை ஒப்புக்கொண்டுள்ளனர் என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆனால், மாயை எவ்வாறு செயல்படுகிறது, அதன் நிலைமை, தன்மை முதலியவைகளைப்பற்றி அம் மூன்று ஆசிரியப் பெருமக்களும் வெவ்வேறு பதில்களையே தந்துள்ளனர். பொது வாக இராமானுசர், மாதவர் ஆகியோரும், சிறப்பாகச் சங்கரரும் மாயையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள விளக்கங்களையும், அதன் விளைவாகத் தோன்றும் வாதப் பிரதிவாதங்களையும், இந் நிலையில் வாசகர்களுக்கு எடுத்துக்கூற நான் முற்படவில்லை; அதனால், பயன் விளையாது என்பதே என்னுடைய பணிவான கருத்து. ஏனென்றால், மாயை என்பது உண்டு; அதன் செயல்முறைகளில் சிக்குண்டு, பாசபந்தங்களில் அகப்பட்டு, எண்ணெய் பிழியும் செக்கில் கட்டப்பட்ட எருதுகள் எவ்வாறு சுற்றிச் சுற்றி வந்து கொண்டே யிருக்கின்றனவோ, அதைப்போன்றே பிறவிச் சுழற்சி யில் உழலும் ஆன்மாக்கள் அல்லல்பட்டு அவதியுறுகின்றன என்பதும் உண்மை. அவற்றிலிருந்து விடுதலை பெற்றுத் தூய்மை அடைவதற்கும், ஆத்மசாந்தி பெறுவதற்குமே நாம் முற்பட் டுள்ளோம். இந் நிலையில் மாயை மலமும் ஆன்மா நற்கதி அடைவதற்கே தூண்டுகோலாக அமைந்துள்ளது என்பதே சித் தாந்தத்தின் சீரிய முடிபாகும். அவ்வித நல்லதோர், நன்மை பயக்கும் முடிவைத் தெரிந்துகொண்டு, அதைப் பெறுவதற் காகவே முயன்று பாடுபடுவது மானிடராகப் பிறந்ததன் பயனாகுமாம். அதற்குச் சித்தாந்திகள் காட்டும் நெறி செந் நெறியாகுமாம். அந் நெறியில் செல்வோருக்கு, மலபந்தங்கள் தாமாகவே விலகுமாம். அந் நிலையில், ஆன்மாக்களைக் கட்டுப் படுத்திப் பிறப்பு—இறப்பு என்னும் சுழற்சியிலே சிக்கவைத்து இயங்கிக் கொண்டிருக்கும் நிலைமையை மாற்றி, அவ் வான்மாக் களின் நற்கதிக்கே வழிகாட்டியாக மாயை அமைகின்றதாம். இதனால்தான் சைவ சித்தாந்தத்தில் மலபந்தங்களின் முக்கியத் துவமும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளன என்பது வாசகர்கள் கவனிக்கற்பாலது. இவ்வாறு கன்மம், மாயை ஆகிய பாசத் தளைகள், அவற்றின் வலிமை இழந்து, ஆன்மாக்களைக் கட்டுப் படுத்துவதோடல்லாமல், ஆன்மாக்கள் நற்கதி அடைவதற்கே சாதனமாகி விடுகின்றன என்பது சித்தாந்திகள் வலியுறுத்தி யுள்ள உண்மையாகும். இவ் வுண்மையை ஓர் உதாரணத்தின் மூலமாக விளக்கிக் கூறுவது நலம் எனக் கருதுகிறேன்.

தாயுமானவர், சுத்தமாயையைக் குண்டலினி எனப் பெயரிட்டழைத்து, அதன் நற்செயலை எடுத்துக் கூறுகிறார்.[23] ஆன்மாக்களின் உள் உணர்வைத் தூண்டிவிடுவதே குண்டலினியின் செயலாகும்; அவ்வாறு ஆன்மாக்களின் அறிவைத் தூண்டிவிடுவதால் பாசத்தளைகளிலிருந்து விலகுவதற்கு வழி ஏற்படுகின்றனவாம். மேலும், சுத்தமாயையை மகா மாயை என்றும் விந்து என்றும் கூறுவர். இவ்வாறு பல்வேறு பெயர்களைத் தாங்கி நின்றபோதிலும், சுத்தமாயை என்று அழைக்கப்படுவதே பொருத்தமானதும் பொருள் நிறைந்த பெயருமாகும். ஏனென்றால், சுத்தம் என்பது நன்மையைத்தான் உண்டாக்கும். இக் கருத்தினையே தாயுமானவரும் வலியுறுத்தியுள்ளார். சுத்தமாயை என்றால் நன்மை புரியும் நல்ல மாயை என்பதாம். எவ்விதமென்றால், அசுத்த மாயைதான் மயக்குந் தன்மையுடையது; பாசத்தளைகளில் சிக்கவைத்து அறிவு நிலையை இருளில் மூழ்குவிப்பது. ஆனால் சுத்தமாயை மயக்குந்தன்மையற்றது; அறிவைத் தூண்டி விடும் தன்மையுடையது. அறிவுப் பிரகாசம்ஏற்படும் பொழுது தான் ஆணவ மலத்தின் குறைபாடுகளை நன்றாக ஆன்மாவால் உணர முடிகிறதாம். இவ் வுண்மையையும் உவமானத்தின் மூலமாக விளக்கிக் கூறுகிறார் தாயுமானவர். அசுத்தமாயை முதற்காரணமாக அமைவதால் அதனை விளக்கு என்றும், அந்த விளக்கில் தோன்றும் ஒளி—அறிவு—சுத்தமாயை என்றும் கூறுவர், அதன் பயன் — ஆன்மாவைச் சூழ்ந்துள்ள அறியாமையாகிய ஆணவம் அகலுவதாம். இக் கருத்தே முன்பு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மாயை எவ்விதம் ஆன்மாவுக்கு உபகாரம் செய்கிறது என்பதாம். இந் நிலையில் ஆன்மா பாசத் தளைகளால் கட்டுண்டு பந்தங்களில் உழன்று கொண்டிருக்கிறது; அதற்குக் காரணம் கன்மமே. ஏனென்றால், பிராரத்த கன்மத்தின் கடுமை தீரும்வரை, எடுத்த பிறவியின் நல்வினை தீவினைகளை அனுபவித்தே தீரவேண்டும். எனினும், அறிவுச்சுடர் ஒளிவிட்டு வளர்வதன் பயனாக, கன்மத்தின் கடுமையைத் தாங்குவதற்கு மன உறுதியும் குண ஒருமைப்பாடும் ஏற்படுமாம்; அவைதான் அறிவு வளர்ச்சியின் நன்மைகளாகும்.

உதாரணமாகக் கூறுவோமாகில், துன்பம் நேரும்பொழுது அதனை எவ்விதம் அறிவுடையவன் ஏற்றுக்கொண்டு நல்ல முறையிலேயே நடந்துகொள்கிறான் என்பதற்கும், அறிவில்லாதவன் எவ்விதம் அல்லலுறுகிறான் என்பதற்கும் நிறைய வித்தியாசங்கள்

[23] தாயுமானவர், 16ஆம் நூற்றாண்டில் திருச்சிராப்பள்ளியில் வாழ்ந்த சைவச் சான்றோர்களுள் ஒருவர் ஆவர்.

உண்டு. இக் கருத்தினை வலியுறுத்தும் முறையிலேயே திருவள்ளுவர் கூறும் கருத்துகளும் அமைந்துள்ளமை கவனிக்கற் பாலது.

'அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.' (430)

சுத்தமாயையின் நற் செயலினை எடுத்துக்கூறிய தாயுமான வர், அது ஆன்மாவின் அறிவு வளர்ச்சியில் எந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்படுத்துகிறது என்பதையும் விளக்கிக் கூறி யுள்ளார். சுத்தமாயையின் காரியம் திரோதான சத்தி என்ப தாம். இதன் செயல் என்னவென்றால், மூன்று மலங்களையும் — ஆணவம், கன்மம், அசுத்தமாயை — அதிட்டித்து, அவற்றின் தொழில்கள் ஆன்மாக்களைக் கட்டுப்படுத்தல் — சரிவர நடத்து தலேயாம். அவ்வாறு தொழில்கள் முறையே நடந்தால், அவற் றின் பயன், பாசத்தளைகள் தளர்வதும், அதன் காரணமாக ஆன்மாக்கள் தூய்மை அடைவதுமே என்பன முன்பே சுட்டிக் காட்டப்பட்டன. திரோதன சத்தி, திரோபவம் என்றும் கூறப் படுமாம்; இவற்றின் எல்லைதான் அருட்சத்தி என்பதையும் தாயு மானவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆன்மாக்களைக் கட்டுப்படுத்தியுள்ள மலங்களின் மயக்குந் தன்மையும், அவ்வாறு முறையோடு செயல்படும் நிலைமையால், தாமாகவே வலுவிழந்து, ஆன்மாக்கள் தூய்மையடைந்து வீடு பேறெய்துவதற்குத் தகுதிபெறுகின்றனவாம். இக் கருத்து, விளக்க மாகவும், விரிவாகவும் சிவப்பிரகாசத்தில் எடுத்துச் சொல்லப் பட்டுள்ளது கவனிக்கற்பாலது. உதாரணமாகக் கூறுவோமாகில், இருட்டையே தன்னுடைமை ஆக்கிக்கொண்ட ஆணவம், ஆன்மா வின் ஞானசத்திகளையே மறைக்கிறதாம்; அவ்வித வலிமையான சத்தியைத் தகர்த்தெறியும் முறையில் மாயை செயல்பட்டு, முடி வில் அம் மாயையே திரோதான சத்தியாக மாறுகிறதாம். அவ் வாறு நற்பணி புரியவல்லதாயினும், திரோதான சத்தியும் ஆணவ மலத்துடன் இணைந்து செயல்படுவதால் அதுவும் ஓர் மலமே என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இவை யாவும் இறை யருட் சத்தியால் அதிட்டிக்கப்படுவதால், மலநாசமும், ஆன்மப் பிரகாசமும் ஏற்படுகின்றன என்னும் பேருண்மையை அழகாகவும், தெளிவாகவும் எடுத்துக்கூறுகிறது சிவப்பிரகாசம். மேலும், இச் சத்திகள் அனைத்தும் இறையருளுக்குட்பட்டதே என்னும் பேருண் மையும் வலியுறுத்தப்பட்டுள்ளது கவனிக்கற்பாலது. மற்றுமோர் உண்மையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மாயை உலகத்திற்கு

முதற் காரணம்; எனினும் சடப்பொருளாகிய மாயை தானுகவே இயங்காது; எனவே, இயக்குநர் — இறைவன் — தேவைப்படுகிருன் என்பர். இக் கருத்தினைக் குடமும் — குயவனும் என்னும் உவமானத்தின் மூலமாகவும் விளக்கிக் கூறுவர் சித்தாந்திகள். முதற் காரணமாக இருப்பது களிமண்; குடம் ஆக்கப்படுவதற்கு உபாதான காரணமாயிருப்பது சுழல் சக்கரம் ; இவ்விரண்டு காரணங்களையும் ஒருங்கமைத்து இயக்குவது நிமித்த காரணம் — இறைவன். இதனைச் சிவம் என்று அழைப்பர் சித்தாந்திகள். கூறப்பட்டுள்ள உவமானத்தின் நோக்கத்தை மட்டும் கருத்திற்கொண்டு ஆய்வோமானுல், சடப்பொருளாகிய உலகத்திற்கு முதற்காரணம் மாயை; உலக அமைப்பிற்கு உபாதான காரணம் சத்தி. இவ்விரண்டையும் ஒருங்கமைத்து இயக்கும் சித்துப்பொருள், நிமித்த காரணமாகிய சிவம் எனப்படும். மாயை சடப்பொருளாகையாலும், ஆன்மாக்கள் சித்துப்பொருளாகையாலும், மல பந்தங்களுக்குக் கட்டுப்படவேண்டியும், விடுதலைபெற்ற காலத்திலும், சிற்றறிவுப் பொருள்களாகையால் உலகத் தோற்றம், இருப்பு, அழிவு ஆகிய நிகழ்ச்சிகளுக்குக் காரண கர்த்தாவாக இருப்பது பேரறிவுப் பொருளாகிய சிவம் என்னும் செம்பொருள் என்பதாம். சைவ சித்தாந்தத்தின் முடிபாகிய இவ் வுண்மை அடிப்படையியலைச் (Metaphysics) சார்ந்ததாம்; அதனை அளவை இயல் (Logic); அறிவளவை இயல் (Epistemology) முதலியவற்ருலும் தெளிவாகவும், திறமையாகவும் விளக்கிக் கூறியுள்ளார் மறைஞான தேசிகர் என்பதும் வாசகர்கள் கவனிக்கற்பாலது.

7. கட்டுண்ட ஆன்மாக்களின் நிலைமை

சைவ சித்தாந்தத்தில் ஆன்மாக்கள் நிரந்தரமாக நிலைத்து நிற்கும் சித்துப்பொருள்கள் என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளது என்பதை முன்பே குறிப்பிட்டுள்ளோம்; சற்காரிய வாதமும் அதனை ஆதரிக்கின்றதென்பதுவும் குறிப்பிடப்பட்டது. இந் நிலையில் ஆன்மாக்கள் எப்பொழுது மலபந்தங்களில் சிக்கின என்ற முக்கியமான வினா எழுகின்றது. அதற்கு விடையளிக்கும் முறையில், ஆன்மாக்கள் அனாதியாகவே மலபந்தங்களில் நிலைத்து நிற்கின்றன. அவ்வாறு கட்டுண்ட நிலைமைகளிலிருந்து விடுதலை பெற்று வீடுபேறெய்துவதற்கு நல்வழி காட்டுவதற்கே, இறையருளால் சித்தாந்த சாத்திரங்களும், அவற்றைச் சரியான முறையில் விளக்கிக் கூறுவதற்குச் சமயப் பெரியோர்களும், சான்றோர்களும் தோன்றினர் என்பதும் சித்தாந்தத்தின் துணிபாகும்.

இயல்பாகவே சித்துப்பொருள்களாக உள்ள ஆன்மாக்கள் எவ்வாறு அறியாமையில் மூழ்கின என்ற கேள்வியின் சிறப்பு வாசகர்கள் கவனிக்கற்பாலது. அந் நிலைமையை விரித்துரைக்கும் சித்தாந்திகள், அனாதியாகவே சடப்பொருளாகிய பாசத்தளைகளோடு இணைந்துள்ளதால், ஆன்மாக்கள் அறிவுநிலையை உணரா நின்கின்றனவாம் என்பர். இச் சூழ்நிலையை அருணந்தி சிவாசாரியர் சிவஞான சித்தியாரில் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். அவர் கூறியுள்ள கருத்துகளில்[24] முக்கியமாகக் குறிப்பிடவேண்டி

[24] சிவஞான சித்தியார் — செய்யுள் 209:

'அசித்திரு வியாபகம் போல்
  வியாபகம் அருவம் இன்றாய்
வசித்திட வரும் வியாபி
  எனும் வழக்குடையன் ஆகிப்
நசித்திடா ஞானச் செய்தி
  அநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவம் உடையன் ஆகி
  பசுவென நிற்கும் ஆன்மா'.

யவை பின்வருவனவாம்: சடமாகிய மலங்களோடு அநாதியாகத் தொடர்புகொண்டுள்ளதால்தான் ஆன்மா பசுவென்று பெயரிட்டழைக்கப்படுகிறது; பசு என்றால், பாசக் கயிற்றால் கட்டுண்ட பிராணி என்பது பொருள். எனவே, ஆன்மாவும் பாசங்களினால் கட்டுப்பட்டு, வினைப் பயனை நுகர்ந்து, வாழ்க்கைச் சுழற்சியில் உழன்றுகொண்டே இருக்கும் நிலையில் பசுவென்று அழைக்கப்படுகிறது. இவ் விளக்கத்திலிருந்து மற்றோர் உண்மையும் வெளிப்படுகின்றதாம். சடப்பொருள்களாகிய மலங்களும் (பாசத் தளைகள்) நிலைத்து நிற்பனவாம். எனினும், தாம் நிலைத்து நிற்கிறோம் என்ற உணர்வு சித்துப் பொருள்களுக்கே அன்றிச் சடப் பொருளுக்குத் தெரியாவாம். ஆகவே, சடப்பொருளின் இணைப்பிலிருந்து விடுதலை பெறுவதும் சித்துப் பொருளுக்கே உண்டாய உரிமையுமாம் என்பதும் நன்கு விளங்கும். இக் கருத்துகளிலிருந்து சித்தாந்தத்தின் முப்பொருள் கொள்கையும் நன்கு விளக்கம் பெறுகின்றன என்பதும் கவனிக்கற்பாலது.

சடப்பொருளாகிய பாசபந்தங்களின் பிணைப்பால் கட்டுண்டு தன்னிலை மறந்து அறியாமையில் மூழ்கிய ஆன்மாக்கள் எவ்விதங்களில் அவதியுறுகின்றன என்பதை இனிக் காண்போமாக. பாச பந்தங்களின் பிணைப்பால் ஆன்மா பசுவென அழைக்கப்படுகிறதென்பதை முன்பே குறிப்பிட்டோம். அந் நிலையைக் கேவலநிலை என்று கூறுவர்; அறியாமையே அதன் இருப்பிடமாகும். கேவல நிலையில் உள்ள ஆன்மாக்கள் பெறும் தேகத்திற்குக் காரண தேகம் என்று பெயர். இது அசுத்தமாயையால் உண்டாக்கப்படுவதாம். இவ்விதமாக அசுத்தமாயையின் பரிணாமமாகிய தேகத்தில் வாழும் ஆன்மாவின் அறிவு, விருப்பு, வெறுப்பு முதலியவை பொதுவாகவும், தெளிவற்றதாயும் அமையுமாம். அதற்குப் பிறகும் ஆன்மா அடையும் தேகமானது அசுத்தமாயையால்தான் உண்டாக்கப்பெறுவதாம். அவற்றில் அடங்குவது காலம், நியதி, கலை, வித்தை, இராகம் என்பதாம். இந் நிலையில் ஆன்மாவின் அறிவு குறிப்பிட்ட முன்னேற்றமடைந்து தெளிவு பெறுகிறதென்பர். அதன் பிறகும் ஆன்மா அடையும் தேகத்தைக் குணசரீரம் என்பர். இதன் அமைப்பு, சத்துவ, இராசத, தமோ குணங்களால் உண்டாவதாம். இந் நிலையில் உள்ள குண சரீரத்தில் அந்தக்கரணங்கள் சிறிய அளவிலேயே செயல்படத் தொடங்குகின்றனவாம்; அதன் காரணமாக வெளி உலகில் ஏற்படும் நிகழ்ச்சிகள் கிரகிக்கப்படுவதும், அவற்றின் உண்மைகள் ஆன்மாவுக்கு அறிவிக்கப்படுவதுமாகிய அறிவுச் செயல்கள் நிகழவிருக்கின்றன என்பதும் கவனிக்கற்பாலது. இவ்வாறு அறிவு வளருவதன் காரணமாக, ஆன்மாவைச் சூழ்ந்துள்ள அசுத்த

மாயையின் காரியங்களும், ஆன்மாவின் நன்மைக்காகவே செயல் படத் தொடங்கிவிடுகின்றன என்பதும் கவனிக்கற்பாலது.

கேவல நிலையில் ஆன்மா எவ்விதம் செயல்படுகிறதென்பது இதுகாறும் விளக்கப்பட்டது. எனினும், அந் நிலையில் செயல்படும் ஆன்மா எவ்விதமான உருவமோ, அமைப்போ பெறுவதில்லை யாம்; அந் நிலையில் உள்ள தேகம் காரண தேகம் என்று குறிப் பிடப்பட்டுள்ளது. ஆன்மாவின் செயல்கள் யாவும் ஆணவத்தால் பிணைக்கப்பட்டிருக்கும் என்பதும் கவனிக்கற்பாலது. ஆகவே, தேகங்களின் அமைப்பைப் பெருமல், கேவல நிலையில் செயல்படும் ஆன்மா, ஆணவத்தையே இருப்பிடமாகக் கொண்டுள்ளது என்று கூறினல் அது மிகையாகாது. இதற்கு அடுத்தநிலையாகிய சகல நிலையில், ஆன்மா ஐந்து உறைகளைக் (Kosas) கொண்ட தேகத்தைப் பெறுகிறதாம். அவ் வைந்து உறைகள் பின்வருவன: அன்ன மயம், பிராணமயம், மனேமயம், விஞ்ஞான மயம், ஆனந்த மயம். முறையே குறிப்பிட்ட இவ் வுறைகள் ஒன்றிற்கொன்று மென்மேலும் மென்மையும் சூக்குமமும் உடையனவாம். மேலும், இவ் வுறைகள் யாவும் அசுத்தமாயையின் பரிணுமமே என்பதும் கவனிக்கற்பாலது. கேவல நிலையில் தெளிவுபெருமல் நின்ற ஆன்மாவின் அறிவுத் தன்மைகள், சகல நிலையில் பொதுவான முறையில் வெளிப்படுகின்றனவாம். ஏனென்ருல், இந் நிலையில் ஆன்மா ஐந்து உறைகளைப் பெற்று, சூக்கும சரீரத்தோடு இயங்கு கிறதென்பர். பிறப்பு, இறப்பு என்னும் வட்டத்தில் சுழன்று கொண்டு திரியும் ஆன்மா, சூக்கும தேகத்துடன்தான் இயக்கு கிறதென்பதும் கவனிக்கத்தக்கது. மேலும், சூக்கும தேகத்துடன் செயல்படும் ஆன்மாவின் தன்மைகளை, மேலே குறிப்பிட்ட ஐந்து உறைகளின் தன்மைகளோடும் இணைத்துக் கூறுவர் சிலர். அவ் வைந்து உறைகளோடு ஆன்மா தொடர்புகொண்டு செயல்படு கிறதென்பது உண்மைதான். அவ் வைந்து உறைகளின் தன்மை களாலும் ஆன்மா பாதிக்கப்படுகிறது. இவை யாவற்றிற்கும் காரணம் அறியாமைதான். மேலும், அவ் வைந்து உறைகளின் தன்மைகளுக்கும் ஆன்மாவின் உண்மை இயல்பிற்கும் ஒற்றுமை யில்லை; ஏனென்ருல், அவ்வைந்து உறைகள் அசுத்த மாயையால் உண்டாக்கப்பட்டவை. ஆன்மாவோ சித்துப்பொருள், நிரந்தர மான அறிவுப் பிரகாசமுடையது. அறியாமையாலும், கன்மத் தின் பரிபாலிப்பாலும், தன் உண்மை நிலையை மறந்து, எதை எதைப் பற்றியதோ அவற்றின் தன்மைகளையே தம்முடையதெனக் கருதி, பிறப்பு—இறப்பு என்னும் வட்டத்திலேயே சுழன்று கொண்டிருப்பதே கட்டுண்ட ஆன்மாக்களின் நிலையாகுமாம்.

ஐந்து உறைகளுடன் தொடர்புகொண்டு சூக்கும தேகத்துடன் செயல்படும் ஆன்மா ஐவகை அவத்தைகட்குட்பட்டு இயங்குகின்றன என்பதையும், அந் நிலைமை எத்துணைத் தத்துவங்களால் இயக்கப்படுகின்றன என்பதையும் இனி விவரிப்போம். ஐவகை அவத்தைகளாவன : நனவு (Waking); துயில் (Sleeping); கனவு (Dreaming); துரியம் அல்லது உயிர்ப்படக்கம் (Dreamlessness); துரியாதீதம் அல்லது பேருறக்கம் (Bliss). நனவில் தூல தேகத்துடன் ஆன்மா செயல்படுகிறதாம்; இந் நிலையில் இயங்கும் தத்துவங்கள் : காலம், வித்தை, மகேசுவரன், சத்தி, சிவம் என்பர். சூக்கும தேகத்துடன் ஆன்மா செயல்படுவதைத் துயில் என்பர்; இந் நிலையில் இயங்கும் தத்துவங்கள்: வித்தை, மகேசுவரன், சத்தி, சிவம் என நான்காம். சூக்கும தேகத்துடன் ஆன்மா செயல்படுவதைக் கனவு என்பர்; இந் நிலையில் இயங்கும் தத்துவங்கள் : மகேசுவரன், சத்தி, சிவம் ஆகிய மூன்று என்பர். நான்காவது அவத்தையாகிய உயிர்ப்படக்கத்தில் இயங்கும் தத்துவங்கள் சத்தியும் சிவமுமென இரண்டென்பர். ஐந்தாவது அவத்தையாகிய பேருறக்கத்தில் இயங்கும் தத்துவம் சிவம் ஒன்றே என்று கூறுவர். இவ் வைந்து அவத்தைகளைத் தவிர வேறு அவத்தைகளையும் சில சித்தாந்திகள் ஏற்றுக்கொள்வதுண்டு. உதாரணமாக, ஞானப்பிரகாசர் எட்டு அவத்தைகளைக் குறிப்பிடுவார் : மூன்று காரண அவத்தையும், ஐந்து காரிய அவத்தையும் ஆக எட்டு அவத்தைகளென்பர். ஐந்து காரிய அவத்தைகள் பின்வருவனவாம் : (1) கீழால் அவத்தை (2) மேலால் அவத்தை (3) மத்திய அவத்தை (4) பிரேரக அவத்தை (5) நிர்மல அவத்தையும் ஆகுமாம். இவ்வைந்து காரிய அவத்தைகளுக்கு உண்டாய மூன்று காரண அவத்தைகள் பின்வருவன: கேவல அவத்தையும், சகல அவத்தையும் சுத்த அவத்தையுமாம். கேவல அவத்தையில் ஆன்மா தேகத்தைப் பொருந்தாமல், அறிவுச் செயல்களின்றி அழுந்திக் கிடப்பதென்பர்; சகல அவத்தையில் ஆன்மா சூக்கும தேகத்தைப்பெறுவதால் அறிவுச் செயல்கள் பொதுவாக வெளிப்படுமென்பர். சுத்த அவத்தையில் ஆன்மா மலபந்தங்களினின்று விடுபடுவதால், ஐந்து காரிய அவத்தையினின்றும் விடுபட்டு நிற்குமென்பர்.

மறைஞான தேசிகர் அவத்தைகளினுல் பாதிக்கப்பட்டு நிற்கும் கட்டுண்ட ஆன்மாவின் நிலைமையைச் சுவையான உதாரணங்களுடன் விளக்கிக் கூறுகிறுர். இயற்கையாகச் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் வயிரக்கல், கறுப்பு மையில் துவளும்போது, அதன் பிரகாசம் எவ்வாறு பாதிக்கப்படுகிறதோ, அதைப் போன்றதே கேவலத்தில் உள்ள ஆன்மாவின் நிலையுமாம். மையிலிருந்து

எடுத்தவுடன் வயிரக்கல் ஓரளவே பிரகாசிப்பது சகலத்தில் உள்ள ஆன்மாவின் நிலையைப் போன்றதாம். மையிலிருந்து எடுத்து முழுதும் நன்றாகத் துடைக்கப்பட்ட வயிரக்கல் மீண்டும் புத்துணர்ச்சியும் பொலிவும் பெற்றுப் பிரகாசிப்பது சுத்தநிலையிலுள்ள ஆன்மாவின் தன்மை என்பதாம். வயிரக்கல்லைத் துடைப்பதைப் போலவே, ஆன்மாவின் அழுக்குகளையும் துடைத்துத் தூய்மைபெறச் செய்வது இறைவனின் எல்லையில்லா அருட் சத்தியாகும் என்பதையும் எடுத்துக் கூறியுள்ளார், மறைஞான தேசிகர்.

கட்டுண்ட ஆன்மாக்கள் கன்மத்தின் வன்மைக்கேற்பப் பல்வேறு பிறவிகளையும் அவத்தையும் பெற்று, பிறப்பு—இறப்பு என்னும் சுழற்சியில் உழலுகின்றனவாம். இந் நிலையில் அவற்றின் வாழ்க்கை இன்பதுன்பம் இவை யாவும் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. இவ் வுண்மையைக் கருத்திற்கொண்டு, சித்தாந்திகள் மாயை மலத்தினைப் பல பிரிவுகளாகவும் அமைத்துக்கொண்டுள்ளனர். சுத்த மாயை, அசுத்தமாயை ஆகிய இருபெரும்



பிரிவுகளைத் தவிர, அசுத்தமாயை மேலும் இரு பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளனவாம்; அவையாவன: சுத்தாசுத்தமாயை,— இதனை மிச்ர மாயை என்றும் கூறுவர் — அசுத்தமாயை என்பனவாம். இவ்வாறு பிரிக்கப்பெற்ற மாயையும் அவற்றால் பிணைக்கப் பெற்ற ஆன்மாக்களும் படத்தின் மூலமாக மேலே விளக்கப்பட்டுள்ளன.

மூப் பெரும் பிரிவுகளாகக் கூறப்பெற்ற ஆன்மாக்களையும் அவற்றின் தன்மைகளையும் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார் அருணந்தி சிவாசாரியர்.[25]

'உரைதரும் இப் பசுவர்க்கம் உணரின் மூன்றும்
உயரும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்
நிரையின் மலம் மலங்கன்மம் மலங்கன்ம மாயை
நிற்குமுதல் இருவர்க்கும் நிராதார மாகிக்
கரையில் அருட்பரன்துவிதா சத்திநிபா தத்தால்
கழிப்பன் மலம் சகலர்க்குக் கன்ம ஒப்பில்
தரையில் ஆசான்மூர்த்தி ஆதார மாகித்
தரித்தொழிப்பன் மலம் சதுர்த்தா சத்திநிபா தத்தால்'

இச் செய்யுளில் முக்கியமாகக் குறிப்பிடவேண்டியவை மூவகை ஆன்மாக்களும் அவற்றின் தன்மைகளுமாம். விஞ்ஞானகலர் என்போர் ஆணவ மலத்தை மட்டும் கொண்டோராவர். பிரளயாகலர் என்போர் ஆணவம் கன்மம் ஆகிய இரண்டு மலங்களையும் உடையோராவர், சகலர் என்போர், மாயையையும் சேர்த்து மூன்று மலங்களையுமுடையோராவர். இவ்வித மலபந்தங்களிலிருந்து தூய்மை பெறும் நிலைமையையும் அருணந்தி சிவாசாரியர் விளக்கியுள்ளார்.[26]

'கேவல சகல சுத்தம் என்று மூன்றவத்தை ஆன்மா
மேவுவன் கேவலந்தன் உண்மைமெய் பொறிகள் எல்லாம்
காவலன் கொடுத்தபோது சகலனும் மலங்கள் எல்லாம்
ஓவினபோது சுத்தம் உடையன் உற்பவந் துடைத்தே.'

கேவல அவத்தையில் ஆன்மாவின் தன்மைகளையும் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார் அருணந்தி சிவாசாரியர்.[27]

'அறிவிலன் அமூர்த்தன் நித்தன்
அராகாதி குணங்க ளோடும்
செறிவிலன் கலாதி யோடும்
சேர்விலன் செயல்கள் இல்லான்
குறியிலன் கருத்தா அல்லன்
போகத்தில் கொள்கை யில்லான்
பிறிவிலன் மலத்தி னோடும்
வியாபி கேவலத்தில் ஆன்மா.'

25 சிவஞான சித்தியார் — செய்யுள் 253
26 சிவஞான சித்தியார் — செய்யுள் 226.
27 சிவஞான சித்தியார் — செய்யுள் 227.

சகல அவத்தையிலும் ஆன்மாவின் தன்மைகளை விளக்கிப் பின்வருமாறு கூறியுள்ளார் அருணந்தி சிவாசாரியர்.[28]

'உருவினைக் கொண்டு போக போக்கியத் துன்னல் செப்பல்
வருசெயல் மருவிச் சத்த மாதியாம் விடயம் தன்னில்
புரிவதும் செய்திங் கெல்லா யோனியும் புக்குழன்று
திரிதரும் சகலமான அவத்தையில் சீவன் சென்றே.'

சகல அவத்தையில் ஆன்மாவின் தன்மைகளை எடுத்துக்கூறிய அருணந்தி சிவாசாரியர், பல்வேறு பிறவிகளையும் விளக்கிக் கூறியுள்ளார். அதிலும் எண்பத்துநான்கு இலட்சம் பிறவி வேறுபாடுகள் உண்டு என்று குறிப்பிட்டுள்ளதும் கவனிக்கற்பாலது. அந்த எண்ணிக்கை சகல அவத்தையில் சுழன்றுகொண்டிருக்கும் சீவன்களுக்கு மட்டுமே என்று சுட்டிக்காட்டப்படுவதன்மூலம், பல்வேறு பிறவிகளின் எண்ணிக்கையற்ற (infinite) நிலைமைதான் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது என்பதும் கவனிக்கற்பாலது.

சுத்த அவத்தையில் ஆன்மாவின் தன்மைகளை, அருணந்தி சிவாசாரியர் விளக்கிக் கூறியுள்ள திறம் வருமாறு:[29]

'இருவினைச் செயல்கள் ஒப்பின்
ஈசன்தன் சத்தி தோயக்
குருவருள் பெற்று ஞான
யோகத்தைக் குறுகி முன்னைத்
திரிமலம் அறுத்துப் பண்டைச்
சிற்றறி வொழித்து ஞானம்
பெருகி நாயகன்தன் பாதம்
பெறுவது சுத்த மாமே.'

இச் செய்யுளின்மூலமாகச் சுத்த அவத்தையில் மலநீக்கம் பெற்ற ஆன்மாவின் தன்மைகளை மட்டுமல்லாமல், இறைவனடி எய்துவதும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தகும். இறையருட் சத்தியால்தான் மலநீக்கம் ஏற்படுகிறதென்று முன்பே அறிந்தோம். இறைவனடி எய்தும் ஆன்மாவின் தன்மைகள் மற்ரொரு பகுதியில் விரிவாக விளக்கிக் கூறப்படும்.

[28] சிவஞான சித்தியார் — செய்யுள் 228.

[29] சிவஞான சித்தியார் — செய்யுள் 229.

ஆன்மாவைப்பற்றி இந்தியத் தரிசனங்களில் கூறியுள்ள பொதுக் கருத்துகளும், சைவ சித்தாந்தத்தின் சிறப்புக் கருத்துகளும்

இந்தியத் தரிசனங்களில் ஆன்மாவைப் பற்றிக் கூறப்பட்டுள்ள பொதுக் கருத்துகளை மட்டும் வாசகர்களுக்கு அறிமுகம் செய்ய முற்படுவதால், தரிசனங்களின் தன்மைகளை விரித்துரைத்துக் கூறுவதற்கில்லை. அதைப்போன்றே ஒவ்வொரு தரிசனத்தைப் பற்றியும் அதிகமான விளக்கங்களைத் தரவும் இந் நிலையில் இயலாது. எனினும், நாம் தெரிந்துகொள்ள முற்படும் முக்கியமான செய்திகளைப் பற்றிய சிறப்பியல்புகளை விளக்கிக் கூற வேண்டியது அவசியமாகும். இந்தியத் தரிசனங்கள் என்று குறிப்பிடும் பொழுது, அவற்றில் வேத — உபநிடதங்களை ஏற்றுக்கொண்ட தரிசனங்கள் மட்டுமல்லாமல், அவற்றையே புறக்கணித்து, பகுத்தறிவுக்கு முதலிடம் கொடுத்துள்ள தரிசனங்களாகிய சைனமும், பௌத்தமும் இடம்பெறுகின்றன என்பதும் உணரற்பாலது. அதிலும் புறக்காட்சி ஒன்றையே ஒப்புக்கொண்டு, உண்பதும் உடுப்பதும், உறங்குவதுமே வாழ்க்கையின் தத்துவம் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்ட சாருவாக தரிசனமும் இந்திய தரிசனங்களுள் ஒன்ருக அமைந்துள்ளதென்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். இவ்வாறு கருத்து வேறுபாடுகளைக் கொண்டுள்ள அனைத்துத் தரிசனங்களும் இந்தியத் தரிசனங்கள் என்று அழைக்கப் படுகின்றன. அதுதான் இந்தியத் தரிசனங்களின் பெருமையும் சிறப்புமாகும் என்ற உண்மையை எடுத்துக்கூறும் முறையில் மாதவர்[30] தன்னுடைய நூலை — சர்வ தரிசன சங்கிரகம் — அமைத்துக் கொடுத்திருக்கிருர் என்பது கவனிக்கற்பாலது.

பல்வேறு கொள்கைகளை வலியுறுத்தும் அனைத்து இந்தியத் தரிசனங்களும் உண்மையை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. மேலும், வேறுபாடுகளைக் கொண்ட தம்முடைய கொள்கைகளையும் உறுதிப்படுத்தி நிலைநிறுத்துவதற்கு முன்பாக, மற்றவர்களுடைய வினக்களுக்கு விடையளித்து, தம்முடைய கொள்கைகளின் தராதரத்தைத் தெளிவுபடுத்திய பின்பே ஒவ்வொரு தரிசனமும் தம்முடைய நிலைமையை உறுதிப்படுத்திக்

[30] கருநாடகத்தில் 12ஆம் நூற்ருண்டில் உடுப்பி என்னுமிடத்தில் அவதரித்த மாதவாச்சாரியர் துவைதம் என்ற தத்துவக் கொள்கையைப் பரப்பி, அக்கால மக்களிடம் தெய்வ நம்பிக்கையை வளர்த்தார். இந்தியத் தரிசனங்கள் அனைத்தும் உண்மையை எடுத்துக் கூறுவதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டவை என்னும் தத்துவத்தை, சர்வ தரிசன சங்கிரகம் என்னும் உயரிய தத்துவநூலில் எடுத்துக் கூறியுள்ளார்.

கொண்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான அறிவு வளர்ச்சிக்குப் பொருத்தமான சூழ்நிலை பண்டைக்கால இந்தியத் தத்துவ மேதைகளிடையே நிலைத்துநின்ற ஓர் நற்சூழ்நிலை என்பதும் கவனிக்கற்பாலது. அது ஒரு மரபாகவே ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது என்பதாம். அம் மரபை அனுசரித்தே எந்த ஒரு புதிய கொள்கையை நிலைநிறுத்த முற்படுபவரும், முதற்கண் மற்றவர்களுடைய ஒப்புக்கொள்ளப்பெற்ற கொள்கைகளையும், அவர்களிடமிருந்து எழும் வினாக்களையும் தக்க முறையில் விளக்கியும், தருக்க முறையில் விடையளித்த பின்பும்தான், தம்முடைய கொள்கையை நிலைநிறுத்த முடியும் என்பதாம். எனவே, பல்வேறு கொள்கைகளை வலியுறுத்தும் தரிசனங்கள், இந்திய அறிவு மண்ணில் விளைந்து வேரூன்றிவிட்டதென்றால், ஓரளவு தன்னுடைய கொள்கைகளில் காணப்படும் உண்மைகளை மற்றவர்களுக்குத் தெரிவித்து, அதனை ஒப்புக்கொண்ட பின்புதான், இயற்கையாக ஏற்பட்ட அறிவுச் சூழ்நிலை என்பதையே எடுத்துக்காட்டுகிறது. உதாரணமாகக் கூறுவோமாகில் வேதாந்தத்தைப் படிப்பவர்கள், அவற்றின் கொள்கைகளை மட்டுமல்லாமல், மற்றத் தரிசனங்களின் கொள்கைகளையும் அவற்றின் குறைவு நிறைவுகளையும் அறிந்து கொள்ள முடியும். ஏனென்றால், மற்றத் தரிசனங்களில் கூறப் பட்டுள்ள கருத்துகளையும் விளக்கிக் கூறி, அவற்றில் காணப்படும் குறைவுகளை எடுத்துக்காட்டி, அவற்றை நிறைவு செய்து தம் முடைய கொள்கைகளில் முழு உண்மை உண்டு என்று வேதாந்தம் கூறுகிறது. ஓர் உதாரணத்திற்காகவே இவ் விளக்கம் தரப் பட்டுள்ளது.

இந்தியத் தரிசனங்களை இருபெரும் பிரிவுகளாகப் பிரிப்ப துண்டு. ஒரு பிரிவில் ஆத்திக தரிசனங்களும், மற்றொரு பிரிவில் நாத்திக தரிசனங்களும் இடம்பெறுமாம். பொதுவாக ஆத்திக தரிசனங்கள் இறை உண்மையை ஒப்புக்கொண்டவையென்றும், இறை உண்மையை ஒப்புக்கொள்ளாதவை நாத்திக தரிசனங்க ளென்றும் கூறுவர். இருந்தபோதிலும், வேதங்களின் முதன்மையை ஒப்புக்கொண்டவை ஆத்திக தரிசனங்களென்றும், வேதங்களைப் புறக்கணிப்பவை நாத்திக தரிசனங்களென்றும் கூறுவர். அந்த அடிப்படையில் சைனம், பௌத்தம், சாருவாகம் போன்ற தரிசனங்கள் நாத்திக தரிசனங்களென்பது சொல்லாமலே விளங் கும். அவற்றைப் புற தரிசனங்களென்றும் (Leterodox systems) கூறுவதுண்டு. அதைப்போலவே, நியாயம், வைசேடிகம், சாங் கியம், யோகம், மீமாஞ்சகம், வேதாந்தம் ஆகியவை ஆத்திக தரிசனங்கள் எனப்படும். அவற்றை அக தரிசனங்களென்றும் (orthodox systems) கூறுவதுண்டு. இவற்றிலிருந்து ஓர் உண்மை

மிகவும் தெளிவாக விளங்குவதைக் காணலாம். வேதங்கள் தரிசனங்களின் கருத்துகளுக்குக் கருவூலமாகும், அவற்றைத் தழுவியோ அல்லது அவற்றைப் புறக்கணித்தோ எழுந்த கருத்துகளே ஆத்திக தரிசனங்களென்றும், நாத்திக தரிசனங்க ளென்றும் முறையே கூறப்பட்டனவாம். இவற்றின்மூலமாக வேதங்களின் முக்கியத்துவமும், அவற்றில் கூறப்பட்டுள்ள கருத்து களை அடிப்படையாகக் கொண்டு எழுந்த உபநிடதங்களின் முக் கியத்துவமும் கவனிக்கற்பாலது. மேலும், உபநிடதங்களில் கூறப்பட்டுள்ள தத்துவக் கருத்துகளும், ஆகமங்களில் சொல்லப் லப்பட்டுள்ள உண்மைகளும் வெவ்வேறல்ல என்பதும் உணரற் பாலது. இவ்வித முக்கியத்துவம் வாய்ந்த ஆகம — வேதோ — உபநிடதங்களில் கூறப்பட்டுள்ள கருத்துகள் பகுத்தறிவுக்குப் பொருந்துவனவா என்பன போன்ற கேள்விகளையும் மனத்திற் கொள்ளவேண்டும். ஏனென்றால், வேதங்களில் கூறப்பட்டுள்ள உண்மைகள் இறையருளால் தோன்றியவை என்றும், ஆகவே அவற்றின் தகுதியினை நிர்ணயிப்பது பகுத்தறிவுக்கப்பாற்பட்ட தென்றும் கூறுவர். இக் கூற்றினையே மேற்போக்காகப் பார்ப் போர்க்கு, வேதங்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளுக்கும், பகுத் தறிவுக்கும் தொடர்பில்லை என்றதோர் தவறான விளக்கம்தான் கிடைக்கும். அதனால்தான், இப் பிரச்சினையை இந் நிலையிலேயே வாசகர்களின் கவனத்திற்குக் கொணர்ந்துள்ளேன். இதனைச் சிறிது விளக்கமாகவே விரித்துரைப்பது நலமென நம்புகிறேன்.

நம் முன்னோர்கள் விட்டுச் சென்றுள்ள அழியாச் செல்வங் களாகிய எழுத்து, மொழி, கலை, இயல், இசை, நாடகம் ஆகிய வற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் பல உண்மைகளுள் முக்கிய மாக இரண்டினைச் சுட்டிக்காட்ட விழைகிறேன். அவையாவன: செம்மையான சிந்தனை வளர்ச்சியும், சீரான பகுத்தறிவும். இவ் விரண்டு பண்புகளே மனிதனை மனிதனாக மட்டுமல்லாமல், தெய்வ மாக்குவதற்கும் உறுதுணையாக உள்ளன என்பது வாசகர்கள் கவனிக்கற்பாலது. அவ்வளவு சிறப்பினையும் முக்கியத்துவத்தையும் தரப்பெற்ற பகுத்தறியும் சிந்தனையும் வரையறைக்குட்பட்டவை என்பதைத் தீர்மானமாக உணர்ந்தும், மற்றவர்களுக்குத் தெரி வித்தும் உள்ளனர் நம் முன்னோர்கள். எனவேதான், சிந்தனைக்கு அப்பாற்பட்ட உண்மைகளை எழுத்துமூலமாகத் தெரிவித்துச் சென்றுள்ளனர். அதன் பயனாகத்தான் சிறந்த காவியங்களும், சாத்திரங்களும் தோன்றின. இக் கருத்தினை வலியுறுத்தும் தன்மையில்தான், ஆகம—வேதோ — உபநிடதங்கள் ஒருபுறமும், தொல்காப்பியம், திருக்குறள், திருமந்திரம் மறுபுறமுமாகப் பண்டைக்கால மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. இவற்றி

லிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியவை, சிந்தனையின் வலிமையையும், பகுத்தறிவின் பயனையும் மட்டுமல்லாமல், அவை இரண்டின் சீரான சேர்க்கையும், அதனை அளவோடு பயன்படுத்தி, அவற்றிற்கு அப்பாற்பட்ட உண்மைகளை உணர்ந்து கொள்வதற்கே என்பதாம். இந்த அடிப்படையில்தான், அளவை யியல், அறிவு அளவையியல் போன்ற நூல்களும் தோன்றின என்பதும் கவனிக்கற்பாலது. நாம் முதலில் தெரிந்துகொள்ள முற்பட்ட ஆன்மாவின் உண்மை என்ற பொருளைப் பற்றி இனி ஆராய்வோமாக.

சடப் பொருளாகிய உடலையன்றி வேறு எந்த உண்மைப் பொருளுமில்லை. எனவே, சடப்பொருளே உண்மைப்பொருள் என்பதாம். இக் கொள்கையை ஏற்றுக்கொண்டோர் பொதுவாக சடவாதி அல்லது சடக் கொள்கையினர் (Materialists) என்று அழைக்கப்பட்டனர். இந்தியத் தரிசனங்களில் சடக்கொள்கை யைப் பற்றி நிற்பவர்கள் சாருவாகர் எனப்படுவர். பண்டைக் காலத்தில் இக் கொள்கையை வலியுறுத்தி அதனை அக் கால மக்களிடையே பரப்பி வந்தவர் பிருகஸ்பதி என்று கூறப்படுகிறது. பொதுவாகவே, சடக் கொள்கையினரைப் பற்றி மகாபாரதத் திலேயே இழித்துக் கூறப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. எனினும், மகாபாரதத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளதிலிருந்து இக் கொள்கையினுடைய பழமையை ஒருவாறு உணரலாம். இக் கொள்கையினர் காட்சி அளவை ஒன்றையே பிரமாணமாக ஒப்புக்கொண்டு சடப்பொருளே உண்மைப்பொருள் என்று கூறு வர். உண்பதும், உடுப்பதுமாகிய இன்பம் அனுபவிப்பதைத் தவிர, அவற்றிற்கு மேம்பட்டதொன்றும் இல்லை என்ற தத்து வத்தை ஒப்புக்கொண்டோராவர். எனவே, சடப்பொருளில்லாத எதனையும் உண்மை என்று ஒப்புக்கொள்ள மறுப்பர். நிற்க, இவர்களிடையேயும் இரு பிரிவுகள் ஏற்பட்டன என்பதையும் எடுத்துக்கூறக் கடமைப்பட்டுள்ளேன். ஒரு பிரிவினர் தூர்த்தர் என்றும், மற்றொரு பிரிவினர் சுசிக்சிதர் என்றும் அழைக்கப் பட்டனராம். முதற் பிரிவினர், ஆன்மா என்ற பொருளையே மறுத்தனர்; இரண்டாம் பிரிவினர், ஆன்மாவை இல்லாமைப் பொருளாக ஏற்றுக்கொண்டனர். அதனை ஓர் உதாரணத்தின் மூலமாகவும் விளக்கினர். வெற்றிலை, சுண்ணம், பாக்கு ஆகிய மூன்றையும் நுகரும்பொழுது எவ்வாறு சிவப்பு நிறம் தோன்று கிறதோ அதைப்போன்றே, நிலம், நீர், காற்று, நெருப்பு ஆகிய நான்கின் சேர்க்கையால் தோன்றுவதே ஆன்மாவாம். இவ் வுதாரணத்திலிருந்து நான்கு மூலப்பொருள்களின் உண்மையையே சடக்கொள்கையினர் ஒப்புக்கொண்டுள்ளனர் என்பதும் கவனிக்கற்

பாலது. ஐந்தாவது மூலப்பொருளாகிய ஆகாயம் (ether) மறுக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. காட்சி அளவை ஒன்றையே பிரமாணமாக ஏற்றுக்கொள்வதன் மூலமாக, அனுமான அளவையை மறுத்துள்ளனர். அனுமானத் தின்மூலமாகத்தான் ஊகித்து உணரவேண்டிய சித்துப் பொரு ளாகிய ஆன்மா மறுக்கப்பட்டுள்ளது ஆச்சரியப்படுவதற்கில்லை. இவ்வாறு சாருவாகரின் கொள்கைகளை ஆய்ந்து பார்க்கும்பொழுது, அவர்களுடைய தத்துவம் சீரில்லாதது, சிக்கலானது என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும் உண்மையாகும். சாருவாகரின் கொள்கையை மறுத்துச் சித்தாந்திகள் கூறும் கருத்துகளின் சுருக்கம் பின்வருவனவாம்: (ஆன்மா) 'இல்லை' என்ற சொல் இருப்பவனிடத்திலிருந்துதான் வெளிப்படுகிறது; எனவே இல்லை என்ற சொல்லால், இருப்பதையே குறிப்பதாகும். இக் கருத்தினையே மெய்கண்டதேவர் மூன்றும் சூத்திரத்தில் எடுத்த எடுப்பிலேயே சுட்டிக்காட்டியுள்ளார் என்பதை வாசகர்கள் கவனிப்பார்களாக.

இனி சைனக் கொள்கையில் ஆன்மாவின் உண்மை எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது என்பதைக் காண்போம். மகாவீரர், சைன சமயத்தின் இருபத்துநான்காவது பரமாசிரியர் என்று கூறப் பட்டுள்ளபோதிலும், அவருடைய போதனைகளை அடிப்படை யாகக் கொண்டுதான் சைன தத்துவம் அமைந்துள்ளது என்ப தைச் சுட்டிக்காட்ட விழைகிறேன். காணும் உடலையன்றி, அதனை இயக்கும் சித்துப் பொருளாகிய ஆன்மா உண்டு. அவை எண்ணிக்கையற்றவை என்பன போன்ற கருத்துகளை சைனர் ஒப்புக்கொண்டுள்ளனர். காட்சி அளவை, அனுமான அளவை, சான்றோர்களின் உரை ஆகிய மூன்று பிரமாணங்களையும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாம். மேலும், கட்டுண்ட நிலையிலிருக்கும் ஆன்மாவைச் சீவன் என்று கூறுவர்; அதன் பொருள் உயிருள்ளது என்பதாம். அவற்றிலிருந்து உலகிலுள்ள பொருள்கள் அனைத்தையும் இருபெரும் பிரிவுகளாகப் பிரித்து, அவற்றினை உயிருள்ள பொருள்களென்றும், உயிரில்லாத பொருள்களென்றும் குறிப்பிடுவர் சைனர். இதிலிருந்து சைனர் களின் கொள்கைகளில் உயிருள்ள பொருளாகிய ஆன்மாவுக்குத் தரப்பட்டுள்ள முதலிடம் நன்கு விளங்கும். இக் கொள்கையின் சிறப்பைப் பேராசிரியர் ஹிரியன்னு[31] மிகவும் பாராட்டிக் கூறி யுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

31 'What is mind no matter and what is matter, never mind'. Essentials of Indian Philosophy, M. Hiriyanna. ஆங்கிலத்தில், Mind" 'Soul' என்ற சொற்கள் ஒரே பொருளைக் குறிக்குமாம். ஆனால், இந்திய

உயிருள்ளதால்தான் உடல் இயங்குகிறது என்பது சொல்லாமலே விளங்குவதாகும். இந் நிலையில், உடலினின்று வேருக உயிர் உள்ளது. கட்டுண்ட நிலையிலிருப்பதால் அதற்கு ஓர் அளவையும் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. சைவ சித்தாந்திகள் அதனை அணு என்று குறிப்பிடுவர். அணு என்று குறிப்பிடுவதிலிருந்து அதனைக் கண்ணுல் காணவியலாது என்பதும் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. எனினும், சைனர்கள் உயிர்களுக்கு அளவுகள் வரையறுத்துக் கூறியுள்ளது ஒரு முக்கிய வேறுபாட்டைக் கொண்டுள்ளது. உடம்புகளின் பருமனுக்கேற்றவாறு உயிர்களின் அளவும் மாறுபடுமாம். அதற்குக் காரணம் கன்மமே என்பதும் அவர்களின் கொள்கை. உதாரணமாக, எறும்பின் உயிரும், யானையின் உயிரும் அவற்றின் தேகங்களின் பருமனுக்கேற்ற அளவுகளைப் பெற்றுள்ளதென்பர்.

ஆன்மாக்கள் நித்தியமானவை, எண்ணற்றவை என்பது சைனர்களின் தத்துவம். உயிருள்ள பொருள்கள் யாவற்றிலும் ஆன்மாக்கள் உண்டு என்பர். மலபந்தங்களிலிருந்து விடுதலை பெற்ற உயிரினை ஆன்மா என்று குறிப்பிடுவர் சைவ சித்தாந்திகள். 'அர்கத்' என்று குறிப்பிடுவர் சைனர்கள். இந் நிலையில் பெயர்கள் தான் வேறன்றிப் பொருள் ஒன்றே என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். வீடுபெற்ற நிலையில் எல்லா ஆன்மாக்களும் சமமானவை என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டபோதிலும், அவரவர்களின் கன்மத்திற்கு ஏற்ப, வெவ்வேறு வாழ்வுநிலைமைகளைப் பெற்று, வினைப் பயன்களை நுகர்வதால் வேற்றுமைகளைக் கொண்டுள்ளனவாம். இதனை உதாரணங்களின் மூலமாக விளக்கியுள்ளனர். ஓரறிவு கொண்டவை மரஞ் செடிகொடிகளாகும்; அவற்றிற்குத் தொடுஉணர்ச்சி (touch) மட்டும் உண்டு. ஈரறிவு கொண்டவை மண்புழு, கம்பளிப் புழு முதலியனவாம். அவற்றிற்குத் தொடுஉணர்ச்சியும், சுவை உணர்ச்சியும் (taste) உண்டாம். மூன்றறிவு கொண்டவை பூச்சிகளாகும் (insects); அவற்றிற்குத் தொடுஉணர்ச்சி, சுவை உணர்ச்சி, மோப்ப உணர்ச்சி (Smell) உண்டாம். நான்கறிவு கொண்டவை ஒளியைப் (Vision) பெற்றும், ஐந்து அறிவு கொண்டவை ஓசையையும் (audition) பெற்றும், ஆறு அறிவைப் பெற்றவை சிந்தனையையும் பெற்றும் வாழ்வனவாம்.

தரிசனங்களில், சிறப்பாக ஆத்திக தரிசனங்களில் Mind என்பது Manas என்பர். அதன் பொருள் அந்தக் கரணங்களின் கூட்டுச் செயல் என்பதாம். எனவே, அவற்றிற்கு மேற்பட்டதுதான் ஆன்மா என்பதும் கவனிக்கற்பாலது.

இது நிற்க, அதிதீவிரமான ஓர் கொள்கையையும் சைனர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். உலகிலுள்ள எல்லாப் பொருள்களிலும் உயிர்கள் உண்டு என்பதாம். இதனையொத்த கொள்கை, பழங்காலத்துக் கிரேக்க மக்களிடத்தும் பரவியிருந்தது. அக் கொள்கையினை ஐலசோயிஸம் (Hylozoism)[32] என்று அவர்கள் குறிப்பிட்டனர். அவ்வித அதிதீவிரக் கொள்கையை வலியுறுத்துவதனுல், சடப்பொருள்கள், சித்துப் பொருள்கள் என்ற வேறுபாடு நீக்கப்படுவதோர்புறமிருக்க, சைனர்களின் அகிம்சைக் (Non-Violence) கோட்பாட்டிற்கும் அது அடிப்படையாய் அமைகிறதென்பதும் கவனிக்கற்பாலது. இவ்வாறு உயிருள்ள பொருள்கள், உயிரற்ற பொருள்கள் என்ற பேதத்திற்கே இடமில்லை என்னும் தத்துவத்தை வலியுறுத்தியபோதிலும், உயிருள்ள பொருள்களுக்கே முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது சைன தத்துவத்தின் உயரிய நிலைமையை எடுத்துக்காட்டுவதாகும். இவ்விதமாக ஆன்மாக்களின் உண்மையையும், அவற்றின் தன்மைகளையும் பொறுத்தமட்டில், சைனர்களும் சைவசித்தாந்திகளும் ஒன்றுபட்ட கொள்கைகளையே கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கதாம். இருந்தபோதிலும், ஆன்மா சித்துப் பொருளே என்பது சைனர்களின் தத்துவம்; சித்து, அசித்து ஆகியவை ஆன்மாவின் தன்மைகளே யன்றி, ஆன்மா அவை இரண்டிற்கும் அப்பாற்பட்டது என்பதே சைவசித்தாந்தத்தின் தத்துவம் என்பதும் வாசகர்கள் கவனிக்கற்பாலது.

பௌத்தம் ஆன்மாவின் உண்மையை எவ்வாறு விளக்குகிறதென்பதைக் காண்போம். பாசபந்தங்களிலிருந்து விடுதலைபெற்ற (நிர்வாண) நிலையில்தான் ஆன்மா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனல், அந் நிலையின் தன்மையைப் பற்றியோ, அந் நிலையில் இயங்கும் சித்துப்பொருளைப் பற்றியோ பொதுவாகப் பௌத்தம் முக்கியத்துவம் அளிக்கவில்லை என்பதை மட்டும் இத் தருணத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். ஏனென்றல், பௌத்தர்களுடைய முக்கிய நோக்கமும் முயற்சியும், வாழ்க்கையில் காணப்படும் இன்ப துன்ப நிலைமைகளும், அவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்கு ஒழுக்கமும், உண்மையான நடத்தையும்தான் அவசியம்; அவ்விதமான அருத்தமுள்ள வாழ்க்கையை அமைத்துக் கொண்டால், அதுவே உயர்ந்த நிலையை அடைவதற்குத் துணைபுரியுமாம் என்பது அவர்களுடைய உறுதியான கோட்பாடாகும். இருந்தபோதிலும் ஆன்மாவின் உண்மையை அவர்கள்

[32] "Hylozoism is the doctrine that life and matter are inseparable. This doctrine has been held under different forms from Socrates, the Stoics. Plotinus to Spinoza in Modern Times". Vocabulary of Philosophy by William Fleming D.D.

ஏற்றுக்கொண்டுள்ள முறை எதிரிடைக் கொள்கைகளாக அமைந் துள்ளன. அவற்றை உதாரணங்களின் மூலமாக விளக்குவதே பொருத்தமானதாகும். கண்ணால் காணப்படும் தூலப்பொருள் களைத் தவிர வேறொன்றும் ஏற்பதற்கில்லை என்னும் கருத்தினைக் கொண்டது நைராத்மிய வாதம் (Nairatmya Vada). இக் கருத்தினை அடிப்படையாக அமைத்தே சங்காதவாதம் (Samghata vada) என்பதையும் வலியுறுத்துவர். இவ் வாதத்தின் தத்து வம் என்னவென்றால், பல பொருள்கள் ஒன்றுசேர்ந்து இயங்கும் நிலையில்தான் வாழ்வு என்பதே தோன்றுகிறது; அதுதான் இயற்கை, அதற்குமேல் எவ்விதமான விளக்கத்தையும் தருவதற் கில்லை என்பர். உதாரணமாக 'அது வெண்மையாக இருக்கிறது' என்று கூறும்பொழுது 'அது' எதனைக் குறிக்கிறது? இவ் வினு விற்கு விடையளிக்கும் முறையில் 'அது மழை பெய்கிறது' என்று கூறுவதைப்போ லாகுமாம். சுருங்கக் கூறின் 'அது' என்று குறிப்பிடும் சொல்லுக்கே தனியான எவ்விதமான பொருளும் கிடையாது என்பர். இவ்வாறான விளக்கங்களிலிருந்து ஆன்மா இல்லை என்ற (நைராத்மிய) வாதத்தை வலியுறுத்துகின்றனர் என்பது நன்கு விளங்குவதாகும். மற்றுமோர் உதாரணமாகத் தேரைக் குறிப்பிடுவர். குறிப்பாகக் கூட்டுப் பொருள்களின் (சம்கடவாதம்) இயற்கை நிலையே ஆன்மாவாம் என்னும் கொள் கையை வலியுறுத்துவர். இவற்றையன்றி நீரோட்டம், தீபஒளி முதலிய உதாரணங்களையும் எடுத்துக்காட்டி, அவர்களுடைய கொள்கையை நிலைநாட்டுவர்.

பௌத்தர்கள் ஏற்றுக்கொண்டுள்ள க்ஷணக் கொள்கையும் (கணபங்கவாதம்) குறிப்பிடத்தக்கது (Sanika Vada). சடப் பொருள்கள் தோன்றி அழியும் தன்மையுடையதால், மாற்றத் தையே அடிப்படையாகக் கொண்டது. இவ் வுண்மையை அன்றாட வாழ்க்கையில் கண்ணுற்ற புத்தர், நிரந்தரமான மாற்றம் என் பதே முடிவான உண்மை என்று முதன்முதலில் கருதினார். அவ் வித நோக்கத்திலும், மாற்றங்கள் ஏற்படுவதைக் கண்ணுற்று அவற்றை அறிந்துகொள்ளும் நிலையில் மாற்றம் இல்லை; அதற்குக் காரணம் நிரந்தரமாக இலங்கும் சிந்தனையே — மனம் என்ற உண்மையையும் புத்தர் உணர்ந்தார். மனம் என்று குறிப்பிடும் போது, மேல்நாட்டுத் தத்துவத்தில் குறிப்பிடும் சொற்களாகிய மைண்ட் (Mind), ஸோல் (Soul) முதலியவற்றிற்கு ஏற்ற பொருளில்தான் புத்தரும் மனம் என்ற சொல்லைப் பயன்படுத்தி னார் என்றே கூறலாம். மாற்றங்களைக் கண்டுணரும் மனம், மாற்றமுடையதன்று என்றபோதிலும், மனம் என்பதைப் பௌத் தர்கள் எவ்வாறு விளக்குகின்றனர் என்பதைக் காண்போம்.

நொடிக்கு நொடி மாறிக்கொண்டே இருக்கும் பொருள்கள், அதே பொருள்கள்தான் என்று தெரிந்துகொள்வது எவ்விதமென்ருல், முன்பு பார்த்த பொருள், தற்போது பார்க்கும் பொருள் ஒரேவிதமாக இருப்பதுதான் காரணமென்பர். இதை முற்ருெருமை — Identity — என்று குறிப்பிட்டுக் கூறுவர். ஞாபகம் அல்லது நினைவு ஒப்புக்கொள்ளப்பெற்றுள்ள போதிலும், அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள விளக்கம் கவனிக்கற்பாலது. ஒவ்வொரு தடவை தோன்றும் நிலைமைகள், முன்பு தோன்றிய நிலைமைகளோடு பின்னிப் பிணைந்துள்ளன. இந் நிலையில் சடப்பொருள்கள், சித்துப் பொருள்கள் என்ற பேதங்களுக்கே இடமில்லாமல், பொருள்களின் தோற்றம்தான் மாறி மாறி ஏற்பட்டுக் கொண் கொண்டிருக்கின்றனவாம். இந் நிலையில் இரண்டு தோற்றங்கள் ஒரேவிதமான தோற்றங்கள் அல்லவென்ருலும், அவை ஒன்றுக் கொன்று வேறுபட்டவையல்ல. எனவே, தன்னுணர்வு ஏற்பட்டு அதைத் தானே என்று உணரும் நிலைமை விஞ்ஞான ரீதியில் விளக்கப்பட்டுள்ளது என்பதும் கவனிக்கற்பாலது. இவ்வாருன விளக்கங்கள் அனைத்தும் ஐம்புலனுணர்வுக்குட்பட்டவையாதலால், அதற்கப்பால் உள்ள எதனையும் ஒப்புக்கொள்ளவியலாது என்பதும் சொல்லாமலே விளங்கும். அதனுல்தான் அடிப்படைத் தத்துவ ரீதியில் — Metaphysics — ஆன்மா உள்ளது என்ற பேச்சுக்கே இடமில்லையாம். எனினும், வாழ்வைப் பெற்று உடல் இயங்குவது உயிருள்ளதால்தான்; எனவே, உடம்பைத் தவிர, உயிர் என்று ஓர் பொருளுண்டு என்ற அளவில் பௌத்தம் அமைகிறது. அப் பொருளின் உண்மை நிலையை உணர்ந்து கொள்வதற்கே ஒழுக்கமும், உயர்ந்த எண்ணங்களும், நன்னடத்தையும் அவசியமாகும் என்று அறிவுறுத்தினுர் புத்தர்.

இனி ஆத்திக தரிசனங்களில் ஆன்மாவின் உண்மை எவ்வாறு விளக்கப்பட்டுள்ளதென்பதைக் காண்போம். முதலாவதாக, நியாய-வைசேடிக தரிசனங்கள் இரண்டையும் ஒன்ருக ஆய்வோம். நியாய தரிசனத்திற்கு ஆசிரியர் கோதமர் என்று கூறுவர். இவருக்கு அட்சபாதர் என்ற மற்ருெரு பெயரும் உண்டாம். வைசேடிக தரிசனத்திற்கு ஆசிரியர் கணுதர் என்று கூறுவர். இவருக்கு உலுக்கர் என்று மற்றுமோர் பெயரும் உண்டாம். இவ்விரு தரிசனங்களையும் ஒன்ருக இணைத்துக் கூறப்படுவதன் நோக்கம் என்னவென்ருல், இரு தரிசனங்களும் ஒன்றுக்கொன்று தருக்க ரீதியிலும், அறிவு அளவை அமைப்பிலும் பிணைக்கப் பட்டுள்ளன என்பதாம். அதனுல்தான், இவ் விரண்டு தரிசனங்களையும் இணைத்தே எப்பொழுதும் கூறப்பட்டுள்ளதென்பதும் கவனிக்கற்பாலது. பொதுவாக எல்லாக் கருத்துகளிலும் இரு

தரிசனங்களுக்கும் ஒற்றுமையுண்டு. அதிலும் சிறப்பாக, ஆன்மாவின் உண்மையைப் பற்றியும், அவற்றின் தன்மை பன்மைகளைப் பற்றியும் இரு தரிசனங்களும் ஒத்த கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கனவாம்.

நியாய—வைசேடிக தரிசனங்களின் தத்துவக் கருத்துகளை மிகவும் சுருக்கமாகக் கூறமுற்படுகிறேன். சடப்பொருளாகிய உலகம், இயங்கிக் கொண்டிருப்பது உண்மை; இவ்வுலகில் காணும் பொருள்களனைத்தையும் இருபெரும் பிரிவுகளாகப் பிரிப்பர்: உயிருள்ள பொருள்களும், உயிரற்ற பொருள்களுமாம். உயிரற்ற பொருள்கள் சட அணுக்களின் கூட்டுச் சேர்க்கையால் உண்டாவதே. எனவே, உயிரற்ற சடப்பொருள்கள் அணுக்களின் சேர்க்கையால் உண்டாவதால், அவை மாற்றங்களுக்குட்பட்டதே. இக் கருத்து தற்கால விஞ்ஞானியரின் கருத்துகளுக்குப் பொருந்தும் முறையிலேயே அமைந்துள்ளதும் கவனிக்கற்பாலது. மற்றும், அணு என்ற சொல் கையாளப்பட்டுள்ள முறையும் குறிப்பிடத்தக்கது. மேலும் பிரிக்கமுடியாத அளவுக்கு அவ்வளவு சிறிய பருமனுடையது என்பதாம். எனவே, 20ஆம் நூற்றாண்டில் அணுவைப் பிளந்துவிட்டார்கள் என்ற கூற்றைச் சுட்டிக்காட்டி, இந்தியத் தரிசனங்களில் கூறப்பெற்றுள்ள கருத்துகளைப் பொய்யாக்கிவிட்டனர் என்ற மேல்வாரியான முடிபுக்கு வருவது பொருத்தமன்று; உண்மையுமாகாது. சடப்பொருள்கள் அடிப்படைத் தத்துவ ரீதியில் அணுக்களின் கூட்டமே என்பதும், அவை என்றும் நிலைத்து நிற்பன என்பதும், தோற்றங்களும், மாற்றங்களும் ஏற்படுவது அவ்வணுக்களின் கூட்டுச் சேர்க்கையில் ஏற்படும் குறைவும் நிறைவுமே என்ற உண்மையும் அறியற்பாலது. இவற்றிலிருந்து மேலும் விளங்கும் உண்மை சடப்பொருள்களை ஆக்கவோ அழிக்கவோ முடியாது என்பதாம் — (Matter can neither be created nor be destroyed.) தற்கால விஞ்ஞானிகளின் கருத்துகளும் முன் குறிப்பிட்ட கருத்தினையே வலுப்படுத்துகின்றன என்பதும் கவனிக்கற்பாலது.

தத்துவ உண்மைகளை எளிதில் உணர்ந்து கொள்வதற்காக, இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்ற நிலையில் உயிரற்ற பொருள்கள் என்னவென்பதை அறிந்தோம். உயிருள்ள பொருள்களென்று குறிப்பிடுவது ஆன்மாக்களைத்தான். தருக்கஞானம், அறிவு அளவையியல் ஞானம் ஆகிய இரண்டு தன்மைகளின் ஒற்றுமையை வலியுறுத்தும் நியாய—வைசேடிக தரிசனங்களின் நோக்கம் ஒன்றே. ஆன்மாவை, அது பற்றிநிற்கும் பந்தபாசங்களிலிருந்தும், தேகங்களின் தொடர்புகளிலிருந்தும் விடுதலை

பெறச் செய்வதே என்பதாம். இந் நிலையில், ஆன்மாவைச் சடப் பொருள்களின் கூட்டுச் சேர்க்கையால் அமைந்த தேகங்களினின்றும் வேறுபடுத்துவ தல்லாமல், மனம், புத்தி முதலிய அந்தக்கரணங் களிலிருந்து வேறுபடுத்திக் கூறப்பட்டுள்ளதும் கவனிக்கற்பாலது. இந்தியத் தரிசனங்களில் மனம் அல்லது உள்ளம் (Mind) என்றால், உயிரையோ (Soul), ஆன்மாவையோ (atma) குறிப்பிடாது என்பது முன்பே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவ் வுண்மையைக் கருத்திற்கொண்டு நியாய—வைசேடிக தரிசனங்களில் கூறப்பட் டுள்ள கருத்தினை வாசகர்கள் கவனிப்பார்களாக. ஏனென்றால், மனம் அல்லது உள்ளம் என்பது அந்தக்கரணங்களின் கூட்டுச் சேர்க்கையால் தோன்றுவதாகும். எனவே, மனமும் சடத் தன்மையுடையதே என்பதும் விளங்கும். இந் நிலையில் ஆன்மா வானது தேகத்துடன் தொடர்புகொள்கிறதென்றால், மனத்துடன் தொடர்புகொள்கிறதென்றே பொருளாகும். அதனால்தான், ஆன்மா, மனத்துடன் தொடர்புகொள்ளும் பொழுதும், சித்துப் பொருளாக இயங்குகிறது. இவ்வாறு ஆன்மா ஒரு சித்துப் பொருள் என்று குறிப்பிடுவதும் எந்த அளவுக்குப் பொருந்தும் என்பதும் இதன்மூலமாக நாம் உணரலாம்.

நியாய—வைசேடிக தரிசனங்கள் ஆன்மாவின் தன்மையை யும், அவற்றின் பன்மையையும் ஒப்புக்கொண்டுள்ளன என்பது முன்பே சொல்லப்பட்டன. எனினும், எந்த முறையில் ஆன்மா வின் தன்மையை ஏற்றுக்கொள்கின்றன என்பதையும் சுருக்கமாக விளக்குவது நலமாகும். சுவைநிறைந்த உதாரணங்களின்மூல மாகவே விளக்கப்பட்டிருக்கிறது. ஒரு மனிதன் தன்னைக் குறிப் பிடும்பொழுது, பொதுவாக 'நான்' என்ற சொல்லைப் பயன் படுத்தியே தீரவேண்டும். 'நான்' என்னும் சொல் 'என்னுடைய உடல்' என்னும் சொற்களிலிருந்து வேறுபட்டது. இதிலிருந்து 'நான்' வேறு; 'என்னுடைய உடல்' வேறு என்பதும் தெளிவு. ஆகவே, 'நான்' என்று குறிப்பிடுவது, உடலில் இயங்கியும், உடலை இயக்கவும் வல்ல பொருள், ஆன்மா என்பது அறியத் தக்கதாகும். மேலும், நொடிக்கு நொடி மாறிக் கொண்டிருக்கும் பொருள்களை அறிந்துகொள்ளும் ஆன்மா, அவ்வித மாற்றங் களுக்கு உட்படாதது; எவ்விதமென்றால், மாறிக்கொண்டே இருக் கும் பொருள்கள் ஒன்றையொன்று தொடர்ந்து இயங்குவதாம்; அவையனைத்தையும் ஒன்றாக இணைத்து, அவற்றிற்குப் பொருள் விளக்கம் தருவது, சித்துப் பொருளாகிய ஆன்மா என்பதாம்; அதனால்தான், அறிவு ஏற்படுகிறதென்பதும் கவனிக்கற்பாலது. எனவே, ஆன்மா சடப் பொருள்களோடு தொடர்புகொண்டு இயங்கியபோதிலும், அது சடப்பொருளன்று; மற்றெவ்விதமான

பொருள்களின் கூட்டுச் சேர்க்கையுமன்று. ஆன்மாக்கள் எண்ணிக்கையற்றவை என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. பல ஆன்மாக்கள் உண்டு என்னும் உண்மை காட்சி அளவையாலும், அனுமான அளவையாலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இக் கருத்துகள் அனைத்தும் சைவ சித்தாந்தத்திலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். உணர்வுநிலை (Conciousness) ஆன்மாவின் தன்மைகளில் ஒன்றே குறிக்கத் தக்கதாம். உணர்வு நிலை (Conciousness) ஆன்மாக்களின் தன்மைகளுள் ஒன்றே என்பதும் மூன்று தரிசனங்களிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், நியாய—வைசேடிக தரிசனங்களில் மனத்திற்கு அணுத்தன்மை உண்டு என்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இருந்த போதிலும், மனம் ஆன்மா அல்லவென்பதும், ஆன்மா மனத்தோடு தொடர்பு கொள்வதால்தான் உணர்வுநிலை ஏற்படுகிறதென்பதும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிச் சாங்கிய—யோக தரிசனங்களில் ஆன்மாவைப்பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்துகளைக் கவனிப்போம். இவ்விரு தரிசனங்களையும் இணைத்துக் கூறுவதன் நோக்கம் என்னவென்றால், ஒரு தரிசனத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகள், மற்றொரு தரிசனத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகளோடு சேர்ந்தே முற்றுப்பெறுகின்றன. இவ் வுண்மையை நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்றால், முதலில் சாங்கிய தரிசனத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகளை ஆய்வோமாக.

சாங்கிய தரிசனம் சட உலகின் உண்மையை ஏற்றுக்கொள்கிறது. உலகம் சடப்பொருள்களின் கூட்டுச் சேர்க்கையால் அமைந்து இயங்குவதாம். உலகில் காணப்படும் எல்லாப் பொருள்களையும் இருபெரும் பிரிவாகப் பிரித்து, உயிருள்ள பொருள்களென்றும், உயிரற்ற பொருள்களென்றும் கூறுவர். உயிருள்ள பொருளுக்குப் புருடன் — Purusa — என்றும், சடப் பொருளுக்குப் பிரகிருதி — Pracruti — என்றும் குறிப்பிட்டுக் கூறுவர். பிரகிருதி என்பது ஒன்று. புருடர்கள் பலர் என்னும் கொள்கையை வலியுறுத்துவர். இவ்வாறு கூறப்பட்டுள்ள தத்துவக் கருத்துகளையெல்லாம் ஒருங்கே அமைத்து, சாங்கிய தரிசனம் மூவகைக் கொள்கைகளைக் கொண்டுள்ளனவாம் என்று அறிஞர் பெருமக்கள் சுட்டிக்காட்டுவர். அவையாவன : இருமைக் கொள்கை (Dualism); பன்மைக் கொள்கை (Pluralism); காட்சிப் பொருட்கொள்கை (Realism).

சாங்கியம் என்ற சொல் பலவாறு விளக்கப்பட்டுள்ளன. எனினும், அவற்றில் முக்கியமான விளக்கங்கள் பின்வருவனவாம்:

எண்ணிக்கை (Enumeration); பகுத்துணர்தல் (Discrimination); ஞானம் (Wisdom). இம் மூன்று வகை விளக்கங்களிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான கருத்து என்ன வென்றால், சாங்கிய தரிசனம் பகுத்துணர்தலை வலியுறுத்துகிறது. ஏனென்றால், பகுத்துணர்வின் மூலமாகத்தான் வித்துப் பொருளாகிய புருடன், சடப்பொருள்களிலிருந்து தன்னை வேறுபடுத்தி, அதன் பயனாகப் பாசத்தளைகளிலிருந்து விடுதலைபெற இயலும் என்பதாம். காட்சி அளவை, அனுமான அளவை, உரையளவை ஆகிய முப் பிரமாணங்களையும் ஒப்புக்கொள்கின்றனர். பாச பந்தங்களினால் சடப் பொருள்களோடு தொடர்புகொண்டு இயங்கும் ஆன்மாவை புருடன் என்று அழைப்பர்; அதன் உண்மையையும், பன்மையையும் சாங்கியர் ஒப்புக்கொள்வது மிகவும் சுவையானதும், முக்கியமான பகுதியுமாகும். நான்குவிதமான காரணங்களைக் காட்டி, புருடனின் உண்மையும் பன்மையும் நிரூபிக்கப் படுகின்றன. இனி அக் காரணங்களை விவரித்துக் கூறுவோம்:

உலகில் காணப்படும் பொருள்களை இருபெரும் பிரிவுகளாகப் பிரித்து, அவற்றைச் சடப்பொருளென்றும், உயிருள்ள பொருளென்றும் கூறுவர் சாங்கியர். சடப்பொருளினைப் பிரகிருதி என்றும், உயிருள்ள பொருளினைப் புருடன் என்றும் குறிப்பிடுவர். பிரகிருதி சடமயமானதென்றும் அது முக்குணங்களின் கூட்டுச் சேர்க்கையே என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அம் முக்குணங்கள், சத்துவ, ராசத, தமோ குணங்களாம். காணப்படும் சடப்பொருள்களின் உண்மையிலிருந்து சடமல்லாத உயிருள்ள பொருளின் (புருடன்) உண்மையை நிரூபிப்பதே சாங்கியரின் நோக்கமாகும். முதல் நிரூபணம் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது. பல பொருள்களின் சேர்க்கையால் உண்டானமெத்தைப் படுக்கை எவ்வாறு மற்றொருவருக்குப் பயன்படுகிறதோ அதைப்போலவே, முக் குணங்களின் சேர்க்கையால் அமைந்த பிரகிருதி புருடனின் அனுபவத்திற்காகவே அமையப்பெற்றுள்ளதாம். இரண்டாவது நிரூபணம் : தேரானது ஓர் தேரோட்டியை வேண்டுவதைப்போலவே, பிரகிருதிக்குப் புருடன் தேவைப்படுகிறது. மூன்றாவது நிரூபணம் : இன்ப துன்ப உணர்வுகள் உயிருள்ள பொருளையே சாரும்; சடப்பொருளாகிய பிரகிருதியைச் சாரா. இன்பதுன்ப உணர்வுகள் நாம் அனுபவிக்கிறோம் என்பது உண்மை. எனவே, அவற்றிற்குக் காரணன் புருடன் என்பதாம். நான்காவது நிரூபணம் : சான்றோர்களின் அறிவுரைகளும், வேதங்களின் அறிவுரைகளும் ஓர் முடிவைக் காட்டுகின்றன. அவை யாவன : துன்பங்களிலிருந்து விடுபடுவதும், இன்பநிலை யெய்துவதும் அவற்றினைப் பெறுவதற்காக முயல்வதுமே. துன்பங்

களிலிருந்து விடுதலை பெறமுடியும் என வலியுறுத்தும் சான்றோர் களின் அறிவுரைகளும், நிரந்தர இன்பமெய்த முடியும் என்னும் வேதங்களின் உறுதிமொழிகளும் உயிருள்ள பொருளுக்கே உரித் தாகுமாம். அவ் வுயிருள்ள பொருளைப்பற்றியும், அதன் உண்மை நிலையை உணர்வதைப் பற்றியும் வலியுறுத்தப்பட்டுள்ளதால், சடப்பொருளாகிய பிரகிருதியைத் தவிர்த்து உயிருள்ள பொரு ளாகிய புருடன் உண்டு என்பது தெளிவாம். அவை எண்ணற் றவை என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு பிரகிருதியின் தொடர்புகளிலிருந்து புருடன் விடு தலை பெறவேண்டும், பெறமுடியும் என்னும் சாங்கியத் தத்துவம் நடைமுறையில் செயற்படுவது யோகதரிசனத்தில்தான் என்று கூறினல் அது மிகையாகாது. அதனுல்தான், சாங்கிய—யோக தரிசனங்கள் இரண்டும் இணைக்கப்பெற்று, ஒரே குறிக்கோளைக் கொண்டுள்ளதால், ஒன்ருகவே அமையப்பெற்றுள்ள இணைபிரியா இருதரிசனங்கள் என்று கூறப்படுகிறது. சடப்பொருள்களோடு இணைந்து இயங்கியபோதிலும் அவற்றிலிருந்து தன்னைப் பிரித்துக் கொள்வதற்கும், அதன்விளைவாகப் பந்தபாசத் தளைகளிலிருந்து விடுவித்துக்கொள்வதற்கும் புருடனுக்கு (ஆன்மாவுக்கு) வழிகாட்டி யாக அமைந்துள்ளதே யோகப் பயிற்சிகளாகும். அந்த உயரிய அடிப்படையில்தான் சாங்கிய—யோக தரிசனங்கள் ஐக்கியமடைந் துள்ளன என்பதும் கவனிக்கற்பாலது. இரு தரிசனங்களுக்கும் அடிப்படையாக அமைந்துள்ள பல ஒற்றுமைகளில் ஒன்றனை மட்டுமே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். தேகம் சடம்; ஆனுல், தேகத்திலுள்ள ஆன்மா சடமல்ல. எனினும், சடமாகிய தேகத்தின் தொடர்பால் தூய்மையை இழந்த ஆன்மா, புருடன் எனப் பெயர்பெற்று, தன்னையும் தேகத்தையும் ஒன்ருகக் கருது கிறது. இதற்கு உதவியாக உள்ளது புத்தி என்று கூறுகிறது சாங்கியம்; அதனைச் சித்தம் என்று குறிப்பிடுகிறது யோகம். இவ்வாறு புத்தி அல்லது சித்தம் என்பவற்றின் செயற்பாடுகளே மனவிகாரங்களுக்கு அடிப்படையான காரணமாகும். இதனைச் 'சித்தவிருத்தி' என்று கூறுவர். சித்தவிருத்தி கட்டுப்படுத்தப்படும் நிலையில்தான் மன அமைதியும், அந்த அமைதியில்தான் ஆன்ம ஒளியும் பிரகாசிக்குமாம். இப் பயனை அடைவதற்கே யோகப் பயிற்சிகள் அமையப்பெற்றுள்ளனவாம். புத்தி, சித்தம், மனம் ஆகியவையும் பிரகிருதியின் சடத்தன்மை பெற்றனவேயாம். எனவே அவற்றிலிருந்து வேறுபட்டும், அவற்றினையெல்லாம் இயக்குவதாகவும் அமைந்ததே ஆன்மாவாம். உதாரணமாகக் கூறுவோமாகில், அலைகளற்ற தூயநீரின் அடித்தளத்தில் கிடக்கும் பொருள் எவ்வாறு தெள்ளத் தெளிவாகத் தெரிகிறதோ, அதைப்

போன்றே, மனச் சுழற்சிகளும், எழுச்சிகளும் ஒய்ந்து அமைதி பெறும்பொழுதுதான் அங்கு ஆன்மப் பிரகாசம் தென்படுமாம். இப் பெரும் பேற்றினை அடைவதற்கே யோகதரிசனத்தில் பல நுண்ணிய சாதனைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.[33] அப் பயிற்சிகளின் பயனாய் மலஉபாதைகள் அடங்கும். அந் நிலையில் ஆன்மப் பிரகாசம் ஒளிருமாம்.

இதுகாறும் கூறப்பட்ட விளக்கங்களிலிருந்து சாங்கிய-யோக தரிசனங்களின் கருத்துகளிலும், சைவ சித்தாந்தக் கருத்துகளிலும், ஆன்மாவின் உண்மையைப் பொறுத்தமட்டில் முற்றிலும் ஒற்றுமையே காணப்படுகிறது. காட்சி அளவையின் முக்கியத்துவத்தையும், எண்ணிக்கையற்ற ஆன்மாக்களின் உண்மையையும் மூன்று தரிசனங்களும் ஏற்றுக்கொள்கின்றன. ஆன்மா சடப்பொருள்களிலிருந்து வேறுபட்டதென்பதையும் அந்த உண்மையை உணர முற்படுவதே வாழ்க்கையின் அரிய பயன் என்பதையும் நாம் காணமுடிகிறது. எனினும், ஆன்மாவின் தன்மையைப் பற்றிய கருத்தில் சிறிது வேறுபாடு காணப்படுகிறதென்பதைச் சுட்டிக் காட்ட விழைகிறேன். ஆன்மாவின் தன்மை முற்றிலும் உணர்வு நிலையே (Consciousness) என்பது சாங்கியரின் கொள்கை. உணர்வு நிலையும், உணர்வற்ற நிலையும் (Unconsciousness) ஆகிய இரு தன்மைகளைப் பெற்றும், அவ்விரு தன்மைகளுக்கும் அப்பாற்பட்டதே ஆன்மா என்பது சைவ சித்தாந்தத்தின் கொள்கையாகும்.

பூர்வ மீமாஞ்சதரிசனத்தில் ஆன்மாவின் உண்மை எவ்வாறு கூறப்பட்டுள்ளதென்பதை ஆய்வோமாக. வேதங்களில் சொல்லப்பட்டுள்ள கடமைகளையும், கருமங்களையும்[34] ஒருவன் தவறாது அனுசரித்து வாழ்க்கையை நடத்துவானாகில், நிச்சயமாகத் துன்பங்களிலிருந்து விடுபட்டு நித்திய இன்பவாழ்வு பெறமுடியும் என்பதே மீமாஞ்சகரின் கொள்கையாகும். நித்திய, நைமித்திக, காமிய கருமங்களை ஒருவன் தவறாது அனுசரித்து ஒழுகுவதால்,

[33] யோக தரிசனத்தை அஷ்டாங்க யோகம் என்றும் கூறுவர். அதில் சொல்லப்பட்டுள்ள எட்டுவிதமான சாதனைகள் பின்வருவனவாம்: இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணம், தியானம், சமாதி.

[34] நித்திய கருமம் : பொது அநுட்டானங்கள் —
உ-ம் : சூரியனை வணங்குதல்.
நைமித்திக கருமம் : சிறப்பு அநுட்டானங்கள் —
உ-ம் ; குறிப்பிட்ட நாள்களில் கோயில் செல்லுதல்
காமிய கருமம் : விரும்பிச் செய்யும் அநுட்டானங்கள் —
உ-ம் : யாகம் புரிதல்.

கன்ம பந்தங்களிலிருந்து விடுபட்டு தூய்மை பெறுகிறுன், அந் நிலையிலிருந்து பேரின்ப வாழ்வு எய்துவதற்குத் தகுதியும் பெற்று விடுகிறுன். இக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டதால் தான், மீமாஞ்சகர் வேதவாக்கினைத் தெய்வவாக்கென்றும், அதனைப் பின்பற்றி நடப்பதே மனிதனின் தலையாய கடமை என்றும் வலியுறுத்தியுள்ளனர். இக் கருத்துகளையும் அவற்றின் அறக் கட்டளைகளையும் கொண்டதே மீமாஞ்ச சூத்திரம் என்பதாகும். அதனை ஆக்கியோர் சைமினி என்பவராவர். சுருங்கக் கூறின், மீமாஞ்சகத்தில் ஆன்மாக்களைப் பற்றிய கருத்துகளும் அவற்றின் நல்வாழ்விற்காக அறிவுறுத்தப்பட்டுள்ள கருத்துகளும், சைவ சித்தாந்தக் கருத்துகளோடு இயைந்தே காணப்படுகின்றன. சட உலகம் தனியாக இயங்கிக் கொண்டிருப்பது; அதன் இயக்கம் நித்தியமும் நிரந்தரமுமானவை என்பது மீமாஞ்சகரின் கொள்கையாகும். மேலும், ஆன்மா கட்டுண்ட நிலையில் உயிர் என்று அழைக்கப்படுவதும், ஆன்மாவின் தன்மைகளில் உணர்வு நிலை ஒன்றுகும் என்பதும் அவர்களுடைய கருத்தாகும். பூர்வ மீமாஞ்சகர் என்று பொதுவாகக் கூறப்பட்டபோதிலும், அவர்களுள் முக்கியமாகக் குமாரில பட்டர் என்பாரும், பிரபாகரர் என்பாரும் குறிப்பிடத்தக்கவராவர். இவ்விருபெரு அறிஞர்களின் கருத்துகளில் ஒருசில வேறுபாடுகளும் உண்டு. அவற்றை இத் தருணத்தில் விளக்கிக்கூற இயலாது. எனினும், பிரமாணங்களைப் பொறுத்தமட்டில் சைவசித்தாந்திகள் மூன்று பிரமாணங்களே போதும் என்று வலியுறுத்தியுள்ளனர். ஆனுல், பிரபாகரர் ஐந்து பிரமாணங்களையும், குமாரில பாட்டர் ஆறு பிரமாணங்களையும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதும் கவனிக்கற்பாலது.[35]

பிரபாகரர், குமாரில பட்டர் ஆகியோரின் கருத்துகளில் சிலவற்றை விரித்துரைப்பது பயனுடையதாகும் எனக் கருதுகிறேன். கட்டுண்ட நிலையில் ஆன்மாவின் தன்மைகளில் உணர்வு-நிலை முக்கியமானது என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர். எனினும், அவ்வாறு ஏற்படும் உணர்வுநிலையும் கன்மத்தினுல் ஏற்படும் ஒருவிதச் சட நிலைமையே என்பதும், அதற்குக் காரணம், அந்தக்கரணங்களின் செய்கைகளே என்பதும் பட்டரின் கருத்தாகும். எனினும், இதற்கு மாறுக, ஆன்மாவுக்கு உணர்வுநிலை உண்டாவது தன்னியல்பாலேயே என்பது பிரபாகரரின் கருத்து. உணர்வுநிலை ஏற்படுவதற்கு எவ்விதமான துணைக் காரணங்களும் தேவையில்லை; உணர்வுநிலை தானுகவே வெளியிடப்பட்டுத் தன்னியல்பிலேயே

[35] பிரபாகரர் ஒப்புக் கொண்டுள்ள பிரமாணங்கள் : பிரத்தியட்சம், அனுமானம், உபமானம், உரையளவை (வேத வாக்கு), அருத்தாபத்தி. இவ்வைந்துடன் ஆருவதாக அநுபலப்தியையும் ஏற்றுக்கொள்வார் பட்டர்.

நிலைத்திருக்க முடியும் என்பதும் பிரபாகரரின் கருத்தாம். இக் கருத்துகளிலிருந்து அறிவுப் பிரகாசம் ஏற்படுவதிலும், அறிவு, அறியும் பொருள், அறிபவன் என்னும் முப் பொருள் தன்மைக ளின்றி,[36] அறிவு மட்டும் தானாகவே வெளிப்பட்டு நிலைத்திருக்கும் என்னும் உண்மையும் அடங்கியுள்ளதை வாசகர்கள் கவனிப் பார்களாக. பிரபாகரரின் கருத்துகளை அனுசரித்து, சைவ சித் தாந்தத்தில் ஒப்புக்கொள்ளப் பெற்றுள்ள உண்மை சிற் சத்தி[37] என்பதாகும். இவ் விளக்கங்களிலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் பல ஒற்றுமைக் கருத்துகளில் முக்கியமாகக் குறிப்பிடவேண்டியது ஆன்மாவின் தன்மை. உணர்வு நிலை, ஆன்மாவின் தன்மைகளில் ஒன்றே என்னும் கருத்தினைப் பொதுவாக எல்லாத் தரிசனங்களும் ஒப்புக்கொள்கின்றன. கட்டுண்ட நிலையில் அணுத்துவம் பெற்று இயங்கும் ஆன்மாவை, உயிர் அல்லது சீவன் அல்லது பசு என்று அழைப்பர் சித்தாந்திகள். இந் நிலையில் சிறப்பாக உள்ள தன்மை உணர்வு நிலையே ஆயினும், உணர்வற்ற நிலையிலும் உயிர் நிலைத் திருப்பது, அன்றாட வாழ்வில் நாம் காணும் உண்மையாகும். இவ் வுண்மையை, 'இருதிறன் அறிவுள இரண்டலா வான்மா' என்னும் சொற்றொடரால் மெய்கண்டதேவர், ஐயம் தீர விளக்கி நிற்பதை வாசகர்கள் கவனிப்பார்களாக.

ஆன்மாவின் உண்மை உத்தரமீமாஞ்ச தரிசனத்தில் எவ் வாறு விளக்கப்பட்டுள்ளன என்பதைக் காண்போம். உத்தர மீமாஞ்ச தரிசனத்திற்குச் சிறப்பான பெயர் வேதாந்தம் என்ப தாகும். வேதங்களின் முடிவை எடுத்துக்கூறும் சாத்திரமே வேதாந்தம் என்பதாம். பிரம்ம சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள விளக்கங்களே வேதாந்தக் கருத்துகளாகும். அக் கருத்துகளை வெளியிட்ட சான்றோர்களில் மூவரைக் குறிப்பிட்டுக் கூறலாம். அப் பெரியோர்கள் சங்கரர், இராமாநுசர், மாதவர் ஆவர். சங்கரருடைய கொள்கைக்கு அத்துவிதம் என்றும், இராமாநுசருடைய கொள்கைக்கு விசிட்டாத்துவிதம் என்றும், மாதவருடைய கொள்கைக்கு துவைதம் என்றும் பெயரிட் டழைப்பர். இப் பெரியோர்களுடைய கொள்கைகளின் தலைப்பு களைச் சிறிது விளக்கிக் கூறினாலே, நாம் தெரிந்துகொள்ள முற் படும் உண்மைகளைச் சுலபமாக அறியலாம். அப் பெரியோர்க ளுடைய சான்றாண்மையையும், மேதாவிலாசத்தையும் மனத்திற்

[36] Doctrine of Tripute Samrit. According to this doctrine in the process of acquiring knowledge, it involves the immediate and simultaneous revelation of the three entities, namely the cognition, the cognised and the cogniger.

[37] Cit-Sakti is the power of the soul to perceive the truth, without the triple distinctions of perception, perceived and the perceiver.

கொண்டு, நமக்குத் தேவையான உண்மைகளை மட்டும் சுருங்கக் கூறி விளங்கச் செய்தல் சாலச் சிறந்ததாகும். ஆன்மா வேறு, இறைவன் வேறு என்னும் இருமைக் கொள்கையை வலியுறுத்தினார் மாதவர். எனவேதான், அவருடைய கொள்கை துவைதம் என்று பெயரிட்டழைக்கப்படுகிறதாம். ஆன்மா இறைவனின் அம்சமாகும். உடலும் அதன் பாகங்களும் போன்றதே இறைவனும், ஆன்மாக்களும். இவ்வாறு இறைவனுள் அடங்குவதே ஆன்மா. ஒன்றையொன்று பிரிக்கமுடியாத ஒரே தன்மையுள்ள சித்துப் பொருளாம் என்பதே இராமாநுசரின் கொள்கையாகும். ஆன்மாவும் இறைவனும் இரண்டல்ல என்பது சங்கரரின் தத்துவமாகும். முதற்கண் குறிப்பிட்டதுபோல், இப் பெரியோர்களின் கொள்கைகளை விவரித்துக் கூறுவது, இந் நிலையில் இயலாதது மட்டுமன்று; அவை நமக்குத் தேவையில்லாததுமாகும். எனினும், அப் பெரியோர்களுடைய உபதேசங்களை நிதானமாகக் கேட்டறிந்து அவற்றின் உண்மைகளை உணர்ந்து பயனடைவது நம் கடமையாகும்.

கடைசியாக, ஆன்மாவின் உண்மை, தன்மை, பன்மை ஆகியவை சைவ சித்தாந்தத்தில் எவ்வாறு சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன என்பதைக் காண்போம். ஆன்மாக்கள் எண்ணற்றவை. அவைகளின் கன்மபலத்திற்கொவ்வ, பிறப்பு-இறப்பு என்னும் சுழற்சியில் உழன்று இன்பதுன்பங்களை அனுபவிக்கின்றனவாம். ஆன்மா கட்டுண்ட நிலையில் உயிர் என்றும், சீவன் என்றும், பசு என்றும் குறிப்பிடப்படுகிறது. அந் நிலையில் அது அணுத்துவம் பெறுகிறதென்பதும் கவனிக்கற்பாலது. இந்நிலையில் உயிரின் தன்மைகளில் உணர்வு-நிலை மிகவும் முக்கியமானது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கண்டுண்ட நிலையில் இயங்கும் ஆன்மா, எப் பொருளைப் பற்றினும் தம்மையும் அப் பொருளாகவே கருதும் அறியாமையில் அமிழ்ந்து கிடக்கிறதாம். இக் கருத்தினையே 'அது அது ஆதல்' என்னும் சொற்றொடர் சுட்டிக் காட்டி நிற்பதென்பர். இக் கருத்தினை வலியுறுத்தும் தன்மையில் திருவள்ளுவர் கூறியுள்ள உண்மையும் கவனிக்கற்பாலது:

'நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு.' (452)

எவ்விதம் நிலங்களின் தன்மையைப் பொறுத்து அதில் பாயும் நீரும் நிறவேற்றுமை பெறுகிறதோ, அதைப்போலவே, மனிதனின் தன்மைகளும் அவனைச் சூழ்ந்துள்ள மக்களின் (இனத்தின்) இயல்பினை உடையதாகுமாம். திருவள்ளுவர் எடுத்துக் கூறியுள்ள தெளிவான உதாரணமும், அதனால் விளங்கும் கருத்துகளும் வாசகர்கள் கவனிக்கற்பாலன.

8. இறை உண்மை

தாய் தந்தையர் குழந்தைகளைப் பெற்றெடுத்து, அவர்களை அன்புடன் பேணி வளர்த்துக் கல்வி புகட்டி, நற்குடி மக்களாகி, நாட்டிற்கு நற்பணிபுரிவதற்கு வாழ்த்துக் கூறுவது அன்றாட வாழ்க்கையில் நாம் காணும் அனுபவமாகும். தாய் தந்தையர்களை ஒருபுறமும், குழந்தைகளை மறுபுறமுமாக எடுத்துக்கொள்வோமே யாகில், அவ்விருவரையும் இணைக்கும் உறவு என்பதைப் பற்றிப் பொருத்தமான வார்த்தைகளைக் கொண்டு வருணிக்கவே இயலாது. ஏனென்றால், அந்த உறவைச் சாதாரண மனித உறவாக மட்டும் கருதிவிட முடியாது. அவ்விதம் கருதுவரும் முழு உண்மையா காது. அதனால்தான், அவ் வுறவினை தெய்விக உறவென்றே கருதினர் நம் பண்டைத் தமிழ்மக்கள். அவ் வுறுதியான நம் பிக்கையைப் போற்றிப் புகழ்ந்து கவிதைகளாகவும் காவியங்க ளாகவும் அமைத்துப் பாதுகாத்து வந்தனர் தமிழ்ப் புலவர் பெரு மக்கள். நம் சிந்தனைக்கும் சிற்றறிவுக்கும் அப்பாற்பட்ட, எல்லா வற்றிற்கும் மேலான ஒரு பரம்பொருள் உண்டு என்பதனை செந்நாப் புலவர்கள் ஒப்புக்கொண்ட போதிலும், அப் பொருளை எந்த முறையில் அணுகுவது, அறிந்துகொள்வது என்பனபோன்ற வினாக்கள் எழுந்தபோது, மேலே குறிப்பிட்ட உறவுதான் சுட்டிக் காட்டப்பட்டது. அந்த உறவிலே அன்பும், அறனும், அழியாமை யும் ஒருங்கே அமைந்து, உயர்வும் உண்மையும் பெற்றிருக்கிற தாம். இவ் வுண்மையைத்தான் கீழ்க்காணும் செய்யுள் அறி வுறுத்துகிறதாம் :[38]

'அம்மையப்ப ரேஉலகுக் கம்மையப்ப ரென்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர் — அமையப்பர்
எல்லா உலகுக்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார்போல் நிற்பார் அவர்.'

[38] திருக்களிற்றுப்படியார், 1 — திருக்கடவூர் உய்யவந்த தேவர்.

மானிடராகப் பிறந்த யாவரும் தாய் தந்தையர்களின் மூலமாகத்தான் இவ் வுலகில் பிறந்துள்ளனர். எந்த உயிரினத்தை எடுத்துக்கொண்டாலும், இந்த உண்மைதான் அடிப்படையாக அமைந்து கிடப்பதை நாம் காணமுடிகிறது. உதாரணமாக, நம்மை ஆக்கிப் படைத்தவர்கள், நம் தாய்தந்தையர், அவர்களை உண்டாக்கியவர்கள் அவர்களுடைய தாய்தந்தையர். அதைப் போலவே பின்நோக்கிச் செல்வோமாகில், ஓர் இடத்தில் நிச்சயமாக நாம் நிலைத்து நிற்கவேண்டிய, மேலும் பின்செல்ல முடியாத ஓர் அவசியம் ஏற்படுகிறது. அந்த இடத்தில்தான் உவமானத்தைப் பயன்படுத்தி எல்லோருக்கும் தாய்தந்தையர்போல் விளங்கும் அம்மைஅப்பர் இருக்கவேண்டும் என்று ஊகித்து உண்மையை உணர முற்படுகிறோம். இந்த உண்மையைத்தான் சைவ சித்தாந்திகள் ஏற்றுக்கொண்டு, சிவனை அப்பன் என்றும் சக்தியை அம்மை என்றும், அவ்விரு தத்துவங்களும் சிவத்தில் அடங்கியுள்ளதென்றும் கூறியுள்ளனர். பழந்தமிழ் மரபுக் கிணங்க முதலில் அம்மை பின்பு அப்பர். இவ்வாறு அம்மையப்பர் என்று உண்மைக்கு உருவகம் கொடுத்து அதனை அறுதியிட்டுக் கூறியுள்ளனர்.

வாழ்க்கையின் அடிப்படை உண்மைகளை ஆய்ந்து அறிந்து அதனை ஏற்றுக்கொண்ட சித்தர் பெருமக்கள், அவ் வுண்மைகளுக்குப் பொருத்தமான சொற்களையும் பயன்படுத்தியுள்ளனர் என்பதும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். உதாரணமாகக் ‘கடவுள்’ என்ற பொதுச் சொல்லை எடுத்துக்கொள்வோம். எல்லாவற்றிலும் நிறைந்த பொருளென்றும், எல்லாப் பொருள்களுக்கும் அப்பாற்பட்டதென்றும் விளக்கம் தருவர். முன்பு குறிப்பிட்ட மானிட உறவைத் தெய்விக உறவாக நாம் போற்றுகிறோம். ஆனால், அதே உறவை மற்ற உயிரினங்கள் போற்றுவதுமில்லை; புகழ்வதுமில்லை. எனவே, மானிட உறவிலேயே கடவுளைக் காணமுடியும் என்பது தெளிவு. அதைப்போலவே, மானிட உறவு தொடர்வதும், துண்டிக்கப்படுவதுமாகிய நிலைகளுக்குட் படுவதால், இவற்றிற்குக் காரணமாய் அமைவது எல்லாவற்றிற்கும் காரணமான பொருளாகிய கடவுளே என்ற உண்மையை நாம் ஊகிக்க முடிகிறது. அத்தகைய உயர்ந்த பொருளை, பரம்பொருளை நம்முடைய சிற்றறிவால் அறியவியலாது என்பதனையும் சித்தர் பெருமக்கள் எடுத்துக்கூறியுள்ளனர். அதனால்தான், நம் அறிவுக்குப் ‘பசு ஞானம்’ என்று குறிப்பிட்டனர். எல்லாவற்றிற்கும் மேலான செம்மைப் பொருள் ‘சிவம்’ என்று அறுதியிட்டுக் கூறிய சித்தர்பெருமக்கள், அதனை அறிவதற்கு ‘சிவஞானம்’ பெறவேண்டும் என்பதையும் எடுத்துக் கூறியுள்ளனர். இதனைப் ‘பதிஞானம்’ என்றும் கூறுவர்.

இவ்வாறு தானுகவே இயங்கித் தனித்து நிற்கும் செம் பொருளைப் பதிஞானத்தால் அன்றி, பசுஞானத்தில் அறியமுடியா தாம். இந் நிலையில் இறைவனை நாம் எவ்வாறு அறிவது என்னும் ஐயத்தை நீக்கி, நாம் அறியக்கூடிய நிலைக்கு ஏற்றவாறு இறை வனே வெளிப்படுகிருன் என்ற உண்மையைச் சித்தாந்த சாத்திரங் கள் எடுத்துக்கூறுகின்றன. உதாரணமாகத் திருஉந்தியார்[39] கூறும் கருத்துகளைக் கவனிப்போம் :

'அகளமாய் யாரும் அறிவரிது அப்பொருள்
சகளமாய் வந்தது.'

பெயரால் குறிப்பிட முடியாததும், பருமனுல் அளவிட முடியாதது மான அப் பரம்பொருளின் சொரூப நிலையை யாராலும் அறிய வியலாதாம். எனினும், ஆன்மாக்களின் நல்வாழ்விற்காக, அள வற்ற அன்பாலும் அருளாலும் அப் பெரும்பொருள் நாமரூபங் களை ஏற்று வெளிப்படுகிறதாம். அவ்வாறு நாமரூபங்களைப் பெற்றதால்தான் 'சகளமாய் வந்தது' என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. இந் நிலையைத் 'தடத்தநிலை' என்றும் கூறுவர். இவற்றிலிருந்து நாம் இறைவனை அறிந்துகொள்ள முடியுமென்றுல் அதற்குக் காரணம், இறைவனின் திருவருளே என்பதும் கவனிக் கற்பாலது. திருவருளை அருட்சத்தி என்றும் கூறுவர்.

இறை உண்மையை அனுமானப் பிரமாணத்தைக் கொண்டு முதல் சூத்திரத்திலேயே குறிப்பிட்டுக் காட்டுகின்ருர் மெய்கண்ட தேவர் :

'அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனுர் புலவர்.'

காணப்படும் பொருள் பிரபஞ்சம், ஆண் பெண் என்று குறிப் பிடும் உயர்திணைப் பொருள்களையும், அது என்று குறிப்பிடும் அஃறிணைப் பொருளையும் கொண்டதேயாம். அப் பொருட் பிரபஞ்சம் தோற்றம், நிலைத்தல், முடிவு என்னும் மூவகைத் தொழிலுடைமையான், ஒருவனுல் தோற்றுவிக்கப்பட்டு நிலைப் பதேயாம். முத் தொழில்கள் முடிவடைவதுடன் அமையாது மீண்டும் தொடர்ந்து நடைபெறுவதாம். அதற்குக் காரணம் சகசமான ஆணவமலத்தின் வன்மை தீராமையே. இவ்வாறு சங்காரத் தொழிலைச் செய்பவனே முதல்வன் என்று கூறுவர் அறிவுடையோர்.

[39] திரு உந்தியார், 1 — திருவியலூர் உய்யவந்த தேவர்.

மனிதன் சிந்தனையைச் செயல்படுத்துவதற்கு அளவையியல் பயன்படுகிறது. அளவையியலின் முறைகளை அனுசரித்து எழுந்த சிந்தனை சரியா அல்லது தவறா என்று நிரூபிக்க அறிவு அளவை யியல் பயன்படுகிறது. இவ்வாறு அமையப்பெற்ற உண்மை அறிவு முடிவடைவது அடிப்படை இயலில்தான். இறை உண்மை என்னும் கருத்து, அடிப்படை இயலைச் சார்ந்ததாகும். எனவே, இக் கருத்தின் ஆழமான தன்மையை அறிவதற்குப் பிரத்தியக்கப் பிரமாணம் பயன்படாது. அனுமானப் பிரமாணம் ஓரளவு பயன்படும். எனினும், ஆகமப் பிரமாணமே முழுதும் பயன்படுவ தாகும். இறை உண்மைக்குச் சான்றே ஆகமப் பிரமாணம் என்பர். இருந்தபோதிலும், அனுமானப் பிரமாணத்தைப் பயன் படுத்தி, அதன்மூலமாக இறை உண்மையை ஊகித்து உணர முடி யும் என்ற கருத்தினையே மெய்கண்டதேவர் வலியுறுத்தியுள்ளார். அதன் காரணமாக, பிரத்தியக்கப் பிரமாணமும் பயனடைகிறது என்பதும் கவனிக்கற்பாலது.

இவ்வாறாக இறை உண்மையை எடுத்துக் கூறியுள்ளதி லிருந்து, மனித வாழ்க்கையும், மனிதனின் சிந்தனையும் ஒன்றி ணைந்து செம்மையாக வளரும்போது, காணப்படும் பொருள் களிலிருந்து காணப்படாதப் பொருளை ஊகித்து உணர்ந்துகொள்ள முடியும் என்பது தெளிவாகிறது. மனிதனுடைய வாழ்க்கையில் தோன்றி மறையும் பல நிகழ்ச்சிகளைக் கவனித்து, நிதானித்துச் சிந்தனை செய்தால், அந் நிகழ்ச்சிகளுக்குக் காரணங்களையும் கண்ட றிய முடிகிறது. அவ்விதச் சிந்தனையை மென்மேலும் வளர்ச்சி செய்து நாம் காணும் ஒவ்வொரு பொருளுக்கும் காரணங்களைக் கண்டறிய முற்படவேண்டும்; அம் முயற்சியின் முடிபே அடிப் படை வினவை எழுப்புவதாம். உலகத்திற்கு முதற்காரணம் யார்? இவ் வினவிற்கு விடையைத் தேடித் திரியவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், நம் முன்னோர்கள் இத்தகைய வினக்களை எழுப்பியும், அவற்றிற்குப் பொருத்தமான விடைகளைப் பெற்று, அவை நமக்குப் பயன்படுவதற்கென்றே எழுத்து வடிவில் அமைத்துவிட்டுச் சென்றுள்ளனர். அதனால்தான், ஆகமங் களையும், வேதங்களையும் மக்கள் இனத்தின் அழியாச் செல்வங் களாக மதித்துப் போற்றுகிறோம். நாம் காணும் சடப் பொரு ளாகிய உலகமும், சித்துப் பொருளாகிய எண்ணற்ற உயிரினங் களும் இவை அனைத்தையும் இயக்கிவரும் எல்லாம் வல்ல இறை வனும் உண்டு என்று உறுதியாக நம்பினர் நம் முன்னோர்கள். தத்துவ ரீதியிலே இக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களைச் சித்தர்கள் என்றும் சித்தாந்திகளென்றும் குறிப்பிட்டுக் கூறினர் நம் பண்டைத் தமிழ்மக்கள். இவ்வாறு பன்னெடுங் காலமாகப்

பண்டைத் தமிழ்மக்கள் வாழ்வோடு இணைந்து வளர்ச்சிபெற்ற சமயக் கருத்துகளும், தத்துவ உண்மைகளும் 13ஆம் நூற்றுண்டில் உயிர்பெற்றெழுந்தனவென்று கூறலாம். அதனை வெளிப்படுத்திய பெருமை தமிழகத்திலே சோழநாட்டின் திருவெண்ணெய் நல்லூரைச் சார்ந்ததே என்பதும் குறிப்பிடத்தக்கதாம். ஏனென்றால், அந்த மண்ணில்தான் சுவேதவனப்பெருமாள் என்னும் பெயருடன் பிறந்தார் மெய்கண்ட தேவர். பிள்ளை வயதிலேயே இறையருளால் பன்னிரண்டு தமிழ்ச் சூத்திரங்களைக் கொண்டு சைவ சித்தாந்தக் கருத்துகளை வெளியிட்டார். வேறு பல சித்தாந்த சாத்திர நூல்கள் அவருடைய காலத்திற்கு முன்னும் பின்னும் எழுந்தபோதிலும், மெய்கண்டதேவரால் தமிழில் இயற்றப்பட்ட சிவஞானபோதமே பதினான்கு சித்தாந்த சாத்திரங்களுள் முதல்நூல் என்று அறிஞர் பெருமக்கள் ஏற்றுப் போற்றினர். திருவள்ளுவரின் செந்தமிழ் மரபுக்கிணங்க மெய் கண்டதேவரும் தன்னுடைய முதற் சூத்திரத்தை அகரத்தில் தான் ஆரம்பித்துள்ளார். இறை உண்மையையும் முதற் சூத்திரத் திலேயே சுட்டிக்காட்டியுள்ளார். இரண்டாவது சூத்திரத்தின் மூலமாக[40] உயிரினங்களுக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பை விளக்கிக் கூறியுள்ளார். ஆறுவது சூத்திரத்தில் இறையின் தன்மையை எடுத்துக் கூறியுள்ளார்.[41]

சைவ சித்தாந்திகள் ஏற்றுக்கொண்டுள்ள முப் பொருள்களில் முதற் பொருளாக உள்ளது இறைவனாகும். அதனைப் பதி என்றும் ஏனைய இருபொருள்களைப் பசு என்றும் பாசம் என்றும் குறிப் பிடுவர். இவ் வுண்மைகளைத் திறம்படவும் தெளிவாகவும் விளக் கிக் கூறியுள்ளது சிவப்பிரகாசம்:[42]

'பலகலை ஆகமவேதம் யாவையினும் கருத்துப்
பதி பசு பாசம் தெரித்தல் பதிபரமே அதுதான்
நிலவும் அரு உரு அன்றிக் குணம் குறிகள் இன்றி
நின்மலமாய் ஏகமாய் நித்தம் ஆகி

[40] சிவஞான போதம் — சூத்திரம் 2:

'அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையின்
நீக்க மின்றி நிற்கும் அன்றே'.

[41] சிவஞான போதம் — சூத்திரம் 6:

'உணருரு வசத்தெனி னுணரா தின்மையின்
இருதிற னல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே'.

[42] சிவப்பிரகாசம் — சீர்மைக் கட்டுரை — உமாபதி சிவாசாரியர்
தருமபுர ஆதீனம் வெளியிட்டது — 1961.

அலகில் உயிர்க்கு உணர்வாகி அசலம் ஆகி
அகண்டிதம் ஆய் ஆனந்த உருவாய் அன்றிச்
செலவு அரிதாய்ச் செல்கதி ஆய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வது தத் சிவம் என்பர் தெளிந்துளோரே.'

உமாபதி சிவாசாரியர் குறிப்பிட்டுள்ள கருத்துகளைப் பொதுவாக விளக்குவோமாக. கலைகள் ஒவ்வொன்றிலும் பிரிவுகள் பல இருத்தலால் பல கலைகள் எனக் கூறப்பட்டுள்ளது. எனினும், எல்லாக் கலைகளும் அடைய முற்படுவது ஆகம அறிவைத்தான் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆகமங்கள் அனைத்தும் வேத வாக்குகளைத் தெளிவுபடுத்துவதால், அவை வேதம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. வேதங்கள்—இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காயிருத்தலின், 'யாவையினும்' என்றனர். இவ்வாறு நூல்கள் பலவாயினும் அவற்றின் அடிப்படை ஒன்றேயாம். அவ் வடிப்படைக் கருத்து என்னவென்றால், முப்பொருள் உண்மை உணர்வதேயாம். முப்பொருள் எனப்படுவன, இறைவன், ஆன்மாக்கள், உலகம் எனப் பொதுவாகவும் பதி, பசு, பாசம் எனச் சைவ சித்தாந்திகள் சிறப்பாகவும் கூறுவர். முப்பொருள்களின் உண்மையை அறிந்துகொள்வதே மெய்யறிவாகும். இவ் வுண்மையினையே 'யாவையினும் (உள்ள) கருத்துப் பதி, பசு, பாசம் தெரித்தல்' என்றும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இவ் வுண்மையை வலியுறுத்தும் தன்மையில் திருவள்ளுவர் கூறியுள்ள கருத்தினையும் கவனிக்கற்பாலது:

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.' (355)

பதிப்பொருள் முதற்பொருள் என்று கூறுவதற்கு முக்கியக் காரணம், அப் பொருள் எவ்விதமான களங்கமுமில்லாமல், நித்தியமாய் நிலைத்து நின்று, யாவற்றையும் தன்னுள் அடக்க வல்லதாம். இவ்வாறு தம்மின் மேம்பட்ட தொன்றும் இல்லாததாய் உள்ள ஒரே பொருள் பதியே என்பதால், அப் பொருளைச் சைவசித்தாந்திகள் முதற்பொருளாகக் கொண்டனர். பசுப் பொருள்கள், அநேகமாயும், நித்தியமாயும் இருந்தபோதிலும், அனுதியாகவே மலச்சேர்க்கையுடையதாயும், சிற்றறிவுப் பொருள்களாயும் பல குறைபாடுகளுக்கு உட்பட்டதாயும் இருப்பதால், பசுப் பொருள்கள் இரண்டாவது நிலையில் வைக்கப்பட்டுள்ளனவாம். சடப்பொருளாகிய பாசம், நித்தியப் பொருளாயினும், மூன்ருவதாகவே வைக்கப்பட்டுள்ளதாம். இம் முப்பொருள் பகுப்புக்குள் மற்றெல்லாப் பொருள்களும் அடங்கும் என்பதே சைவ சித்தாந்திகளின் முடிபாகும். அதனுல்தான் முப்பொருளுண்மையை அறிந்தவர் யாவற்றையும் அறிந்தவர் ஆவர் என்பர்.

இவ்வாறு முப்பொருள் உண்மையைத் தெரிந்துகொண்ட பின், அவற்றில் எது தலையாய பொருள் என்று தெரிந்துகொள்வதே மனித வாழ்வின் சிறப்பாகும். எந்த வகையில் ஆராய்ந்து பார்த்தாலும் பதிப்பொருளே மேலானது என்பதுதான் சித்தாந்த மாகும். இவ் வுண்மையை உமாபதி சிவாசாரியர் எடுத்துக் கூறியுள்ள முறை கவனிக்கற்பாலது. ஏனென்றால், அவ்வாறு சித்தாந்தத்தின் உண்மையை எடுத்துக்கூறி அதன் சிறப்பை வலியுறுத்தியதால், மற்றெந்தச் சமயத்தையோ அவற்றின் கொள்கைகளையோ அவர் குறைத்துக் கூறவில்லை. பதி என்ற சொல் தலைமைப் பொறுப்பை உணர்த்துவதாகும்; இக் கருத்து எல்லாச் சமயத்தாருக்கும் பொருந்தும். பதியைச் சிவம் என்று குறிப்பிடும் போது சித்தாந்தத்தின் கொள்கையைச் சுட்டிக்காட்டுவதேயாகும். இவ்வாறாகப் பதி என்றே எடுத்த எடுப்பில் எல்லாச் சமயத்தாருக்கும் பொதுப்படையில் குறித்துள்ளாரேயல்லாமல், சிவம் என்று ஆரம்பத்திலேயே கூறவில்லை என்பதும் கவனிக்கற்பாலது. இவ்வாறு, பதிப்பொருள் தலையாயது என்று முதலில் சொல்லி விட்டுப் பிறகுதான் அதன் சிறப்புகளையும் எடுத்துக் கூறி, அத்தகைய செம்பொருளைச் சிவம் என்று இறுதியில்தான் சுட்டிக் காட்டியுள்ளார். இவ்வாறு கூறுவதே சைவ சித்தாந்தத்தின் மரபு என்பதும் கவனிக்கற்பாலது.

பதிப்பொருள் நித்தியமானது; அது யாவற்றிலும் மேலானது. உயிரினங்கள் யாவும் பசுக்கள்; பாச பந்தங்களுக்குக் கட்டுப்பட்டவைகள். எனவே, பதிப் பொருளின் ஆணைக்குட் பட்டவையாம். பசுக்களாகிய கட்டுண்ட ஆன்மாக்கள் தேகங்களைப் பெற்றுள்ளதால் அவற்றிற்கு உருவம் உண்டு என்பதை நாம் அறிவோம். ஆனால், 'பதிப்பொருளுக்கும் உருவம் உண்டா?' எனவும் வினவுவர். இவ் வினாவிற்குச் சரியான விடையைப் பெற வேண்டுமென்றால் முதலில் நம் சிந்தனையைச் செம்மையாக்கிக்கொள்ள வேண்டும். ஏனென்றால், எங்கும் எதிலும் நிறைந்து நித்தியமாயுள்ள பொருளுக்கு உருவம் கற்பித்தல் பொருந்தாதாம். மேலும், நம்முடைய அறிவு சிற்றறிவு; அது ஏகதேசமுடையது. இதனை அற்பஞானம் என்றும் குறிப்பிடுவர் அறிஞர்கள். ஒரு நிலையில் ஒரு செயலையே செய்யமுடிவதாலும் ஒரு பொருளையே அறிய முடிவதாலும், குறுகிய நோக்கங்களையுடையதாலும், இதனை அற்பஞானம் என்பர். இது பசுக்களுக்கே உரிய ஞானமாகும். அதனால்தான் இது ஏகதேசமுடையதென்றும் கூறப்பட்டது. ஆகவே, ஏகதேசமாய் அறியும் பசுக்களுக்கு, அவ்வித அற்பஞானத்தை உண்டுபண்ணும் இயல்புடையதாகிய மாயையே உருவமாகுமாம். பேரறிவுப் பொருளாகிய

பதிக்கு (பசுபதி) உருவமாவது சத்தியே என்பது தத்துவம். இவற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மையாவது பதி, கண்ணுல் காணப்படுவதும், மனத்தால் கருதப்படுவதுமான பொருள் அன்று. ஏனென்றுல், கண்ணுல் காணப்படும் பொருளாயின் அது சடப்பொருளாம்; சடமாயும் பலவாயும் இருக்கும் பொருள்கள் அழிந்துபோம். மனம் முதலிய கருவி கரணங்களும் சடப்பொருளாகும். ஆகவே மனத்தால் அறியப்படும் பொருளுமாகான். அதனுல்தான் பாசஞானத்தினுல் அறியப்படாமையின் பதியை அருவம் என்றனர். பசுஞானத்தினுல் அறியப்படுதலின் பதியை உருவம் என்றனர். இவற்றின் அடிப்படைக் கருத்து, சித்துச் சத்தாய் விளங்குபவனே இறைவன் என்பதாம். இதற்கு மேற்கோள் : 'எங்கும் செறிசிவம் இரண்டுமின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்' என்பர்.

குணங்கள் இல்லாத எப்பொருளுமில்லே. ஏனென்றுல், உள்ள பொருளை நாம் உணரமுடிவது அவற்றின் குணங்களின் துணையாலேயாம். ஆகவே, ஒரு பொருள் இருக்கின்றதென்றுல், அதன் உண்மையை நாம் உணரமுடிவதே அப் பொருளின் குணங்களின் மூலமாகத்தான். இதுதான் பொதுவான வழக்கு. இந் நிலையில், இறைவனுக்குக் குணங்களுண்டா என்னும் வினு எழுவது நியாயமே. சித்தாந்திகள் இறைவனைக் குணுதீதன் என்று குறிப்பிடுவர். எக் குணமும் குறைவுடைதாம். எனவே, நிறைவு பெற்றவனுகிய இறைவன், குணமும் குறியும் இல்லாதான் என்பர். இஃது எவ்வாறு பொருந்தும் என்பதனைச் சிறிது விளக்குவோம். குணம் என்பது இரண்டு வகைப்படும். சடமாகிய மாயையின் குணமும், ஞானமாகிய சித்தின் குணமும் என்பதாம். இவற்றுள் மாயையின் குணமே சாத்துவிகம், இராசதம், தாமதம் என மூன்று வகைப்படும். இந்த மூன்று குணங்களும், மாயையின் காரியமாகிய, தனு, கரண, புவன, போகங்களில் கட்டுண்ட ஆன்மாக்கள் வினைப்பயனை நுகரும்பொழுது நிகழ்வனவாம். இவ்வாறு மாயைக்குட்பட்டவையான மூன்று குணங்களில் சாத்துவிகம் என்பது சாந்தத்தையும் இன்பத்தையும் ஆன்மாவிடம் உண்டாக்கவல்லதாம். அதனுல்தான், சடமாகிய மாயையின் குணமாயிருந்தபோதிலும், சாத்துவிக குணத்தையே சான்றோர் சிறப்பித்துக் கூறியுள்ளனர். இராசதம் அல்லது ராஜச குணம் பிரவிருத்திக்கு ஏதுவாகையால், இன்பம், துன்பம் ஆகியவற்றைப் பொதுவாகவும், மிகுதியான துன்பத்தையே சிறப்பாகவும் தரும் என்பர். தாமதம் அல்லது தாமச குணம் மோகத்தையும், மடமையையும் தருமாம். இவ்வாறு முக் குணங்களும் ஒன்றேடொன்று மாறுபட்டிருப்பதனுலும், குறிப்பாக இராசதம்,

தாமதம் பந்தத்திற்கே ஏதுவாகலானும் மாயைக்கு அப்பாற்பட்ட பேரறிவுப் பொருளாகிய இறைவனுக்கு இக் குணங்கள் பொருந்தாவாம். அதனால்தான், இறைவனைக் குணாதீதன் என்று குறிப்பிட்டனர். எனினும், ஒருசிலர், குணாதீதன் என்ற சொல்லுக்குக் குணங்களே இல்லாதவன் என்றும் பொருள் கூறுவர். அதனாலேயே நிர்க்குணன் என்ற பெயர் இறைவனுக்கு உண்டு என்றும் வாதிடுவர். இறைவன் என்ற தமிழ்ச் சொல்லையும், நிர்க்குணன் என்ற சொல்லையும் சிறிது ஆராய்ந்து பார்ப்போமானால், அங்ஙனம் வாதிடுதல் சரியன்று என்பது நன்கு விளங்கும். மேலும் அவ் வாதத்தின் குறிக்கோள் என்னவென்றால், குணம் இல்லாத குணிப்பொருளே கிடையாது. ஆகவே, இறைவனுமில்லை எனப்பட்டு நாத்திக வாதமாக முடியுமாம். அவ்விதக் கருத்துகளையும் காலச் சுழற்சியில் அமைத்துக்கொண்ட இந்தியத் தரிசனங்களுள் ஒன்றே, பிற்காலத்தில் தோன்றிய சாங்கிய தரிசனமாகும். அதற்கு நிரீஸ்வர சாங்கியம் (Nirishwara Samchya) என்றே பெயரிட்டழைத்தனர் என்பதும் கவனிக்கற்பாலது. நிற்க, குணமே இல்லாத பொருள் 'பாழ்' எனப்படுமாம். அத்தகைய பாழ்ப்பொருள் உயிர்களின் இன்ப துன்பங்களை அறியவியலாது; அதனால் பயனுமிராது. எனவே, குணம் இல்லாத பொருள் என்றால், மாயையின் குணங்களைப் பெறாததே என்றுதான் பொருள் கொள்ளவேண்டும். மேலும், இறைவன் ஞானப் பொருளாகையால் ஞானக் குணங்களைப் பெற்றுள்ளான் என்பதும், அதனால்தான் உயிரினங்களின் இன்பதுன்பங்களை உணரவல்லான் என்பதும், அவற்றிற்கு நல்வாழ்வு தரவல்லான் என்பதும் சித்தாந்திகளின்முடிபாகும். திருமூலர், 'இறைவனை முக்குண நிர்க்குணன்' என்று கூறுகின்றார்.

இறைவனின் ஞான குணங்கள் எண்வகைப்படும் என்பதனைத் திருவள்ளுவம் முதலதிகாரத்திலேயே விளக்கிக் கூறியுள்ளது.[43] எழுத்துகளெல்லாம் எவ்வாறு அகரத்தை முதன்மையாகக்

[43] திருக்குறள் — திருவள்ளுவர்:

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. (1)

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். (2)

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். (3)

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. (4)

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (5)

கொண்டுள்ளனவோ அதைப்போன்றே உலகத்திற்கும் முதல்வன் உண்டு என்ற கருத்து முதற் குறட்பாவிலேயே எடுத்துக் கூறப் பட்டுள்ளது. அவ் வுண்மை நிரூபிக்கப்பட்டுள்ளதும் அனுமானப் பிரமாணத்தினாலேயே என்பதும் கவனிக்கற்பாலது. தமிழ்மரபுக் கிணங்க, எக் காரியத்தை ஆரம்பிக்குங்காலத்தும், சிறப்பாக, ஒரு நூலை அமைப்பதில் முதன்முதலில் இறைவணக்கம் செலுத்துவது சான்றோர்களின் தலையாய கடமையாம். தமிழ் முதற் சொல் லாகிய அகரத்துடன், தம்முடைய முதற் குறட்பாவில் உலகத் திற்கு முதல்வனாகிய இறைவனைச் சுட்டிக்காட்டி, பண்டைத் தமிழ் மரபை இலக்கண முறையில் இலக்கியச் சுவையுடன் எடுத்துக் காட்டியுள்ள திருவள்ளுவர் தெய்வப் புலவர் என்று போற்றப் படுவதில் வியப்பில்லை என்றே யான் கருதுகிறேன். ஏனென்றால், திருவள்ளுவர் செய்துகாட்டியுள்ள செயல் மானிடரால் இய லாதது. எனவே, அது ஒரு தெய்வச் செயலாகி, அதன் காரண மாகவே அவர், தெய்வப் புலவர் எனப்பட்டார். முதற்கண், இறை உண்மையை எடுத்துக்காட்டிய பின்பு இரண்டாவது குறளில் இறைவன் தூய அறிவு வடிவமாக விளங்குபவன் என்பது ‘வாலறிவன்’ என்ற சொல்லால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இறைவன் எங்கும் இருப்பவன் என்னும் பொதுக் கருத்து, நினைப் பவர் இதயக்கலமங்களில் நிச்சயமாக வாழ்பவன் என்னும் உண்மை, ‘மலர்மிசை யேகினான்’ என்ற சொல்லால் விளக்கப் பட்டுள்ளது. இறைவன், விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற் பட்டவன் என்பது ‘வேண்டுதல் வேண்டாமை இலான்’ என்ற சொற்களால், சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நன்மை, தீமை ஆகிய இருவினைகளும் அறியாமையும் இறைவனைப் பாதிக்கமாட்டா வாம். எனவே, இறைவனிடம் அன்பு செலுத்துகிறவர்களும் அத் தீமைகளிலிருந்து விடுதலைபெறுவது நிச்சயம் என்பது ஐந்தாவது குறளில் கூறப்பட்டுள்ளது. ஐம்புல வேட்கைகள் இறைவனைச் சாரா; ஏனென்றால், இறைவன் ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டவன் என்ற உண்மை ஆறாவது குறளில் விளக்கப்பட்

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடுவாழ் வார். (6)

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. (7)

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது. (8)

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேரா தார். (9)

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. (10)

டுள்ளது. இறைவனுக்கு நிகர் இறைவனே என்னும் பேருண்மை, 'தனக்கு உவமை இல்லாதான்' என்ற சொற்களால் ஏழாவது குறளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இறைவன் ஞான வடிவினன் என்பது 'அறவாழி அந்தணன்' என்ற சொற்களால் எட்டாவது குறளில் விளக்கப்பட்டுள்ளது. பிறப்பு, இறப்பு என்ற நிலைகளைக் கடந்தவன் இறைவன். எனவே, இறைவனைச் சேராமல் பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியாது என்ற கருத்துகள்ஒன்பதாம் குறளில் சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறு இறைவனின் பெருமைகளையும் ஞான குணங்களையும் எடுத்துக்காட்டிய பின்பு, அப்பேர்ப்பட்ட அரிய குணங்களாகிய எண்குணங்களைப் பொருந்திய திருவுருவத்தின் திருவடிகளை வணங்காத மானிடர், கண்ணிருந்தும் குருடர்கள், காதிருந்தும் செவிடர்களே ஆவர் என்ற அறிவுரைகளும் அதிகாரத்தின் முடிவில் சொல்லப்பட்டுள்ளனவாம்.

மலம் என்பது அழுக்கு அல்லது குற்றம் என்பதாம். எனவே, இறைவனை நின்மலமாய் உள்ள பொருள் என்று குறிப்பிடும்பொழுது, குற்றம் குறைவில்லாத தூய்மையின் திருஉருவமே இறைவன் என்பதாம். மாயை, கன்மம் ஆகியவற்றைப் பொதுவாக மலம் என்று குறிப்பிடுவர் சித்தாந்திகள். அவ்வித மல உபாதைகளினுல் ஒருபோதும் பாதிக்கப்படாதவனே இறைவன் என்ற உண்மையை வலியுறுத்துவதற்காகவே நின்மலமாய் உள்ள என்று குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. பிரபஞ்சத்தில் அன்ருடம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தொழில்களாய படைத்தல், காத்தல் முதலியன அவற்றிற்கான கர்த்தாக்களால் நடத்தப்படுவதனுலும், அவர்களையும் அங்ஙனம் செய்விக்கும்படி அதிகாரம் செலுத்துவதற்கு ஒருவன் தேவைப்படுகிருன். அவனையே முதல் தெய்வம் என்றும் கூறுவர். இக் கருத்தினை ஒப்புக்கொள்ளும் சான்ரேர், 'தெய்வம் ஒருவனே என்று இங்கு உணரவல்லீரேல் அருவினைகள் ஐந்தும் அறும்' என்ற மேற்கோளையும் எடுத்துக் காட்டுவர். அன்றியும், தமிழ்ச் சங்கப் புலவர்களும் திருமூலரும் எடுத்துக் கூறியுள்ள 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் கருத்தினையும் ஒப்புநோக்கற்பாலது.

முதற்பொருள்தான் பதி என்ற கருத்தினை வலியுறுத்திய ஆசிரியர், அப் பொருளானது எப்போதும் இருப்பது, எனவே எக்காலத்தும் அழியாதது என்பதனை உணர்த்துவதற்காகவே, 'நித்தம் ஆகி' என்று குறிப்பிட்டார். பதிப்பொருள் எக் காலத்திலேனும் அழிவடையுமானுல், அது சடப்பொருள் எனப்படும். அன்றியும் அவ்வாறு அழிவடைந்த பிறகு மீண்டும் தோன்று

வதற்குக் காரணம் இல்லாதுபோகும். அவ்வாறுயின், உயிர் இனங்களுக்கு நற்கதி நாட்டமும், அதனை அடைவதற்கான நெறி முறைகளும் ஏற்படமாட்டா. ஆகையால், பதி என்றுமிருப்பதான நித்தியப்பொருள் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. பசுக்கள் எனப்படும் உயிர் வருக்கங்கள் எண்ணில்லானதவாம். அவற்றின் நல்வாழ்வுக்காகப் பிரபஞ்சக் காரியங்களை இறைவன் நடத்தி வைக்கிறுன். அவ் வுயிர்களும் நித்தியமானவை; எண்ணிக்கை யற்றவை என்பதனை வலியுறுத்தவே,'அலகு இல்' என்றுர் ஆசிரியர். உயிர் நித்தப்பொருளானுலும், அது அறியாமையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் மலபந்தங்களே. அவற்றை நீக்குவது பசுக்களின் சுயமுயற்சியாலேயே முடியாத தாம். இவ் வுண்மை அன்றுட வாழ்க்கையில் நாம் காண்பதாகும். உதாரணமாக, பசுமாட்டைக் கயிற்றுல் தொழுவத்தில் கட்டிய பின்பு, அதைக் கட்டியவன்தானே மீண்டும் அவிழ்க்கவேண்டும். அதைப்போன்றே இறைவனும், பசுக்கள் எனப்படும் உயிர் வருக் கங்களைப் பிரபஞ்சக் காரியங்களில் ஈடுபடுத்தி மலநீக்கம் ஏற் படுத்தி, நற்கதி அடைய வழிகாட்டுகிறுர் என்பதாம். இவ்வாறு உயிர்வருக்கங்களின் அறிவுக்கறிவாக இயங்குகிறுன் இறைவன் என்பதே உட்பொருளாகும். அவ்வாறு இறைவன் அறிவினுக் கறிவாகி இயங்குவதால்தான் உயிரினங்கள் யாவும் உணர்வு நிலையைப் பெற்று, ஞானமுற்று நற்கதியடைய முடிகிறதாம். உயிரினங்களையெல்லாம் தன் வியாபகத்துள்ளே கொண்டிருப்ப தோடு மட்டுமல்லாமல், அவைகளினேடு உயிர்க்குயிராய் நின்று உதவுகிறுன் இறைவன் என்பதாம். இக் கருத்தினை வலியுறுத்தும் முறையில்தான் 'உயிர்க்கு உணர்வு ஆகி' என்று கூறப்பட்டுள்ளது. ஆன்மாக்களின் அறிவு நிலைகளுக்கேற்ப இறைவன் அவைகளை இயக்கி நல்வழிப்படுத்துகிறுன் என்பதே சான்றேர்களின் கொள்கை. அறிவிக்க அறிதலே கட்டுண்ட ஆன்மாக்களின் நிலைமையாதலால் இங்ஙனம் கூறப்பட்டதாம்.

இறைவனை, 'அசலம் ஆகி' என்று குறிப்பிட்டதன் பொருள், சலனமில்லாதவன் என்பதாம்; போக்கு, வரவு முதலிய செயல் களுக்குட்படாதவன் இறைவன் என்பதாம். இதற்கு மேற்கோள், 'எங்கும் செறிசிவம்'. ஆதலால், வருதல், போதல் முதலிய சொற்களைக் குறிக்கும் செயல்கள், என்றும் நிலைத்திருக்கும் இறை வனுக்குப் பொருந்தாவாம். இறைவன் இல்லாத இடமில்லை. இவ்வாறு எங்கும் வியாபித்துள்ள (சூரிய ஒளியைப்போல) பொரு ளுக்கு மாற்றங்கள் கற்பிப்பது முறையாகாதாம். இறைவன் எல்லையற்ற பெரும்பொருளாயிருத்தலால், ஓர் அளவுக்குட்படுத்த இயலாதாம். உருவப் பொருளுக்கே எல்லையும் அளவுகளும்

உண்டு. அருவமாய் எங்கும் வியாபித்திருக்கும் பொருளுக்கு (ஆகாயத்தைப் போல) அளவு கற்பித்தல் பொருந்தாவாம். உருவப் பொருள்கள் யாவும் அளவை இயலுக்குக் கட்டுப்பட்டவை. அளவை இயலைக் கடந்து அறிவு அளவை இயலுக்கு அடிப்படை இயலாய் அமைந்த பொருளை, 'அகண்டிதம் ஆய்' என்று குறிப்பிட்டுள்ளதும் வாசகர்கள் கவனிக்கற்பாலது. இவ்வாறு கூறப் பட்டுள்ள இலக்கணங்களின் இறுதிப் பொருளாய் இருப்பவன் இறைவன். அந் நிலை ஆனந்த நிலையாம். இதன் கருத்து, இறைவன் ஆனந்தமயமானவன் என்பதாம். அந்தப் பேரின்ப நிலையை ஆன்மாக்களும் அடையமுடியும். ஆனால், அறியாமையில் உழன்றுகொண்டிருப்பதால் அவ் வுண்மையைத் தெரிந்துகொள்ள முடிவதில்லை. அதற்குச் சிறந்த நெறி சித்தாந்த நெறியாம். அதனால்தான் சித்தாந்த நெறி செந்நெறி என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. இந் நெறியில் சென்று, இறைவனின் ஆனந்த நிலையைக் கண்டு, பேரானந்த வாழ்வைப் பெற்ற சைவப் பெரியோர் அநேகர் ஆவர். அவர்களுள் ஒருவராகிய மாணிக்கவாசகர் தாம் பெற்ற ஆனந்தப் பேற்றை 'என்னுடை இன்பே' என்று அனுபவித்துக் கூறியுள்ளது சித்தாந்தத்தின் உண்மையைத்தான் உறுதிபடுத்துவதாகும். கற்றாரைக் கற்றார் அறிதல்போல், பேரானந்தத்தில் திகழ்ந்த ஆன்மா, பெருவாழ்வு பெறுகிறதாம். அதனால்தான், 'ஆனந்த உருவு ஆய் அன்றிச் செலவு அரிதாய்' என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆறுகள் எந்த வழிகளால் எத் திசையிலும் ஓடிக்கொண்டிருந்தாலும், முடிவில் சமுத்திரத்தையே அடைகின்றன; தாயை விட்டுப் பிரிந்த சேயானது தன் தாயையே தேடி அலைந்து முடிவில் அடைந்து மகிழ்கிறது; இளங்கன்றும் தன் தாய்ப் பசுவைத் தவறாமல் அடைந்து மகிழ்ச்சிபெறுகிறது. இவ்வித இயற்கை நிகழ்ச்சிகளிலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் உண்மை, தேடப்படும் பொருளுக்கும், தேடும் பொருளுக்கும் ஏதோ ஓர் தொடர்பு இருக்கிறதென்பதாம். தேடப்படும் பொருளானது, தேடிவரும் பொருளைத் தன்னிடம் விரையச் சேர்த்துக்கொள்ளும் தன்மையில் எவ்வித மாறுபாடும் இல்லை. உதாரணமாகச் சொல்வோமாகில், தாய்ப் பசுவைத் தேடும் இளங்கன்று மட்டும் ஏக்கத்தால் கதறவில்லை; தாய்ப் பசுவும் தன்னுடைய இளங்கன்றைக் காணாமல் கதறுகிறது. உதாரணத்திலே கூறப்பட்டுள்ள உவமையை முற்றிலும் நேரடியாகவே சுட்டிக்காட்டுவேனாகில், சிற்றறிவுடைய ஆன்மா, பேறறிவுப் பொருளைத் தேடுகிறது; பேரறிவுப்பொருள் சிற்றறிவுப்பொருளைத் தம்பக்கம் அழைக்கிறது. இவ்விரு பொருளுக்கும் உள்ள ஒற்றுமை அறிவு அல்லது ஞானம் என்பதாம்.

இவ்விரு பொருளும் நித்தியமானவை; இதுவே உண்மை (Truth). இவ்விருபொருளும் ஒன்றையொன்று பிணைந்துகொள்வதே நன்மையுமாகும் (Good). இக் கருத்தினை வலியுறுத்தும் முறையில் 'செந்நெறிக்கே செல்விப்பானை' என்று கூறினார் திருநாவுக்கரசர். சுருங்கக் கூறின், எந்தவிதத்தாலும் அடையப்படும் பொருளாக இருக்கும் பரம்பொருளை (இறைவனை) அடைவதற்காக நெறி முறைகளை அமைத்துக்காட்டுவதே உலகிலுள்ள எல்லாச் சமயங்களின் குறிக்கோளாகும். இவ் வடிப்படை உண்மையை நன்கு உணர்ந்ததன் பயனாகத்தான், எல்லாச் சமயங்களையும் சமத்துவ அடிப்படையில் சைவ சமயம் ஏற்றுக்கொள்கிறது. எல்லாவற்றையும் தம்மிடத்தே அமையச்செய்வதே சிவம் என்பதாகும்; அவ்வுண்மையை அடையச் செய்வதே சைவசமயத்தின் குறிக்கோள் ஆகும். இச் செல்கதியாகிய சைவச்செந்நெறிக்கு முடிபாய் விளங்குவதே பேரின்பமாய் நிலைத்து நிற்கும் பூரணமாதலின், அதனைச் 'செல்கதியாய்' என்று குறிப்பிட்டுப் கூறப்பட்டுள்ளதும் கவனிக்கற்பாலது.

வினைப்பயன்களை நுகரும்பொருட்டு உயிரினங்கள் எடுக்கும் பிறப்புகள் எண்ணில்லாதனவாம். வினையின் தன்மைக்கேற்பப் பெரிய உடம்புகளையும், சிறிய உடம்புகளையும் உயிரினங்கள் பெறுவது இயல்பாம். தூல உடம்பினைத் தவிர, சூக்கும உடம்பும் உண்டென்பது சித்தாந்திகளின் கொள்கையாகும். எனினும், எவ்விதமான தேகங்களைப் பெற்று வினைப்பயனை நுகரும் உயிரானாலும், அதனை நற்கதிக்கு நல்வழி காட்டுவதே இறைவனின் கடமையாம். ஆதலின், அவரவர்களுடைய தன்மைக்கேற்ப அறிவினுள் அறிவாய் அமைந்து நல்வழியில் நடாத்திச் செல்பவனே இறைவன் என்பர். இதனால், இறைவனிற் சிறிய அதிசூக்குமப் பொருளுமில்லை; இறைவனிற் பெரிய வியாபகமும் இல்லை என்ற உண்மையும் உணரற்பாலது. இக் கருத்தினை வலியுறுத்துவதற்வதற்காகவே, 'சிறிதாகிப் பெரிதாய்த் திகழ்வது' என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கூறப்பட்ட இலக்கணங்களையெல்லாம் தம் இயல்பாக உள்ள பொருளைச் சான்றோர், 'தற்சிவம்' என்று அழைப்பர். இங்ஙனமாக அப் பெரும்பொருளைப் பெயரிட்டழைத்தோர், பாசஞானம், பசுஞானம் ஆகியவற்றைக் கடந்து பதிஞானமெய்திய மேலோர்களாதலால், 'தெளிந்துளோர்' என்று குறிப்பிட்டுள்ளார். தெளிவு என்பது அறிவின் தெளிவையே குறிப்பதாம். தெளிந்த அறிவு எனப்படுவதே பதிஞானமாம். சிவஞானத்தாலேயே சிவத்தை அடையமுடியும் என்பதே உண்மையாம்; இவ் வுண்மையைத்தான் எடுத்துக்கூறுகிறது சிவஞான போதம்.

9. சிவ - சத்தி மகிமை

இறை உண்மையை நாம் உணர்ந்துகொள்வதற்குச் சிறந்த சாதனமாக அமைந்துள்ளதே இறையருள் என்பர். இதனைப் பொதுவாக அருட்சத்தி என்றும், சிறப்பாகச் சிவ-சத்தி என்றும் கூறுவர். சிவ-சத்தி சிறப்புற்றமைக்குக் காரணம், சிவமும், சத்தியும் இருவேறு பொருள்கள் அல்ல என்ற உண்மை வலியுறுத்தப்பட்டதே. பிரபஞ்சக் காரியங்கள் நடைபெறுவதற்குக் காரணமே சிவ-சத்தியாகும். அதனால்தான், சித்தாந்திகள் அருட்சத்திக்கு அவ்வளவு முக்கியத்துவம் அளித்துள்ளனர். அருட்சத்தி என்பது இறையருள்; அவன் இயக்கத்தாலேயே பிரபஞ்சக் காரியங்கள் நடைபெறுகின்றனவாம். அதன் பயனாகவே சீவராசிகள் அனைத்தும் தத்தம் மலபந்தங்களிலிருந்து விடுதலைபெற்றுப் பெருவாழ்வு வாழ்வதற்குத் தகுதியடைகின்றனவாம். வினைப்பயனுக்கேற்ற முறையில் வாழ்வு தாழ்வுகளைப் பெற்ற சீவராசிகள், அவ்வாறு அமையப்பெற்ற இடையூறுகளைத் தவிர்த்து, மலபந்தங்களை நிவர்த்தி செய்து, தூய்மை பெற்று நற்கதி அடைவதற்கே அடிப்படையாய் அமைந்து இயங்குவது அருட்சத்தி அல்லது சிவ-சத்தி என்று போற்றப்படும் இறையருளாம். இறையருளால் ஏற்படும் நன்மைகள் தனிப்பட்டவர்களுக்காகச் செய்யப்படும் உபகாரம் அல்ல; எல்லோருக்கும் நன்மை பயப்பதற்கே இயங்கும் தத்துவம் என்பதும் கவனிக்கற்பாலது. சுருங்கக் கூறுமிடத்து, இறைவனிடம் நம்பிக்கையுடையவர்களாயினும் சரி, அல்லது அவநம்பிக்கையுடையவர்களாயினும் சரி, யாவரும் இறையருளால் கண்காணிக்கப்படுகின்றனர் என்ற உண்மை நன்கு அறியற்பாலது. இவ் வுண்மை ஏட்டிலே கூறப்பட்டுள்ளது மட்டுமன்று, வாழ்க்கையிலும் அனுபவமாகப் பெற்று நன்மை அடைந்த சைவப் பெருமக்கள் அநேகர். அதனால்தான், 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்று சுட்டிக்காட்டினர் மாணிக்கவாசகர்.

பிரபஞ்சக் காரியங்களாகிய தோற்றம், காத்தல், அழித்தல் முதலியவற்றிற்கு மூலகாரணன் சிவபெருமானே என்பது சித்

தாந்திகளின் கொள்கை. எனினும், இப் பிரபஞ்சக் காரியங்கள் யாவும் இயற்கையாகவே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இக் காரியங்களைத்தான் நாம் காண்கிறோம்; ஆனால், அவற்றிற்குக் காரணம், அதுவும் மூலகாரணம் நாம் காண்பதில்லை. இருந்த போதிலும், எவ்வாறு ஒவ்வொரு காரியத்திற்கும் ஓர் காரணம் இயல்பாக இருக்கிறதோ அதைப்போலவே, இப் பிரபஞ்சக் காரியங்கள் அனைத்திற்கும் ஓர் மூலகாரணம் இருக்கவேண்டும் என்று அனுமானித்து, அக் காரணத்தை ஊகிக்கிறோம். இவ்வாறு ஊகித்தறிவதும் உண்மையே என்ற கருத்தினைச் சான்றோர்கள் எழுதி வைத்துச் சென்றுள்ள சாத்திரங்களும் ஆதரிக்கின்றன. இவ்வாறு நற்காரியங்களையே செய்து நல்ல முறையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்பவனுக்கு, நிச்சயமாக நன்மைகளே ஏற்படும். இக் கருத்தினை வேறுவிதமாகவும் கூறமுடியும். நற்காரியங்களையே செய்து நல்ல முறையில் வாழ்க்கையை அமைத்துக்கொண்டவர்கள், இறுதியில் நன்மைபெறாமல் வாழ்க்கையில் தோல்வி பெறுகின்றனர். இவ் விளக்கங்களிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மை என்னவென்றால், எல்லாம் மனிதனுடைய முயற்சியாலேயே அடங்கிவிடுகிறதென்பதைக் காட்டிலும், மனிதனுடைய முயற்சிக்கும் அப்பாற்பட்ட பொருள் உண்டு என்பதாம். அது மனிதனுடைய நன்மைக்காகவே இயங்கிக் கொண்டிருக்கிறதாம். அதனையே அருட்சத்தி என்றும், சிவ-சத்தி என்றும் குறிப்பிடுவர். சித்தாந்திகளின் சிறப்பான இக் கருத்தினை ஏற்றுக்கொள்வதால், மனித முயற்சியோ அல்லது உரிமையோ எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லையாம். மனித வாழ்க்கையின் முடிபோ அல்லது உலகின் முடிபோ யாது என்று கேட்போமாகில், விஞ்ஞானிகளோ, பகுத்தறிவு வாதிகளோ எந்தவிதமான முடிபையும், நிச்சயமாக உறுதிப்படுத்திக் கூறவில்லை என்பதுதான் உண்மை. ஆனால், சித்தாந்திகளிடம் கேட்டால், எல்லோரும் முடிவில் நற்கதி அடைவது நிச்சயம் என்பதற்கு அதிமுக்கிய காரணம் இறைவனே; இறைவன் அருள்மயமானவன்; அதனையே அருட்சத்தி என்றும் சிவ-சத்தி என்றும் கூறுவர்.

இந் நிலையில் ஒரு முக்கியமான வினாவிற்கு விடையும் விளக்கமும் சொல்லவேண்டியுள்ளது: அருளின் திருஉருவமே இறைவனானால் சகலசீவராசிகளின் துன்பங்களையும் களைந்து அவற்றை இன்பப் பெருவெள்ளத்தில் ஏன் மிதக்கவிடக்கூடாது? இவ் வினாவிற்கு விடையளிக்கும் முறையில் சித்தாந்திகள் விளக்கிக் கூறியுள்ளனர். சகல சீவராசிகளும் ஒரேவிதமான துன்பங்களைப் பெறவில்லை; அவை பெற்றிருப்பதும் துன்பங்கள் மட்டுமல்ல; இன்பங்களும் கலந்தே உள்ளன. இவற்றிற்கு முக்கியக் காரணம்

அச் சீவராசிகளின் முயற்சிகளும் அதனுல் விளையும் நன்மையும் தீமையுமே. இதன் மூலமாக எண்ணற்ற சீவராசிகளின் உண்மையும் உறுதிப்படுத்தப்படுகிறது. மேலும், இறையருளாலே இயங்கும் சகல சீவராசிகளின் இருவிதச் சூழ்நிலைகளையும் குறிப்பிடவேண்டியுள்ளது. செயலற்று உருவமற்ற நிலை ஒன்று; செயல் புரிந்தும் அவற்றின் நன்மை தீமைகளை அனுபவித்து முத்திநிலைக்குப் பக்கமாயிருப்பது மற்ருென்று. பிறவி எடுப்பதற்கு முன்பும் ஆன்மாக்கள் அவற்றின் நிலைமையை உறுதிப்படுத்திக்கொள்வதும் இறையருளால்தான்; பிறவி எடுத்து நன்மை தீமைகளின் விளைவுகளை அனுபவித்து, முத்திநிலை எய்தி பேரின்பம் பெறுவதும் இறையருளால்தான். இவ்வாறு சகல சீவராசிகளின் நன்முயற்சிகளுக்கே மூலகாரணமாக அமைந்து அவை யாவும் நற்கதி அடைவதே இறையருளால்தான் என்னும் பேருண்மையை வலியுறுத்திக் கூறியுள்ளனர். இக் கருத்தினையே மிகவும் தெளிவாகவும் திறம்படவும் மணிவாசகர் சிவபுராணத்தில் கூறியுள்ளார் என்பதை முன்பே குறிப்பிட்டேன்: 'அவனருளாலே அவன் தாள் வணங்கி.'

இறைவனிடத்தில் அன்புகொண்டு துதிப்போருக்கும், இறைவனை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கும் உறுதுணையாக இருந்து பரிபாலித்து வருவதும் இறையருளே. அருள் என்னும் செந்தமிழ்ச் சொல்லின் ஆழத்தை நிதானமாகச் சிந்தித்துணரவேண்டுமென்று வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாகக் கூறுவோமாகில், சூரிய ஒளி நுழையாத இடமே இல்லை. எங்கும் வியாபித்திருக்கும் சூரிய ஒளியைப் போன்றதே இறையருளாம். எனினும், குருடனுய் இருப்பவனுக்குச் சூரியஒளி எங்கும் பரவியிருந்தபோதிலும், அக் குருடனைப் பொறுத்தமட்டில் ஒளி என்பதே கிடையாது. அக் குருடன் இழந்த பார்வையைப் பெறும் பொழுதுதான் ஒளியைக் காண இயலும். அதைப்போன்றே, மலபந்தங்களினுல் கட்டுண்ட ஆன்மா, அறிவை இழந்த காரணத்தால், குருடனுக்குச் சமமானதாக வாழ்கிறதாம். இவ்வாறு, மலபந்தங்களிலிருந்து எந்த அளவுக்கு ஆன்மா விடுதலை பெறுகிறதோ, அந்த அளவுக்கே அறிவு விளக்கமும் ஏற்படுமாம். அறிவு விளக்கம் அதிகரிக்கவே ஆன்ம சுத்தியும் அதன் காரணமாக ஆன்மப் பிரகாசமும் ஏற்படுமாம். அவ்வித ஆன்மப் பிரகாசத்திற்குக் காரணமே இறையருளாம். உதாரணமாக, இருட்டறையில் நுழைந்த ஒருவன் அங்குள்ள பொருள்களைச் சரியாகக் காண முடிவதில்லை; ஆனுல், வெளிச்சம் அங்குத் தோன்றும்பொழுது ஒவ்வொரு பொருளையும் நன்ருகக் காணமுடிகிறது. எனவே, உண்மை நிலையை அறிகிருன். அதைப்போன்றே தன்னுணர்வு

அதிகரித்து, தன்னையே உணர்ந்துகொள்ளும் நிலைக்கு இறையருள் உடனிருந்தே துணைபுரிகிறது என்பதாம். இவ் விளக்கங்களிலிருந்து இறையருள் ஆன்மாவுக்கு ஒளியை மட்டும் தரவில்லை; ஆன்மாவின் நற்கதிக்கும் இறையருளே இறுதியாக உள்ள உண்மை என்பதனை யும் நாம் உணரவேண்டும். எடுத்துக் கூறப்பட்டுள்ள உதாரணங் களிலிருந்து மேலும் சில உண்மைகள் தெரிய வருகின்றன. அவற்றை விளக்கிக் கூறுவோமாக.

இறையருள் எங்கும் பரவியிருந்தாலும், அதை நாம் அனுப வித்து உணரவேண்டுமென்றால், அறிவு விளக்கம் மட்டுமன்று, மன அடக்கமும், மனத்தூய்மையும் இன்றியமையாதவையாம். மீண்டும் ஓர் உதாரணத்தைக்கொண்டே விளக்கிக் கூறவேண்டி யுள்ளது. உலகத்தின் ஒரு கோடியில் உள்ள வானொலி நிலையத்தி லிருந்து ஒரு செய்தி ஒலிபரப்பப்படுகிறது. உலகத்தின் மறு கோடியில் உள்ள மற்றொருவனும் அச் செய்தியைக் கேட்க முடிகிறது. எப்பொழுது? அச் செய்திகளை ஏற்கும் வானொலிப் பெட்டியைப் பெற்றிருக்கவேண்டும்; அதனை நல்ல முறையில் எல்லாத் தேவைகளுடன் இணைத்து இயக்கவேண்டும். அப் பொழுதுதான், செய்திகளைக் கேட்க முடிகிறதாம். ஆனால், செய்திகளைக் கேட்கவேண்டுமென்ற ஆவல் இல்லை; வானொலிப் பெட்டியையும் அமைத்துக்கொள்ளவில்லை; இந் நிலையில் உலகத் தின் மறுகோடியிலிருந்து ஓர் நற்செய்தி, ஏன், எவ்விதச் செய்தி களும் ஒலிபரப்பப்படுகிறதென்று கூறினால் அதனை நிச்சயமாக நம்பவேமாட்டான். அதனைப்போன்றே, தன்னையும் தூய்மைப் படுத்திக்கொள்ளாமல், நல்லறிவையும் வளர்த்துக்கொள்ளாமல், இருளிலே கண்ணை மூடிக்கொண்டு வாழும் ஒருவனிடம், வெளிச் சம், ஒளி, அறிவு அருள் என்பனபோன்ற சொற்களைக் கூறினால், கேட்கவும் மாட்டான்; கேட்டாலும் புரிந்துகொள்ள மாட்டான். எனவேதான், இறையருள் உண்மையினை நம் முன்னோர்களாகிய சான்றோர்கள் எழுதிவைத்துச் சென்றுள்ளார்கள். நல்லதைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று விரும்பி ஆர்வத்துடன் அறிவு வெளிச்சத்தை நாடுபவர்கள், நிச்சயமாக ஒளியைப் பெறுவார்கள். அதைப்போன்றே இறையருள் யாவருக்கும் நன்மைபயப்பதற்கே இயங்கிக் கொண்டிருக்கிறது. அதன் பயனைப் பெற்று உய்வதற்கு நாம் தயாராகவேண்டும். அவ்வித முயற்சிகள் தடைபடுகின்றன என்றால் அதற்குக் காரணம் மலபந்தங்களே என்பதாம்.

மலபந்தங்கள் ஏற்படுவதற்குக் காரணம் கன்மம் என்பர். நம்முடைய சொல், செயல், நடத்தை ஆகியவற்றிலிருந்து தோன்றுவதே கன்மமாம். இந் நிலையில் கன்மம், இறையரு

னுக்கு எதிராகச் செயல்படும் என்று தவருகக் கருதிவிடக் கூடாது. ஏனென்ருல் கன்மம் சடத்தன்மை பெற்றது. எனவே, அது தாஞக இயங்காவாம்; அதனுல்தான், கன்மம் இறைவனின் ஆணை என்றும் குறிப்பிட்டுக் கூறப்பட்டது. இவ்வாறு கன்மம் செயல் படுவதே இறையருளால்தான் என்ற உண்மையும் உணரற் பாலது. மேலும், கன்மம் ஓர் எல்லைக்குட்பட்டே இயங்கவல்லது; ஆனல், இறையருளோ எல்லையற்றது. உதாரணமாகக் கூறு வேஞகில், மலபந்தங்களால் பிணிக்கப்பட்ட ஆன்மா என்னும் நோயாளிக்கு, இறையருள் சாதாரண மருந்து அல்ல; அது சாவா மருந்தாம்; ஏனென்ருல், இம் மருந்து (அருள்) நோயாளியைக் (ஆன்மாவை) குணப்படுத்துவதோடு அல்லாமல், தூய்மை பெற்றவனுக்கு நித்திய வாழ்வையும் அளிக்கவல்லதாம். அதனுல் தான், இறையருள் எல்லாச் சீவராசிகளுக்கும் நன்மையே பயக்கும் அருமருந்தாக அமைந்துள்ள உண்மை மிருகேந்திர ஆகமத்தில் விரிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது ஊன்றியறியத்தக்கது. இவ் வாருக, இறையருள் தம்மிடம் பத்தி கொண்டவர்களுக்கு மட்டும் அளிக்கப்படும் அனுக்கிரகம் அன்று; இவ் வுண்மையை வலியுறுத்தும் முறையில்தான் 'அருள்' என்னும் அற்புதச் சொல்லைப் பண்டைத் தமிழ்ப் புலவர் பெருமக்கள் அமைத்துள்ளனர் என்பதும் குறிப் பிடத்தகும். அன்பு என்ற சொல்லைவிட அருள் என்ற சொல் ஆழமான பொருளைக்கொண்டது என்பதும் கவனிக்கற்பாலது.

இறையருள் எவ்வெவ்விதங்களில் செயல்பட்டு வெளிப்படு கின்றன என்பது சிவஞானசித்தியாரில் சுருக்கமாகவும் சுவை யாகவும் சொல்லப்பட்டுள்ளது:

'உருவருள் குணங்களோடும் உணர்வருள் உருவில் தோன்றுங்
கருமமும் அருள் அரசன்தன் கரசரணுதி சாங்கந்
தரும் அருள் உபாங்கமெல்லாந் தானருள் தனக்கொன் றின்றி
அருளுரு உயிருக்கென்றே ஆக்கினன் அசிந்தன் அன்றே.' (47)

இச் செய்யுளின் பொதுவான கருத்துகளாவன : அருளே இறை வனின் திருஉருவமாம்; அருளே உயிர்களுக்குணர்வளிப்பதாம். இறைவனின் குணங்களும், செயல்களும் அருளுருவிலே தோன் றினவாம்; இறைவனின் உருவத்திருமேனியின் ஒவ்வொரு பாகங் களும் அருளுருவமாம்; உபாங்கமாகிய புவன போகங்களும் அருள் வடிவமாம். இவ் வருள்வடிவெல்லாம், தன்பொருட்டன்றி உயிர்களின் நன்மைக்காகவே ஏற்படுவனவாம். இவ்வாறு சகல சீவராசிகளின் நன்மையையே நோக்கமாகக் கொண்டு பலதிறப் பட்ட தத்துவங்களை இயக்குவதால், பல்வேறு பெயர்களைக் கொண்டு இயங்கவல்லது இறையருள். இவ் வுண்மை சிவப்பிர

காசத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளது என்பது கீழ்க்காணும் செய்யுளால் தெரியவரும் :

'நீடுபரா சத்தி நிகழ் இச்சா ஞானம்
நிறை கிரியைதர அதனை நிமலன் மேவி,
நாடரிய கருணை திரு உருவமாகி,
நவின்று பல கலைநாத விந்துவாதி
கூடுமொளி வளர்குடிலை மாயை மேவிக்
கொடுவினைகொள் தனு கரண புவன போகம்
பீடுபெற நிறுவி அவை ஒடுக்கு மேனி
பிறங்கிய நிட் களசகளப் பெற்றி ஆமே.'

உமாபதி சிவாசாரியர் எடுத்துக் கூறியுள்ள கருத்துகள் முக்கியமானவையாகையால், அவற்றைப் பொதுவாகவும், விளக்க மாகவும் விரித்துரைத்தல் நலமாகும். எல்லா உயிரினங் களும் நலமுற்று நல்வாழ்வு எய்துவதற்கு இருப்பிடமாக அண் டங்கள் அமைக்கப்படவேண்டும். பிரளய காலத்தில், ஆன்மாக் கள் ஓய்வுகொள்ளும் பொருட்டு அவ் வண்டங்கள் ஒடுக்கப் படவும் வேண்டும். இவ்வாறு ஏற்படும் இருவகை நிலைகளை விகாசம், சங்கோசம் என முறையே குறிப்பிடுவர். இவ்விரு நிலைகளும் தொடர்ந்து செயல்படுவது உயிரினங்களின் நல்வாழ்வுக் காகவேயாம். இவ்வாறு நித்தியத் தொழிலை இறைவன் புரி வதற்குக் காரணம் கருணையே என்பர். இறைவனிடத்திலுள்ள பிரிவற்ற இயல்பாகிய கருணைக்கு, சிற்சத்தி என்றும், அருட்சத்தி என்றும், பராசத்தி என்றும், ஆன்மாக்களின் பக்குவநிலைக்கு ஏற்றவாறு பயன்படும் தன்மைக்கேற்ப, பெயர்கள் சூட்டப் பட்டுள்ளனவாம். உயிர்களின் உயர்வுக்கு அருட்சத்திதான் ஆதாரமாயுள்ளது. உயிர்களுக்கெல்லாம் பாரபட்சமின்றி நன்மை அளிப்பதையே தன்னியல்பாகக் கொண்டது அருட்சத்தி. எனவேதான், இறையருளாலேயே படைத்தல், காத்தல், துடைத் தல், மறைத்தல் ஆகிய தொழில்கள் நடைபெறுகின்றன என்று கூறுவர். இந் நான்கு தொழில்களும் உயிர்களின் நன்மைக்காகவே நடைபெற்றாலும், அதனை உயிர்கள் அறியமாட்டாவாம். இந்த அவதரத்தை திரோதான சத்தி என்று கூறுவர். இதனை ஆதிசத்தி என்றும் அழைப்பதுண்டு. இந் நிலைகளுக்குத் தடத்தம் என்பது பெயராம். ஐந்தாவது நிலையாகிய அனுக்கிரகம் சொரூபம் எனப்படுவதாம். இவ்வாறு இறைவனுடைய பேராற்றல் ஒன்றே தடத்தமாகவும், சொரூபமாகவும் இயங்கி உயிர்களுக்கு எல்லாம் உதவும் உண்மையை பஞ்சாக்கரத்துள்ளும் நகார வகாரங்கள் தெரிவித்து நிற்கின்றனவாம். இவையாவற்றினும் நாம் தெரிந்து

கொள்ளவேண்டிய முக்கியமான செய்தி, இறைவனுடைய பேராற்றலாகிய அருட்சத்தியே உலகங்களை அமைப்பதற்கும் அவற்றை ஒடுக்குவதற்கும் காரணமாய் உள்ளது. அதனால்தான், இறையருளின் பெருமையைப் புகழும் தன்மையில் நீடு பராசத்தி என்று கூறியுள்ளார் ஆசிரியர், உமாபதி சிவாசாரியர்.

பராசத்தியைத் தடையில்லா ஞானம் என்றும் அழைப்பர். அத் தடையில்லா ஞானம் ஒன்றாயிருப்பினும், செயலினால் இது மூவகையினையுடைத்தாம். 'ஒன்றதாய் இச்சா ஞானக் கிரியை என்றொரு மூன்றாகி' என்று சிவஞானசித்தியார் குறிப்பிடுவதும் கவனிக்கற்பாலது. இறைவன் உயிர்களிடத்தில் கருணை காட்டுவதே இச்சா சத்தி எனப்படுமாம்; அதற்காக வழிமுறைகளை இறைவனே விரும்பி அறிவித்தல் ஞானசத்தி எனப்படும். அவ்வாறு அறிந்தவண்ணம் சங்கற்பித்துச் செய்தலே கிரியாசத்தி எனப்படும். இம் மூவிதச் செயல்களும் ஆன்மாக்கள் சிவாநுபவம் பெறுவதற்குத் துணைபுரிகின்றனவாம். உயிர்களிடத்திலும் இம் மூன்று சத்திகள் உண்டாம், ஆனால், அவை இறைவனுடைய சத்திகளுக் கொவ்வா என்பதும் கவனிக்கற்பாலது. மேலும், ஆன்மாக்களை ஒருபோது ஒடுக்கவேண்டியும், அவற்றின் வினைப் பயன்களுக் கொவ்வப் போக்ங்களைத் தோற்றுவித்து அதனை துய்க்கும்படி செய்தல் முதலியனவும் இறைவனின் பேராற்றலாலேயே நடைபெறுவதாம்; அம் மூன்று நிலைமைகளை இலயம், போகம், அதிகாரம் என்று கூறுவர்.

பொதுவாக, உயிர்கள் வினைப்பயன் நுகரும் முறைகளில் பல பொருள்களை அடைய விரும்பியும், அதனை அடைவதற்கான வழிமுறைகளை அறிந்து, அவ் வழிகளிலேயே முயலும். இவ்வாறு உயிர்கள் தொழிற்படுதற்கண் இறைவனுடைய இச்சை, ஞானம், கிரியை ஆகிய மூன்று ஆற்றல்களும் உடனிருந்தே உதவுகின்றனவாம். எனவே, உயிர்களின் இச்சை, ஞானம், கிரியை ஆகியவை இறைவனின் தன்மைகளோடு ஒன்றுபடுமானால், நிச்சயமாக உயிர்களுக்கு உயர்ந்த வாழ்வும் நற்கதியும் ஏற்படுமாம்; அவ்வாறின்றி, வேறுபடுமானால், உயிர்கள் பிறப்பு—இறப்பு என்னும் பெருஞ் சுழற்சியில் சிக்குண்டு உழலுமாம். இவ்வாறு உயிர்களின் நற்கதிக்கு இறைவனுடைய தன்மைகளையே ஆதாரமாகக்கொண்டுள்ளன என்னும் உண்மையும் அறியற்பாலது. விருப்பமும் அறிவும் தொழிற்பட்டாலன்றி அனுபவம் உண்டாவதில்லை; பயனுமில்லை. எனவே, தொழிலே சிறப்பு வகையில் உயிர்களின் நல்வாழ்வுக்கு உதவி புரிகிறதாம். இக் கருத்தினை வலியுறுத்தும் முறையிலேயே 'நிறை கிரியை தர' என்றும் கூறப்

பட்டுள்ளது. அவ்வாறே இறைவனுடைய இச்சை, ஞானம், கிரியை மூன்றுமே யாவற்றையும் தொழிற்படுத்துவதனுல், 'நிகழ் இச்சா ஞானம்' என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும், இச்சா ஞானக் கிரியைகளின் சமநிலையில் ஏற்படும் மாற்றங்களி னுல், மூர்த்தங்கள் தோன்றுகின்றன என்று சித்தாந்த சாத்திரங் கள் எடுத்துக் கூறுகின்றன. உதாரணமாக, சதாசிவம் என்பது இறைவனின் ஒரு மூர்த்தமாகும். இவ்வாறு இறைவனின் அதிட்டித் தல் எவ்வாருயினும் சத்தியோடு இயைந்தே செயல்படுகிறது என்பதும் உணரற்பாலது. இவ்வாறு இயல்பாகவே இயங்கும் சிவ-சத்தியின் இணைப்பையே 'அதனை நிமலன் மேவி' என்று குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. இங்ஙனம் சத்தியைப் பொருந்து வதனுல் இறைவனிடத்தில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுவதில்லை யாம். இவ் வுண்மை 'நிமிலன்' என்ற சொல்லால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளதும் கவனிக்கற்பாலது.

எல்லாம் வல்ல இறைவன் இயல்பாகவே உயிர்களிடத்தில் இரக்கம் கொண்டவர்; அருளுருவமாக அமையப்பெறுவது உயிர்கள் உயர்வாழ்வு பெற்று நற்கதி அடைவதற்கே என்பதாம். இதனையே இறையின் சங்கற்பம் என்பர். இவ்வாறு சகலசீவராசி களின் நலனையே நாட்டமாகக் கொண்ட இச் சங்கற்பம், இறை வனுடைய எல்லையற்றக் கருணையையே எடுத்துக்காட்டுவதாகு மாம். இவ் வுண்மையைத்தான் 'அருட்பெருஞ்சோதி தனிப் பெருங்கருணை' என்று சுட்டிக்காட்டியுள்ளார் இராமலிங்க அடிகளார். சிற்றறிவுகொண்ட உயிரினங்கள் இவ் வுண்மையை உணராவாம். அதனுல்தான், 'நாடரிய கருணை' என்று கூறினுர் உமாபதிசிவாசாரியர். இவ்வாருன விளக்கங்களின் மூலமாக இறையின் சொரூப இயல்பும், 'திரு உருவம் ஆகி' என்பதனுல், இறையின் தடத்த இயல்பும் எடுத்துக்கூறப்பட்டுள்ளனவாம்.

பிரபஞ்சத்தில் நடைபெறும் காரியங்கள் அனைத்தும் சீவ ராசிகளின் நலனையே நாட்டமாகக் கொண்டதற்குக் காரணமே இறையருள் என்ற உண்மை இதுகாறும் விளக்கப்பட்டதாம். இவற்றிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டிய மற்றுமோர் உண்மையாதெனில், காரியங்களுக்கெல்லாம் காரணம் இறையருள் என்பதைப்போலவே, அக் காரியங்கள் மாயையின் செயல்களே என்பதாம். சித்தாந்திகள், மாயையை, சுத்தமாயை என்றும், அசுத்தமாயை என்றும் குறிப்பிடுவர். அசுத்தமாயை சடப் பொருள்களோடு தொடர்புகொண்டு காரியங்களுக்காகச் செயல் படுவனவாம்; அவற்றை அதிட்டித்து நிற்பதே சுத்தமாயை என்பதாம். அசுத்தமாயை, மாற்றங்களுக்குட்பட்டதாம்; சுத்தமாயை நித்தியமானது; இறையருளால் அதிட்டிக்கப்படுவது.

மகா சங்காரத்தின் பின் மீண்டும் உலகோற்பத்தி ஏற்படும் வரையில், ஆன்மாக்கள் தங்கியிருப்பதே சுத்தமாயையில்தான் என்ற உண்மையை வெளியிடும் கருத்துடனேயே, 'வளர்குடிலை' என்று குறிப்பிடப்பட்டுள்ளதும் கவனிக்கற்பாலது. இவ் வுண்மை, ஓர் உதாரணத்தின்மூலமாக விளக்கப்பட்டுள்ளது : பல பொருள்களையும் வாங்குவதற்குப் பயன்படும் பவுன் நாணயம் ஒன்றை, ஒருவன் தன்னுடைய கைக்குள், மற்றவர்களுக்குத் தெரியாமல் வைத்துக்கொண்டிருப்பதைப் போன்றதே, இறைவனில் சுத்தமாயையின் இருப்பும் ஆகுமாம். அம் மனிதன், தன்னுடைய கைவிரல்களை விரித்துப் பவுன் நாணயத்தை வெளிப்படுத்துவது போன்றதே, சுத்தமாயையின் தோற்றமாம். நாணயம் கைவிரல்களுக்குள் மறையவும், கை, உடம்போடு ஒன்றியிருத்தலுங் கொண்டு, பரிக்கிரக சத்தியின் இயல்பும் உணரலாம்.

உயிர்களின் உயர்வாழ்விற்கு அவசியமானது மலநீக்கம்; அதற்கு இன்றியமையாதது அறிவு விளக்கம். அறிவு விளக்கம் சூக்குமநிலையினின்றும், தூல நிலையினின்றும் ஏற்படுவனவாம்; ஒலியாகச் சூக்குமநிலையிலும், ஒளியாகத் தூலநிலையிலும் வெளிப்படுவதாம். ஒலியை நாதம் என்றும், ஒளியை விந்து எனவும் குறிப்பிடுவர். சொற்பிரபஞ்சமே ஒலி மயமானதென்றும் பொருட் பிரபஞ்சமே ஒளிமயமானதென்றும் கூறுவர். ஒலியின் மூலத்தினை நாதம் என்பர்; நாதமே எல்லா இசைகளுக்கும், எழுத்து, ஓசை முதலியவற்றிற்கும் முதன்மையாக நிற்பதாம். நாதம், பரம், அபரம் என இருவகைப்படுமாம். சுத்தமாயையிற் கூடாத அவதரம் பரம் எனப்படும். சுத்தமாயையிற் கூடிய அவதரம் அபரம் எனப்படும். சிவம் தோன்றுதற்கு முதல் நிலைக்களமாகிய ஓசையே நாதம் எனக் கூறப்படுகிறது. நாதமும், விந்துவும் முறையே பேரறிவும் பேராற்றலும் வெளிப்படுவதற்கான தத்துவங்களாம். சத்தியின் தன்மையால் தோன்றுவது நாதம் என்பர். இவ்வாறு, சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் நான்கும் சிவத்தினிடமே நிகழ்தலால், அது அருவத் திருமேனி அல்லது நிட்களத் திருமேனி என்று அழைக்கப்படுகிறதாம். இங்ஙனம் நாத விந்துக்களெல்லாம் முதன்மை பொருந்திய தத்துவங்களை நிறுவிய பின்னர், உயர்வருக்கங்களில் சிறந்தோரான விஞ்ஞானகலருக்கு முத்தி எய்துதற்கு உதவியாக, ஒளிபொருந்திய தனு, கரண, புவன, போகம் என்பனவும் படைத்தளிக்கப்படுகின்றனவாம். விஞ்ஞானகலரும் முழு ஞானம் பெற்றுப் பெரும்பேறு எய்தவேண்டியிருப்பவரே என்னும் உண்மையை எடுத்துக்காட்டுவதற்கே 'பீடு பெற நிறுவி' என்று கூறப்பட்டுள்ளதாம்.

உயிர்கள் அறிவு விளக்கம் பெறுவதற்குக் கலைகள் பயன் படுகின்றன. கலைகள் ஐந்து வகைப்படுமாம் : காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்பனவாம்; இவற்றிற்குப் 'பஞ்ச கஞ்சுகம்' என்றும், இவற்றோடு கூடிய ஆன்மாவுக்குப் 'பஞ்ச கஞ்சுகன்' என்றும் பெயர். உயிர்கள் கலைகளினால் அறிவு விளக்கம் பெறுவதோடு பொதுவாக மலபந்தங்களிலிருந்து விடு படுகின்றன. சிறப்பாக ஆணவத்தின் வன்மை குறைகிறது என்பர். இவ்வாறு சகல சீவராசிகளும் படிப்படியாக நல்லறிவு வளர்ச்சியும், இன்ப வளர்ச்சியும் அடைவதற்கு ஐங்கலைகளும் துணையாகின்றனவாம். இவற்றைத்தவிர, உயிர்களைக் கலிக்கச் செய்தற்பொருட்டு விந்து தத்துவத்தினின்றும் சூக்குமை முதலான வாக்குமை உண்டாகின்றனவாம். ஐம்பத்தோரக்கரங்கள் உண் டாகின்றன. அவ்வக்கரங்களின் சேர்க்கையினால் பதங்கள் முத லியன தோன்றி, முடிவில் ஆகமங்களும் வேதங்களும் வெளி யாகின்றன என்பது சித்தாந்தத்தின் கொள்கைகளாகும். இவ் வேதாகமமாதி கலைகளே மனித இனம் ஞானம் பெறுவதற்குத் துணைபுரிகின்றனவாம். இவை யாவும் சுத்த மாயையை இட மாகக் கொண்டு திருவருட் செயலால் ஏற்படுவனவாம். ஆத லால், இந்தத் தத்துவங்களில் துன்பத்திற்கு ஏதுவான அறியாமை கலப்புறுவதில்லையாம். இவையெல்லாம் இறைவனுக்கு உபசாரத் திருமேனிகளாகவே கொள்ளப்படுவனவாம். சிவஞான சித்தி யாரும் இக் கருத்தினையே வலியுறுத்துகிறது. 'ஆரணம் ஆக மங்கள் அருளினால் உருவுகொண்டு — காரணன் அருளா முகில் கதிப்பவ ரில்லை யாகும்.' சுருங்கக் கூறின், சுத்தமாயா காரியத்தாலே உண்டான, வாக்கு முதலியன இல்லையாயின், எவ்வாறான உயிர்க்கும் சொற்களின் பொருளை அறியும் ஞானம் ஏற்படாதாம் என்பதும் கவனிக்கற்பாலது.

மேற்கூறிய விளக்கங்களிலிருந்து உயிர்களின் இன்பத்திற்கும் அறிவு விலாசத்திற்கும் இருப்பிடமாகக் கொண்டுள்ள சுத்த மாயையை அதிட்டித்து, இறைவன் உயிர்களுக்கு எவ்வாறு உதவு கிறான் என்பது நன்கு விளங்கும். எனினும், இவற்றுடன் அருட் செயல் முடிவுபெற்று விடுவதில்லையாம். அவ்வாறாயின், பிரளயா கலர், சகலர் என்னும் உயிர் வருக்கங்கள் நற்கதியடைய வழி யில்லாமற் போகுமாம். ஆதலின், அவ்வகை உயிர் வருக்கங்களும் நற்கதி பெறுவதற்குத் துணையாக உள்ளது அசுத்தமாயையாம். எவ்விதம் சுத்தமாயை இறையருளால் நேரடியாக அதிட்டிக்கப் படுகிறதோ, அதைப்போன்றே, சுத்தமாயை அசுத்தமாயையை அதிட்டித்துச் செயல்படுகிறதாம். பொதுவாக மாயை சடரூப மானவையாம்; மயக்கும் தன்மையுடையதாம். இருந்தபோதி

லும், சுத்தமாயை சூக்குமமானது; மயக்கும் தன்மை இல்லாதது. இவை தத்தம் காரியங்களைச் சிவசத்தியின் சங்கற்ப ரூபமாகிய சந்நிதியினின்றும் தோற்றுவிக்குமாம். இக் கருத்தினையே 'மாயை மேவி' என்னும் சொற்றொடர் உணர்த்துவதாகுமாம்.

பிரபஞ்சக் காரியங்கள் மாயா சத்தியாலே நிகழ்ந்தபோதிலும், அவை உண்மை நிகழ்ச்சிகளேயாம்; அவையாவும் உயிரினங்களின் நன்மைக்காகவே நடைபெறுகின்றன என்பதே சித்தாந்தத்தின் கொள்கையாகும். இக் கொள்கையை மறுத்துக் கூறும் வேறு சில முக்கியமான கொள்கைகளையும் இங்குச் சுருக்கமாக விளக்கிக் கூறுவது பயனுடையதாகும். பௌத்தரும், சமணரும், சிறுதுகள் குப்பையாவதுபோல் உலக காரியங்கள் அமைந்துள்ளன என்று கூறுவர். அவர்களுடைய கொள்கை சமுதாய வாதம் எனப்படுமாம். நையாயிகரும் வைசேடிகரும், நூலாலாகிய ஆடையைப்போல், அணுக்களின் சேர்க்கையால் உண்டாவதே உலகம் என்று கூறுவர். அவர்களுடைய கொள்கை ஆரம்பவாதம் எனப்படுமாம். மாயாவாதியர், கானலில் நீர்த் தோற்றம் போல உலகம் பிரம்மத்தில் தோன்றுவது எனக் கூறுவர். அவர்களுடைய கொள்கை விவர்த்த வாதம் எனப்படும். இக் கொள்கைகள் அனைத்தையும் மறுத்துக் கூறுவர் சித்தாந்திகள். சித்தாந்திகள் எடுத்துக்கூறும் கொள்கைகள் விருத்தி வாதம், பரிணும வாதம் என இருவகைப்படுமாம். அவற்றை உதாரணங்களுடன் விளக்கியுள்ளனர். ஆடை, கூடாரம் ஆதல் போன்றது விருத்திவாதம் எனப்படும். அதனைச் சூக்கும பரிணுமம் என்றும் கூறுவர். இந்த முறையில் பரிக்கிரக சத்தியின் விருத்தியே சுத்தமாயை எனப்படும் குடிலை என்பர். பரிணும வாதம் இருவகைப்படுமாம். பரிணுமம் என்பது ஒரு பொருள் மற்றொரு பொருளாதலாம். அது தூலம், சூக்குமம் என இருவகைப்படுமாம். ஆடை கூடாரமாதலே சூக்கும பரிணுமம். இதனை விருத்தி என்றும் கூறுவர். தூலபரிணுமம் இருவகைப்படுமாம். அவையாவன : முற்றும் பரிணுமம், ஏகதேச பரிணுமம் என்பனவாம். உதாரணமாகப் பால் தயிராக மாறுதல் முற்றும் பரிணுமமாம். நெய்யில் புழு உண்டாதல் ஏகதேச பரிணுமமாம். சூக்கும பரிணுமம் சுத்தமாயைக்குரியது; தூலத்தின் ஏகதேச பரிணுமம் என்பது அசுத்தமாயைக் குரியது. எனவே, முதற் காரணங்கள் சுத்தம் — அசுத்தம் — பிரகிருதி என்னும் மூவித மாயைகளாகும் எனத் தெரிதல் கூடும். இவையெல்லாம் தத்தம் காரியங்களைச் சிவசத்தியினுலேயே தோற்றுவிக்கப்படுவதாம் என்ற அடிப்படை உண்மை கவனிக்கற்பாலது.

சித்தாந்திகள் ஏற்றுக்கொண்டுள்ள சற்காரிய வாதத்தை இனி விளக்குவோமாக. சற்காரிய வாதத்தில் காரணம் (Cause), காரியம் (effect) ஆகிய இரண்டும் நித்தமே என்பர்; அவை இரண்டிற்குமுள்ள தொடர்பு, சூக்குமத்திற்கும் தூலத்திற்கும் உள்ள தொடர்பைப்போன்றதேயாம். சற்காரிய வாதத்தின் தத்துவம் என்னவென்றால், ஒரு பொருளிலிருந்து அதற்கு மாறுபட்ட பிறிதொன்று தோன்றாது என்பதாம். உதாரணமாகக் கூறுவோமாகில், நெல்லிலிருந்து கமுகமரம் தோன்ற முடியாது. இவ்வாறு, காரணரூபமாயிருக்கும்போது சூக்குமமாயிருந்து, பின்பு காரிய ரூபமாகித் தூலமாய் வெளிப்படும் என்பதாம். எனவே, சூக்குமமாகிய மாயையினின்று தூலமாகிய கலை முதலிய தத்துவங்களும், அவற்றினும் தூலமாகிய மூலப்பகுதியும், அதனினும் தூலமாகிய குண தத்துவம் முதலியனவும் தோன்றுகின்றன என்பர். இவ்விதமாகவே காரியப் பிரபஞ்சமெல்லாம் தோன்றுமாம். பின்னர் அவயவப் பகுப்புடையனவாய் வளர்ந்தும் தேய்ந்தும் பரிணமித்து வருமாம். இவ்வாறு அபேதமாகவும், பேதாபேதமாகவும் விளங்கும் காரியங்களை இறைவன் மாயையிலிருந்து தோற்றுவித்து அதிட்டித்து நிற்பன். இச் செயல் இறைவனின் அருள்பெற்ற அநந்தர், சீகண்டர் ஆகியோரின் வாயிலாகவும் நடத்தப்படும் என்றும் கூறுவர். இக் கருத்தினையே 'மேவி' என்ற சொல் உணர்த்தி நிற்பதாம்.

விஞ்ஞானகலர் எனப்படும் சுத்தமாயையின் உயிர்களிடத்தே கன்மம் இல்லை என்பர்; பிரளயாகலர் எனப்படும் அசுத்தமாயையின் உயிர்களிடத்தேயும், சகலர் எனப்படும் பிரகிருதிமாயையின் உயிர்களிடத்தேயும் கன்ம மலம் உண்டாம். இவ்வாறு முன்பு குறிப்பிட்டதுபோல், அபேதமாகவும், பேதாபேதமாகவும் விளங்கும் காரியங்களை அநந்தர், சீகண்டர் முதலியோர் வாயிலாக, முதற்காரணமான மாயையினின்றும் இறைவன் தோற்றுவிப்பான் என்ற உண்மை நன்கு விளங்குவதாகும். கன்மவினைக்கேற்ப இவ்விருமாயைகளின் (அசுத்தமாயை, பிரகிருதிமாயை) உயிர்களுக்குத் தனு, கரண, புவன, போகங்கள் அமைத்துத் தரப்படுகின்றனவாம். இவ்வாறு மற்ற மலங்களோடு (ஆணவம், மாயை) கன்மமும் கலந்திருப்பதனாலே, விருப்பு வெறுப்பு, இன்ப துன்பம், குறைவு நிறைவு, ஏற்றம் தாழ்வு ஆகிய நிலைமைகள் உயிர்களின் வாழ்வில் ஏற்படுகின்றனவாம். அதனால்தான், 'கொடுவினைகொள்' என்று கன்மத்தின் தன்மை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு கன்மம் நீக்குண்டு, மயக்கம் ஒழிந்து சவிகற்க உணர்வு நீங்கிய பின்பே உயிர்கள் பேரறிவு எய்துகின்றனவாம். இக் கருத்தினையே 'பீடுபெற நிறுவி' என்ற சொற்றொடர்குறிப்பதாகும்.

நிற்க, மகாசங்கார காலத்திலேயும், இறைவன் முன்னே தோற்றுவித்த முறைப்படியே அவ்வக்காரியங்களையும், அவ்வவற்றின் காரண எல்லைகளிலே ஒடுங்கச் செய்வன்; முடிவாகப் பரிக்கிரகச் சத்தியைச் சிற்சத்தியில் ஒடுக்குவன். அவ்வாறு சிற்சத்தியைத் தன்னுள் ஒடுக்கி ஏகனாய் விளங்குபவன் இறைவனே என்பர். இவ்வாறு சங்கோசத் தொழிலும் இறைவனின் கருணையாலேயே நடைபெறுகிறது என்ற கருத்தினை 'அவை ஒடுக்கும்' என்ற என்ற சொற்றொடர் குறிக்குமாம். இங்ஙனம் யாவற்றையும் தோற்றியும், காப்பாற்றியும், மறைத்தும் உயிர்களின் நலனுக்காகவே தொழில்புரியும் இறைவனின் திருமேனியை இருவிதமாகக் குறிப்பிடுவர். யாவற்றையும் ஒடுக்கி நிற்கும் நிலையில் நிட்களத் திருமேனி என்றும், அவற்றை எல்லாம் தோற்றுவித்து நிற்கும் நிலையில் சகளத்திருமேனி என்றும் கூறுவர். இவ்வாறு நிட்களமும் சகளமுமாக நிற்றலே இறைவனுடைய இயல்பு என்பதைப் 'பெற்றி ஆம்' என்ற சொற்றொடர் குறிப்பதாகும். தன்னைத்தானே விளக்கிக்கொள்ளும் தன்மையுடைய இறைவன், உயிர்களையும் விளக்கமுறச் செய்து உதவுகிறான் என்ற கருத்தினைப் 'பிறங்கிய' என்ற சொல் குறிப்பதாகும்.

இதுகாறும் எடுத்துக்கூறிய விளக்கங்களிலிருந்து இறையருளானது உயிர்களின் நன்மைக்காகவே எவ்வெவ்விதங்களில் செயல்பட்டு உயிர்களைச் செந்நெறியில் செலுத்துகிறதென்ற உண்மையை நன்கு உணரமுடியும். இவ்வருட்சத்தியினை சிவ-சத்தி என்று கூறுவர் சித்தாந்திகள். இக் கருத்தில் அடங்கியிருக்கும் தத்துவம் எவ்வளவு சிறப்பானது என்ற உண்மை, ஆழமாகச் சிந்திப்போர்க்கே விளங்குவதாகும். சுருங்கக்கூறின், பிரபஞ்சத்திலுள்ள பொருள்கள் அனைத்தையும் இயக்கும் முதற்பொருள் சிவம்; இதனை நாம் உணர்ந்துகொள்வதற்கு உறுதுணையாய் இருப்பது சத்தி. அதனால்தான் சிவமும் சத்தியும் இரண்டல்ல என்ற உண்மையும் வலியுறுத்தப்பட்டுள்ளது. சிவ-சத்தி தொழில் புரியும் தன்மைகள் முன்பே விளக்கிக் கூறப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து அதன் பொதுநலத் தன்மையும் நன்கு விளங்குவதாகும். ஏனென்றால், இறைவனிடம் நம்பிக்கைக் கொண்டவர்களுக்குக் கருணை புரிவதில் சிறப்பில்லை; இறைவனிடம் நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் கருணை செலுத்தப்படும்பொழுதுதான் இறைவனின் பெருமை விளங்குவதாகும். இன்னும் விளக்கமாகக் கூறுவோமாகில், இறைவனைப் பற்றிச் சிந்திப்பவனைவிட, இறைவனை நிந்திப்பவன் இறைவனுக்கு அருகில் இருக்கிறான் என்பதாம்; அவனும் இறையருளால் பாதுகாக்கப்படுகிறான் என்ற சீரிய கருத்தினையே சிவ-சத்தி மகிமை நமக்கு உணர்த்துகிறதாம்.

மேலும் இறைவன் அருளுடையவன் என்று கூறுவதனுல், இறைவனிடத்தில் அன்பில்லை என்று பொருள்கொள்ளலாகாது. அன்போ எல்லைக்குட்பட்டது; அருளோ எல்லைக்குட்படாதது. எனினும் இவ்விரண்டு தன்மைகளும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல. ஒன்றுக்கொன்று துணையாயிருந்து இணைபிரியாமல் செயல்படுவதாம். இக் கருத்தினைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார் திருவள்ளுவர்:

'அன்பின் வழியது உயிர்நிலை அஃதில்லார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.' (80)

அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்பெற்ற உடம்பாகுமாம்; எனவே அன்பு இல்லாதவர் உயிரற்றவர் என்பதே பொருளாகும்; அதனுல்தான், அன்பில்லாதவர்களுடைய உடம்பை, எலும்பைத்தோல் போர்த்த வெற்றுடம்பு என்று இகழ்ந்து கூறப்பட்டுள்ளதும் கவனிக்கற்பாலது. மானிட வாழ்வுக்கே அன்பு இவ்வளவு அவசியமானதென்றுல், இறைவனிடத்தில் அன்பு குடிகொள்ள வேண்டியது எவ்வளவு இன்றியமையாததென்று சொல்லாமலே விளங்கும். அவ்வித ஐயத்திற்குச் சிறிதும் இடமளிக்காமல் இறைவனிடத்தில் அருளைப்போலவே அன்பும் நிச்சயமாக உண்டு என்னும் பேருண்மையைச் சுட்டிக்காட்டவே 'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்' என்று அறிவுறுத்தியுள்ளார் திருமூலர்.

10. பண்டைத் தமிழர் சமய வாழ்க்கை

பெரியோர்களால் போற்றிப் பாதுகாத்து வளர்க்கப்பட்ட மரபுகளை மதித்து வாழ்க்கையை வளமாக அமைத்துக்கொள்வதில் மனிதனுக்கு நிகர் மனிதனே. தன்னுடைய வாழ்க்கை நல்ல முறையில் அமைந்து, மற்றவர்களுக்கும் பயன்படும் அளவுக்கு வாழ்வதே வாழ்க்கையின் புகழும் பெருமையுமாகும். இவ் வுண்மையை மிகவும் தெளிவாகச் சுட்டிக்காட்டி அறிவுறுத்தி யுள்ளார் திருவள்ளுவர்:

'தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.' - (236)

இவ்வாறு புகழுடன் வாழ்வதே மனித வாழ்க்கையின் தலைசிறந்த பண்பாகுமாம். அதற்கு உறுதுணையாக அமைந்துள்ளது மனித னின் சிந்தனையே; மனிதன் என்றாலே தானாகச் சிந்திப்பவன் என்று பொருளாகுமாம். செம்மையான சிந்தனையைக்கொண்டு தான் தன்னுடைய வாழ்வை உயர்த்துவதோடல்லாமல் மற்ற வர்களுக்கும் வழிகாட்டியாக அமைந்து சேவை செய்ய முடியுமாம். இவ் வுண்மையை ஓர் உதாரணத்தின்மூலம் விளக்கிக் கூறுவது பயனுடையதாகும். கப்பலைச் செலுத்திச் செல்லும் தலைவன், தான் செல்ல விரும்பும் இடத்திற்குப் பத்திரமாகப் போய்ச்சேர வேண்டுமென்றால், நல்ல திட்டங்களை அமைத்துக்கொண்டு அவற் றின் பிரகாரம் கப்பலை நடத்திச்செல்ல வேண்டியுள்ளது; அவ் வாறில்லையேல் திசை தெரியாது நடுக்கடலில் கப்பல் நின்று தவித்து மூழ்கிப்போவதுமுண்டு. அதைப்போன்றதே மானிட வாழ்க்கையுமாம். திட்டமில்லாத வாழ்வும், கொள்கையற்ற மனிதரும் எவ்விதப் பயனையும்பெற இயலாதாம். அதனால்தான், தமிழ்ப் புலவர்கள் மனித வாழ்க்கையையே கடலுக்கு ஒப்பிட்ட னர். எவ்விதம் கடல் அலைகள் ஒன்றையொன்று மோதிக்கொண் டும், சில சமயங்களில் சூறாவளிக்காற்று ஏற்படுவதால் கொந்த ளிப்பு அதிகரிப்பதைப்போலவே, மனித வாழ்க்கையும் இன்ப-

துன்பங்களுக்கிடையே சிக்குண்டு சிதறிப்போவதும் உண்டு; அதனைத் தவிர்த்து, அவ்விதச் சோதனைகளைப் பொறுத்துக்கொண்டு உறுதியோடு நல்வாழ்வையே நாடிச் செல்லவேண்டுமென்றால், மனிதன் தன்னுடைய சிந்தனையை நிச்சயமாகப் பயன்படுத்திக் காலத்தின் அருமையையும், வாழ்வின் பெருமையையும் உணர்ந்து நம் முன்னோர்களாகிய சான்றோர்கள் காட்டியுள்ள நல்வழியில் வாழ்க்கையை நடத்திச்செல்ல முற்படவேண்டுமாம்.

அன்பின் அடிப்படையில் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதே மனித வாழ்வை நல்வாழ்வாக அமைப்பதாகும். அதுவே வாழ்வின் சிறப்புமாகும். இவ் வுண்மையைத் திருவள்ளுவர் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார்:

'அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.' (74)

மனிதவாழ்வின் அடிப்படைத்தளமாக அன்பு அமையவேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளதன் முக்கியத்துவம் என்னவென்றால், ஒருவருக்கு மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கும் பயன் பயன்படக்கூடியதாம். அதன் நற்பயன் எல்லோரிடத்திலும் நட்பு ஏற்படுத்திச் சிறப்பினையும் உண்டாக்குமாம். ஆகவே, உலகத்தில் இன்புற்று வாழ்கின்றவர்கள் அடையும் சிறப்பு, அன்புடையவர்களாகி இணைந்து வாழும் வாழ்க்கையின் பயனே என்ற கருத்தினை மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார் திருவள்ளுவர்:

'அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு.' (75)

இவ்வாறு மனித வாழ்வு நல்வாழ்வாக மாறி, ஆணும் பெண்ணும் இணைந்து இல்லறத்தில் வாழ்வதையே போற்றினர் நம் பண்டைத் தமிழ்மக்கள் என்ற உண்மை திருக்குறளிலும், பரி. பாடலிலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளனவாம். அன்பின் வழியே வாழ்ந்து தலைவனும் தலைவியும் இல்லறத்தின் பெருமையை மற்றவர்களுக்கும் வழிகாட்டியாக நிலைநாட்டுகின்றனர் என்பன போன்ற கருத்துகளைத் திருக்கோவையாரில் மாணிக்கவாசகர் விளக்கிக் கூறியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கனவாம். இவ்வாறு அன்பின் அடிப்படையில் அமைந்த இல்லறம் நல்லறமாகப் பூத்துக் குலுங்கும்போது மக்கட்பேறு உண்டாகிறது. அதன் பெருமையை அழகாக எடுத்துக் கூறியுள்ளார் திருவள்ளுவர்:

'மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.' (60)

இல்லறம் அன்பை எவ்வாறு அடிப்படையாகக் கொண்டுள்ளதோ அதைப்போன்றே அறத்தையும் துணையாகக் கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தகும். இவ்வாறு அன்பும் அறமும் ஒன்றிணைவதே இல்லறம் என்பர்; அதற்கு மங்கலம் ஏற்படுவது மனைவியின் நற்பண்புகளாம். அத்தகைய இல்லறத்தில் நன்மக்களைப் பெறுதல், நல்ல அணிகலன்களாம். இல்லறத்தில் மக்களைத்தான் பெறுவர்; அதனை நன்மக்கள் என்று குறிப்பிட்டுக் கூறியுள்ளதும் கவனிக்கற்பாலது. பெற்ற மக்களை வளர்த்து வீட்டிற்கு மட்டும் நல்லவர்களாக வைத்துக்கொள்ளாமல், நாட்டிற்கே அவர்கள் பயன்படுமாறு பேணி வளர்க்கப்படவேண்டுமாம். ஆகவே, குழந்தைகள் நல்லவர்களாக வளர்ந்து நாட்டிற்குத் துணைபுரிய வல்லவர்களாகவும் விளங்கவேண்டுமென்றால், கல்விச் செல்வம் அவர்களுக்கு இன்றியமையாதது என்பது சொல்லாமலே விளங்கும். கல்வியின் தலையாயக் குறிக்கோள் அறிவு வளர்ச்சியே; மானிட வாழ்வுபெற்ற ஒவ்வொருவரும் நலமடைவதற்கும் நன்மை புரிவதற்கும் இயலுவதே அறிவின் பயனால்தான். அதனால்தான், அறிஞர்களை எல்லோரும் போற்றுகின்றனர். இக் கருத்து புறநானூற்றில் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.[44] மனித வாழ்வின் நற்கதிக்கு கல்வியின் அவசியத்தையும் அதன் நற்பயனையும் உணர்த்துவதோடு மட்டுமல்லாமல், கல்வியின் குறிக்கோள் எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதனையும் நன்கு உணர்ந்திருந்தனர் நம் பண்டைத் தமிழ்மக்கள். இவ் வுண்மையை எடுத்துக்காட்டுவதற்குச் சாலச் சிறந்த உதாரணமாக நக்கீரருடைய கூற்றைச் சிறிது விளக்கிக் கூறுதல் பொருத்தமுடையதாகும்.[45] 'பிறப்பு இறப்பு, இன்பம் துன்பம், நரை திரை, ஆகிய யாவும் எல்லோரிடத்திலும் இயற்கையாகவே ஏற்படுவனவாம்; ஆட்சி செலுத்தும் அரசனாகிய பெருங்குடித் தலைவனும், வேளாண்மை செய்து வாழ்க்கை நடத்தும் சிறுகுடித் தலைவனும்

[44] புறநானூறு 183:

'ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்'.

[45] புறநானூறு 189:

'தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமையோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பவை நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பே மெனிளே தப்புந பலவே.'

ஆகிய இருவரும் உண்பது கையளவேயாம்; உடுப்பது உடம்பளவே. ஆதலால், செல்வத்தைப் பெறுவதின் பயனுவது பிறருக்கு ஈதலே; தனக்காக வாழ்வது தவருகும்.' மூன்றும் சங்ககாலத்துப் புலவர்களில் தலைமைப் புலவராய் விற்றிருந்த நக்கீரரின் ஆழமான கருத்துகளை வாசகர்கள் ஊன்றிக் கவனிப்பார்களாக. ஏனென்ருல், அவற்றிலிருந்து நாம் உணர்ந்துகொள்ள வேண்டிய உண்மைகள் பலவாகும். சிறப்பாக எடுத்துச்சொல்ல வேண்டுமென்ருல், நம் பண்டைத் தமிழ்மக்கள், மனித வாழ்வுக்கு இன்றியமையாத தேவைகள் அனைத்தையும் பெற்றிருந்தனர். இருந்தபோதிலும் வளமான வாழ்வு பெறுவதோடு மட்டுமல்லாமல், வல்லவர்களாக விளங்குவதோடு அமையாமல், அவர்கள் நல்லவர்களாகவும் வாழவேண்டுமென்னும் உண்மையை வலியுறுத்திக் கூறியுள்ளனர். அதனுல்தான், வாழ்க்கையையே, அறத்தின் அடிப்படையில் அமைத்தனர். அறத்தை அடிப்படையாகக் கொள்ளாத எந்தச் செயலையும் அவர்கள் புறக்கணித்தனர். உதாரணமாகத் திருவள்ளுவர், அறத்தை அடிப்படையாகக் கொண்டே திருக்குறளை அமைத்துக் கொடுத்துள்ளார். அறத்திற்கு (Virtue) அடுத்தபடியாகத்தான் பொருளை (Wealth) வைத்து, அதற்கு அடுத்தபடியாகத்தான் இன்பத்தை (happiness) திருவள்ளுவர் ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதும் கவனிக்கற்பாலது. மனித வாழ்வுக்குப் பொருளும் இன்பமும் இன்றியமையாதவையாயினும், அவை இரண்டும் அறத்தின் அடிப்படையில் இயங்கும்போதுதான், வாழ்வு நல்வாழ்வாக மலருகிறது; அவ்வாறு நல்வாழ்வாக மலர்ந்த பின்புதான் பெருவாழ்வாகிய பேரின்பத்தையும் பெறமுடியும் என்பதைச் சொல்லாமலேயே சொல்லியுள்ளார் திருவள்ளுவர். அதனுல்தான், 'முப்பாலில் நாற்பால் மொழிந்தோன்' என்று திருவள்ளுவர் போற்றிப் புகழ்ந்து உரைக்கப்படுகிருர்.

அறவாழ்வும், சமயவாழ்வும் இருவகைப்படுவன அல்லவென்பதே பண்டைத் தமிழ்மக்களின் கொள்கையாம் என்பதற்குச் சங்க இலக்கியங்கள் சான்று தருகின்றன. பண்டைக்கால மரபுகள் அன்ருட வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதையே திருவள்ளுவரும் எடுத்துக் கூறியுள்ளார். இல்லறத்திற்கு மட்டுமல்லாமல், துறவறத்திற்கும் அறமே அடிப்படை என்பதும் சொல்லாமலே விளங்கும். அறநெறியில் அமைந்து, இல்லறவாழ்வு நடத்துபவன், எல்லாப் பேறுகளையும் பெறமுடியும் என்பதே திருவள்ளுவரின் துணிபாகும். அதனுல்தான், இவ்வுலகில் மனிதன் நல்வாழ்வுபெற்று நலமடைவதற்குத் தேவையான எல்லாக் கருத்துகளையும் சீரிய முறையில் எடுத்துக் கூறி

யுள்ளார்; சிந்தனைக்கும் பகுத்தறிவுக்கும் அப்பாற்பட்ட கருத்துகளைப் பற்றி யாதொன்றும் கூறாமல் விட்டுவிட்டார். ஏனென்றால், நாம் பெற்ற மனித வாழ்வை நல்ல முறையில் அறத்தோடு அமைத்து வாழ்ந்தால், அதன் விளைவாகப் பெறவேண்டிய நன்மைகள் யாவும் தவறாமல் வந்துசேரும்; எனவே, அவற்றைப் பற்றி வீண் சர்ச்சைகள் புரிந்து, பெற்ற வாழ்வைப் பாழ்படுத்தக் கூடாது என்பதே அதன் உள்நோக்கமாகும். அவரவர்களுடைய தகுதிக்கேற்ப இல்லறம், துறவறம் ஆகிய நெறிகளில் பயணம் செய்தாலும், அவற்றின் முடிவு ஒன்றே. அதனைச் சமயவாழ்வு என்று குறிப்பிட்டால் பொருத்தமானதேயாகும். இவ் வுண்மையை ஓர் உதாரணத்தின்மூலமாக விளக்குதல் பயனுடையதாகும். நதிகள் பல இடங்களில் தோன்றிப் பலவாறு பயணம் செய்தாலும், அவை யாவும் முடிவில் சென்றடைவது ஒரே இடம் — கடல்; அதனைப்போன்றே மனித வாழ்வும் அமைந்துள்ளது. துறவறத்திற்கும் இடமளித்த திருவள்ளுவர், இல்லறத்திற்கு முதலிடம் அமைத்துக் கொடுத்துள்ளார் என்பதும் கவனிக்கற்பாலது:

> 'அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
> போஒய்ப் பெறுவது எவன்.' (46)

இல்லறம் நல்லறமாக அமைவது, அறத்தை அடிப்படையாக அமைத்துக் கொள்வதால்தான் என்பதும், அவ்வாறு அமையப் பெற்ற இல்லற வாழ்வே சிறந்ததாம்; எல்லாப் பேறுகளையும் பெற முடியுமாம். எனவே, அப் பேறுகளைப் பெறுவதற்கு வேறு எந்த விதமான நெறிகளையும் மனிதன் பின்பற்றிச் செல்லவேண்டிய அவசியமில்லை என்னும் பொதுக் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், திருவள்ளுவர் கூறியுள்ள கருத்துகள் இல்லறத்தின் சிறப்பினையே வலியுறுத்துகிறது. ஆனால், அதன் விளைவாகத் துறவறத்தின் பெருமையைச் சிறிதும் குறைத்துக் கூறவில்லை என்பதும் கவனிக்கற்பாலது. ஏனென்றால், தூய்மையான துறவறத்தையே பின்பற்றிப் பேரின்பப் பேறுகளைப் பெற்ற பெரியோர்களை, திருவள்ளுவர் புகழ்ந்து போற்றியுள்ளதும் குறிப்பிடத்தக்கதாம். எனினும், அந் நெறியில் சென்று வெற்றி பெறுபவர்கள் வெகு சிலராதலாலும், இல்லற நெறியில் வாழ்பவர்கள் அநேகராதலாலும், அதன் சிறப்பைத் திருவள்ளுவர் வலியுறுத்தியுள்ளார் என்று கூறுதலே பொருத்தமுடையதாகும்.

திருவள்ளுவர் இல்லறத்திற்கு முதலிடம் கொடுத்துள்ளதற்கு வேறு சில முக்கியக் காரணங்களும் உண்டாம். மனிதரிடம் நற் பண்புகள் அமையப்பெறுவதே, அவர்களுடைய குழந்தைப் பருவங்களில்தான்; அந் நிலையில் அவர்களைப் பேணி வளர்ப்ப

வர்கள், தாய் தந்தையர்களே. அவ்வாறு தாய் தந்தையாகவும், குழந்தையாகவும், மற்றும் சுற்றம் உறவினர் ஆகியோரும் கூடி மகிழ்வது இல்லறச் சூழ்நிலையில்தான். எனவே, அந்த இல்லறச் சூழ்நிலையில் எந்தெந்த நற்பண்புகள் என்னும் விதைகள், எவ்வெவ் விதமாகக் குழந்தைகளின் உள்ளங்களாகிய நிலங்களில் பயிரிடப் படுகிறதோ, அவற்றின் தன்மைக்கேற்பவே, அக் குழந்தைகள் வாலிபர்களாகவும் வல்லவர்களாகவும் திகழும்போது, அவர்களிட மிருந்து நற்குணங்கள், நற் செயல்கள் வெளியாகின்றனவாம். இன்னபிற முக்கியக் காரணங்களைக் கருத்திற்கொண்ட திருவள்ளு வர், இல்லறத்திற்கே முதலிடம் கொடுத்துள்ளார் என்பது என்னு டைய கருத்தாகும். பின்பற்றுவதற்குச் சிறந்த நெறி எது என்று தேடிக்கொண்டிருக்கும் இருபதாம் நூற்றுண்டு மக்களினத்திற்கே மிகவும் பயனளிக்கும் கருத்தும் இதுவே என்பதனையும் வாசகர்கள் கவனிப்பார்களாக.

இல்லறம் ஓர் ஒளிபொருந்திய விளக்கென்றும், அதன் வெளிச்சம், அங்கு வாழ்பவர்களுக்கு மட்டுமல்லாமல், மற்றும் பலருக்கும் பயனளிக்கிறதென்னும் உண்மையையும் திருவள்ளுவர் எடுத்துக் கூறியுள்ளதும் கவனிக்கற்பாலது:

> 'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
> நல்லாற்றின் நின்ற துணை.' (41)

இவ்வாறு இல்லறத்தின் பெருமையை எடுத்துக்கூறும் விதத்தி லேயே பண்டைத் தமிழ்மக்கள் ஏற்றுக்கொண்ட மற்றச் சில மரபு களையும் திருவள்ளுவர் குறிப்பிட்டுக் கூறியுள்ளார் என்பதும் கவனிக்கற்பாலது. அவற்றைச் சிறிது விளக்கிக் கூறுவதன் வாயிலாகத்தான் தமிழர்களின் சமயவாழ்க்கையையும் அவற்றின் பண்பினையும் ஓரளவு நாம் அறிந்துகொள்ள முடியும். உதாரண மாக ஓர் தனி மனிதனின் வாழ்க்கையை எடுத்துக்கொள்வோ மாகில் முதற் பருவம் குழந்தைப் பருவமாகும்; இரண்டாவது மாணவப் பருவமாகும்; மூன்றுவதுதான் இல்லற நெறியில் வாழ்வதற்குரிய பருவமாம். இல்லற இன்பங்களைப் பெறுவதுடன் அவர்கள் நின்றுவிடவில்லை. இல்லற இன்பத்தின் குறுகிய எல்லையை உணர்ந்த பின்பு எல்லையற்ற பேரின்பத்தைப் பெறு வதிலேயே நோக்கம் கொண்டிருந்தனர். எனினும், அப் பேரின்ப வாழ்வு பெறுவதற்கும் இல்லறநெறிதான் சிறந்தது என்ற நம் பிக்கையும் பெற்றிருந்தனர். எனவேதான், நான்காவது தருமம் என்று குறிப்பிடாமலேயே, மூன்றுவது தருமமாகிய இல்லற தருமத்தை வலியுறுத்தினர். இதற்கு மிக முக்கியமான காரணம் யாதெனில், அவ்வாறு தீவிர நோக்குடன் பேரின்ப வாழ்வைத்

தேடும் உத்தமர்களுக்கும் உதவி புரிவதற்கு இல்லற தருமம்தான் சிறந்தது என்ற கருத்தினையே திருவள்ளுவர் வலியுறுத்தியுள்ளார். திருக்குறளுக்கு விளக்கவுரை அளித்துள்ள பல சான்றோர்களுள் ஒருவராகிய பரிமேலழகரும் மேற்குறிப்பிட்ட கருத்தினையே ஆதரித்துள்ளார் என்பதும் கவனிக்கற்பாலது. இக் கருத்தினை வலியுறுத்தும் குறள்:

'துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.' (42)

இல்லற தருமத்தின் சிறப்புகளை எடுத்துக்கூறுவதே திருவள்ளுவரின் நோக்கம் என்ற கருத்து முன்பே கூறப்பட்டுள்ளது; அக் கருத்தினை வலியுறுத்துவதாகவே மேற்குறிப்பிட்ட குறளும் அமைந்துள்ளது என்பதும் நன்கு விளங்கும். ஏனென்றால், இல்லற தருமம் எல்லோரையும் பாதுகாத்துக் காப்பாற்றுகிறது என்ற உண்மையைத் தவிர, இவ் வுலகைவிட்டுச் சென்றோர்க்கும் — இறந்தோர்க்கும் — இரங்கல் போன்ற பொது நடவடிக்கைகள் நடத்தப்படுவதற்கும், அச் சான்றோர்களின் நல்ல பல தன்மைகளை எடுத்துச் சொல்லி அவற்றினை நிலைநாட்டுவதற்கும் உறுதுணையாக அமைவது இல்லறமே என்பதாம். இவற்றிலிருந்து நாம் ஊகித்துக்கொள்ளவேண்டிய கருத்து யாதெனில், பிறப்பு, இறப்பு ஆகிய இரு நிலைமைகளையும் இணைக்கும் பாலத்தைப் போன்றதே இல்லற தருமம் என்பதாம். இக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டதே பண்டைத் தமிழரின் சமய வாழ்வும் என்று கூறினால் அது மிகையாகாது. ஏனென்றால், முதன்முதலில் ஒருசிலருக்கே பயன்படும் முறையில்தான். இல்லறம் ஏற்பட்டு அமைகிறது. ஆனால், அதன் முடிவில் எல்லோருக்கும் பயன்படும் நிலைக்களமாக நிலைத்துவிடுகிறது இல்லறம். அவ்வித உயர்ந்த, உத்தமமான நிலையில்தான் இல்லற தருமமே சமய வாழ்வுக்கு அடிப்படையாக அமைந்துவிடுகிறதென்ற உண்மையும் புலனாகிறது. அவ்விதச் சமயக் கருத்துகளுக்குக் கருவூலமாக அமைந்து செயல்படும் அறநிலையமே கோயில் என்பர்.

'கோயில் இல்லா ஊர் பாழ்' என்பது பழமொழி; அதன் பொருளும் சொல்லாமலேயே விளங்குவதாகும். அறத்தின் அடிப்படையாக அமையும் இல்லற தருமத்திற்கு உண்மையும் உறுதியும் அளிப்பது வீடு; அதனைப் போன்றே இறைவனை அடிப்படையாகக் கொண்ட சமயக் கோட்பாடுகளுக்கு உருவமளிப்பது கோயில்; அதன் பொருள் இறைவன் உறையுமிடம் என்பர். இறைவன் நம் சிந்தனைக்கு அப்பாற்பட்டவன் உருவங்களுக்கெல்லாம் பொருளாய் விளங்குபவன் என்பனபோன்ற தத்து

வங்கள் முன்பே விளக்கப்பட்டன. அத்தகைய முதற்பொருளை, நம் சிந்தனைக்குப் பொருந்தும் முறையில் உருவம் அமைத்து, வணக்கம் செலுத்துவதும் மரபாகுமாம். எங்கும் எல்லாவற்றி லும் நிறைந்துள்ள இறைவன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட உருவத்துடன் அமைந்ததே கோயில் என்பதாம். கோயிலை அமைக்கும் முறைகளையும், உருவமாய் அமைந்த இறை வனுக்குச் செய்யப்படவேண்டிய கிரியைகளையும் வரையறுத்துக் கூறும் நூல்களை ஆகமம்[46] என்று குறிப்பிட்டனர்; அவையன்றிப் பேரின்பவாழ்வைப் பெற்று நற்கதியடைவதற்கும் அடிப்படையாக வுள்ள தத்துவங்களையும்' ஆதாரமாகக் கொண்டவை ஆகமங்கள் என்பதும் கவனிக்கற்பாலது. இறைவனிடத்தில் இடையறு அன்பும், தொண்டுபுரியும் மனப்பான்மையும் கொண்டவர்களே இறைபணியில் இயங்கி வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கன வாம். மக்கள் அனைவரும் விழாக்காலங்களிலும் மற்றும் பிற நன்னாளிலும் கோயிலில் ஒன்று கூடினர்; இறைவனுக்கு அன்பு செலுத்தும் வகையில் ஆடினர், பாடினர். இவ் வுண்மையைச் சைவசமயப் பெரியோர்களாகிய மாணிக்கவாசகர், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் போன்றோர்[47] பாடியுள்ள திருவாசகம், தேவாரம் முதலியவற்றிலிருந்து நாம் அறியவியலும். இப் பெரியோர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் அவர்கள் புரிந் துள்ள நற்சேவைகளும் மிகவும் விரிவாகவும் விளக்கமாகவும் பெரிய புராணம்[48] என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு

46 சைவசித்தாந்திகள் ஏற்றுக்கொண்டுள்ள ஆகமங்கள் இருபத் தெட்டாம்: காமிகம்; யோகம்; சிந்தியம்; காரணம்; ஆசிதம்; தீவிதம்; சூக்குமம்; சகஸ்ரகம்; அம்சுமான்; சுப்பிரபா; விசயம்; நிஸ்வாசம்; சுவாயம்பு; ஆக்னேயகம்; பத்திர; ரௌரவம்; மகுடம்; விமலம்; சந்திரஙாசம்; முகயுகபிம்பம்; உத்கிதம்; லலிதம்; சித்த; சந்தான; நரசிம்ம; பரமேஸ்வர; கிரான; பரம். (Kāmika; Yogaja; Cintya; Kārana; Ajita; Dīpta; Sūksma; Sāhasraka; Amsumān; Suprabha; Vijaya; Niśvāsa; Svāyambhu; Āgneyaka; Bhadra; Raurava; Mākuta; Vimala; Chandrahāsa; Mukhayugbimba; Udgita; Lalitha; Siddha; Santāna; Nārasimha; Parameśvara; Kirana and Para respectively).

47 மாணிக்கவாசகர்	—	கி. பி. 2ஆம் அல்லது 9ஆம் நூற்றாண்டு
திருஞானசம்பந்தர்	—	கி. பி. 6ஆம் நூற்றாண்டு
திருநாவுக்கரசர்	—	கி. பி. 6ஆம் நூற்றாண்டு
சுந்தரர்	—	கி. பி. 7ஆம் நூற்றாண்டு

48 பெரிய புராணம் என்னும் நூல் சேக்கிழார் என்பாரால் 12ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்றது.

பண்டைத் தமிழர்களின் வாழ்க்கையே சமய வாழ்வாகத் திகழ்ந்தது என்பதனையே நாம் காணமுடிகிறது. அதற்கு ஆதார மாக விளங்கியதே கோயில். அது இறைவன் உறையுமிடமாக மட்டுமல்லாமல், எல்லோரும் ஒற்றுமையுடன் கூடி இன்பத்தைப் பகிர்ந்துகொள்ளும் அறநிலையமாகவும் விளங்கியதாம். ஆகவே, இயலும், இசையும் அங்கே வளர்க்கப்பட்டன; பாடல்களும், ஆடல்களும், கவிதைகளும் கற்பனைத் திறனும் செழித்து வளர்ந்து தழைத்தோங்கின. அவை யாவும் இறைவனுக்குப் பயந்து, மக்க ளுக்கு நன்மை புரிவதையே வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு அன்று ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களால் ஆதரவும் பெற்றனவாம். அம் மன்னர்களின் முயற்சிகளாலேயே மாபெரும் கோயில்களும் கலைக்கூடங்களும், கல்விக்கூடங்களும் எழுந்தன என்பதும் பண்டைத் தமிழகத்தின் சரித்திரம் கூறும் சான்றுக ளாகும். ஓராயிரம் ஆண்டுகள் சென்ற பின்பும், இராசராச சோழனை நம் மனக்கண் முன்னால் எடுத்துக்காட்டும் முறையில் தஞ்சையிலுள்ள பெருஉடையார்கோவில் தலைநிமிர்ந்து நிற்கிற தென்ற உண்மை வாசகர்களின் கவனத்திற்குரியதாகும் என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விழைகிறேன். இறைவன் உருவமுமாய் அருவமுமாய் விளங்கும் இலிங்கமே அக் கோயிலில் அமைக்கப் பட்டுள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கோயில்களை அமைப்பதிலும், இறைவழிபாடு நடத்தப்படுவதிலும் ஆகமங்கள் எவ்வாறு உதவி புரிகின்றன என்பது மேலும் விவரித்துக் கூறப்பட்டுள்ளனவாம். விமரிசை யாகக் கொண்டாடப்படும் திருவிழாக் காரியங்களும், இறை வனின் தத்துவ மகிமையைப் பற்றிய கருத்துகளாயினும், அவை யாவும் ஆகமங்களிலே வரையறுத்துக் கூறப்பட்டுள்ளனவாம். அக் கருத்துகள் பொதுவாக எல்லா இந்து சமயங்களுக்கும், சிறப்பாகச் சைவசமயத்திற்கும் பொருந்துமாம். தற்போது கிடைக்கப்பெற்றுள்ள இருபத்தெட்டு ஆகமங்களைத் தவிர இரு நூற்றுக்கும் மேற்பட்ட ஆகம நூல்கள் இருந்தனவென்றும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. தமிழகத்திற்கே மட்டுமல்லாமல், இந்தியா முழுவதிலும் ஆங்காங்கே காணப்படும் மாபெரும் கோயில்களும், மடங்கள் யாவும் பன்னெடுங்காலமாக ஆகமங் களில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்கவே அமைக்கப்பெற்றுள்ளன என்பதும் கவனிக்கற்பாலது. சிறப்பாகத் தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய மண்டலங்களில், அம் மன்னர் களால் பண்டைக் காலத்தில் எழுப்பப்பெற்ற மாபெரும் கோயில் களும், பதினாறும் நூற்றாண்டில் எழுந்த சைவை வைணவ மடங் களும் ஆகமங்களின் கோட்பாடுகளை ஒட்டியே அமையப்பெற்றன

என்பதும் குறிப்பிடத்தக்கன. இவ்வளவு பெருமையும் சிறப்பும் ஒருங்கே அமைந்த ஆகமநூல்களைப்பற்றி மேலும் சில முக்கியக் கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.

காலஞ்சென்ற சபாரத்தின முதலியார் அவர்கள் ஆகமங்களின் அமைப்பும், அவற்றின் சிறப்பான கருத்துகளும் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை வேதங்களின் அமைப்புக்கும், அவற்றின் கருத்துகளுக்கும் ஒப்பிட்டுக் கூறி விளக்கம் தந்துள்ளார். இதன் மூலமாக ஆகமவேதங்கள் கூறும் உண்மைகள் வெவ்வேறல்ல என்பதும், அந் நூல்கள் இறைவன் அருளால் ஏற்படுத்தப்பட்டவை என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளன. உதரரணமாகக் கூறுவோமாகில், எவ்விதம் வேதங்கள் கரும காண்டத்தையும், ஞான காண்டத்தையும் பெற்றிருக்கின்றனவோ, அதைப்போன்றே ஆகமங்களும் இருபெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளனவாம். இவ்வாறு பொது ஒற்றுமைகள் காணப்பட்டபோதிலும், அவற்றினிடையே ஒருசில வேறுபாடுகளும் காணப்படுகின்றனவாம். உதாரணமாக வேதங்களில் கரும காண்டம் என்று குறிப்பிடும் பகுதிகளில் கூறப்பட்டுள்ள கருத்துகள் யாகங்களைச் செய்வதைப் பற்றியும், அவற்றிற்குரிய கோட்பாடுகளையுமே கொண்டுள்ளதாம். வேதங்களில் ஞானகாண்டம் என்று குறிப்பிடும் பகுதிகளில் பொதுவான தத்துவக் கருத்துகளே எடுத்துக் கூறப்பட்டுள்ளனவாம். அவற்றின் விளக்கங்கள் உபநிடதங்களில்தான் சொல்லப்பட்டுள்ளனவாம். மேலும், இறைவனின் தன்மையைப் பற்றியும், பிரபஞ்ச காரியங்களைப் பற்றியும் பொதுவாகவே உபநிடதங்களில் விளக்கப்பட்டுள்ளதாலும், அக் கருத்துகள் எல்லோராலும் எளிதில் அறிந்துகொள்ள முடியாததாலும் அதனை — மறை — இரகசியம் என்றும் கூறினர். இவ்வாறு வேதங்களின் ஞானகாண்டப் பகுதிக்கு வேதாந்தம் என்று பெயரிட்டழைத்து, வேதாந்தத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகளும், உபநிடதத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகளும் ஒற்றுமையுடையனவே என்றும் கூறினர். இருந்தபோதிலும், ஆகமங்களைப் பொறுத்தமட்டில் கரும காண்டம், ஞானகாண்டம் ஆகிய இரு பகுதிகளும் விளக்கமாகவும், ஒன்றுக்கொன்று இயல்பாகவே தொடர்புடையதாகவும் அமைந்துள்ளனவாம். குறிப்பாக, ஆகமத்தின் ஞானகாண்டத்திற்குச் சித்தாந்தம் என்றும் கூறுவர். இவ்வாறு இவ்விருபெரும் நூல்களுக்கிடையே காணப்படும் ஒற்றுமைகளே அதிகம் என்பதும், அவற்றில் காணப்படும் வேற்றுமைகள், காலத்தாலும், எழுத்தாளர்களின் மனநிலைகளாலும் ஏற்பட்டனவே என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

ஆகமங்களின் கருமகாண்டத்தில் சமயக் கோட்பாடுகள் விளக்கிக் கூறப்பட்டுள்ளனவாம். இல்லற தருமத்தில் இருந்து கொண்டே பேரின்பப் பெருவாழ்வுக்கு ஆயத்தப்படுத்திக்கொள் ளும் நெறிமுறைகள் விளக்கிக் கூறப்பட்டுள்ளனவாம். அக் கருத்துகளின் அடிப்படையில் மனிதன் பின்பற்றவேண்டிய நெறிகள் நான்கு வகையாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளனவாம். அவற்றைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று குறிப்பிடு வர். இந் நான்கு நெறிகளும் ஒன்றினேடொன்று இயல்பாகவே இணைந்துள்ளன என்பதும் அந் நெறிகளில் நிற்போர் எவ்வாறு தங்களை நடத்திக்கொள்ளவேண்டும் என்பதும் விரிவாக அடுத்த பகுதியில் விளக்கிக் கூறப்படும்.

மேலும், சமயக் கோட்பாடுகளேயன்றி, சமயச் சார்பில்லாத கோட்பாடுகள் பற்றியும் ஆகமங்களில் விளக்கிக் கூறப்பட்டுள்ளன வாம். அவ்வாறு எடுத்துக் கூறப்படும் கோட்பாடுகளைத் தந்திரம் (Tantra) என்றும் குறிப்பிட்டுக் கூறுவர். தந்திரங் கள் இவ் வுலகியலைப் பற்றியதே ஆகையால் அவற்றில் விரிவாக விளக்கப்படுவது சத்தியின் இயல்பினையே. சத்தியின் இயல்பை விளக்கும் முறையில் பெண்மையின் வனப்பும் வலிமையும், அவற்றைக் கட்டுப்படுத்தும் உத்திகள் முதலியவையும் எடுத்துக் கூறப்பட்டுள்ளனவாம். இவ்வாறு தெரிந்துகொள்ளும் உண்மைகள் யாவும் இறைவனின் அருளே என்ற உயர்ந்த நோக்கத்துடனேயே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு உலகியலை விளக்கிக் கூறும் தன்மையில் ஆகமங் களின் முக்கியத்துவம் நன்கு விளங்குவதாகும். உலகை ஆக்கு விக்கும் சத்தியின் இயல்பைப் பற்றியதாயினும், உலகை ஊக்கு விக்கும் இறைவனின் தன்மையைப் பற்றியதாயினும், விஞ்ஞான முறையிலே விளக்கம்பெற முடிவது ஆகமங்களிலேதான் என்று கூறினல் அது மிகையாகாது. அவ்வாறு உலகியலின் அடிப்படைத் தத்துவங்களை விளக்கிக்கூறும் முறையில் அத் தத்துவங்களை அதிட்டித்துச் செயல்படும் மந்திரங்களும் சுட்டிக்காட்டப்பட் டுள்ளன. மந்திரங்களில் மறைந்துள்ள சத்தி உயிர் வருக்கங்களை எவ்வாறு பாதித்துக் கட்டுப்படுத்துகின்றன என்பன போன்ற அரிய கருத்துகளை எடுத்துக்காட்டுபவை யந்திரம் எனப்படுமாம். இவ்வாறு மந்திரங்களில் மறைந்துள்ள சத்தி தத்துவங்களை விளக் கிக் கூறுவதற்குக் கையாளப்படும் விளக்கப்படமும் (diagram) அவற்றால் உணர்த்தப்படும் மறைப்பொருளும் (mystical truth) சாதாரணமாகத் தெரிந்துகொள்ள முடியாத சிக்குகள். அதனுல் தான், அவ்விதமான விளக்கப்படத்தைப் பார்த்துவிட்டுப் பரி

தாபமாக விழிக்கும் நிலையை, 'சிதம்பரச் சக்கரத்தைப் பேய் பார்த்தால் போல்' என்று இடித்துக் கூறப்பட்டுள்ளதும் ஆம்.

உலகியலின் தன்மையை விளக்கிக் கூறுவதன் நோக்கமே அவற்றிற்கு மேம்பட்ட தத்துவங்கள் உண்டென்பதும், அத் தத்துவங்களை அதிட்டித்து நிற்கும் உண்மைப் பொருளை உணர்ந்து கொள்வதே மானிட வாழ்க்கையின் பயன் என்பதும் ஆகமங் களின் அடிப்படைக் கொள்கையாம். அவ் வுண்மையை உணர்ந்தால் தான், வாழ்வில் உயர்வும், ஒழுக்கமும் ஏற்படுமாம். அதனுல் தான் வாழ்க்கையில் அனுசரிக்கவேண்டிய சடங்குகளும் (rites and ceremonies) அவற்றின் சமயப் பண்புகளும் வலியுறுத்தப் பட்டுள்ளனவாம். உதாரணமாக, உலகியலைப் பற்றி விளக்கிக் கூறும் ஆகமங்கள் முத்திரை (Stamp) முதலிய குறிப்புகளைக் கையாளுகின்றன. அம் முத்திரைகள், பக்குவமடைந்த ஆன் மாக்களுக்குத் தீக்கை (initiation) அளிப்பதில் பயனுடையன வாம். இவ்விதமான முக்கியச் செய்திகளைக் காரணம் என்னும் ஆகமம் மிகவும் விரிவாக விளக்கிக் கூறியுள்ளது என்பதை வாசகர்கள் கவனிப்பார்களாக. இவற்றிலிருந்து நாம் அறிந்து கொள்ளவேண்டிய ஓர் முக்கியச் செய்தியையும் சுட்டிக்காட்ட விழைகிறேன். உலகியலைப் பற்றி விளக்கிக் கூறும் ஆகமங் களுக்குத் 'தந்திரங்கள்' என்ற சிறப்புப் பெயர் உண்டென்பதை முன்பே குறிப்பிட்டேன். அவ்வாறு உலகியலைப் பற்றியே விளக் கிக் கூறுவதன் குறிக்கோள், மனிதன் உலக நிகழ்ச்சிகளுக்கு இரையாகிவிடக் கூடாது. அந் நிகழ்ச்சிகளுக்குக் காரணமான சக்தியின் தன்மையையும், அவற்றைக் கட்டுப்படுத்தும் தத்து வங்களையும், அத் தத்துவங்களுக்கெல்லாம் அடிப்படையாக விளங்கும் இறைவனையும் உணர்ந்து கொள்வதற்கேயாம். இவ்வாறு சமயச் சார்பற்ற உலகியல் (Seculor) நிலையிலிருந்து, சமயச் சார்புள்ள (Sacred) உயர்ந்த வாழ்வாகிய செந்நெறியில் நுழைவதற்கு மனிதனுக்குத் தேவையானது தீக்கையாம் (initi-ation). இது பற்றி அடுத்த பாகத்தில் விளக்கிக் கூறப்படும். இதுகாறும் எடுத்துக்கூறப்பட்ட எல்லா விளக்கங்களையும் ஒருங்கே சேர்த்து ஆய்வோமாஞல், மனிதனை மனிதனுக்குவதோடு அமை யாமல் மனிதனைத் தெய்வமாக்குவதற்கும் ஆகமம் துணைபுரிகிற தென்ற உண்மை நன்கு விளங்கும். இக் கருத்தினை வலியுறுத்திக் கூறியுள்ள சான்றோர்களில் குறிப்பிடத்தக்கவர் காலஞ்சென்ற நல்லசாமிப் பிள்ளை ஆவர். சைவப் பெருமக்களும் ஆகமமே மோட்ச சாதனம் என்று கூறுவர். அதற்கொவ்வ ஆகமத்தின் ஒவ்வொரு எழுத்திற்கும் பொருள் கூறுவர். ஆ — சிவஞானம்; க — மோட்ச சாதனம்; ம — மலநாசம்.

அறக் கட்டளைகளும் இறை வணக்கமும்

'அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்னும் பழமொழியின் தத்துவத்தை நன்கு உணர்ந்த நம் பண்டைத் தமிழ் மக்கள், வாழ்க்கையை எவ்விதமாவது வாழலாம் என்று கருதவேயில்லை; இவ்விதமாகத்தான் வாழவேண்டும், என்றும் அவ்வாறு குறிக்கோளுடன் அமையும் வாழ்வினையே சமயவாழ்வாகக் கருதினர். இவ்வாறு மனித வாழ்வு குறிக்கோளை ஏற்கும்பொழுது தான், அந்தக் குறிக்கோளை அடைவதற்கான முயற்சியில், அறக்கட்டளைகளைப் பயன்படுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. சாதாரணமாக மக்கள் வாழும் வாழ்க்கையில் ஒருசில அறக்கட்டளைகளும் இடம்பெறும்பொழுது, அச் சாதாரண வாழ்வே, சமய வாழ்வாக மலருகிறது. மனித முயற்சிகளுக்கப்பால் இறைவனின் திருவருளும் உண்டு; அதனைப் பெறுவதே மனித முயற்சிகளின் குறிக்கோளுமாம் என்றே நம் முன்னோர்கள் நம்பினர். எனவே, அவர்களுடைய முயற்சிகளனைத்தும், இறைவனை அடைவதற்காகச் செய்யப்படும் நற்காரியங்களாகவே கருதப்பட்டன. அவையே நாளடைவில் மரபுகளாக அமைந்து விட்டன. உதாரணமாகக் கூறுவோனுகில், இறைவனுக்கு வணக்கம் செலுத்துதல் என்பதில் இரு முக்கியக் கருத்துகள் அமைந்துள்ளன. முதலாவது மனத்தைத் தூய்மைப்படுத்திக்கொள்ளல், இரண்டாவது மலர்களை இறைவனடியில் சமர்ப்பித்தல். இன்றைக்கும் நம் தமிழகத்தில் உள்ள கோயில்களில் அன்றாடம் நடைபெறும் பூசை முதலியவற்றில் மலர்களுக்காகச் செலவிடப்படும் செல்வம் வேறு எந்த நாட்டுக் கோயில்களிலும் செலவிடப்படுவதில்லை என்பதை வாசகர்கள் கவனிப்பார்களாக! மலர்கொண்டு இறை வணக்கம் செலுத்துதல் நம் பண்டைத்தமிழ் மரபு. அவற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய தத்துவம் ஒன்றே. சாதாரண வாழ்க்கையுடன் கடமை உணர்வு இணையும்பொழுது அது சமயவாழ்வாக மலருகிறது. ஏனென்றால், சமயவாழ்வென்பது குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டது. இறைவனே அக் குறிக்கோளாகுமாம்.

கடமை உணர்வும், அதனோடு அறக்கட்டளைகளின் தொடர்பும் என்பதைப் பற்றிச் சிறிது விளக்கிக் கூறல் பயனுடையதாகும். 'அறக்கட்டளைகளின் தன்மைகளையும், வாழ்க்கைச் சூழ்நிலைகளில் எவ்வாறு அவற்றைச் செயல்படுத்த வேண்டுமென்பதைப் பற்றியும் சிறப்பாக விளக்கிக் கூறுவதே தருமசாத்திரங்களாகும். அச் சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளுக்கு விளக்கம் தரும் வகையில்தான் இதிகாசங்களும், புராணங்களும்

எழுதப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கனவாம். மனு எழுதிய தருமசாத்திரமும், வால்மீகி எழுதிய இராமாயணமும், வியாசர் எழுதிய மகாபாரதமும் இவைபோல்வனவும் இந்து சமயங்களுக்குப் பொதுவாகப் பயன்படுவனவாம். சிறப்பாகச் சைவசமயத்தைப் பொறுத்தமட்டில் அறக்கட்டளைகளை விளக்கிக் கூறி, அவற்றின் அவசியத்தை அறிவுறுத்திய நூல்கள் பலவாம்.[49] அவற்றில் குறிப்பிடத்தக்கவை. ஏலாதி, ஆசாரக்

49 சங்க நூல்களுள் மேற்கணக்கு நூல்கள் எனவும், கீழ்க்கணக்கு நூல்களெனவும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்துக் கூறப்பட்ட நூல்களைப் பற்றித் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திர உரையிற் கூறப்பட்டுள்ளது. கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டாம். அவையாவன: நாலடியார், நான்மணிக் கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்ச மூலம், கைந்நிலை, முதுமொழிக் காஞ்சி, ஏலாதி என்பனவாம். இப் பதினெட்டு நூல்களையும் குறிப்பிட்டுக் கூறும் செய்யுளும் வாசகர்கள் கவனிக்கற்பாலது:

''நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொற் காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு''.

பதினெண் கீழ்க் கணக்கு வரிசையில் அமையப் பெற்றுள்ள நூல்களனைத்தைப் பற்றியும் விவரித்துக் கூறவோ, அவற்றினை இயற்றிய சங்க காலப் புலவர் பெருமக்களைப் பற்றி விளக்கிக் கூறவோ நான் முற்படவில்லை. எனினும் நாம் அறிந்துகொள்ள முற்படும் அறக்கட்டளைகளைப் பற்றி அந் நூல்களில் எந்த அளவுக்கு எடுத்துக் கூறப்பட்டும், விளக்கங்கள் விரித்துரைக்கப்பட்டுமிருக்கின்றன என்பதைப் பற்றியே சுருக்கமாகவும் தேவைப்பட்ட அளவுக்குப் பொருத்தமாகவும் உள்ள குறிப்புகளை மட்டும் வாசகர்களின் முன்னிலையில் சமர்ப்பிக்க விழைகிறேன். மற்றொரு உண்மையையும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். சங்க கால இலக்கியங்களில் சைவசமயக் கருத்துகள் மட்டுமல்லாமல் வைணவ சமயக் கருத்துகளும், மற்றும் புறச்சமயக் கருத்துகளும் பல்வேறு இடங்களில் மிளிர்கின்றன. எனினும் எல்லாச் சமயங்களுக்கும் அறவாழ்வே அடிப்படையாக அமைந்திருந்ததென்பது சொல்லாமலே விளங்குவதாகும். அதிலும் சைவசமயத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது அறமும் அன்புமே; அவற்றிற்கு முதலிடம் தருவது இல்லற தருமமே என்பவற்றை முன்பே குறிப்பிட்டோம். எனவே சைவசமயக் கருத்துகளைப் பற்றியும், அவற்றை அநுட்டிப்பதற்குத் தேவையான அறக்கட்டளைகளையுமே, மேற் குறிப்பிட்ட நூல்கள் சிலவற்றிலிருந்து எடுத்துக்கூற முற்படுகிறேன்.

பூதஞ்சேந்தனர் இயற்றியருளிய இனியவை நாற்பதில் முதல் வெண்பாவாக அமைந்துள்ளது கடவுள் வாழ்த்து:

'கண்மூன்று உடையான்தாள் சேர்தல் கடிதினிதே
தொன்மாண் துழாய்மாலை யானைத் தொழலினிதே
முந்துறப் பேணி முகநான் குடையானைச்
சென்றமர்ந் தேத்தல் இனிது,'

இச் செய்யுளில் முதன் முதலில் சிவபெருமானைத் துதித்தும் பின்பு திருமாலையும் நான்முகனையும் (பிரமனை) துதித்தும், கடவுள் வாழ்த்துச் சொல்லப்பட்டுள்ளது வாசகர்கள் கவனித்தற்பாலது.

கோவை, அறப்பளீசுரர் சதகம், திரிகடுகம், ஒழிவிலொடுக்கம், வெற்றிவேற்கை, நீதிநெறி விளக்கம், இனியவை நாற்பது, இன்னு நாற்பது, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, நன்னெறி, வாக்குண்டாம் முதலியனவாம். மனித வாழ்வு நல்வாழ்வாக அமைந்து நற்கதி பெறுவதற்கு மனிதன்

கபிலர் இயற்றியருளிய இன்னு நாற்பதில் முதல் வெண்பாவாக அமைந்துள்ளதும் கடவுள் வாழ்த்தே. அதில் முதல் வரியாகக் கூறப்பட்டுள்ளதில் குறிப்பிடப்பட்டுள்ளதும் சிவபெருமானின் துதியே என்பதும் கவனிக்கற்பாலது.

'முக்கட் பகவன் அடிதொழா தார்க்கின்னு
பொற்பனை வெள்ளையை யுள்ளாது ஒழுகின்னு
சக்கரத்தானை மறப்பின்னு ஆங்கின்னு
சத்தியான் தாள்தொழா தார்க்கு'.

காரியாசான் இயற்றியருளிய சிறு பஞ்சமூலத்தில் முதல் வெண்பாவாக அமைந்துள்ள கடவுள் வாழ்த்தில் சைவக் கருத்துகளும் சிவபெருமான் துதியும் குறிப்பிடப்பட்டுள்ளது வாசகர்கள் கவனிப்பார்களாக.

'முழுதுணர்ந்து மூன்றெழித்து மூவாதான் பாதம்
பழுதின்றி ஆற்றப் பணிந்து — முழுதேத்தி
மண்பாய ஞாலத்து மாந்தர்க்கு உறுதியா
வெண்பா உரைப்பன் சில.'

பெருவாயின் முள்ளியார் இயற்றியருளிய ஆசாரக் கோவையில் அறவாழ்விற்குத் தேவையான எண்வகை நற்பண்புகள் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன:

'நன்றி யறிதல் பொறையுடைமை யின்சொல்லோ
டின்னாத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ
டொப்புர வாற்ற வறித லறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்ட லிவையெட்டுஞ்
சொல்லிய ஆசார வித்து'.

கூடலூர் கிழார் இயற்றியருளிய முதுமொழிக் காஞ்சியில், முதன் முதலில் எடுத்துக் கூறப்பட்டுள்ள அறக்கட்டளைகள் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் பொருந்தும் முறையிலேயே அமைந்துள்ளமை கவனிக்கற்பாலது;

'ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.
காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்.
மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை,
வண்மையிற் சிறந்தன்று வாய்மை யுடைமை.
இளமையிற் சிறந்தன்று மெய்பிணி இன்மை.
நலனுடை மையின் நாணுச் சிறந்தன்று.
குலனுடை மையிற் கற்புச் சிறந்தன்று.
கற்றலிற் கற்றுரை வழிபடுதல் சிறந்தன்று.
செற்றுரைச் செறுத்தலின் தற்செய்கை சிறந்தன்று.
முற்பெரு கலிற்பின் சிறுகாமை சிறந்தன்று.'

அறக்கட்டளைகளைக் கடமை யுணர்வுடன் கடைப்பிடித்து, அவற்றிற் கேற்ப நடந்துகொள்ளவேண்டும் என்ற கருத்தினையே இந் நூல்கள் அனைத்தும் பல்வேறு நிலைகளிலிருந்து உணர்த்துவதாகும். அவற்றிற்கெல்லாம் தலையாய சிறப்பைப் பெற்றுள்ளது திருக்குறள் என்பதும் கவனிக்கற்பாலது. ஏனென்றால், அறத்தையே அடிப்படையாகக் கொண்டு, அறத்தின் வழியாகவே பொருள் சேர்க்க

கணி மேதையார் இயற்றியருளிய ஏலாதியில் அறவாழ்வு எவ்வாறு இறைவாழ்வாக மலர்கின்றதென்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது அறியற்பாலது:

'கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்மனைமேல்
செல்லான் சிறியா ரினஞ்சேரான் — சொல்லும்
மறையிற் செவியிலன் தீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியார்க்கு இவை.' (19)

உலகநாதர் இயற்றியருளிய உலகநீதியில் எடுத்துக் கூறப்பட்டுள்ள கருத்துகள் யாவரும் கைக்கொள்ளவேண்டிய சிறந்த நீதிகளே என்பது உணரற்பாலது:

'ஓதாம லொருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை யொருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்
போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
வாகாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.'

உலகநாதர், முருகக் கடவுளிடத்தும், வள்ளி நாச்சியாரிடத்தும் பத்தியுடையவரென்பது, பாட்டின் இறுதியில் வள்ளி பங்கனாகிய முருகனை வாழ்த்துவாயாக என நெஞ்சை நோக்கிக் கூறுதலால், தெரியவருகின்றது. முருகக்கடவுள் சிவபெருமானின் இரண்டாவது பிள்ளை என்பது சைவமரபு; முதற்பிள்ளை விநாயகர்; காப்புச் செய்யுளில், உலகநாதர் விநாயகரைப் போற்றியுள்ளதும் கவனிக்கற்பாலது.'

'உலகநீதி புராணத்தை யுரைக்கவே,
கலைக ளாய்வருங் கரிமுகன் காப்பு.'

சங்கக்காலப் புலவர் பெருமக்களிடையே எவ்வாறு சிறப்புற்றிருந்தாரோ அதைப்போன்றே இக் காலத்தும் தமிழ்மொழி பேசும் மக்கள் அனைவரின் அன்பைப் பெற்றவர் ஔவையார் என்று கூறினால் அது மிகையாகாது. ஏனென்றால் ஔவையார் இயற்றியருளிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய நீதி நூல்கள் கல்வியறிவுபெற்ற அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெருமை வாய்ந்தவை. பண்டைத் தமிழ்மக்களின் பழமையினையும் பண்பினையும் எடுத்துக்காட்டும் சங்ககால நூல்களின் சாரமாகவுள்ள நீதிகளும் கருத்துகளும் ஆத்திசூடியிலும், கொன்றைவேந்தனிலும் சிறு சொற்றொடர்களில் தெளிவுற அமைக்கப்பெற்று விளங்குகின்றன. கற்பவர், குறிப்பாக இளம் பருவத்தினர் எளிதாய்ப் பாடஞ்செய்து என்றும் நினைவில் வைத்துக்கொள்ளும்படி, அகரம் முதலிய எழுத்துகளை முறையே முதலில் உடையனவாகச் சொற்றொடர்கள் அமைந்துள்ளன. முதற்கண், ஆத்திசூடியின் கடவுள் வாழ்த்துப் பாடலைக் காண்போம்.

'ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோ மியாமே.'

வேண்டும். அறத்தின் வாயிலாகவே இன்பத்தை நுகரவேண்டும் அவ்வாறு இல்லற தருமத்தில் வாழ்ந்தால் பெருவாழ்வைப் பெற்றுப் பேரின்பத்தை இவ் வுலகிலேயே பெறலாம் என்னும் பேருண்மையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துக் கூறிய தமிழ்மறை திருக்குறளாம்.

இதன் பொதுவான விளக்கவுரை: திருவாத்திப் பூமாலையை தரிப்பவராகிய சிவபெருமான் விரும்பிய விநாயகக் கடவுளை நாம் என்றும் துதித்து வணங்குவோம்; விநாயகக் கடவுள் சிவபெருமானுக்கு மூத்தபிள்ளை என்பதும் கவனிக்கற்பாலது. இனி, ஆத்திசூடியில் ஔவையார் எடுத்துக் கூறியுள்ள நூற்றுஎட்டு நீதிகளில் சிலவற்றையே இங்கு எடுத்துக்கூறுதல் நலமெனக் கருதுகிறேன்.

'அறஞ்செய விரும்பு'	— தருமம் செய்.	(1)
'ஆறுவது சினம்'	— கோபத்தைத் தணி.	(2)
'ஊக்கமது கைவிடேல்'	— தைரியமாக யிரு. முயற்சியைக் கைவிடாதே.	(6)
'ஔவியம் பேசேல்'	— பொறாமை கொள்ளாதே.	(12)
'ஓதுவ தொழியேல்'	— என்றும் இறைவனைத் துதி. இடையருது ஓது.	(11)
'தெய்வ மிகழேல்'	— கடவுளை நிந்தியாதே.	(60)
'வீடுபெற நில்'	— முத்திபெற முயற்சி செய்.	(101)
'மோகத்தை முனி'	— பேராசையை விட்டுவிடு.	(98)
'தீவினையகற்று'	— பாவச் செயல்களைச் செய்யாதே.	(57)
'உத்தமனாயிரு'	— நற்குணங்களையே நாடுக.	(102)

இனிக் கொன்றை வேந்தனில் ஔவையார் எடுத்துக் கூறியுள்ள தொண்ணூற்றொன்று நீதிகளில் சிலவற்றையே எடுத்துக்காட்ட விழைகிறேன். மேலும் இந்நூலில் கூறப்பட்டுள்ள நீதிகள் அதிக விளக்கத்தைப் பெற்றுள்ளதால், சற்றுப் பெரிய சொற்றொடர்களால் அமைந்துள்ளதும் அறியற்பாலது.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'— (1)
முதலில் நாம் அறிந்துகொள்ளும் தெய்வம் அன்னையும் பிதாவுமே.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'— (2)
கோயிலுக்குச் சென்று இறைவனைத் தொழுதல் சிறப்புடையதே.

'இல்லற மல்லது நல்லற மன்று' — (3)
இல்லற தருமமே சிறந்தது.

'உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு'— (5)
மிதமாக உண்பதே மாதர்களுக்குச் சிறப்பாகும்.

'எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்'— (7)
கணிதமும் இலக்கணமும் அறிவின் இரு கண்களாகும்.

'கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை'— (14)
கணவர் சொற்படி நடப்பதே பெண்டிரின் உயர்ந்த அணிகளாகும்.

'நேரா நோன்பு சீரா காது'— (55)
மனமுவந்து செய்யாத தவம் பயனுடையதாகாவாம்.

மனித வாழ்வுக்கு அறக்கட்டளைகளின் அவசியத்தை எடுத்துக் கூறியுள்ள தமிழ்ச் சாத்திரங்களனைத்தும், தனிப்பட்ட மனிதனை முதற்கண் மனிதனுக்குவதையே வலியுறுத்தியுள்ளன வாம். இவற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய

'புலையுங் கொலையும் களவுந் தவிர்'— (63)
புலால் உண்ணல், பிறஉயிரைக் கொல்லுதல்,
பிறர் பொருளைக் கவர்தல் செய்யாதே.

'மோன மென்பது ஞான வரம்பு'— (80)
ஞானிக்கழகு மௌனமே.

'வையந் தோறுந் தெய்வந் தொழு'— (89)
தெய்வத்தலந் தோறுஞ் சென்று இறைவனைத் துதி

'ஓதாதார்க் கில்லை யுணர்வொடு மொழுக்கம்'— (91)
இறைவனைத் துதியாமல் ஒழுக்கஉணர்வு ஏற்படா.

'சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு'— (28)
சிவ–வழிபாடே சிறந்த வழிபாடு.

ஔவையார் இயற்றியருளிய நீதி நூல்களில் தலையாயது நல்வழி என்று கூறினல் அது மிகையாகாது. ஏனென்றால் நல்வழியில் பொதுவான நீதிகளை மட்டும் கூறுவதோடையாமல், சிறப்பான சமயக் கருத்துகளும் தத்துவ அறிவுரைகளும் வலியுறுத்தப்பட்டுள்ளன. சுருங்கக்கூறின் நாற்பதே செய்யுட்களைக்கொண்ட நல்வழி, சங்ககால மெய்ந்நூல்களின் தலையாய சமயக் கருத்துகளையே விளம்புவனவாகும். சமயக் கருத்துகளுக்கு அறக்கட்டளைகள் அடிப்படையாக அமைந்துள்ளன என்னும் கருத்தினை வலியுறுத்தும் தன்மையிலேயே நல்வழியின் முதற்படியாக விளங்கும் செய்யுளை ஔவையார் அமைத்துள்ளதும் அறியற்பாலது. இவ்வாறன சிறப்புத் தன்மைகளுக்குச் சிகரம் அமைப்பதுபோல் இந் நூலின்கண் திருவைந்தெழுத்தும், திருநீறும் குறிப்பாக எடுத்தோதப்படுவதும், இறுதிச் செய்யுளில் திருக்குறள், திருநான்மறை முடிவு. தேவாரம் முதலிய சைவத் திருமுறைகள் யாவும் ஒத்த கருத்துடையனவே என்னும் உண்மையினை உலகறியச் செப்புவதும் ஔவை மூதாட்டியாரின் மெய்யறிவினையும் சமய உணர்வினையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குவதாம். வாசகப் பெருமக்களே வாருங்கள் நல்வழிக்கு :

'புண்ணியம்ஆம் பாவம்போம் போனநாட் செய்தஅவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள் – எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத்தோர் சொல்லுந்
தீதொழிய நன்மை செயல்.' (1)

இச் செய்யுளின் பொதுவான விளக்கம் : அறச்செயல்கள் ஆக்கத்தையே தரவல்லன: பாவச்செயல்கள் அழிவினையே உண்டாக்கவல்லன; அவ்வாறன செல்களை முற்பிறப்பில் செய்ததின் விளைவாகவே, இப் பிறப்பில் மானிடராய் பூமியில் பிறந்து இன்ப துன்பங்களை அனுபவிக்கிறீர்கள் என்பதை உணர்வீர். அவ்வுண்மையை உணர்ந்ததனல்தான். பாவம் செய்யாதீர்கள், புண்ணியத்தையே நாடுவீர்களாக என்று எல்லாச் சமயங்களும் அறிவுறுத்துகின்றன, ஒரே செய்யுள், அதுவும் முதற்செய்யுள், அதிலேயே ஔவையார் எடுத்துக்கூறியுள்ள கருத்துகளைக் கவனிக்கும்பொழுது, அவருடைய இலக்கியப் புலமையையும், சமய உணர்வையும், தத்துவ ஞானத்தையும் எவ்வாறு எடுத்துக் கூறுவதென்றறியாமல், அதனை வாசகர்களின் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.

மனிதவாழ்வின் பயனை உணரமுடிவது சமயவாழ்விலேதான் என்பதும், அவ் வுண்மையையும் ஒரு குறிப்பிட்ட வயதிற்குள்ளேயே அறிதல் சாலச் சிறந்ததென்பதையும் ஔவையார் குறிப்பிட்டுக் கூறியுள்ளது கவனிக்கற்பாலது ;

உண்மை என்னவென்றால், தனிப்பட்ட மனிதனைத் தூய்மைப் படுத்தாமல், மக்கள் சமூகத்தைத் தூய்மையாக்கவியலாதாம். மேலும், மனிதனை மனிதனுக்குதல் என்பதன் பொருள், மனிதனிடமுள்ள குற்றங் குறைகளைத் தீர்க்கும்பொழுதுதான் மனிதன்

'முப்பதாம் ஆண்டளவில் மூன்றற்று ஒருபொருளைத்
தப்பாமல் தன்னுள் பெறுனுயின் – செப்புங்
கலையளவே ஆகுமாம் காரிகையர் தங்கள்
முலையளவே ஆகுமாம் மூப்பு.' (39)

இதன் பொதுவான விளக்கவுரை : முப்பது வயதினளவிலேயே மும் மலங்களின் (ஆணவம், கன்மம், மாயை) உபாதைகள் நீங்கின், அந்நிலையைப் பெற்றவர்களுடைய உள்ளங்களில் இறையொளி காணமுடியுமாம்; அவ்வாறில்லையேல் ஒருவனுடைய அறிவு மேல்வாரியாகக் கற்ற கலைகளின் அளவோடு அமையுமாம். ஔவையார் பெண்—புலவராகையால், உதாரணமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளதும் பெண்டிரின் நிலைமையே. அடிப்படைப் பொருளை அறியாமல் மேல்வாரியாகக் கற்று, அத்துடன் அமைவோர், அழகிய மாதர்கள் முதுமையில் முலையினை மாத்திரமே உடையராதல் போலவாம். இச் செய்யுளின் கருத்தினைச் சுருங்கக்கூறி, மூப்பு வருவதற்குள்ளே மும்மலங்களினின்று நீங்கி மெய்ப்பொருளையடைந்தின்புற வேண்டுமென்பதே. இவ்வாறு அறிவுரை கூறிய ஔவையார் அதற்குச் சிறந்த உபாயமும் எடுத்துக்கூறியுள்ளார் :

'சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை – உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.' (15)

இச் செய்யுள் கூறியுள்ள கருத்துகள் தாமாகவே விளங்கும் தன்மை உடையன என்பது சொல்லாமலே விளங்கும், எனினும், பொதுவாக அறிவுரைகள் கூறும் தன்மையில். சைவபெருமக்களுக்கே உரித்தாய மந்திரமாகிய சிவாயநம என்பதனை, மெய்ப்பொருளை உண்ர்ந்தின்புறுதற்கு உபாயமாகக் கூறப்பட்டுள்ளதின் நோக்கத்தினைச் சிறிது விளக்கிக் கூறுதல் பயனுடையதாகுமெனக் கருதுகிறேன். சிவபெருமானுக்கே உரியதும், சைவப்பெருமக்களுக்கே வழிகாட்டியாகவும் அமைந்துள்ளதே சிவாயநம என்பதனை வாசகர்கள் நன்கு அறிவர். இதனைச் சைவப்பெருமக்களுக்கு மட்டுமல்லாமல், மக்களினத்திற்கே உரிய செல்வம் என்னும் சிறந்த கருத்தினையே ஔவையார் எடுத்துக்காட்டியுள்ளார் என்பது அடியேனின் கருத்து. இக் கருத்து பண்டைத்தமிழ் மரபைத் தழுவியதே என்பதும் உணரற்பாலது. இதற்கு மேற்கோள் "ஒன்றே குலம், ஒருவனே தேவன்." இவ்வொற்றுமை உணர்வைப் பெற்று இன்பமெய்துவதே நல்வழியின் முடிவு என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார் ஔவையார்:

'தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் – கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர். (40)

இச்செய்யுளின் பொதுவான விளக்கவுரை: திருவள்ளுவரின் குறளும், சிறப்புப் பொருந்திய நான்கு வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர் இயற்றியருளிய தேவாரமும், வியாசமுனிவர் இயற்றியருளிய வேதாந்த சூத்திரங்களும், திருக்கோவையாரும், திருவாசகமும், திருமூலர் இயற்றியருளிய திருமந்திரமும் எடுத்துச் சொல்லும் உண்மைப் பொருள் ஒன்றே என்றுணர்க.

தன்னலமற்ற பண்பாடுடையவனுகித் தனக்காக வாழாமல், பிற ருக்காகவும் வாழவேண்டிய உண்மையை உணர்ந்தவனுகிருன். இந் நிலையில்தான் சமய வாழ்வும், அரசியல் வாழ்வும் சந்திக் கின்றதென்றும் கூறலாம். எனினும், பண்டைத் தமிழகத்தில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்கள் சமய வாழ்வுக்கே முதலிடம் கொடுத்ததனுல், அரசியல் வாழ்வுக்கும் சமய வாழ்வுக்கும் எவ்வித மான வேறுபாடுகளுமில்லாமல் அன்பையும் அறத்தையுமே அடிப்படையாகக்கொண்டு இயங்கினவாம். இருந்தபோதிலும், தவறிழைத்தவர்களை மன்னர்கள் தண்டித்தனர்; தவறுகளைப் பாவம் என்றும், நற்செயல்களைப் புண்ணியம் என்றும் குறிப் பிட்டனர். பாவச் செயல்கள் யாவை, அவற்றைத் தண்டிக்க வேண்டிய முறைகள் யாவை என்பனவும், நற்காரியங்களாகிய புண்ணியங்களும் அவற்றைச் செய்வதால் நிகழ்காலத்தோடு மட்டும் அமையாமல் வருங்காலத்திலும் எவ்வாறு நன்மைகள் ஏற்படும் என்பனபோன்ற அரிய கருத்துகள் அனைத்தும் தெளி வாகவும் தீர்மானமாகவும் ஆகமங்களில் சொல்லப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. நற்காரியங்கள் எனக் கருதப்பட்ட புண்ணியம் யாவும் அறச் செயல்களே. அவற்றைத் தொடர்ந்து செய்வதால் நிகழ்காலத்தில் உள்ள மக்களுக்கு நன்மை ஏற்படுவது ஒருபுறமிருக்க, அச் செயலினுல், அதனைச் செய்தவர்கள் இனிவரும் பிறவிகளிலும் நல்ல பயனைப் பெறுவது நிச்சயம் என்ற கொள்கையும் பண்டைத் தமிழர்களி டம் நிலவியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. அக் கருத்துக் கிணங்கவே செல்வந்தர்கள் பொதுநலத் தொண்டில் ஈடுபட்டுச் சமூகநலச் சேவைகளைப் புரிந்தனர் என்றும், அவற்றிற்காகத் தங்களுடைய செல்வங்களைத் தானமாக அளித்தனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதே நோக்கத்தோடுதான், மன்னர் களும் மாபெரும் கோயில்களைக் கட்டியும், குளங்களை வெட்டியும், சத்திரம் சாவடிகளை அமைத்தும் அறச் செயல்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர் என்பதும் சரித்திரம் கூறும் சான்றுகளாம்.

இவ்வாறு தமிழர்களுடைய வாழ்க்கையே சமய வாழ்வாக திகழ்ந்தது என்று கூறுவோமாகில், அதற்கு அடிப்படையா அமைந்திருந்த கருத்துகள் அனைத்தும் அறக்கட்டளைகளே என்று கூறினுல் அது மிகையாகாது. அறக்கட்டளைகளை எவ்வாறு கடமையுணர்வுடன் ஏற்றுக்கொண்டார்களோ, அதே உணர்வுடன் தான் இறைவணக்கத்தையும் தொடர்ந்து செய்தனர் என்பதும் அறியற்பாலது. உதாரணமாகக் கூறுவேனுகில், ஒன்பதாம் நூற் ருண்டில் வாழ்ந்த பட்டினத்து அடிகள் — பட்டினத்துப் பிள்ளை

யார் என்றும் அழைக்கப்பட்டார் — கூறியுள்ள கருத்துகளைக் கவனிப்போம் :

'சொல்லால் வருங்குற்றஞ், சிந்தனையால் வருந்தோடம், செய்த
பொல்லாத தீவினை, பார்வையிற் பாவங்கள், புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குகளா யவுமற்
றெல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.'

தீயன களைதலும், நல்லன செய்தலும் அறச் செயல்களாகும் என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் எடுத்துக் கூறியுள்ள உண்மை என்பதனை நாம் அறிவோம். எனவே, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அக் கருத்தினை ஏற்று, அதற்கேற்ப வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் நம் தமிழ் மக்கள் என்பது நன்கு விளங்கும். அறவாழ்வே, இல்லறம் என்பதும் அதுவே சமயவாழ்வென்பதும், அதனால்தான் நற்கதி எய்தமுடியுமென்பதனையே திருவள்ளுவர் வலியுறுத்தியுள்ளதும் கவனிக்கற்பாலது :

'ஒழுக்கமும் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.' (131)

இறைவணக்கம்

அறநெறிகளை அயராது பின்பற்றி வாழ்வதே இல்லறம்; இல்லற வாழ்வும் சமய வாழ்வும் வெவ்வேறல்ல. இவை இரண்டும் இணைந்தே பண்டைத் தமிழரின் பண்பாக அமைந்திருந்தன வென்பது முன்பே குறிப்பிடப்பட்டது. இல்லறம் அமைவது, இல்லறத்திலுள்ளோர்களுக்குப் பயன்படுவதற்கே என்பது உண்மையானாலும், இல்லறம் தொடர்ந்து இயங்குவதன் நோக்கமே மற்றவர்களுக்கும் அது பயனுடையதாகச் செயல்படுவதால்தான். அந்த அடிப்படையில்தான் இல்லறவாழ்வும் சமய வாழ்வும் ஒன்றாகிவிடுகின்றன. ஏனென்றால், தனக்காக மட்டுமல்லாமல், பிறருக்காகவும் நற்காரியங்கள் செய்யமுடிவது இல்லறத்தில் இயங்கும்பொழுதுதான். பிறருக்கு உதவுவதும், நன்மை புரிவதும் இறைபணியாகவே கருதினர். இந்த உண்மையை உணர்த்துவதே கல்வியின் நோக்கமாகும் என்று கொண்டனர். இக் கருத்தினைத் திருவள்ளுவர் வலியுறுத்திக் கூறியுள்ளதும் கவனிக்கற்பாலது :

'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.' (2)

எவ்வளவு கற்றும் அதனுல் அறிவைப் பெற்றிருந்தபோதிலும், எல்லாவற்றையும் அறிந்த இறைவனின் திருவடிகளைத் தொழ வில்லையாளுல், என்ன பயன் ஏற்படும்? என்று விஞவை எழுப்பி, நம் சிந்தையைத் தூண்டிவிடுகிருர் திருவள்ளுவர். 'கல்வி கற்று அறிவைப் பெறுவதும் அதனை வளர்ப்பதும் நற்காரியங்களைப் புரிந்து, தனக்கும் பிறருக்கும் நன்மை உண்டாக்குவதற்கே என் பது உண்மையாளுலும், அவை யாவற்றிற்கும் மேலாக உள்ள இறைவனுக்குப் பணிந்து, எல்லா நற்காரியங்களையும் செய்தலே சிறப்புடையதாம்; அவ்விதச் சிறப்பான செயலால் ஏற்படும் இன்பமே, பேரின்பமாகும்.'

'அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது' (8)

பிறப்பு-இறப்பு என்னும் சுழற்சியை ஓர் கடலுக்கு ஒப்பிட்டுக்கூறி அவற்றிலிருந்து விடுதலை பெறுவதே பேரின்பம், அதற்கு உறுதுணை யாக உள்ளது அறக்கடலாக விளங்கும் இறைவன் திருவடி என்பதாம். இந்த அடிப்படை உண்மையை உணர்ந்துகொள் வதற்கு உதவியாகவே கல்வி அமையவேண்டும் என்பதே கருத்தாம்.

நம் சிந்தனைக்கு அப்பாற்பட்டவன் இறைவன்; அவ் வுண் மையை உணர்ந்துகொள்வதற்கு உதவியாக இருப்பதே கல்வியின் நோக்கமாகும். எனினும், அன்ருட வாழ்க்கையில் இறைவணக் கம் செலுத்துவதற்கும், அதனை ஒப்புக்கொள்ளும் முறையில் உருவ வழிபாடு பண்டைக் காலத்திலேயே ஏற்றுக்கொள்ளப்பட் டிருந்ததென்பதும், அதற்கு ஆகமங்களே அனுமதியும் அளித்திருந் தன என்பதும் குறிப்பிடத்தக்கனவாம். மேலும், அம் மரபுகளே இன்றைக்கும் எல்லா இந்துசமயக் கோயில்களிலும், சிறப்பாக எல்லாச் சிவன் கோயில்களிலும் பின்பற்றப்படுகின்றன என்ப தும் கவனிக்கற்பாலது. சிவத்தின் உருவமும் அருவமுமாகிய நிலையினையே இலிங்கம் என்று கூறுவர். இலிங்க வழிபாடு மிகவும் பழைமையானது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ் வாறு ஓர் உருவத்தை அமைத்து இறைவழிபாடு நடத்துவதில் பல பயன்கள் உள்ளனவாம். அவற்றில் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கன : மனிதனின் எண்ணங்கள் பல்வேறு திசைகளில் செல்லா மல் ஒரே நோக்கினைப் பெறுவதும், உள்ளத்தில் உறுதிப்பாட்டினை ஏற்படுத்துவதும் ஆம். மேலும், குறிப்பிடத்தக்க முக்கிய மான செய்தி யாதெனில், உருவமாய் அமைந்துள்ள பொருள் சடப்பொருள்; ஏனென்ருல், அவ் வுருவமானது கல்லாலும், உலோகங்களாலும் செய்யப்பட்டிருக்கலாம். அவற்றையே இறைவன் என்று கொள்ளலாகாது. ஏனென்ருல், இறைவனை

உணர்த்துவதற்காகவும், இவ்வாறுதான் நாம் இறைவனை உணர முடிவதாலுமே அவ்வித அமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனையே இறைவனை மனித உருவில் அமைத்தல் (Anthropomorphism) என்று தற்காலச் சமய வல்லுநர்களும் கூறுவர்.

இவ்வாறு நம் சிந்தனைக்கு அப்பாற்பட்ட இறைவனை, நாம் அறிந்துகொள்வதற்குச் சாதகமான முறையில் அமைத்து உருவங்களை ஏற்படுத்தி, அவற்றிற்குப் பூசை முதலியன நடத்துவது மரபாகக் கொள்ளப்பட்டுள்ளது. இந் நிலையில் பல வினாக்கள் எழ முயன்றாலும், அவற்றுள் ஒன்றனை மட்டும் வாசகர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுவே இறை வழிபாட்டில் அருச்சகர்களின் பங்கும் பணியும் என்பதாம். உண்மையிலேயே சமய வாழ்விலும், இறைவனின் திருவருட் செயலிலும் அதிக ஈடுபாடும் நம்பிக்கையும் உடையவர்களே அருச்சகராக அமையவேண்டுமென்பது சொல்லாமலேயே விளங்கும் உண்மையாகும். எனினும், அப்பேர்ப்பட்ட நல்லொழுக்கமும் சமயச் சிந்தனையுமுடையவர்களே இறைவனின் திருவருளை இறைஞ்சி வேண்டிக்கொள்ள முடியுமேயன்றி, வேறு எந்தவிதமான கட்டளைகள் பிறப்பித்து நடைபெறச் செய்தல் இயலாதாம். அதனால்தான் நம் முன்னோர்கள் இறைபணியில் பிரார்த்தனைக்கு முதலிடம் தந்துள்ளனர். அருச்சகர்கள் மந்திரங்களைச் செபித்து இறையருளை வேண்டவும், அடியார்கள் இறைவனைப் பிரார்த்திக்கவும் செய்தலே நன்றாம். அதற்கு விடையளிக்கும் தன்மையில் இறையருள் வெளிப்படுவதும், அதனால் நமக்குப் பயன் விளைவதும் ஆகியவை, இறைவனின் சித்தம் என்பதேயாம். எல்லா உயிரினங்களும் இன்னல்களினின்று விடுதலை பெற்று இன்ப வாழ்வெய்திப் பேரின்பம் பெறவேண்டுமென்பதே இறைவனின் சித்தம் என்பது சித்தாந்திகளின் கொள்கையாகும். அதனால்தான், இறைவனை அருட்கடல் என்றும் உவமித்துக் கூறியுள்ளனர்; எல்லையில்லாக் கருணையுடையவன் என்பதாம். இவ்வாறு எல்லையில்லாக் கருணையுடையவன் எல்லைக்குட்பட்டு விளங்குகிறான் என்றால், அதன் நோக்கம் எல்லைக்குட்பட்டு இயங்கிக் கொண்டிருக்கும் உயிரினங்களை நல்வழி காட்டி நல்லாற்றுப்படுத்துவதற்கே என்பதும் விளங்குவதாகும்.

இறையருள் ஆன்மாக்களின் நன்மைக்காகவே செயல்படுகிறதென்ற உண்மை மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அருட்சத்தி எவ்வெவ்விதங்களில் எங்கெங்கே வெளியிடப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம், குரு, இலிங்கம், சங்கமம், திருநீறு, உருத்திராக்கம் முதலிய

வற்றினின்று இறையருள் வெளிப்படுகிறதாம். இவற்றின் சிறப்பு சாத்திரங்களிலும், இவற்றின் முக்கியத்துவம் ஆகமங்களிலும் எடுத்துக் கூறப்பட்டுள்ளனவாம். எனவே, மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பொருள்களும் சமய வாழ்வில் உதவிபுரியும் நற் சின்னங்களாகக் கருதப்படுகின்றனவாம். இவ்வாறு அப் பொருள் கள் சமய வாழ்விற்குச் சாதகமாக உள்ளமையாலேயே முக்கியத் துவம் பெற்றுள்ளதாம் என்பதும் கவனிக்கற்பாலது. அந்த அடிப் படையில் அமைந்ததே சமயக் கிரியைகளும் சடங்குகளும் என்பர். அவற்றின் அடிப்படை நோக்கம் இறைவனை உணரச் செய்வதே என்பதை அறிந்துகொள்வோமாகில், சடங்கு களின் தன்மை பன்மைகளைப் பற்றி அதிகம் கூறவேண்டிய தில்லை. உதாரணமாகக் கோயில் பூசையை எடுத்துக்கொள் வோம்: ஆறுகால பூசைகள் நடைபெறவேண்டும் என்பது ஆகம விதி. அப்போது கோயில் மணி அடிக்கப்பெறவேண்டுமென்பதும், மலர் இட்டு வணங்கவேண்டுமென்பதும் முறைகளாம். இவை யாவற்றின் தத்துவம் என்னவென்றால், மக்களின் சிந்தனையில் இறைவனைப் பற்றிச் சிந்திக்கச் செய்தலேயாம். அவ்விதச் சிந்தனையைத் தூண்டுவதற்குப் பயன்படுத்தப்படும் சாதனங்களே இவை யாவுமாம். அதைப்போலவே உருவங்களைக்கொண்டு விக்கிரங்களாக அமைத்துள்ள இறைவனுக்குக் குளிப்பாட்டல், புதிய ஆடை புனைதல், தீப ஆராதனை செய்தல் முதலியன யாவும், அடியார்களுடைய உள்ளங்களில் தூய்மையை உண்டு பண்ணுவதற்காகச் செய்யப்படும் செயல்களேயாம். எனவே, கோயில்களில் நடைபெறும் சகல விதமான சமயக்கிரியைகள் அங்குக் குழுமியிருக்கும் அன்பர்கள் அனைவரையும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்துவதோடுமட்டுமல்லாமல், அவர்களை ஒன்றிணைத்து அவர்கள் யாவரும் ஒருகுலம் என்பதை உணரச் செய்வதற்கும், எல்லோ ருக்கும் ஒருவனே தேவன் என்ற தத்துவத்தை உண்மையாக்குவ தற்குமேயாம். இவ் வுண்மை பண்டைக்காலத்திலும் நிரூபிக்கப் பட்டது. ஆண்டான் அடிமை என்ற வேறுபாடுகளின்றி அரசர் களும் ஆண்டிகளும் ஒன்றாகக் கூடி இறைவழிபாடு செய்தது கோயில்களில்தான் என்பதையும் சரித்திரம் எடுத்துக் கூறுகிறது. இன்றைக்கும் இந்துக் கோயில்களில் எல்லோரையும் அனுமதித்து இறைவணக்கம் செலுத்துவதை ஆதரித்துள்ளனர் என்றால், அக் கொள்கை புதியதன்று. பண்டைக் காலத்துத் தமிழர்களிடையே நிலவிய மரபினையே மீண்டும் அங்கீகரித்து, அதன் நற்பயனை எல்லோரும் பெறுவதற்கு இசைந்துள்ளனர் என்பதாம். இக் கொள்கை தமிழகத்திற்குச் சிறப்புடையது என்று கூறினால் அது மிகையாகாது. எனினும், இக் கொள்கை இந்தியா முழுவதற்குமே பொருந்தும் என்பதை மறுக்கவியலாது. ஏனென்றால், இறை

வனின் திருவருள் எட்டு விதங்களில் இந்திய மண்ணிலும் இந்திய மரபிலும் கலந்துள்ளதாம். அவையாவன : இறைவனை, மண்ணுக (earth) வணங்கப்படுவது காஞ்சீபுரத்தில்; தண்ணீராக வணங்கப்படுவது திருவானைக்காவிலுள்ள சம்புகேசுவரத்தில்; காற்றுக வணங்கப்படுவது காளஹஸ்தி என வழங்கும் திருக்காளத்தியில்; நெருப்பாக வணங்கப்படுவது திருவண்ணுமலையில்; ஆகாயமாக வணங்கப்படுவது சிதம்பரத்தில்; சந்திரனுக வணங்கப்படுவது சோமநாதபுரத்தில்; ஆன்மாவாக வணங்கப்படுவது நேபாள தேசத்திலுள்ள பசுபதி கோயிலில்; சூரியனுக இந்தியா முழுவதிலும் வணங்கப்படுகிறது. இதனைச் சூரிய வணக்கம் என்று கூறுவர். உலக முழுவதிலும் சூரியனை வணங்குகின்றனர் என்றுல் அது மிகையாகாது. சமயம், தத்துவம் ஆகியவற்றின் கருத்துகளைத் தவிர்த்து, விஞ்ஞான முறையிலேயே ஆய்வோமாகில், சூரிய ஒளி இல்லாது போனுல், பிரபஞ்சமே நசித்துப்போகும் என்ற பேருண்மையைத் தற்கால விஞ்ஞானிகளே எடுத்துக் கூறியுள்ளனர். அவ்வாறு விஞ்ஞானிகள் எடுத்துக்கூறிய கருத்தினையே சித்தாந்திகள் கூறுவர்: '(இறைவன்) அவனன்றி ஓர் அணுவும் அசையாது.' அணுவையும் பிளந்துவிட்டார்களே என்று கேட்பீர்களேயானுல், பிளக்கமுடியாததையே அணு என்று சித்தாந்திகள் கூறினர் என்பதை மட்டும் இந்நிலையில் எடுத்துக் சொல்லக் கடமைப் பட்டுள்ளேன்.

இறைவனே அருள்மயமானவன் என்ற கருத்து முன்பே எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. அருட் சக்திக்கோர் எல்லையே இல்லை. அதனுல்தான் அருள் திருவடிவங்களுக்கும் எண்ணிக்கையில்லை என்றே கூறலாம். எனினும் அத் திருவடிவங்கள் அனைத்தும் சகல சீவராசிகளின் நன்மைக்காகவே தோன்றினவாம். அத் தோற்றங்கள் மாயா ரூபங்கள் அல்ல; அவை அனைத்தும் சிவ தத்துவங்களால் உண்டானவையே. அவையாவன : சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவம், மகேசுவரன், உருத்திரன், பிரமன், விட்டுணு ஆகியவையாம். இவ் வொன்பது மூர்த்தங்களில் முதல் நான்கு அருவமாய் இயங்குவதாம்; கடைசி நான்கும் உருவமாய் இயங்குவதாம்; சதாசிவம் என்பதோ உருவமுமாய் அருவமுமாய் இயங்குவதாம்; இலிங்கமே அதற்கு உதாரணமாம். சிவன் கோயில்களனைத்திலும் இலிங்க வழிபாடு நடைபெறுகிறதென்பது உண்மையாயினும், இலிங்க மூர்த்தத்தின் தத்துவத்தைச் சரியாகப் புரிந்துகொண்டோர் வெகுசிலரே. எனினும், இலிங்க வழிபாடு மிகவும் பழமையானது என்பதும், அம்முறை உலகத்தின் பல பாகங்களிலும் நடைமுறையில் சிறந்து விளங்கின என்பதும் ஆராய்ச்சி வல்லுநர்கள் எடுத்துக்கூறும்

உண்மைகளாகும். சிவ தத்துவங்களாகிய மூர்த்தமே இலிங்கம் என்பதும் அதன் உண்மைப்பொருளை அறிந்துகொள்வதற்குத் தத்துவ அறிகுறி (Philosophic symbolism)யின் வாயிலாகத் தான் அணுகவேண்டுமென்பதும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

மேலும், இலிங்க மூர்த்தத்திற்கு சாதாக்கியம் என்றும் பெயருண்டாம். அவற்றிலிருந்தும் பல மூர்த்தங்கள் தோன்றி யுள்ளனவென்பதும் அறியற்பாலது. அவையாவன : விநாயகர், சுப்பிரமணியர் (முருகன்), பைரவர், வீரபத்திரர் முதலியனவாம். இத் தோற்றங்களனைத்தும் சிவதத்துவங்களை அடிப்படையாகக் கொண்டவையாம். அவற்றின் குறிக்கோள் உயிரினங்களை நல் வழிப்படுத்தி நற்கதிபெறச் செய்வதேயாம். இக் கருத்தினையே கீழ்க்காணும் செய்யுளும் வலியுறுத்துவதைக் காணலாம்:

'உருவருள் குணங்க ளோடு முணர்வரு ளுருவிற் றோன்றுங்
கருமமு மருள ரன்றன் கரசர ணாதி சாங்கந்
தருமரு ளுபாங்க மெல்லாந் தானரு டனக்கொன் றின்றி
அருளுரு வுயிருக் கென்றே யாக்கினன் அசிந்த னன்றே.'

இவ்வாறு தனக்கன்றிப் பிறருக்காகவே, அதிலும் கட்டுண்ட நிலையில் உழன்று அவதியுறும் ஆன்மாக்களைக் கடைத்தேற்றுவதற் காகவே அருட்சத்தி பல்வேறு தோற்றங்களில் வெளிப்பட்டு இயங்குகிறதென்ற உண்மை அறியற்பாலது. உயிர் வருக்கங்கள் பரிபக்குவ நிலைகளில் வேறுபடுவதால், அவற்றிற்கொவ்வ வேறு பாடுகளைக் கொண்ட மூர்த்தங்களாக அருட்சத்தியும் செயற் படுமாம். அவையாவன : ஆதிசத்தி, பராசத்தி, இச்சா சத்தி, கிரியாசத்தி, உமையாள், மனோன்மணி, துர்க்கை, காளி முதலி யனவாம். இவ் வெட்டு மூர்த்தங்களில் கடைசி இரண்டும் மிகுந்த வன்மையுடைய தன்மைகொண்டவையாம்.

இறையருளால் ஏற்பட்ட அருவ, உருவ, அருவுருவத் தோற்றங்கள் அனைத்தும் செயற்பட்ட தன்மைகளையும், அவற் றால் ஏற்படும் நன்மைகளையும் தொகுத்துத் திருவிளையாடல்கள் என்றே கூறுவர். கட்டுண்ட ஆன்மாக்களின் நற்கதிக்கும், உலக சுபீட்சத்திற்காகவுமே நடைபெறும் இறைவனின் அருட் செயல் களைப் பஞ்சகிருத்தியங்கள் என்று கூறுவர். சைவப் பெருமக்களின் தாரக மந்திரமாக விளங்கும் 'சிவாயநம' என்னும் புனிதச் சொல் லுக்கும், இறைவனின் பஞ்சகிருத்தியங்களும் இணைந்த தொடர்பு உண்டென்று சித்தாந்திகள் வலியுறுத்தியுள்ளனர். அக் கருத்தினை ஆதரித்து, திருவதிகை மனவாசகங்கடந்தார், உண்மைவிளக்கத் தில் எடுத்துக் கூறியுள்ளதை வாசகர்கள் கவனிப்பார்களாக.

இறைவனின் பஞ்சகிருத்தியங்கள் என்பவை தோற்றுவித்தல், காப்பாற்றுதல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாம். அக் கிருத்தியங்களை அதிட்டிப்போர் முறையே பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்போராவர். இவ் வைவரும் இறைவனின் திருவருட் சின்னங்கள் என்பதனையே தத்துவமாகக் கொண்டு அமைந்ததே ஆனந்தத் தாண்டவம் என்று குறிப்பிடுவர். இவ்வாறு நடைபெறும் இறைவனின் ஆனந்தத் தாண்டவமும், சிவாயநம என்னும் மந்திரமும் எவ் வாறு இணைந்துள்ளன என்னும் தத்துவத்தை இனி விளக்கு வோமாக. பேரறிவுப் பொருளாகிய இறைவன், சிற்றறிவுப் பொருளாகிய ஆன்மாவில் இயங்குகிறான் என்பதே தத்துவம். நடனம் புரியும் நிலையில் இறைவன் நிற்கும் பாதத்தினை 'ந' என்னும் எழுத்து குறிப்பதாகும். இறைவனின் மையப் பகுதியினை 'ம' குறிப்பதாகும். இறைவனின் தோள்களை 'சி' குறிப்பதாகும். இறைவனின் திருமுகத்தை 'வா' குறிப்பதாகும். இறைவனின் தலைமேலுள்ள சின்னங்களை 'ய' குறிப்பதாகும். அவ்வாறே, காப்பாற்றும் அடையாளமாக நீண்டுள்ள இறைவனின் திருக் கரத்தை 'ய' குறிப்பதாகும். தீயை ஏந்தியுள்ள கரம் 'ந' குறிப்பதாகும். முயலகனை மிதித்துள்ள பாதம் 'ம' குறிப்ப தாகும். அவ்வாறே திருநடனம் புரியும் இறைவனின் திரு உருவத்தைச் சூழ்ந்துள்ள திருவாசி ஓங்காரத்தைக் குறிக்கும்; இவ்வாறு ஓங்கார ரூபமாயும் ஓங்கார நாதமாயும் இறைவன் நடனம் புரிவது சிதம்பரத்தில் என்ற தத்துவத்தை, பாசத் தளை களினின்று விடுபட்டு, பதிஞானம் பெற்ற பக்குவ ஆன்மாக்களே அறிவர் என்பதாம். இவ்வாறு ஆனந்தத் தாண்டவம் ஆன்மாக் களைக் கட்டுண்ட நிலைகளினின்று நீங்கி, நற்கதி பெறுவதற்காகத் தன் பக்கம் ஈர்க்கும் இறைவனின் அருட்செயலே என்பதை வாசகர்கள் உணர்வார்களாக.

பிரார்த்தனைக்குப் பொதுவாக எல்லாச் சமயங்களிலும் சிறப் பாகச் சைவசமயத்தில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள் ளது. ஆன்மா (மனிதன்) தனக்கு வேண்டியவற்றை இரந்து இறைவனிடம் கேட்டலே பிரார்த்தனை என்று பொதுவாகக் கூறப்படினும், சித்தாந்திகள் இறைவனுடைய நாமத்தைச் செபிப் பதே சாலச் சிறந்ததென்பர். அவற்றின் மூலமாக எல்லாப் பேறுகளையும் பெற்றுப் பெருவாழ்வு வாழமுடியும் என்பர். சித் தாந்திகள் அறிவுறுத்தியுள்ள திருநாமம் 'சிவாயநம' என்பர். இச் சொல்லில் அடங்கியுள்ள ஒவ்வொரு எழுத்திற்கும் ஓர் தத்துவமே உண்டு என்பர். அவையாவன : 'சி' என்ற எழுத்து சிவத்தைக் குறிக்கும்; 'வா' என்பது இறையின் திருவருளைக்

குறிக்கும்; 'ந' என்பது பாசத்தளைகளைக் குறிக்கும்; 'ய' என்பது ஆன்மாவைக் குறிக்கும்; 'ம' என்பது மாயையைக் குறிக்கும். இவ்வாறு சிவாயநம என்று தொடர்ந்து செபிப்பதால், ஆன்மா வானது மாயைச் சுழற்சியிலிருந்து விடுபட்டு, பாசத்தளைகளி லிருந்து நீங்கி ஞானம் எய்துமாம். அதனையே சிவஞானம் என் றும் குறிப்பிடுவதுண்டு. அந் நிலையிலும் ஐந்தெழுத்தைச் செபித் துக்கொண்டே இருக்கவேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு தொடர்ந்து செபிப்பதைச் சிந்தித்தல் என்றும், அதன் விளைவாக ஏற்படும் நிலையைக் கேட்டல் என்றும் கூறுவர். இவ் விரண்டு நிலைகளின் முடிபே தெளிதல் என்பர்; இதன் பொருள் உண்மையை உள்ளவாறு தெரிந்துகொள்ளுதல் என்பதாம். இந் நிலையில் எல்லாச் செயல்களும் இறையருட் செயல்களாகவும், ஞானமயமாகவும் விளங்கும் என்பர். இதனை ஞானயோகம் என்றும் குறிப்பிடுவர். இந் நிலை மேலும் வளர்ச்சியடைவதையே நிட்டைகூடல் என்று கூறுவர். ஞான நிலையின் சிகரமாக விளங்கும் இந் நிலையில் உள்ளவர்களை முத்தர்கள் என்று அழைப் பர். இவர்கள் இறைபணியே தங்கள் பணியாகக்கொண்டு வாழும் உத்தமர்கள் ஆவர். துன்பங்களோ, துயரங்களோ இவர்களை அணுகா. இக் கருத்தினைத் திருநாவுக்கரசர் வலியுறுத்தியுள்ளதும் கவனிக்கற்பாலது : 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை.'

11. சமய வாழ்வில் குருவின் சிறப்பு

'குரு' என்றாலே 'அறியாமையை நீக்குபவர்' என்று பொருளாகும். அறிவும் ஆற்றலும் ஒருங்கே அமையப்பெற்ற ஆசிரியரை அடைவதே இறைவனின் திருவருளால்தான் என்ற கருத்தினை எடுத்துக் கூறுகிறது திருவருட் பயன் :

'அறியாமை உள்நின்(று) அளித்ததே காணும்
குறிஆகி நீங்காத கோ.' (41)

இறைவனின் திருவருள் எங்கும் உள்ளது என்பதே சித்தாந்தத்தின் முடிபு; எனவே, அறியாமையில் சிக்குண்டு சுழலும் ஆன்மாக்களுக்கு நல்வழி காட்டுவதற்கு இறைவனின் திருவருளே குருவாகத் தோன்றுகிறதென்பதாம். உதாரணமாகக் கூறுவோமாகில், ஒவ்வொரு மாணவரும் சில நிறைவுகளையும் பல குறைவுகளையும் பெற்றிருப்பர். எனவே, ஒவ்வொரு மாணவருக்கும் வெவ்வேறு விதமான கவனிப்பும், கண்காணிப்பும் தேவைப்படுபடுகின்றன. அவ்வாறு அவரவர்களுக்குத் தேவையானவைகளைச் சிறந்த முறையில் அமைத்துக்கொடுத்து, அவர்களுடைய குறைவுகளை நீக்கி, நிறைவுகளைப் பெருக்கி, அறிவு ஆற்றல் வளருவதற்கு உதவிபுரிவதே குருவின் சிறப்புத் தொழிலாகும். இக் கருத்தினைத் திருவருட்பயன் சுட்டிக்காட்டியுள்ளதும் கவனிக்கற்பாலது.

'அகத்துறு நோய்க்கு உள்ளினர் அன்றி அதனைச்
சகத்தவரும் காண்பரோ தான்.' (42)

மாணவரை ஒரு நோயாளியாகவும், குருவை நோய்தீர்க்கும் மருத்துவராகவும் உவமித்து, மாணவரின் தேவைகளை ஆசிரியனே தெரிந்துகொள்ளவும், அதற்கு வேண்டியன செய்யவும் வல்லவர் என்னும் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. நோயாளி என்பது ஆன்மா. நோய் என்பது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களால் உண்டாய அறியாமை. குருவினால் தான் அறியாமையில் சிக்குண்டு அவதியுறும் ஆன்மாக்களுக்கு ஆதரவளிக்கப்பட்டுக்

கடைத்தேற்றமுடியும் என்னும் கருத்தும் உவமானத்துடன் விளக்கப்பட்டுள்ளன.

இறையருள், மானிட உருவில் தோன்றுவதே குரு என்பதும், அவ்வாறு ஏற்படுவதும் மக்களின் நன்மைக்காகவே என்பதும் திருவருட் பயனில் எடுத்துக் கூறப்பட்டுள்ளதும் கவனிக்கற் பாலது :

'பார்வைஎன மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வை எனக் காணுர் புவி.' (45)

காட்டில் வாழும் யானைகளைப் பிடிப்பதற்கு எவ்விதம் நன்ருகப் பழகிய யானையைப் பயன்படுத்துகிருேமோ, அதைப்போலவே, அறியாமையில் சிக்குண்டு அல்லலுறும் மானிடர்களுக்கு நல்வழி காட்டுவதற்கு, இறைவனின் திருவருள், மானிட உருவில் தோன்றுவதே குரு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இச் செய்யுளில் கையாளப்பட்டுள்ள உவமானத்தின் பொருள் நிறைந்த கருத்தினையும், அதன் பொருத்தத்தையும் வாசகர்கள் கவனிப்பார்களாக. எனினும் குருவின் சிறப்பு இன்னும் விளக்க மாகத் திருக்களிற்றுபடியாரில் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளதும் அறியற்பாலது :

'ஆகமங்கள் எங்கே அறுசமயம் தானெங்கே
யோகங்கள் எங்கே உணர்வெங்கே — பாகத்து
அருள்வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு.' (5)

மனித குலத்திற்கே வழிகாட்டியாக அமைந்துள்ள சாத்திரங்களும், சம்பிரதாயங்களும் அவற்றின் உண்மைகளை விளக்கி உயிரினங்களை நல்வழிப்படுத்தும் குரு என்பன யாவுமே இறையருட் செயலே என்னும் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளதாம். சகலர் என்று குறிப்பிடப்பட்டுள்ள ஆன்மாக்கள், ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்ருல் கட்டுண்டவர்கள். பொதுவாக மக்களெல்லோரும் இந் நிலையில்தான் உள்ளனர். இத் தன்மையோர்க்குச் சிறப்பாகக் குருவே நல்வழி காட்டமுடியும்; ஏனையோர்க்கு அவரவர்களின் அறிவு நிலைகளுக்கொவ்வ, இறையருளால் நல்வழி காட்டப்படு கின்றன என்பனவும் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. எனினும் சகலர் நிலையில் இயங்கும் எல்லோருக்கும், அந் நிலையிலேயே உள்ள நம் அனைவருக்கும், வழிகாட்டியாக அமையும் குருவின் சான்ருண்மையும், சாத்திர ஞானமும் மிகவும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளதும் கவனிக்கற்பாலது. ஏனென்ருல், அவ்விதத் தகுதிகளைப் பெருதவர்கள் தாமும் நற்கதி அடைய முடியாது.

மற்றவர்களுக்கும் நல்வழி காட்ட இயலாது என்பதும் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு இறையருளால் குருவெனத் தகுதிபெற்றோர், பசு, பாச அறிவுநிலைகளைக் கடந்து பதி ஞானம் பெற்றோர் ஆவர் என்பதும், அவர்களுடைய உள்ளங்களில் இறை ஒளி பிரகாசிக்கிறதென்பதும், அதனால்தான் அவர்களுடைய மனம், புத்தி, அந்தக்கரணங்கள் யாவும் சிவகரணங்களாகவே செயல்படுகின்றன என்பன போன்ற உண்மைகளும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அத்தகைய அபூர்வ சக்தி பெற்றவர்கள் சித்தர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். அவ் வரிசையில் வைத்துப் போற்றப்பட்ட சைவப் பெரியோர்களுள், திருஞானசம்பந்தர் போன்றோர் புரிந்த திருவிளையாடல்களைப் (miracles) பற்றிப் பெரிய புராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணம் தெளிவாக விளக்கியுள்ள நிகழ்ச்சிகளையும் கருத்துகளையும் கவனிப்பார்களாக. அவ் வுண்மைகள்தான் திருக்களிற்றுப்படியாரிலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன:

'துரியங் கடந்தசுடர்த் தோகையுடன் என்றும்
பிரியாது நிற்கின்ற பெம்மான் — துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான் செய்யும் தன்மைகளும்
ஆக்கியிடும் அன்பர்க் கவன்.' (69)

இச் செய்யுளில் கூறப்பட்டுள்ள கருத்துகளின் முக்கியத்துவம் சுருங்கக் கூறின், சித்தி பெற்ற ஆசிரியர் தோற்றுவிக்கும் அரிய செயல்கள் யாவும் இறைவனின் அருட் செயலே என்பதாம்.

குருவின் சிறப்பை மேலும் எடுத்துக்கூறும் தன்மையில் நீதிவெண்பாவில் காணப்படும் சில அரிய கருத்துகளும் கவனிக்கற்பாலன :

'ஈசனெதிர் நின்றாலும் ஈசனருள் பெற்றுயர்ந்த
நேசரெதிர் நிற்ப தரிதாம் — தேசுவளர்
செங்கதிர்முன் நின்றாலும் செங்கதிரவன் கிரணம்
தங்குமணல் நிற்பரிதே தான்.'

இறைவனுக்கெதிரில் நிற்பது எளிதாம்; இறைவன் அருளின் திரு உருவமாகிய குருவின் முன்னால், மாணவன் நிற்பது அரிதாம். இக் கருத்தை விளக்கும் தன்மையில் ஓர் உவமானமும் சொல்லப்பட்டுள்ளது : கடுமையான வெயிலிலும் பிரயாணம் செய்ய முடியுமாம்; ஆனால், அக் கிரணங்களால் தாக்கப்பட்டுச் சூடேறிய மணலில் நடக்கவே முடியாதாம். இவற்றின் மூலமாகக் குறிப்பிடப்படும் தத்துவம் யாதெனில், குருவானவர் ஆன்மசுத்தியும் அறிவு அடக்கமும் பெற்று, இறையருளின் திருவுருவமாகத் திகழ்

பவராம். எனவே, ஆன்ம சுத்தியும், அறிவு அடக்கமும் பெருமல் அவரை அணுகவே முடியாதாம். மனித வடிவில் குருவின் தோற்றத்தின்மூலமாக இறையருளின் பெருமையே வெளியிடப் படுகிறதாம். இவ் வரிய கருத்தினைச் சுருக்கமாகவும், விளக்கமாக வும் சிவஞானபோதம் சுட்டிக்காட்டுகிறது : 'இறைவன் குரு லிங்க சங்கமங்களில், தயிரின் நெய்போல் பிரகாசமாயும், ஏனைய இடங்களில் பாலின் நெய்போல் அப்பிரகாசமாயும் நிற்பன்' என்பதாம்.

வாழ்க்கையில் நாம் வணங்கிப் போற்றவேண்டிய தெய் வங்கள் நான்கு. அவற்றில் முதலாவது தாய், இரண்டாவது தந்தை, மூன்ருவது குரு, நான்காவதுதான் இறைவனுகும் என்று ஆன்ருேர் கூறியுள்ளனர். இறைவனை நான்காவது படியில் வைத்துள்ளதன் கருத்து யாதெனில், இறைவனைப் பற்றி அறிந்து கொள்வதற்குத் தகுதியும், ஞானமும் வேண்டப்படுவதே. எனி னும் முதலில் குறிப்பிடப்பட்டுள்ள இரு தெய்வங்கள், தாய்— தந்தை. நம்மைப் பெற்று வளர்த்து நல்லவனுகவும் வல்லவனுக வும் விளங்கவேண்டுமென்று ஆர்வத்துடனும் அன்புடனும் காப் பாற்றியவர்களைப் போற்றி வணங்கவேண்டியது நம்முடைய கடமையாகும். இவ்வாறு வீட்டில் ஆரம்பிக்கும் அவ் வுயர்ந்த பண்புகளும், பழக்கங்களுமே குருவை மதித்துப் போற்றி, வணங்க வும், அதன் விளைவாக இறைவனின் உண்மையை உணரவும் துணை புரியுமாம். சித்தாந்திகள் இறைவனைத் தாயாகவும் தந்தையாகவும் கருதினமையாலேயே 'அம்மையப்பன்' என்றே அழைத்தனர்போலும்! இறைவனே முதல் குரு என்பதும், உயிரினங்களின் நல்வாழ்வுக்காக இறையருளால் தோன்றியவர் களே குருக்கள் எனவும் திருமூலர் எடுத்துக் கூறியுள்ள அரிய கருத்துகளையும் வாசகர்கள் கவனிப்பார்களாக.

'குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவம் என்பது குறித்தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே.'

அம் முதற் குருவாகிய இறைவனைச் சிவம் என்று குறிப்பிட்டனர் சித்தாந்திகள். பேரின்பத்தைப் பேராவலுடன் தேடிவரும் மாணவ மணிகளை ஆலமரத்தடியில் அமரச் செய்து உண்மை விளக்கம் தருவது பண்டைத் தமிழ் மரபாம். அம் மரபுக் கிணங்க, இறைவனே முதல் குருவாகத் தோன்றிக் குருந்த மரத்தடியில் அமர்ந்து, யோகநிலையிலிருந்து தமக்கு உண்மை உபதேசம் செய்தார் என்று மாணிக்கவாசகர் கூறியுள்ளார். இக் கருத்

தினையே மெய்கண்டதேவர் 'தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்த' என எட்டாம் சூத்திரத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தீக்கை (தீட்சை)
(Initiation)

சமய வாழ்வில் ஆன்மாக்களை மலஉபாதைகளினின்று விடுவித்துச் செந்நெறியில் செலுத்துவதற்குக் குருவின் பணி எவ்வளவு சிறப்புடையதோ அதைப் போன்றதே தீக்கையுமாகுமாம். சுருங்கக் கூறின், ஆன்மாக்களைத் தீவிரமான சமய வாழ்வில் ஆற்றுப் படுத்துவதே தீக்கை எனப்படுமாம். ஏனென்றால் அவரவர்களின் கன்மத்திற்கேற்ப ஆணவம், மாயை ஆகிய மலங்களால் வெவ்வேறு தன்மையுடைய மன நிலைகளையும், வாழ்க்கைச் சூழ்நிலைகளையும் பெற்றவர்களுக்குத் தகுந்தவாறு சமய வாழ்வில் ஆற்றுப் படுத்தவேண்டிய பணி குருவினுடையதாகும். அதனால்தான், சைவசித்தாந்தத்தில் ஏழுவகையான தீக்கைகள் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன. அவையாவன : பார்த்தல், தொடுதல், சொல்லுதல், நினைத்தல், நூன்முறை, யோகம், ஔத்திரி தீக்கைகளாம். இவ் வேழுவகையான தீக்கைகளை விளக்குவோமாக. கருடபாவனையினாலே விடந்தீர்ப்பதுபோல் சிவபாவனையினாலே குரு மாணவனைப் பார்த்துப் பாசநீக்கம் செய்தல் 'பார்த்தல்' என்னும் (நோக்கு) தீக்கையாகும். செம்பைப் பொன்னாக்குதல்போல, குரு தம்முடைய கையைச் சிவன்கையாகப் பாவித்துப் பூசித்து, அதனால் மாணவனைப் பரிசித்துப் பாசநீக்குதல், 'தொடுதல்' என்னும் தீக்கையாம். பதினொரு மந்திரமும், ஐந்தெழுத்தும் அறிவித்துப் பாசத்தை நீக்கல் 'சொல்லுதல்' தீக்கையாம். குருவானவர் தாம் பெற்ற தவ வலிமையால், மாணாக்கன் இதயத்திற் புகுந்து, அவனது அறிவைத் தம்முடைய உள்ளத்திலே சிவனறிவோடு கலக்கச் செய்து பின்னர் அதனையே மாணாக்கனுடைய எண்ணத்திலும் நிறுத்தலையே 'நினைத்தல்' தீக்கை என்று கூறுவர். ஆகமப் பொருளைப் போதித்தல் 'நூன்முறை' தீக்கையாம். யோகப் பயிற்சி எய்துவித்தல் 'யோகதீக்கை' எனப்படுமாம். ஔத்திரி என்பது ஓமத்தின் முன்னிலையில் செய்யப்படுவதாம். மனத்திலே 'ஓம்' என்ற ரீங்காரம் நிகழ்த்திசெய்யின் 'ஞானதீக்கை' எனவும், 'சத்தி தீக்கை' எனவும் பெயர் பெறுமாம். புறத்தே ஓமம் முதலியன நிகழ்த்திச் செய்யப்படின், அது 'கிரியாதீக்கை' எனவும், 'மாந்திரிக தீக்கை' எனவும் பெயர்பெறுமாம். மேலும், அகத்திலாதல் அல்லது புறத்திலாதல் ஓமத்தோடு கூடிச் செய்யப்படுந் தீக்கை, சமயம், விசேடம், நிருவாணம் என மூவகைப்படுமாம்.

சமய தீக்கையாவது சைவ சமயத்திற்குரிய தீக்கையாம். விசேட தீக்கை என்பது, சிவபெருமானைப் புறத்தும் அகத்தும் பூசனை புரிவதற்குத் தகுதியளிக்கும் தீக்கையாம். நிருவாண தீக்கை என்பது ஆறத்துவாக்களிலும் உயிர்க்குள்ள கன்மபோகங்களை ஒரு காலத்திலேயே புசிப்பித்துத் தொலைத்து, அதனை வீடுபேற்றிற்குரிய தாக்கும் முறையாகுமாம்.

இவ்வாறு விளக்கப்பட்டுள்ள பலவகையான தீக்கைகளும் கொண்டுள்ள அடிப்படை நோக்கம் ஒன்றேயாகுமாம். அது மல உபாதைகளிலிருந்து ஆன்மாக்களை விடுவிப்பதே. அக் கருத்தினையே குறிப்பிட்டுக் கூறுவது நிருவாண தீக்கையாம். நிருவாணம் என்பது, மலஉபாதைகளினின்று நீங்கிய ஆன்மாக்களின் தகுதியினையும் ஒழுக்க நிலையினையுமே குறிப்பதாம் என்பர். ஆறத்துவாக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது பின்வருவனவாம் : மந்திரம், பதம், வருணம், புவனம், தத்துவம், கலை.[50] இவ்வாறத்துவாக்கள் ஒன்றுக்கொன்று இணைபிரியாது, ஒன்றுக்குள் மற்றவை அடங்குவனவாம். உதாரணமாகக் கூறின், மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவை பதம், வருணம், புவனம், தத்துவம் என்பர். கலைகள் திரோதானசத்தியில் அடங்கும் என்பர். திரோதான சத்தி சிவத்தில் அடங்குமாம். இவ்வாறு திரோதான சத்தி சிவத்தில் அடங்கும் நிலையில், ஆன்மா மலநீக்கம் பெற்று, இறையருளுக்குப் பாத்திரமாகிறதென்ற உண்மையும் சொல்லாமலே விளங்கும். எனவே, ஆறத்துவாக்களின் பிணைப்பிலிருந்து ஆன்மாக்கள் விடுதலைபெறுவதற்கே நிருவாணதீக்கை அவசியப்படுகிறதாம். நிருவாண தீக்கைக்குரிய ஆன்மாக்களையும் மூன்று வகையாகப் பிரிப்பர். உத்தமர், மத்திமர், அதமர் என்பதாம். அம் முப் பிரிவினர்களும் அவரவர்களுடைய தகுதிக்கேற்றவாறு ஞானதீக்கை அல்லது கிரியா தீக்கை குருவினால் அருளப் பெறுவர் என்பதாம். அவ்வாறு அருளப்படும் தீக்கையினால், ஆன்மாவைக் கட்டுப்படுத்தியுள்ள ஆறத்துவாக்களில் சேர்ந்துள்ள சஞ்சித கன்மம் நீக்கப்படுகிறதாம். இவ்வாறு கன்மம் நீங்கி, மாயை மயக்குதலை நீங்கியுள்ள நிலையில், ஆணவம் தன் வலுவை இழந்து விடுகிறதாம். அதற்கு உவமானமாகக் கூறப்பட்டுள்ளது, எரிக்கப்பட்ட விதை மீண்டும் தளிர்ப்பதில்லையாம். இவ்வாறு எல்லாவிதத் தளைகளினின்றும் நீங்கி இறையருளுக்குப் பாத்திரமாக ஆன்மா அமையும் என்பர். இவற்றிலிருந்து தீக்கையின் அவசியமும், அதன் சிறப்பும், குறிப்பாகச் சமய வாழ்வில் பிரவேசித்து அதன் உண்மையை உணர முற்படுவோர் அனைவருக்கும்

[50] மந்திரம் - 11; பதம் - 81; வருணம் - 51; புவனம் - 22; தத்துவம் 36; கலை - 5 மொத்தம் - 206.

நன்கு விளங்குவதாகும். சமய வாழ்வில் அதிதீவிரமாகப் பங்கு கொள்வோருக்கும் நிருவாண தீக்கை ஞான தீக்கையாக அமைந்து, அது அதிகாரத்தோடு கூடியதும், அதிகாரத்தோடு கூடாததுமென இருவகைப்படுமாம். முன்னது சிகாச் சேதத்தோடு (மொட்டை அடித்துக்கொள்ளல்) செய்யப்படின் 'சிவதருமிணி' எனப்படுமாம். சிகாச் சேதமில்லாது செய்யின் 'உலக தருமிணி' எனப்படுமாம். இவற்றுள் முன்னது துறவிக்கும், பின்னது இல்லறத்தானுக்குஞ் செய்யப்படுவதாம். இன்னும் நிருவாண தீக்கை, சத்தியோ நிருவாணம், அசத்தியோ நிருவாணம் என இருவகைப்படுமாம். சத்தியோ நிருவாணம், செய்தவுடன் முத்தியைப் பயப்பதாம். அசத்தியோ நிருவாணம் தேகமுடிவில் முத்தி தருவதாம். உமாபதி சிவாசாரியரால் தீக்கைப் பேறெய்திய பெற்றான்சாம்பான் என்பவர் ஞானதீக்கை பெற்றவுடன் முத்தி யெய்தினர் என்றும் கூறப்பட்டுள்ளதை வாசகர்கள் கவனத்திற்கொள்வார்களாக. மேலும், சமயவாழ்வில் அதிதீவிரமாகப் பங்குகொண்டு, இறையருளுக்குப் பாத்திரமாகி, சிவப்பிரகாசத்தைப் பெற்ற சைவப் பெரியோர்களையே குருமகாசந்நிதானங்களாகவும் அமைப்பித்து ஆதீனங்கள் செயல்பட்டு வருவதும் அறியற்பாலது.

12. சைவ சமய நெறிகள்

அன்பை அடிப்படையாகக் கொண்டு அறநெறியில் அமைந்த இல்லற வாழ்க்கை, சமய வாழ்விற்கு முதற்படியாகும் என்னும் கருத்து முன்பே எடுத்துக் கூறப்பட்டது. வாழ்க்கை என்று கூறுவது பொதுவாகவும், இல்லறவாழ்க்கை என்று குறிப்பிடுவது சிறப்பாகவும் சுட்டிக்காட்டுவதாகும். எனவே, அச் சிறப்பினை எடுத்துக்காட்டுவதற்குச் சில நெறிமுறைகளும் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. அந் நெறி முறைகள் மேலும் வளர்ச்சியடைந்து, சீர்மையாகச் செழித்து வளமான வாழ்வைத் தருவதே சமய வாழ்வாகும். அவ்வாறான தீவிர கோட்பாடுகளோடு சமய வாழ்வைப் பின்பற்றும் நிலையில்தான், இறைவனின் தன்மையை உண்மையாக உணர முடியும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளதும் கவனிக்கற்பாலது. அவ்வாறான தீவிர சமய வாழ்வை ஏற்றுக் கொண்டு, தங்களைத் தாங்களே நல்ல முறையில் நடத்திக்கொள் ளும் அன்பர்கள் பக்தர்கள் எனவும் அழைக்கப்படுவர். அவர் களுடைய வாழ்வினைத் துன்பமின்றித் துயரமின்றி நடத்திச் செல் வதும் இறைவனின் கடமை என்பர். இக் கருத்து எல்லாச் சமயங் களுக்குமே பொருந்தும். எனினும், சிவத்தையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு இறைபணி செய்யும் அன்பர்களைச் சைவர் என்று குறிப்பிடுவதுண்டு. சைவர் என்ற சொல் புலால் உண்ணா தவர் என்னும் கருத்தினையும் எடுத்துக்காட்டுவதுண்டு. அவ்வித ஒழுக்கமும் சமயநெறியில் இன்றியமையாததாகும். எனினும், ஒருவன் உண்பதையும் உடுப்பதையும் வைத்துக்கொண்டு, அவ னுடைய ஆன்மிக வாழ்வினை எடைபோடுவது பொருத்தமுடைய தன்று. அதனால்தான், உள்ளத்தில் எக் கருத்தினைக்கொண்டு வாழ்க்கையை நடத்துகின்றனரோ அதற்குத் தக்கவாறே அவர் களுடைய உயர்வும் ஏற்படும். இக் கருத்தினை வலியுறுத்திக் கூறும் திருக்குறளும் கவனிக்கற்பாலது:

‘வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு’. (595)

மனிதனின் உண்மையான உயர்வை நாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், அவனுடைய வெளிநடவடிக்கைகளிலிருந்து அல்ல; அவனுடைய உள்ளத்தில் உலாவும் உயர்ந்த கருத்துகளும் அவற்றைச் செயல்படுத்துவதில் அவன் கொண்டுள்ள ஊக்கமும், ஆக்கமுமே. அதனால்தான், உயர்ந்த எண்ணங்களை அமைத்துக் கொள்ளவேண்டும். அவற்றைச் செயலாக்க முயலவேண்டும். வெற்றி காணாவிட்டாலும், உயர்ந்த எண்ணங்கள் நிச்சயமாக உயர்வையே ஏற்படுத்தும் என்ற கருத்தினை வலியுறுத்திக் கூறியுள்ளார் திருவள்ளுவர்:

'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.' (596)

எண்ணங்களிலெல்லாம் உயர்ந்த எண்ணங்கள் இறைவனைப் பற்றிய எண்ணங்களே என்று கூறுவர் சான்றோர். இறைவனைப் பற்றி எண்ணுவதோடு மட்டுமல்லாமல், இறைவனுக்காக நற்செயல்கள் புரிவதும் சாலச்சிறந்ததென்பர் சான்றோர்கள். உதாரணமாகக் கூறுவேனாகில், பக்தர்கள் இறைவனுக்கு அளிப்பது மலர்களைத்தான்; இறைவனுக்கு நாம் அளிக்கவேண்டியதொன்றுமில்லை. யாவற்றையும் இறைவனிடமிருந்துதான் நாம் பெற விருக்கிறோம். எனினும், முன் குறிப்பிட்டவாறு, உள்ளத்திலுள்ள எண்ணங்கள் வெளியிடப்படுவதே செயல்களாகும். இறைவனின் திருவுருவத்திற்கு மலர் இட்டு வணக்கம் செலுத்துதல் நற் செயலாகும். இதனால், பக்தன் இறைவனிடத்திலே நேரடித் தொடர்பை ஏற்படுத்திக்கொள்கிறான் என்றே கூறலாம். இவ்வாறு இறைவணக்கம் செய்வதற்குக் கோயில் சிறந்த இடமாகக் கருதப்படுகிறது. தங்களுடைய இல்லங்களிலேயே தனியாக அமைக்கப்பெற்ற அறையில் இறைவனின் திருவுருவத்தை அமைத்துப் பூசைகள் நடத்தப்பட்டன என்பதற்குச் சான்றுகள் உண்டு. இன்றைக்கும் வசதி படைத்த இந்து இல்லங்களில் இம்முறை நடைபெற்று வருகிறதென்பதும் உண்மையாகும். சிறப்பாக, சைவருடைய வாழ்க்கையில் சிவ சின்னங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. புறத்தே சரீரத்திலே அணிகின்ற திருநீறும், உருத்திராக்கமணி என இரண்டும், அகத்திலே சிந்திக்க வேண்டிய திருவைந்தெழுத்தும் குறிப்பிடத்தக்கவையாம்.

இந்து சமயங்கள் எல்லாவற்றிற்கும் பொதுவான அறநெறிகள் மனுதரும சாத்திரத்திலும், இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. எனினும், சைவ சமயத்தின் ஒழுக்க நெறிகள் வேறு பல நூல்களில் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன வென்பது முன்பே குறிப்

பிடப்பட்டது. ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, ஒழிவிலொடுக்கம் முதலியவை முக்கியமான நூல்களாகும். சமய நெறிகளைப் பின்பற்றுவதற்கு முதற்படியாகவுள்ளதீ இல்லற தருமமே என்பதை முன்பே குறிப்பிட்டோம். இல்லற தருமத்தைக் கட்டிக் காப்பாற்றும் கடமைப் பொறுப்புடன், அவற்றிற்குத் தேவையான அறநெறிகளைச் சுருக்கமாகவும், விளக்கமாகவும் எடுத்துக்கூறிய சான்றோர்களுள் திருவள்ளுவரையும் ஔவையாரையும் உதாரணமாகக் குறிப்பிடலாம். அப் பெரியோர்கள் எடுத்துக் கூறியுள்ள கருத்துகள் மக்களினத்திற்கே நற்பயன் விளைவிப்பதாம். அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ள வாழ்க்கை நெறிகளைப் பின்பற்றும் நிலையில்தான், தனிப்பட்டோரின் குடும்ப வாழ்க்கையும், சமூக வாழ்க்கையும் ஒன்றற்கொன்று இடைவிடாது இணைந்துள்ளது என்ற உண்மையும் நன்கு விளங்கும். அதனால்தான், சமூக வாழ்க்கையின் நன்மைக்காகவே ஒவ்வொரு குடிமகனும் வாழவேண்டும் என்ற பண்பாட்டினையும் வலியுறுத்தினர். இந் நிலையில் தனிப்பட்டோரின் வாழ்க்கையாயினும், சமூக வாழ்க்கையாயினும் செம்மையாக இயங்கவேண்டுமென்றால், அவற்றைப் பாதுகாத்துக் கண்காணிக்க நல்ல அரசும் அமையவேண்டுமென்பதும் சொல்லாமலே விளங்கும். அரசியல் வாழ்க்கையைப் பற்றித் திருவள்ளுவர் எடுத்துக் கூறியுள்ள கருத்துகள் அநேகம். ஆனால், அவற்றைப்பற்றி விளக்கிக் கூறுவது இந் நிலையில் தேவையற்றதாகும். இருந்தபோதிலும், பண்டைத் தமிழர்கள் வாழ்வில் தனிப்பட்ட குடும்பத்தினருக்குத் தேவையான ஒழுக்கவியலும் (Morals), சமூகத்திற்குத் தேவையான பொருளியல்(Economics), அரசியல் (Politics) ஆகிய அனைத்தும் செம்மையாகச் செயல்பட்டு விளங்கியதற்குச் சிறப்பான காரணம், அவை அனைத்தும் சமயவாழ்வைப் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டு இயங்கினவென்பதையும் கவனிக்கற்பாலது. தனிப்பட்ட குடிமகனாயினும், செல்வச் சீமானாயினும், அரசாளும் கோமானாயினும் அவர்கள் அனைவரும், தத்தம் கடமைகளைக் குறைவின்றிச் செய்வதே இறைபணியாகும் என்னும் உயர்ந்த கொள்கையுடன் வாழ்ந்தனர். அதனால்தான், அவரவர்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்வதே புண்ணியம் என்றும், கடமையிலிருந்து தவறுதல் பாவம் என்றும் கருதினர். அக் கருத்தினை வலியுறுத்தும் தன்மையிலேயே, பாவ, புண்ணியச் செயல்களைப் பற்றி ஆகமங்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன வென்பதும் கவனிக்கற்பாலது. நாம் செய்யும் காரியங்கள் — சொல்லாலும், செயலாலும் மனத்தாலும் செய்யப்படுவன — வீண் போவதில்லை. அதனால், நன்மையும் — புண்ணியம், தீமையும் — பாவம் விளைகின்றன. எனவே, நற் செயல்களைத் தேர்ந்தெடுத்து நல்லன செய்வதே

மனிதத் தன்மைக்கு உகந்தது. இக் கருத்தினை வலியுறுத்துவதே சமயமாகும். எனவே, இல்லறவாழ்வும், சமய வாழ்வும் வெவ்வேறல்ல. அவை ஒன்றோடொன்று இணைந்தது என்பதே சைவ சித்தாந்தத்தின் கொள்கையுமாம். அதனால்தான், அவரவர்களின் தன்மைகளுக்கேற்ப இல்லறத்திலிருந்துகொண்டே சமய நெறிகளையும் அநுட்டிக்குமாறு வகை செய்யப்பட்டுள்ளனவாம். அவரவர்களின் தன்மைகளுக்கொவ்வ நெறிகளை அநுட்டிப்பதின்காரணமாகப் பல நெறிகள் தோன்றுவது இயல்பாயினும், எல்லா நெறிகளின் முடிபுகளும் ஒன்றே என்னும் பெருநோக்குடன், சிறப்பாக நான்கு நெறிகளைச் சைவ சித்தாந்தம் ஏற்றுக்கொள்ளுகிறது. மேலும், அந் நான்கு நெறிகளும் ஒன்றுக்கொன்று இயல்பாகவே இணைந்துள்ளதாம். அவற்றை அநுட்டிப்போர் உள்ளங்களில் அன்பும், அருளும் இடம்பெற்று, நற்காரியங்களையே செய்வதற்கு ஊக்குவிப்பதால் அவர்களிடம் தன்னலம் (egoism) குறைந்து பொதுநலமே (altruism) தழைத்தோங்குமாம். அவ்வாறு அன்பும், அறமும் செம்மையான முறையில் இணைந்து செயல்படும் பொழுதுதான் உள்ளத்தில் ஒளி ஏற்படும்; அவ் வொளியால்தான் இறையுண்மையைக் காணமுடியும். அதனால்தான், இல்லற தருமத்தை ஏத்திக் கூறிய திருவள்ளுவர், அன்பையும் அறத்தையும் இல்லறத்தைத் தாங்கும் இரு தூண்களாக அமைத்துள்ளார் என்பதும் அறியற்பாலது:

> 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது.' (45)

சைவ சமயத்தின் நான்கு நெறிகளைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று கூறுவர். இந் நான்கு நெறிகளும் ஒன்றோடொன்று இயல்பாகவே இணைந்தது மட்டுமல்லாமல், ஒன்றைவிட மற்றொன்றின் வளர்ச்சியும், அதனை அநுட்டிப்போரின் ஆன்ம வளர்ச்சிக்கேற்ப அமைந்துள்ளதாம். இக் கருத்தினை வலியுறுத்தும் முறையில், அந் நான்கு நெறிகளும் வேறு பெயர்களையும் கொண்டுள்ளனவாம். அவையாவன : தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் என்பதாம். இப் பெயர்களின் பொருள் விளக்கிக் கூறாமலேயே விளங்கும் தன்மையுடையனவாம். எனினும், அவற்றிலிருந்து வெளிப்படையாக விளங்கும் கருத்து யாதெனில், அந் நெறிகளின் நிலைகளிலுள்ளோர் பெறும் இறையுண்மை உணர்வின் வளர்ச்சியையே குறிப்பதாம் என்பர். இவ்வாறு முதற்படியாகக் கூறப்பட்டுள்ள தாசமார்க்கத்தில் ஆன்மாவுக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பு ஓர் தொழிலாளிக்கும் முதலாளிக்கும் நேசமுறையில் ஏற்படும்

தொடர்பை ஒத்ததாம். இரண்டாவது நிலையாகக் கூறப்பட்டுள்ள சற்புத்திர மார்க்கத்தில் ஆன்மாவுக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பு, பெற்ற பிள்ளைக்கும் தகப்பனுக்கும் ஏற்படும் உறவை ஒத்ததாம். இந் நிலையில் ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் ஏற்படும் உறவு மிகவும் நெருக்கமானதென்பதும், அதற்கு ஆக்க மாகவுள்ளது அன்பே என்ற உண்மையும் கவனிக்கற்பாலன. மூன்றாவது நிலையாகக் கூறப்பட்டுள்ள சகமார்க்கத்தில், ஆன்மா வுக்கும், இறைவனுக்கும் அமையும் உறவு, உண்மையான இரு நண்பர்களுக்கிடையே ஏற்படும் உறவைப் போன்றதாம். நான்காவது நிலையாகக் கூறப்பட்டுள்ள சன்மார்க்கத்தில் ஆன்மா வுக்கும் இறைவனுக்கும் ஏற்படும் உறவு மிகவும் அந்தரங்க மானதும் ஆழமானதும் என்பர். அந் நிலையின் தன்மையை எடுத்துக்காட்டுவதற்குக் கணவன்—மனைவி உறவையும் உதாரண மாகக் கூறுவதுண்டு. இவ்வாறு நான்கு விதமான உறவுகளைக் கூறப்பட்டுள்ளதன் நோக்கமே ஆன்மாவின் சமய வளர்ச்சியில் ஏற்படும் பக்குவநிலையை உணர்த்துவதற்கேயாம் என்பதும் கவ னிக்கற்பாலது. மேலும் அந் நான்கு நிலைகளும் சமூக வாழ்வினை அடிப்படையாகக் கொண்ட இல்லற நெறியில் இயல்பாகவே அடையப்பெறுவதனுல்தான், நான்கு பெயர்களைத் தாங்கியுள்ளன வாம். இவ்வாறு சமய வாழ்வில் தீவிர நாட்டம் கொண்டவர்கள் அவரவர்களின் தன்மைகளுக்கேற்பவும், அதற்குப் பொருத்தமான நிலைகளைப் பின்பற்றிச் செல்கையில், ஊண், உறக்கம் ஆகியவற்றில் கட்டுப்பாடுகள் அமைத்துக்கொள்வது பொதுவாகப் பயனுடைய தாகுமென்பர். சமயநெறியிற் சென்று ஆன்ம வளர்ச்சியில் தீவிர நிலைகளைப் பெற்றோர், கொலை, களவு ஆகியவற்றின் எண்ணங்களி னின்றும் நீங்கியிருத்தல் சாலச் சிறந்ததெனக் கூறுவர். இவ்வாறு சைவ சமய நெறிகளின் பொதுவான தன்மைகள் இதுகாறும் எடுத்துக் கூறப்பட்டன. இனி அவற்றின் சிறப்பினை ஆய்வோமாக.

சைவ சமய நெறிகளில் முதற்படி எனக் கூறப்பட்டுள்ளது தாசமார்க்கமாகும். இதனைச் சரியை என்றும் குறிப்பிடுவர். இந் நெறியினைப் பின்பற்றுவது எளிதாகையாலும், இதில் வலி யுறுத்தப்பட்டுள்ள கடமைகள், இல்லத்திலிருந்துகொண்டே சுலப மாக அனுசரிக்க முடிவதாலும் இதனை முதற்படி என்று அழைப்பர். இந் நெறியில் நின்றோர் செய்யவேண்டிய கடமைகள் செய்யுள்மூலமாகவே எடுத்துக் கூறப்பட்டுள்ளன:

'எளியன தீப மிடல்மலர் கொய்தல்
அளிதின் மெழு கலலகது தூர்த்தல் வாழ்த்தல்
பளிமனி பற்றல் பன்மஞ்சன மாதி
தளிதொழில் செய்வது தான்றச மார்க்கம்.'

இறைவனின் திருவுருவத்திற்கு முன் விளக்கேற்றி வைத்தல், மலர்கொண்டு வணங்குதல், இறைவனின் பெருமையைப் புகழ்தல் ஆகிய கருத்துகளே இச் செய்யுளில் குறிப்பிடப்பட்டுள்ளன வாம். அப் பணிகளைக் கடமை உணர்வோடு செய்வோரின் உள்ளங்களில் ஆன்ம உணர்வு வளர்ச்சி அடைவதன் வாயிலாக இறை உண்மையை உணர்வர் என்பதாம். அந் நிலையினைச் 'சாலோகபதம்' என்று கூறுவர்.

இரண்டாவது படியாகக் கூறப்பட்டுள்ளது சற்புத்திர மார்க்கமாகும். இந்நெறிக்கு உரிய கடமைகளாவன:

'பூசித்தல் வாசித்தல் போற்றல் சபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை யழுக்கின்மை
நேசித்திட் டன்னமுநீ சுத்தி செய்தல் மற்று
ஆசற்ற சற்புத்திர மார்க்க மாகுமே.'

இச் செய்யுளின் பொதுவான கருத்துரை : உள்ளத் தூய்மையுடனும், உண்மையான அன்புடனும் இறைவனுடைய திருநாமத்தைச் செபித்தல், பூசை செய்தல், அன்னமிடல் போன்ற நற்காரியங்களைச் செய்தலாம். முதற்படியில் உள்ளவர்களைவிட இரண்டாவது படியில் நிற்போரின் ஆன்ம வளர்ச்சி தீவிரமானதென்பது நன்கு விளங்கும். எனவே, அவர்களுடைய தூய உள்ளங்களில் இறைவனின் ஒளி பிரகாசிக்கும் என்பர். அந் நிலையினைச் 'சாமீப பதம்' என்று கூறுவர். இக் கருத்தினை ஓர் உவமானத்தின்மூலமாக விளக்கிக் கூறுதல் பயனுடையதாகும் எனக் கருதுகிறேன். இறைவனுடைய சாம்ராச்சியத்தின் எல்லையின் நுழைவில் உள்ளது முதற்படி என்பர். இரண்டாவது படி எல்லைக்குள்ளேயே அமைந்திருப்பதால், இரண்டாவது படியில் சென்றுவிட்டவர்கள், இறைவனுடைய சாம்ராச்சியத்தில் இடம் பெற்றுவிட்டனர் என்பதாம். மேலும், இல்லறக் கடமைகளையும் பொதுக்கடமைகளையும் செயலாற்றிக்கொண்டே, தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கமெனப்படும் இவ்விருநெறிகளையும் அநுட்டிக்க முடியும் என்ற உண்மையையும் சொல்லாமலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால்தான், பண்டைத் தமிழர்களின் இல்லங்களில் அமையப்பெற்ற பல அறைகளில் ஒன்று இறைவனுக்காகவே ஒதுக்கப்பெற்று, அதில் இறைவனின் திருவுருவத்தை அமைத்துப் பூசை முதலியன நடத்தினர் என்பதும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மேலும், ஊரின் நடுவில் அமையப்பெற்ற கோயிலுக்கும் பொதுவாகச் செல்வர். சிறப்பாகத் திருவிழாக் காலங்களிலும், முக்கிய நாள்களிலும் மக்கள் எல்லோரும் கோயிலில் கூடி இறைவனைத் துதித்துப் பாடினர், ஆடினர் என்ற செய்தி

களைச் சங்ககால நூல்களிலிருந்தும் நாம் அறிகிறோம். இருந்த போதிலும் மாடமாளிகைகளை அமைத்துக்கொள்ளும் வசதிபெற்ற செல்வந்தர்கள், இறைவனின் திருவுருவத்தை அமைத்துப் பூசிப் பதற்கு ஓர் அறையையும் அமைத்துக்கொண்டனர் என்ற உண்மை யும் தெரியவருகின்றது. இம் மரபு இன்றைக்கும் இந்துக்க ளிடையே பொதுவாகவும், தமிழர்களிடையே சிறப்பாகவும் நிலவி வருகின்றதென்பதையும் நாம் அறியலாம்.

மூன்றாவது படியாகக் கூறப்பட்டுள்ளது சகமார்க்கம்; இதன் தன்மைகளாவன :

'ஆதார சோதனை யானாடி சத்திகள்
பேதாதி யீரெண் கலந்து விண்ணொளி
போதா லயத்துட் புலன்கரணம் புந்தி
சாதார ணங்கெட லாஞ்சக மார்க்கமே.'

இச் செய்யுளில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துகள் மனித உள்ளத் தில் ஏற்படுத்தவேண்டிய சீர்மையையும், அதன் விளைவாகத் தெரிந்துகொள்ளவேண்டிய சத்திகளையும் பற்றியனவாம். முதல் இரண்டு படிகளையும் கடந்த பக்குவதாரிகளே மூன்றும் படியில் பிரவேசிக்கவும், அவற்றின் தன்மைகளைப் பயிற்சிசெய்து பயனடை யவும் முடியும். மனக்கட்டுப்பாடும் சீரான சிந்தனையும் மூன்றும் நிலையின் சிறப்புத் தன்மைகளாகும். அதனால்தான், மூன்றும் படியை, 'யோக மார்க்கம்' என்றும் பொதுவாகக் குறிப்பிடுவர். இந் நிலையில் நிலைத்து நின்று இறைவனையும் ஓர் யோகியாகவே அறியவியலும் என்பதும் கவனிக்கற்பாலது. அதனால்தான், இம் மார்க்கத்தைச் சகமார்க்கம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். அதன் கருத்து, ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் ஏற்படும் உறவு ஆப்த நண்பர்களுக்கிடையில் ஏற்படும் உறவைப்போன்றதே என்பதாம்.

யோகப் பயிற்சியே மூன்றும்படியின் சிறப்பாக அமைந் துள்ளது. அப் பயிற்சிகளாவன : இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணம், தியானம், சமாதி என எட்டு வகைப்படுமாம். இவற்றில் முதல் இரண்டு அநுட் டானங்களும் ஒழுக்கவியலைப் பற்றியதாம். அதிலும் முதன் முதலில் குறிப்பிடப்பட்டுள்ளது தீய செயல்களில் ஈடுபடாமை; அதாவது கொல்லாமை, பொய் பேசாமை, களவு செய்யாமை, புறங்கூறாமை ஆகியவற்றைச் சொல், செயல், நடத்தை ஆகிய மூன்று தன்மைகளிலும் அநுட்டிப்பதாகும். அதற்குப் பிறகுதான் நற் செயல்களையே அநுட்டிப்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. அவை யாவன : உண்மை பேசுதல், பிரம்மசரியம், கடவுள் நம்பிக்கை,

இறைவனுடைய திருநாமத்தைச் செபித்தல், கனிவுடைமை, தெளிவுடைமை, துணிவுடைமை முதலியனவாம். ஊண், உறக்கம் ஆகியவற்றில் குறைந்த நேரத்தையும், தவமிருத்தலில் அதிக நேரத்தையும் பயன்படுத்துவதும் வலியுறுத்தப்பட்டுள்ள தாம். மேலும், யோகப் பயிற்சியில் எடுத்துக் கூறப்பட்டுள்ள அனைத்துப் பயிற்சிகளிலும், முதல் இரண்டு பயிற்சிகளும் சமய வாழ்வுக்கு மிகவும் அவசியமானவையாகும் என்பதும் கவனிக்கற் பாலது. ஏனென்றால், அப் பயிற்சிகளிரண்டிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர்கள் மேலும் கடினமாக யோகப் பயிற்சிகளைச் சுலப மாகப் பயில முடியுமாம். அதன் விளைவாக உடலை உறுதிப் படுத்தி, உள்ளத்தைக் கட்டுப்படுத்தி, மனவெழுச்சிகளைச் சீராக் கிச் செம்மையான சிந்தனையையும், அதன் வாயிலாக உள்ளொளி யையும் பிரகாசிக்கச் செய்யலாம். யோகநிலையில் இறைவனோடு தொடர்புகொள்வதால், இதனைச் 'சாரூபபதம்' என்று கூறுவர்.

நான்காவது படியினைச் சன்மார்க்கமென்று கூறுவர். இதன் தன்மைகளாவன:

'பசுபாசம் நீங்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சம் கசியக் கசிவித்து
தெரியாத உண்மைச் சொரூபோத யத்துற்று
யசைவான தில்லாமை யானசன் மார்க்கமே.'

இச் செய்யுளில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துகள் சமய நெறியில் வளர்ச்சிபெற்ற ஆன்மாவின் அறிவுத் திறனையே வலியுறுத்துவ தால் இந் நான்காவது படியினை ஞானமார்க்கமென்றும் அழைப் பர். அறியாமையிலிருந்து விடுபட்ட ஆன்மா, ஞான சொரூ பத்தை உணருகிறது. அவ்வாறு உண்மையை உணர்ந்ததனால், உள்ளத்தில் உண்மையான அன்பு மிளிர்கிறது. இவ்வாறு உண்மை ஞானம், அன்பு ஆகியவற்றின் சொரூபியான இறைவனிடம் ஆன்மா ஐக்கியமடைகிறதென்பதாம். இதனைச் 'சாயுச்சிய பதம்' என்று கூறுவர்.

இவ்வாறு மல உபாதைகளின் பிடிப்பிலிருந்து விடுதலை பெற்று, அறியாமை நீக்கத்தால் ஞான ஒளியைப் பெற்ற ஆன்மா வுக்கும் இறைவனுக்கும் ஏற்படும் உறவினைப் பற்றிச் சிறிது விளக் கிக் கூறுதல் பயனுடையதாகும் என்று கருதுகிறேன். உண்மை விளக்கத்திலும் இக் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது அறியற் பாலது. மனவாசகங்கடந்தார், வினு-விடை முறையில் இக் கருத்தினை விளக்கியுள்ளார். அவற்றின் பொதுவான விளக்கவுரை

பின்வருவனவாம் : இறைவனோடு ஒன்றாக இணைவதன்பொருட்டு ஆன்மா இதுகாறும் முயன்று பயனடைந்துள்ளது என்று கூறுவோமாகில், இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறார் என்னும் கருத்தை மறுப்பதாக அமையும். எனவே அக் கருத்து பொருத்தமாக இல்லை என்பதாம். அதைப்போலவே, இறைவன் ஆன்மாவை இணைத்துக்கொண்டார் என்று கூறுவோமாகில், அதுவரைக்கும் இறைவன் வேறு, ஆன்மா வேறு என்னும் கருத்து வலிமை பெறுவதாகும். அதனையும் ஏற்றுக்கொள்ள இயலாதாம். அவ்வாறாஞல் உண்மைநிலை என்ன? என்னும் வினாவிற்கு விடையளிக்கும் தன்மையில் ஓர் உதாரணம் எடுத்தாளப்படுகிறது. கண் பார்வை இழந்தவன், பார்வையைப் பெற்ற நிலையில், தன்னைச் சூழ்ந்துள்ள சூரிய ஒளியைக் காண்பதைப் போலாம். இக் கருத்தினை மெய்கண்டதேவரும், சிவஞானபோதத்தின் ஐந்தாம் சூத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார் என்பதும் அறியத்தக்கது. சூரியனுடைய ஒளியைக் கொண்டுதான் சூரியனையே நாம் காண முடிகிறது. இந் நிலையில் நம்முடைய கண்ணொளியும் சூரிய ஒளியும் இணைந்து விடுகின்றன. இவ் வுறவினை அத்துவிதம் அல்லது அநந்நியம் என்று குறிப்பிடுவதுண்டு. அதன் பொருள், சூரிய ஒளியும் கண்ணொளியும் வெவ்வேறல்ல என்பதாம். இருந்த போதிலும், இந்தியத் தத்துவத் துறையில் 'அத்துவிதம்' மிக்க சிறப்பினைப் பெற்றுள்ளதோர் சொல்லாகையால், சைவ சித்தாந்தத்தில் அந்தச் சொல்லுக்கு அளிக்கப்பட்டுள்ள தனிச் சிறப்பினை எடுத்துக் கூறுவது சாலச்சிறந்ததெனக் கருதுகிறேன்.

ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் உறவு உண்டு என்பதைப் பற்றி எவ்விதச் சந்தேகங்களோ, அபிப்பிராய பேதங்களோ இல்லை. ஆனல், அவ் வுறவு எத்தன்மையது என்பதைப் பற்றித் தான் வேறுபாடுள்ள கருத்துகள் நிலவுகின்றன.[61] அவற்றில் முக்கியமானவை, ஐக்கியம், தாதாத்மியம், சையோகம் முதலியனவாம். ஐக்கியம் என்பது, ஒரே தன்மையுடைய இரு பொருள்களிடையே ஏற்படும் உறவாம்; உதாரணமாகக் கூறப்படுவது நதியும் கடலும் இணைவதாம். தாதாத்மியம் என்பது ஒரு

[51] சைவத்தின் பிரிவுகள் : சமயவாழ்விற்கு இன்றியமையாததெனக் கருதப்படும் அறக்கட்டளைகள், மூன்றும் தமிழ்ச் சங்க இலக்கிய நூல்களில் எவ்வாறு கூறப்பட்டிருந்தன என்பதை ஒருவாறு உணர்ந்தோம். அதைப் போன்றே சமயக் கருத்துகளும், அவற்றில் சிவ-வழிபாட்டிற்கு முதலிடமும் தரப்பெற்றிருந்தன என்னும் கருத்தினை வலியுறுத்தியுள்ள இலக்கியச் சான்றுகளை வாசகர்களின் ஆராய்ச்சிச் சிந்தனையின் முன் சமர்ப்பிக்கிறேன். உதாரணமாகச் சிலப்பதிகாரம், மணிமேகலை, மதுரைக் காஞ்சி போன்ற நூல்களில், அக்காலத்திய கோயில்களின் வரிசையைக் குறிக்கும் இடங்களில் எல்லாம் சிவபெருமானின் திருக்கோயிலே முதன்மைபெற்று விளங்கியதாம் என்னும் கருத்தினை வலியுறுத்தும் செய்யுட்பகுதிகள் பின்வருவனவாம் :

பொருளுக்கும், அதன் தன்மைக்கும் உள்ள உறவாம்; உதாரண மாகக் கூறப்படுவது மலரும் மணமும் இணைந்துள்ள நிலையாம். சையோகம் என்பது, இணைபிரியா உறவாம்; உதாரணமாகக் கூறப்படுவது கையிலுள்ள விரல்கள் இணைந்துள்ள நிலையாம். அத்துவிதம் என்பது, முன்பே குறிப்பிட்டதுபோல் இரண்டறக் கலக்கும் நிலையாம்; உதாரணமாகக் கூறப்படுவது கண்ணொளி

‘பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்’

‘நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலும்
உவணச் சேவல் உயர்ந்தோன் நியமமும்
மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்
‘கோழிச் சேவல் கொடியோன் கோட்டமும்’

‘நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துப் பூத மீருக.’

முன் இரண்டு செய்யுட் பகுதிகளும் சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் கூறியுள்ளனவாம்; இளங்கோ அடிகள் சமணத்துறவியாக மாறியவர் என்பதும் குறிப்பிடத்தகும். மூன்றும் செய்யுள் மணிமேகலையில் சீத்தலைச் சாத்தனுர் கூறியுள்ளதாம்: இவர் பௌத்தராக மாறியவர் என்பதும் குறிப்பிடத்தகும். அவ்வாறிருந்தபோதிலும், சைவசமயத்தின் முதற் கடவுளாகிய சிவனுக்குப் புறச் சமயத்தாரெனக் கருதப்படுபவர்களும் முதலிடம் கொடுத்துள்ளனர் என்பதைச் சற்று நிதானமாகவே சிந்தித்துப் பார்த்தால், சிலப்பதிகார மணிமேகலை காலத்திலேயே, தமிழகத்தில் சைவசமயம் பெற்றிருந்த சிறப்பும் பெருமையும் எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ? இவ் வினுவிற்கு உடனடியான விடையைத் தங்களிடமிருந்து நான் நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை; உங்களுடைய தெளிவான சிந்தனையைப் பயன்படுத்துங்கள்; உண்மையான விடையையும் உணர் வீர்கள். மேலும் இளங்கோ அடிகள், சீத்தலைச் சாத்தனுர் போன்ருேரின் கருத்துகளிலிருந்து, புறச்சமயிகளாயினும் அவர்களுடைய சமய வேறு பாடற்ற பரந்த மனப்பான்மையும் நல்லுள்ளமும் நன்கு விளங்குவதாகும். அச் சான்ருேர்களின் கருத்தினை ஆதரித்துக் கூறும் தன்மையில், மதுரைக் காஞ்சியில் கூறப்பட்டுள்ளதும் கவனிக்கற்பாலது:

‘நீரும் நிலனும் தீயும் வளியு
மாக விசும்போ டைந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவனுக.’

ஆராய்ச்சி வல்லுநர்களால் ஏறக்குறைய மூன்றும் நூற்ருண்டில் (300 A.D.) தமிழகத்தில் வாழ்ந்தவர் எனக் கருதப்படும் திருமூலர் காலத் திலேயே சைவ சமயம் பல்வேறு பிரிவுகளைப் பெற்றிருந்ததெனக் கூறப் பட்டுள்ளது. அவற்றினையும் சிறிது விளக்கிக் கூறுதல் பயனுடையதாகு மெனக் கருதுகிறேன்.

(அ) சுத்த சைவம்: பதி, பசு, பாசம் என்பவற்றின் உண்மை நிலையை உணர்ந்தவரே சுத்தசைவர் எனப்படுவர்; சித் என்னும் அறிவை, அசித் என்னும் அறியாமையால் கெடாமற் பார்த்துக்கொள்வர். சுத்த

யும் சூரிய ஒளியும் இணையும் நிலையாம். முதலாவதாகக் கூறப்பட்ட ஐக்கிய நிலையை ஒத்துக்கொள்வதற்கில்லை. ஏனென்றால், ஐக்கியம் ஏற்பட வேண்டுமென்றால், இரு பொருள்களின் இருப்பும் இன்றியமையாததாம். இரண்டாவதாகக் கூறப்பட்ட தாதாத்மிய நிலையையும் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஏனென்றால், ஆன்மா இறைவனின் ஒரு பகுதியன்று. சையோக நிலையையும் ஏற்றுக்

மாயையுடன் அசுத்தமாயையைக் கலக்கவிடார். என்றும் மாறுததாகிய பதி நித்தமென்றும், அதனை உணர்வதற்குச் சிறந்தது ஞான மார்க்கமே என்பன போன்ற கருத்துகளை வலியுறுத்துவராம்.

(ஆ) அசுத்த சைவர்: காதில் குண்டலங்களை அணிவர்: உடம்பில் திருநீறு பூசுவர்; கழுத்தில் உத்திராட்ச மாலையை அணிவர்; சரியை, கிரியை வழியே நிற்பர்; உபதேசம் பெற்று மந்திரங்களைச் செபித்துக் கொண்டிருப்பர்.

(இ) மார்க்க சைவர்: காதில் குண்டலங்களை அணிவர்; உடம்பில் திருநீறு பூசுவர்; புறவேடத்திற்கு மிகுந்த மதிப்புதாரார். ஞானமார்க்கத்தின் சிறப்பினை வலியுறுத்துவர்.

(ஈ) கடுஞ்சுத்தசைவர்: பொதுவாகச் சைவர்க்குரிய புறவேடங்களில் கவனம் செலுத்தார்; நேரே சிவத்திடம் சென்று தங்கள் பாச, பசுத் தன்மைகளை ஒழித்துச் சிவஞானத்தைப் பெறுவதையே வலியுறுத்துவர். இத் தீவிரக் கொள்கையை அனுசரித்தோரில் ஒருவர் கண்ணப்ப நாயனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ) சாக்தேயம்: சத்தி வழிபாடாகிய இதனைக் கொற்றவை வழிபாடு என்றும் கூறுவர். இச் செய்தி தொல்காப்பியத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், கொற்றவை என வேடர்கள் தொழுத விவரங்களைப் பற்றிச் சிலப்பதிகாரத்திலும் கூறப்பட்டுள்ளது. கொற்றவை என்னும் பெயரைத் தவிர வேறு பெயர்களும் சத்திக்குக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன: கௌரி, சமரி, சூலி, நீலி, திருமாலின் தங்கை, நெற்றிக் கண்ணையுடையவள் முதலியனவாம். இப் பெயர்களிலிருந்து கொற்றவை என்பது சிவத்தின் மறுபாதியாகிய சத்தியே என்பது நன்கு விளங்குவதாகும். எனினும், சத்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டதால், 'வாமம்' என்று பெயர்பெற்றுள்ளதாம்.

(ஊ) காணபத்தியம்: விநாயகர் வழிபாடு. கபிலதேவநாயனர் விநாயகர் மீது இருபது செய்யுட்களைப் பாடியுள்ளார். விநாயகரை மூத்த பிள்ளையார் என்னும் பெயராலும் அக்காலத்திலேயே குறிப்பிடப்படுவதுண்டாம்; அஃதாவது, சிவபெருமானின் மூத்த பிள்ளை கணபதி என்பது பொருள். பூத கணங்களுக்குத்தலைவன் என்னும் பொருளினல் 'கணபதி' என்னும் பெயரும், தொடங்கும் செயல்களை இடரின்றி நிறைவேற்றும் தலைவன் என்னும் கருத்தில் 'விக்கினேசுவரன்' என்னும் பெயரும் உண்டு. இவ்வாறு விநாயகரையே முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயமே காணபத்தியம் எனப்படும்.

(எ) கௌமாரம்: முருக வழிபாடு. பரிபாடலிலும், கலித்தொகையிலும் முருகன் சிவபெருமானின் இரண்டாவது பிள்ளை என்று குறிக்கப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படையில் ஆறு தலங்கள் முருகனுக்கு உவந்த

கொள்வதற்கில்லை. ஏனென்றால், ஆன்மா இறைவனோடு இணை பிரியாமல் இணைந்துள்ளதென்று கூறுவது பொருந்தாதாம். அத்துவித நிலை என்பதே பொருத்தமுடையதாம். ஏனென்றால், ஆன்மாவை இறைவன் இயக்குவது இரண்டறக் கலத்தலால் ஏற்படும் உறவினாலேயாம். முன்பு கூறிய உதாரணமாகிய சூரிய ஒளியும் கண்ணொளியும் இரண்டறக் கலத்தலினாலேயே நம்மை நாமே

இடங்களாகக் கூறப்பட்டுள்ளன. அவையாவன: திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்); திருஆவினன்குடி (பழநி): திருவேரகம் (சுவாமிமலை); பழமுதிர்சோலை (அழகர்மலை); குன்றுதோராடல். முருக வழிபாட்டைப்பற்றிய பழந்தமிழ்ச் செய்திகள் திருமுருகாற்றுப்படையிலும் சிலப்பதிகாரத்திலும் சொல்லப்பட்டுள்ளனவாம்.

(ஏ) வீரசைவம்: திருமூலர் காலத்திலேயே வீரசைவம் தமிழகத்தில் பரவியிருந்ததாகக் கூறப்படுகிறது; இந்நெறியாளர் வீரசைவர் என்றும், லிங்காயத்துகள் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் சிவனை இலிங்க வடிவில் வழிபட்டனர்; இலிங்கத்தை மார்பில் தொங்கவிட்டிருந்தனராம் சிவசத்தியே கடவுளாகவும் ஆன்மாவாகவும் பிரிந்துள்ளது; நெறி வழுவாது பத்தி செலுத்துதலே சிவனை அடையும் வழியாம். இச் சமயத்தை முதலில் தோற்றுவித்தவர்கள் ஐந்து துறவிகள் என்றும் கூறப்பட்டுள்ளது; அத் துறவிகள் ஒவ்வொருவரும் ஒரு மடத்தின் தலைவரானார்களாம்; அம் மடங்கள் கேதாரம், ஸ்ரீ சைலம், பொலகல்தர் (மேற்கு மைசூர்); உச்சயினி, காசி முதலிய இடங்களில் இருந்தனவாம்.

இதுகாறும் சைவசமயத்தின் பழமையினையும், அவற்றில் தோன்றிய பல்வேறு பிரிவுகளையும் அறிந்தோம். இனி தத்துவக் கருத்துகளையே வலியுறுத்திய சித்தாந்தத்தின் பல்வேறு பிரிவுகளையும் தெரிந்து கொள்வோமாக.

(அ) பாசுபதம்: ஆன்மாக்களுக்கு ஆணவம் இல்லை; மாயை, கன்மம் ஆகிய இருதளைகளால் கட்டுண்டு ஆன்மாக்கள் இன்பதுன்பங்களை அனுபவிக்கும்; அவற்றில் விரக்தி ஏற்படும்பொழுது சாத்திர முறையான் தீக்கை பெற்றவனிடமே சிவஞானம் ஏற்படுமாம்; அந்நிலையில் ஆன்மாவிடம் சிவத்தன்மைகளே மேலோங்கி நிற்குமாம் என்பதே பாசுபதர் கொள்கை. இவர்கள் தங்கள் உடம்பில் சாம்பலையும் களிமண்ணையும் பூசிக்கொள்வர்; கறுப்புடைகளை அணிவர்; தலை மயிரை முடியிடாமலும் முடியிட்டுக் கொள்வர்; இவர்கள் இதிகாச காலமுதலே தமிழகத்திலும் இந்தியாவின் மற்றப் பாகங்களிலும் வசித்து வந்தனர் என்றும் அறியப்படுகின்றது. இச்சமயத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலிய மார்க்கங்களும் வலியுறுத்தப்பட்டுள்ளன; வணங்கும் தெய்வம் பசுபதி என்பர்.

(ஆ) மாவிரதம்: பாசுபதக் கொள்கையில் கூறப்பெற்ற ஆன்மாக்கள் பந்தமுற்று இன்பதுன்பங்களை அனுபவிக்கும்; சாத்திரத்திற் கூறும் முறையே தீக்கை பெற்று, எலும்பு மாலை அணிதல் ஆகிய சரியைகளில் வழுவாது ஒழுகினவர் முத்தராவர்; முத்தருக்குச் சிவனோடு சமமான எல்லாக் குணங்களும் ஏற்படும் என்பது மாவிரதியர் கொள்கையாகும். நெற்றியில் மூன்று கீற்றுகளாகத் திருநீறு பூசுவர்; உடல் முழுவதும் நீறு பூசினர்; தலைமயிர் உச்சியில் எலும்பு மணிகள் கட்டியிருந்தனர்; காதிலும் எலும்பு மணிகளைக் குண்டலங்களாக அணிந்திருந்தனர்; கழுத்தில் எலும்பு மணித்தாழ்வடம் — ஒரு முன்கையில் எலும்பு மணி கோத்த கயிறு கட்டியிருந்தனர். தோளில் யோகப்பட்டிகையும், கறுப்பு மயிர்க் கற்றையாலான பூணூலும் அணிந்தனர். கோவணமும் அதன்மேல் அசைந்தாடும் சிறிய வுடையும் அணிந்தனர். மண்டையோட்டில் பிச்சையேற்று உண்பதும், சாம்பலை உடம்பு முழுவதும் பூசிக்கொள்ளுவதும் மாவிரதிகள் ஏற்றுக்

பார்க்கவும், சூரியனைப் பார்க்கவும் இயலுவதைப்போலாம். இரண்டறக் கலத்தலாகிய இந் நிலையினைச் சுத்தாத்வைதம் என்று கூறுவர் சித்தாந்திகள். சுத்தம் என்பது தூய்மையைக் குறிப்பதாகும்.

சுத்தாத்வைதம் என்னும் தத்துவத்தின் சிறப்பினை இனி விளக்குவோமாக. இறைவன், ஆன்மா என்னும் இருமைப்

(இ) காபாலம்: ஆன்மாக்களின் இயல்பும் பாசத் தளைகளின் தன்மையும் மாவிரதிகள் கொண்டவாறேயாம். சாத்திரமுறையே திக்கை பெற்றுப் பச்சைக்கொடி ஒன்று கைக்கொண்டு, கபாலத்தைக் கையில் ஏந்திப் பிச்சை எடுத்து உண்பதையே நடைமுறையாகக் கொண்டனர். முத்தராய்ச் சிவன் ஆவேசித்தலால் எல்லாக் குணங்களும் பெற்றுச் சிவசமமாவர் என்பது கபாலிகர் கொள்கையாம். கபாலிகக் கொள்கையும் பாசுபதக் கொள்கைகளைப் போலவே மிகவும் பழமையானதாம். கபாலிகர் சிவனைக் கொடிய பைரவ வடிவில் வணங்கினர்; இவர்கள் உடம்பில் நீறு பூசினர்; கபாலங்களால் ஆகிய மாலையை அணிந்திருந்தனர்; ஜடை உடையவர்; புலித் தோலாலான கௌபீனத்தை அணிந்திருந்தனர். இடக் கையில் கபாலம் ஏந்தியிருந்தனர்; இவர்கள் நரபலியிலும் ஈடுபடுவதுண்டாம்.

(ஈ) வாமர்: சடமும் சித்துமாகிய அனைத்தும் சத்தியின் பரிணாமமே என்பதும், வாமநூலில் விதித்த முறையே ஒழுகிச் சத்தியில் லயித்தலே முத்தி என்பதும் வாம மார்க்கத்தினர் ஏற்றுக்கொண்ட கொள்கைகளாம். சத்தி வழிபாட்டினையே வலியுறுத்துவதால் இவர்களைச் சாக்தர்களென்றும் அழைப்பர்.

(உ) பைரவர்: பெரும்பாலும் வாம மார்க்கத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகளை ஒப்புக்கொண்டு பைரவனே (வைரவனே) பரம்பொருளென்றும், அதில் இலயித்தலே முத்தி என்பதும் பைரவருடைய கொள்கைகளாம்.

(ஊ) சைவம்: சிவனையே முழுமுதற் கடவுளாகக்கொண்டு, சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்களாலும் சிவனை அடையப் பாடுபடும் சமயமே சைவம் என்பர். பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மையை ஏற்றுக்கொண்டவராவர். ஆகமவிதிகளை அனுசரித்துச் சமயநெறிகளைப் பின்பற்றுவதை வலியுறுத்தினர்.

இதுகாறும் விளக்கிய சித்தாந்தத்தின் ஆறு பிரிவுகளை வேதாந்தத்தின் ஆறு பிரிவுகளாகக் கருதப்படும் நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாஞ்சகம், வேதாந்தம் ஆகியவற்றோடும் ஒப்பிட்டுக் கூறுவர்.

(எ) காஷ்மீர சைவம்: காஷ்மீர நாட்டில் தோன்றியதால் அப் பெயர் பெற்றதென்பது சொல்லாமலே விளங்கும். இதற்கு மூலநூல் சைவ-சூத்திரம் என்று கூறப்பட்டுள்ளது. ஒன்பதாம் நூற்றாண்டில் காஷ்மீரத்தில் வாழ்ந்துவந்த வாசுகுப்தர் என்பாருக்கு இறையருளால் சைவக் கருத்துகள் உணர்த்தப்பட்டுச் சைவ சூத்திரங்களாக வெளிப்பட்டன என்று கூறப்பட்டுள்ளது. காஷ்மீர சைவத்தின் முக்கியக் கருத்துகளாவன: உலகம், உயிரினங்கள், இறைவன் என்று குறிப்பிடப்படும் முப்பொருள்களும் ஒரே அடிப்படையைக் கொண்டுள்ளனவாம்; அவ்வடிப்படையின் தன்மையே பேருணர்வாம். அவ்வுணர்வின் (Consiousness) பரிணாமமே மூவகைப் பொருள்களாகத் தோன்றுகின்றன. இக்கருத்துகளிலிருந்து வெளிப்படும் மற்றுமோர் தன்மையும் கவனிக்கற்பாலது காஷ்மீர சைவம் ஒருமைக்

பொருளை மறுத்துக் கூறுவதே அத்துவித உறவு எனலாம். அவ்வுறவின் தூய்மையை எடுத்துக்காட்டுவதற்கே சுத்தாத்வைதம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அறியாமையினின்று அகன்ற ஆன்மாக்களோடு மட்டுமல்லாமல், அறியாமையில் உழன்று கொண்டிருக்கும் சகல சிவராசிகளோடும், அவர்களின் கன்ம வினைகளுக்கேற்ப இன்ப துன்பங்களை நுகர்வதற்கமைந்த உலகங்களோடும் இறைவன் தொடர்பு கொண்டியங்குவது அத்துவித உறவின் அடிப்படையிலேயே என்னும் கருத்தினை மெய்கண்ட தேவர் வலியுறுத்தியிருக்கிறார் என்பதும் வாசகர்களின் கவனத்திற்குரியதாகுக. மெய்கண்டதேவர் எடுத்துக்கூறிய இப் பெருண்மையைத் தாயுமானவரும் சுட்டிக்காட்டியுள்ளது உணரற்பாலது:

> 'பொய்கண்டார் காணாப் புனிதமெனும்
> அத்துவித மெய்கண்டநாதன்.'

இவ்வாறு மெய்கண்டதேவர் எடுத்துக் கூறியுள்ள சுத்தாத்வைத தத்துவம் சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்துகளை வலியுறுத்திக் கூறும் தன்மையிலேயே அமைந்துள்ளதும் கவனிக்கற்பாலது. சித்தாந்திகள், இறைவன், ஆன்மாக்கள், உலகம் (பதி — பசு — பாசம்) ஆகிய முப் பொருள்கள் நித்தியமானவை என்னும் கொள்கையை ஒப்புக்கொண்டுள்ளனர். எனினும், சுத்தாத்வைத தத்துவத்தின் சிறப்பினை எல்லோராலும் உணர முடியாதாம். சிவஞானத்தைப் பெற்றோரே அச் சிறப்பினை உணர இயலுமாம். வாழ்க்கை என்பதே உயிரும் உடலும் கொண்டுள்ள உறவினையே குறிப்பதாம். இதுவே வேதங்களின் தத்துவமாகும்.

கொள்கையை (Monistic view) வலியுறுத்துகிறது. இக் கருத்துகளையொட்டியே பிரத்யாபிச்ன சைவமும் தோன்றியதாம். அதனைப் பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த சோமானந்தர் என்பர் இயற்றினார் என்றும், அதற்கு மூலநூல் பிரத்யாபிச்ன சாத்திரம் என்றும் கூறுவர்.

(ஏ) வீர சைவம்: திருமூலர் காலத்திலேயே வளர்ச்சி பெற்றிருந்த வீர சைவக் கருத்துகள் 12ஆம நூற்றாண்டில் மறுமலர்ச்சி பெற்றன. அதற்கு உறுதுணையாக யிருந்தவர் பசவர் என்பவராவர்: இவர் 12ஆம் நூற்றாண்டில் தக்காணத்தில் (Deccan) வாழ்ந்தவர் என்றும் கூறப்படுகிறது. வீர சைவம், சைவ ஆகமங்களை ஏற்றுக்கொண்டு, சிவத்தை முதற்கடவுளாகக் கொண்டது. சிவ-லிங்க வழிபாட்டையே வலியுறுத்தியதால், அதற்கு இலிங்காயதம் என்றும் பெயரிட்டழைக்கப்பட்டது. சிறு அளவில் அமைந்த சிவ-லிங்கத்தைக் கழுத்தில் அணிந்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது. அறியாமை நீங்கும்பொழுதுதான் ஆன்மாக்கள் இறைவனை அறியமுடியும் என்ற தத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

காஷ்மீர சைவம், வீர சைவம் ஆகியவற்றின் விளக்கமான விரிவுரைகளைக் கீழ்க்கண்ட நூல்களில் காணலாம்: Vaishnavism, Saivism and Other Minor Religions by R. G. Bhandarkar; Hindu Philosophy by Theos Bernard; A Handbook of Vira-Saivism by S. C. Nandimath.

அதனைத் தீர்மானமாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறியதே சைவ சித்தாந்தத்தின் தனிச் சிறப்பாகும் என்று சிவப்பிரகாசத்தில் (7) கூறியுள்ளார் உமாபதிசிவாசாரியர்:

'...உடலுயிர்கண் ணருக்கன்
அறிவொளிபோற் பிரிவரும்
அத்துவித மாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம்
சைவ சித்தாந்தத் திறன்.'

சுருங்கக் கூறின், சுத்தாத்வைத தத்துவத்தின் சிறப்பினை உணர்வதே 'பெருநூல் சொன்ன அறத்தினால் விளைவதாம்' என்று சுட்டிக்காட்டுகிறது சிவப்பிரகாசம். பெருநூல் சிவாகமங்களாம்; அவற்றிற் சொல்லப்பட்ட அறம் சிவபுண்ணியங்களாம். முற்பிறவிகளில் அப் புண்ணியங்களைத் தொடர்ந்து செய்ததன் பயனாக, இப் பிறவியில் ஏற்படுவதே சிவஞானமாம். அதன் பயனாகவே சுத்தாத்வைத தத்துவத்தை உணர முடியுமாம்.

சிவ ஞானத்தைப் பெற்றவர்கள் முத்தர்கள் என்று அழைக்கப்படுவர். மக்களிடையே வாழ்ந்து அவர்களுக்கு நல்வழி காட்டுவதே முத்தர்களின் சிறந்த பணியாகும். சித்தாந்திகள் முத்தி நிலையினை இருவகையாகக் கூறுவர். ஆன்மா உடலோடு இயங்குவது பதமுத்தி. உடலைவிட்டகன்ற நிலையினைப் பரமுத்தி என்று குறிப்பிடுவர். பரமுத்தி நிலையே ஆன்மாவின் 'இன்புறு நிலை' என்னும் கருத்தினை வலியுறுத்தி, அதனை மேலும் விளக்கிக் கூறுகிறார் உமாபதிசிவாசாரியர். பரமுத்தி நிலையில் இறைவனும் ஆன்மாவும் ஒன்றாகி விடுகின்றன என்று கூறினால் அது பொருந்தாதாம். ஏனென்றால், இறைவன் அருள் புரிகிறார் என்பதும், ஆன்மா நற்கதி பெற்று இன்புறுகிறதென்பதும் இயலாமற் போய் விடுமாம். அவ்வாறன்றி இறைவனும் ஆன்மாவும் தனித்தனியே இயங்குகின்றன என்று கூறினாலும் பொருந்தாதாம். ஏனென்றால், இரண்டறக் கலந்த அத்துவித நிலையிலேயே இறைவன் ஆன்மாவைப் பரிபாலிக்கின்றான் என்னும் கருத்தினை மறுப்பதாக அமைந்துவிடும். ஆகவே, பரமுத்தி நிலையில் ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் ஏற்படும் சுத்தாத்வைத உறவால், இறைவனும் ஆன்மாவும் ஒன்றல்ல, இரண்டுமல்ல என்னும் தத்துவத்தை உமாபதி சிவாசாரியர் அறிவுறுத்தியுள்ளார்:

'ஒன்றாலும் ஒன்றா திரண்டாலும் ஓசையெழா
தென்றாலொன் றன்றிரண்டு மில்.'

(திருவருட்பயன், 75)

பரமுத்தி நிலையில் ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் ஏற்படும் தத்துவாதீத உறவு மொழியாலும், எண்ணிக்கையாலும் விவரித்துக் கூறுவதற்கில்லையாம். எனவே, ஓர் உதாரணத்தின்மூலமாகத் தத்துவக் கருத்தினை உமாபதிசிவாசாரியர் எடுத்துக் கூறுகிறார். தாடலை என்னும் ஓரே சொல், இரு சொற்களால் உண்டாகியதாம். அச் சொற்கள் தாள், தலை என்பதாம். இவ்விரு சொற்களும் வெவ்வேறு பொருளைக் குறித்துத் தனித்து இயங்கும் தன்மையுடையன என்று தமிழ் இலக்கணம் கூறுகிறது. இருந்தபோதிலும், அவ்விரு சொற்களும் இணையும்பொழுது ஓரே சொல்லான தாடலை உண்டாகிறது. இந்த உதாரணத்தின் குறிக்கோளை நாம் மறந்துவிடலாகாது. இதைப்போன்றே மற்றோர் உதாரணமும் அருணந்திசிவாசாரியர் எடுத்துக் கூறுகிறார்:

> 'ஒன்றாகாமல் இரண்டாகாமல்
> ஒன்று மிரண்டு மின்றாகாமல்.'

இருபா இருபஃதில் எடுத்துக் கூறப்பட்டுள்ள இக் கருத்து சுவையுடையது மட்டுமன்று; ஆழமுடையதுமாகும். ஏனென்றால், பரமுத்தி நிலையில் ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் ஏற்படும் உறவை, ஒன்று, இரண்டு என்றும் எண்ணிக்கைகளால் விவரிக்க முடியாது. அப் பேருண்மையைச் சுட்டிக்காட்டுவதற்கே அவ்வெண்ணிக்கைகள் பயனுடையவையாம். சுருங்கக் கூறின், ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் உறவு ஏற்படுகிறதென்பது உண்மை; அதனை வார்த்தைகளால் வருணிக்க இயலாது என்பதும் உண்மை; அந் நிலையினை உணர்ந்து இன்புறுவதற்கே என்பதும் உண்மை. இன்புறும் நிலையில் வார்த்தைகளுக்கு இடமில்லையல்லவா? இக் கருத்தினைத்தான், சைவ ஆகமங்கள் பொதுவாகவும், சித்தாந்த சாத்திரங்களாகிய பதினான்கு தமிழ் நூல்களும் சிறப்பாகவும் எடுத்துக் கூறுகின்றனவாம். அப் பதினான்கு சாத்திரங்களுள் மூன்றனைக் குறிப்பிட்டுக் கூறுதல் சாலச் சிறந்ததெனக் கருதுகிறேன். அவையாவன: சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம்.

சித்தாந்த சாத்திரங்களில் முதலிடம் பெற்றுச் சிறப்புடன் விளங்குவது மெய்கண்டதேவரின் சிவஞானபோதம் என்பதை யாவரும் அறிவர். சிவஞானபோதம் என்பதே காரணப் பெயராக அமைந்தது என்பதும் கவனிக்கற்பாலது. ஏனென்றால், பொதுவாக எல்லோரும் ஓரளவு அறிவினைப் பெற்று அதனை அவரவர்களுடைய தன்மைகளுக்கேற்பப் பயன்படுத்துவர். சிறப்பாகச் சமயவாழ்வில் அர்ப்பணித்துக் கொண்டவர்கள், அவர்களுடைய அறிவினைத் தொடர்ந்து வளர்ச்சியடைவதில் நாட்டங்

கொண்டவர்கள் என்று கூறினல் அது மிகையாகாது. அவ்வாறுன தொடர்ந்த அறிவு வளர்ச்சியின் காரணமாக மேல்வாரியாகத் தெரிந்துகொள்ளும் பாசஞான நிலையிலிருந்து உயர்ந்து ஆழமாக அறிந்துகொள்ளும் பசுஞான நிலையை அடைகின்றனர். பசுஞான நிலையினின்றே பதிஞான நிலையினைப் பெறமுடியும்; பதிஞானத்தையே சிவஞானம் என்று சித்தாந்திகள் குறிப்பிடுவர். இவ்வாறு சிவஞானம் என்பது பெயர்ச் சொல்; போதம் என்பது வினைச்சொல், போதித்தல் என்பதாம். ஆகவே, சிவஞானத்தைப் போதித்ததால் ஏற்படுவது சிவஞான சித்தி என்பர். சித்தி என்பது பேறு என்று பொருளாகும். ஆன்மாவிற்குக் கிடைத்தற்கரிய பேறு, சிவஞான் போதத்தால் ஏற்பட்டுள்ளதாம். இவ்வாறு சிவஞான போதமும், சிவஞான சித்தியும் ஆன்மா நற்கதி பெறுவதற்குத் துணைபுரிவதே நோக்கமாகக் கொண்ட சாத்திரங்கள் என்பது விளங்கும். அவ்வாறு நற்கதி பெற்ற ஆன்மா எவ்வாறு இன்புறுகிறது என்பதனையே எடுத்துக் கூறுகிறது சிவப்பிரகாசம். ஆன்மாவிடத்தினிலே சிவஒளி பிரதிபலித்துப் பிரகாசிக்கிறதாம். அதுதான் 'இன்புறு நிலை' என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந் நிலையில் ஆன்மா பெறும் சிவ தரிசனமே ஆனந்தத் தாண்டவம் என்பர். ஆனந்தத் தாண்டவத்தில் அடங்கியுள்ள தத்துவக் கருத்துகள் அநேகம். அவற்றில் முக்கியமான சிலவற்றை எடுத்துக் கூறுதல் நலமாகுமெனக் கருதுகிறேன்.

மனிதனுடைய சிறப்பப் படைப்புகளில் ஒப்புயர்வற்ற பெருமையும் பேரழகும், கவிதை நயமும், கற்பனைத் திறனும் ஒருங்கே அமைந்த உன்னதப் படைப்பே நடராச வடிவம் என்று கூறினல் அது மிகையாகாது. சைவ சமய நெறிகளின் ஓவியமாகவும், சித்தாந்தத் தத்துவக் கருத்துகளின் சின்னமாகவும் அமைந்ததே நடராச வடிவம். சைவ மந்திரமாகிய பஞ்சாக்கரத்தின் பரபூரண உருவமே நடராச வடிவம் என்னும் கருத்தினையும் உண்மை விளக்கம் எடுத்துக் கூறியுள்ளது. உடுக்கை ஏந்திய கையினல் மாயையைப் போக்கி, நெருப்பேந்திய கையினல் வல்வினையை நீக்கி, ஆணவமலமான முயலகனை ஊன்றிய பாதத்தால் போக்கி, எடுத்த கரத்தால் அருள் பொழிந்து, தூக்கிய திருவடியினலே ஆன்மாவைப் பேரானந்தத்தில் தோயச் செய்தலே ஆனந்தத் தாண்டவம் குறிக்கும் தத்துவமாம். இவ்வாறு தத்துவக் கருத்துகளை அழகுடனும் அமைப்புடனும் எடுத்துக்காட்டும் நிலையிலுள்ள நடராசரின் திருஉருவத்தையும், அந் நிகழ்ச்சிதலமான சிதம்பரம் ஆகியவற்றின் அரிய தத்துவங்களையும் 'சிதம்பரரகசியம்' என்னும் நூலில் காண்க. இவையன்றி, ஆனந்தத் தாண்டவத்தின்

அழகினையும், அதனால் ஆன்மாக்கள் எய்தும் பேரானந்த நிலையினை யும் எடுத்துக் கூறி விளக்கியுள்ள பெரியோர்களுள் ஆனந்த குமாரசாமி அவர்கள் குறிப்பிடத்தக்கவராவர். நடராச வடிவத்தையும் பஞ்சகிருத்தியங்களையும் இணைத்துக் கூறுதலே சைவ மரபாயினும் வேறு சில நடவடிக்கைகளையும் குறிப்பிட்டுக் கூறுவர். அவ்வாறான நிகழ்ச்சிகளையெல்லாம் எடுத்துக் கூறுதல் இந் நிலையில் இயலாததாயினும், அந் நிகழ்ச்சிகளின் அடிப்படை நோக்கம் வினைப் பயன்களால் அவதியுறும் ஆன்மாக்களை ஈடேற்றி நற்கதிபெறச் செய்வதே என்பதை மட்டும் நிச்சயமாகவும் உறுதி யாகவும் எடுத்துக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். அதனால்தான், நடராச வடிவமே அருள் வடிவம் என்னும் கருத்தும் வலியுறுத்தப் பட்டுள்ளது.

சமய வாழ்க்கையில் முத்தர்களின் பணி

சிவஞான போதத்தில் திளைத்து, சிவஞான சித்தி பெற்று சிவப்பிரகாசமடைந்த பரமுத்தர்கள் இறைவனின் ஆனந்தத் தாண்டவத்தில் மூழ்கிப் பேரானந்தப் பேற்றை எய்துகின்றனர் என்பது இதுகாறும் விளக்கிக் கூறப்பட்டது. இனிப் பத முத்தர்கள் எவ்வாறு சமூகப் பணியே இறைபணி என்னும் கருத்துடன் நல்வாழ்வு வாழ்ந்து நல்வழி காட்டுகின்றனர் என் பதைச் சிறிது விளக்கிக் கூறுதல் பயனுடையதாம் எனக் கருது கிறேன். பதமுத்தர்கள் சீவன் முத்தர்களென்றும் அழைக்கப் படுவர். இச் சான்றோர்கள் பாசஞானம், பசு ஞானம் ஆகிய நிலைகளைக் கடந்து பதிஞானம் பெற்றவர்கள் ஆவர்; இறை வனின் அருட் செயல்களை நடத்தி வைப்பதையே தங்கள் கடமை என்று உணர்ந்து வாழ்வோர் ஆவர். இவ்வாறு தமக்காக வாழாமல் பிறருக்காகவே வாழ்ந்து, யாவற்றிலும் பற்றில்லாமல் இறைவனையே பற்றிக்கொண்டு கடமைகளைப் புரியும் கடமை வீரர்கள் என்று கூறுவோமானால், அதற்கு உதாரணமாக விளங்கு பவர்கள் சீவன் முத்தர்களே. இவ் வுண்மையினை எடுத்துக்காட் டும் தன்மையில் திருவள்ளுவர் கூறியுள்ள கருத்தும் கவனிக்கற் பாலது:

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.' (350)

யாதாயினும் ஒரு பொருளின்மேல் பற்றினை வைத்து, அப் பொருளினை அடைவதற்கு முயல்வதே மனித வாழ்க்கையின இயல்பு. அதனால், இன்பமும் துன்பமும் ஏற்பட்டு, அவற்றினை

அனுபவிப்பதன் வாயிலாகப் பிறப்பும் இறப்பும் நிகழ்ந்துகொண்டே இருக்கும். அவ்வாறான சுழற்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு இறைவனையே பற்றிக்கொள்வது சாலச் சிறந்ததென்னும் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. இறைவன் தனக்கென்று எப் பற்றும் இல்லாதவராகையால், சுதந்திரமானவர்: அவரைப் பற்றிக்கொள்வதால் நாமும் சுதந்திரமடைவது நிச்சயம். அந்நிலையில்தான் பிறப்பு—இறப்பு என்னும் சுழற்சியும் முடிவடையும்; அந் நிலையில் தான் நித்திய வாழ்வு உறுதிபெறும். இக் கருத்தினையும் திருவள்ளுவர் சுட்டிக்காட்டியுள்ளார்:

> 'பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
> நிலையாமை காணப் படும்.' (349)

இவ்வாறு தமக்கென்று எவ்விதப் பற்றும் இல்லாமல், இறைவனின் அருட் செயல்களையே பற்றிக்கொண்டு வாழும் முத்தர்களின் பணி இறைபணியாகும். சமூகத்திலுள்ளவர்களை இறை வழிப்படுத்தலே முத்தர்கள் செய்யும் நற்பணியாம். இறைவனின் திருவருளால் இயங்கும் முத்தர்கள் ஞானமும் கருணையும் ஒருங்கே அமைந்த உத்தமர்கள் ஆவர். சிவப்பிரகாசமே அவர்களின் உள்ளங்களில் பிரதிபலிப்பதால், தன்னலம், வெகுளி, அறியாமை ஆகியவற்றிற்கு அங்கு இடமே இல்லை. உள்ளம் முழுவதும் இறைவனே நிறைந்துள்ளான். உடல் முழுவதும் ஒழுக்கத்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. முத்தர்களின் இவ்வாறான உயர்ந்த தன்மைகளை தேவிகாலோத்தர ஆகமத்தில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளதும் கவனிக்கற்பாலது. 'காலோத்தரம்' என்பதன் பொருள் உயிர்களுடைய பக்குவ காலத்தில் உபதேசிக்கத்தக்க முடிவான ஞானமும், ஞானசாரமுமாம். அவற்றைத் தேவிக்கு உபதேசிக்கப்பட்டமையால் தேவிகாலோத்தரம் என்பது நூற் பெயராயிற்றென்பர்.

இவ்வாறு சமயவாழ்வின் சிகரமாக விளங்குபவர்கள் சீவன் முத்தர்கள் ஆவர். ஞானமும், கருணையும், அன்பும் ஒருங்கமைந்து நிகழும் அவர்களுடைய செயல்கள், சரியை, கிரியை, யோகம் முதலிய நிலைகளுக்கு அப்பாற்பட்டதாய் உயர்ந்ததென்பதும் கவனிக்கற்பாலது. மேலும் அச் செயல்கள் அனைத்தும், அவர்களைச் சூழ்ந்துள்ள மக்களின் நல்வாழ்விற்கும், நற்கதிக்கும் துணையாகவே அமைந்து விளங்குவனவாம். அதனால்தான், முத்தர்களின் பணி, இறைபணி என்று கூறப்படுகிறது. இவ்வாறு இறை பணியே பதமுத்தர்களின் வாழ்வாக அமைந்து, அது முடியும் நிலையில் பரமுத்தர்களாக, இறைவனின் சந்நிதியில் இடம்பெற்று நித்திய வாழ்வு எய்துவர் என்பதாம். மாணிக்கவாசகர்,

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய சைவப் பெருமக்கள், பதமுத்தர்களாய் இருந்து பின்னர் பரமுத்தி அடைந் தனர் என்று கூறப்பட்டுள்ளது. பதமுத்தர்களாய் விளங்கிய காலத்தில் அவர்கள் புரிந்த அருட் செயல்கள் அநேகம். அவர்கள் பாடிய புகழ்மாலேயே இறைவனின் பூமாலேயாகி நித்தியத் தன்மை பெற்று விளங்கும் தேவாரம் என்பதாம். இப் பூமாலேயின் மணம் பிறவியைப் போக்கும் நறுமணமாகிச் சிவத்தலங்கள் அனைத்திலும் சிறப்புற்று விளங்குவது சைவப் பெருமக்கள் அனைவரும் அறிந் ததே. எனினும், தேடிவரும் யாவருக்கும் தெவிட்டாத இன்பம் தந்து, தீரா வினைகளையும் தீர்த்துப் பேரானந்தத்தையும் பெரு வாழ்வையும் பெறச் செய்யும் இப் பாமாலைகள் மனித இனத் திற்கே சொந்தமான அழியாச் செல்வம் என்பதே அடியேனின் அபிப்பிராயம். அடியேனின் அபிப்பிராயத்தையும் ஆதரித்து அடியார்களின் அல்லல்களைத் தீர்த்து அழியாச் செல்வத்தினை அளிக்குமாறு அடிபணிந்து முறையிட்ட பட்டினத்தடிகளின் விண் ணப்பத்தை இறைவனடிக்குச் சமர்ப்பித்து இந் நூலை முடிக்கிறேன்:

'கொல்லாமற் கொன்றதைத் தின்னமற் கோள்களவு
கல்லாமற் கைதவரோ டிணங்காமற் கனவிலும்பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையில்
செல்லாமற் செல்வந் தருவாய், சிதம்பர தேசிகனே!'

மேற்கோள் நூற்பட்டியல்
(BIBLIOGRAPHY)

தமிழ்

1. 'இருபா இருபஃது,' அருணந்தி சிவாசாரியர்.
2. 'உண்மை விளக்கம்,' மனவாசகங் கடந்தார்.
3. 'சிவஞான போதம்,' மெய்கண்டதேவர்.
4. 'சிவஞான சித்தியார்,' அருணந்தி சிவாசாரியர்.
5. 'சிவஞான சுவாமிகள் வரலாறும் நூலாராய்ச்சியும்,' சுப்பிரமணிய பிள்ளை (கா)
6. 'சித்தாந்த சைவ விஞ-விடை,' தருமபுர ஆதீன வெளியீடு, 1953.
7. 'சிவப்பிரகாசம் சீர்மைக் கட்டுரை,' ,, 1961.
8. 'சிவப்பிரகாசம்,' உமாபதி சிவாசாரியர்.
9. 'சிலப்பதிகாரம்,' இளங்கோ அடிகள்.
10. 'சிதம்பர ரகசியம்,' கோபால் செட்டி (தி)
11. 'சைவ சித்தாந்த உரைக் கொத்து,' சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழக வெளியீடு.
12. 'சைவ சமயம்,' அருணசலம் (மு)
13. 'சைவ சமய வளர்ச்சி,' இராசமாணிக்கனர் (ம)
14. 'தமிழ் இந்தியா,' கந்தையா பிள்ளை (ந.சி.)
15. 'தருக்கவியல் விளக்கம்,' முருகவேள் (ந. ரா.)
16. 'திருவருட்பா,' இராமலிங்க அடிகள்.

17. 'திருமந்திரம்,' திருமூலர்.

18. 'திரு உந்தியார்,' உய்யவந்த தேவர் (திருவியலூர்)

19. 'திருக்களிற்றுப்படியார்,' உய்யவந்த தேவர் (திருக்கடவூர்)

20. 'திருக்குறள்,' திருவள்ளுவர்.

21. 'திருக்குறள் தெளிவுரை,' வரதராசனார் (மு.)

22. 'தேவிகாலோத்தர ஆகமம்,' முத்தையா பிள்ளை (பி.)

23. 'தொல்காப்பியம்,' தொல்காப்பியனார்.

24. 'பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்,' சங்ககாலப் புலவர்கள்.

25. 'புறநானூறு,' சங்ககாலப் புலவர்கள்.

26. 'மணிமேகலை,' சீத்தலைச் சாத்தனார்.

27. 'குமரகுருபரன்,' திங்கள் மலர் 1963—'64 ஸ்ரீவைகுண்டம்-திருநெல்வேலி.

28. 'ஞானசம்பந்தம்,' திங்கள் மலர் 1963—'64. தருமபுர ஆதீனம்.

ஆங்கிலம்

1. 'Ancient and Modern Tamil Poets,' Maraimalai Adikal.

2. 'A History of Indian Philosophy,' Vol. V, Surendranath Dasgupta.

3. 'A Logical Presentation of the Saiva Siddhanta Philosophy,' John H. Piet.

4. 'Essentials of Hinduism in the Light of Saiva Siddhanta,' Sabaratna Mudaliar (S.)

5. 'Essentials of Indian Philosophy,' Hiriyanna (M.)

6. 'Gotama the Man,' Rhys Davids (Mrs.)

7. 'Indian Buddhism,' Rhys Davids (T. W.)

8. 'Isvarakrishna Sankhya Karika,' Isvarakrishna.

9. 'Indian Philosophy', Vols 1 and II, Radhakrishnan (S.)

10. 'Introduction to Indian Philosophy,' Datta and Chatterji.

11. 'Nature of Consciousness in Hindu Philosophy,' Saksena.

12. 'Outlines of Indian Philosophy,' Hiriyanna (M.)

13. 'Outlines of Hinduism,' Mahadevan (T. M. P.)

14. 'Philosophical Foundations of India,' Thevs Bernard.

15. 'Psalms of a Saiva Saint,' Isaac Tambyah.

16. 'Saivism,' Dharmapura Adhinam 1949.

17. 'The Studies in Saiva Siddhanta,' Nallasamy Pillai (J. M.)

18. 'The Nature of the Jiva,' Nallasamy Pillai (J. M.)

19. 'The Religion and Philosophy of Thevaram,' Durai Rangasamy (Dr.)

20. 'The Metaphysics of the Saiva Siddhanta System,' Subramaniya Pilli (K.)

21. 'Vaishnavism, Saivism and Other Minor Religious Systems,' Bhandarkar (R. G.)

22. 'Vocabulary of Philosophy,' William Fleming (D. D.)

23. 'What is Hinduism?,' Sarma (S.)

24. 'Yoga Sutra,' Patanjali.

கலைச்சொற்கள்

அ

அகரம்	—	A
அக இயலான	—	Subjective
அகம்	—	Self
அக உணர்வு	—	Self-realisation
அகக் காட்சி; அகநோக்கு	—	Introspection
அகிம்சை	—	Ahimsa; Non-violence
அடிப்படை, கோட்பாடு	—	Principle
அடிப்படைத் தத்துவம், அடிப்படை இயல், புலன்கடந்த பொருளியல்	—	Metaphysics
அடிப்படைக் காரண-காரிய உறவு	—	Principle of Causality
அடையாள முறை	—	Symbolism
அளவை இயல்	—	Logic
அழகு உணர்வாற்றல், அழகு இயல், சுவையுணர்வாற்றல்	—	Aesthetics
அறவியல்	—	Ethics
அறம், புண்ணியம்	—	Justice; Virtue
அறக்கட்டளை	—	Moral imperative
அறிவு (பிரமிதி)	—	Knowledge
அறிந்தவன் (பிரமாதா)	—	Knower
அறியப்படுபொருள் (பிரமேயம்)	—	Known (object)

அறிவற்ற, சட — Inert
அனைத்து இறைக்கொள்கை — Pantheism
அனுபவம் — Experience
அனுமானம்; ஊகித்தல் — Inference
அன்பு — Love
அணு — Atom
அண்டம், பிரபஞ்சம் — Universe
அருள் — Grace
அரசகட்டளை — Political imperative

ஆ

ஆகமம் — Seripture
ஆகாயம் — Akasa; Space
ஆக்கம் — Power
ஆசிரியர், குரு — Teacher
ஆன்மா — Atma
ஆண்டவர், கடவுள், இறைவன் — God
ஆளுமை — Personality
ஆழ்ந்த உள்ளம் — Unconscious mind
ஆழ்ந்த சிந்தனை — Contemplation
ஆத்திகர், மரபினர் — Orthodox

இ

இயல் — Literature, discourse
இசை — Music
இன்பம் — Happiness
இன்மை (அபாவம்) — Non-existence
இன்மைக் கொள்கை — Nihilism
இன்மை அறிவு (அநுபலப்தி) — Non-apprehension
இன்னா, தீமை — Himsa, Violence
இணைப்பு — Copula
இயற்றியான் — Creator, God
இயற்கை — Nature
இயற்கைக் கொள்கை — Naturalism
இயல்பாக — Natural

இயல்பூக்கம்	—	Instinct
இருப்பு, இருத்தல்	—	Existence
இருமைக் கொள்கை	—	Dualism
இல்-பொருள்	—	Non-entity
இல்லாதது தோன்றுது, உள்ளது அழியாது	—	Satk$\bar{a}$ryavadam
இறப்பிற்குப் பின் நிலை, மறுமை	—	Eschatology
இறைவன், ஆண்டவர், கடவுள்	—	God
இறைமை	—	Divinity; Sovereignty
இறை சங்கல்பம், சித்தம்	—	Will of God

ஈ

ஈர்ப்பு	—	Attraction
ஈதல்	—	To give
ஈசுவரன்	—	God, Siva

உ

உலகு	—	Humanity
உள்ளது	—	Existence
உள்ளம்	—	Mind
உள்ளமும் உடலும்	—	Mind and Body
உள்ளது அழியாது; இல்லாதது தோன்றுது	—	Satk$\bar{a}$ryavadam
உள்பொருள்	—	Reality
உள்ளீடு	—	Content
உள்ளுணர்வு	—	Intuition
உழன்று	—	Revolving round (births and deaths)
உடல், தேகம்	—	Body
உயிர், சீவன்	—	Soul, Jiva
உயிர்ப்படக்கம்	—	Third state of experience
உரை	—	Proposition
உரையாடுதல்	—	Discussion
உரை, சாற்று	—	Assertive proposition
உரை, பொது	—	Universal proposition

உரையளவை, ஆகமம்	— Scripture, Verbal testimony
உறவு	— Relation
உறவு (அக)	— Internal relation
உறவு (புற)	— External relation
உற்று நோக்கல்	— Observation
உற்பத்தி	— Creation
உருவமாற்றம்	— Change of form; Transformation
உருவகம்	— Metaphor
உவமை	— Similie
உணர்ச்சி	— Feeling
உணர்வு	— Consciousness, awareness
உணர்வு நிலைகள்	— States of Consciousness
உணர்வற்ற, சட	— Unconscious
உண்மை இயல், உள்ளதன் இயல்	— Ontology

ஊ

ஊக்கி	— Motive
ஊகித்தல், அனுமானம்	— Inference
ஊக்கம்	— Strength
ஊழ்	— Fate
ஊழ்க் கொள்கை	— Fatalism
ஊழ்வினை, சஞ்சித கன்மம்	— Past deeds; Sanchita karma

எ

எண்	— Number
எண்குணத்தான்	— Eight attributes of God
எண்ணுதல்	— Thinking
எண்ணம்	— Idea
எதிர்மறை, முரண்கருத்து	— Anti-thesis
எதிரிணைகள்	— Correlatives

ஏ

ஏலாமை (அப்பிரமாணியம்)	— Invalidity
ஏற்புடைமை (பிரமாணியம்)	— Validity

ஐ

ஐயுறு, சந்தேகம்	—	Doubt
ஐவகைத் தேகங்கள்	—	Five koshas
ஐந்திரியங்கள்	—	Five internal organs
ஐந்திணை	—	Five regions of land
ஐங்கூற்று முடிபு	—	Five membered syllogism

ஒ

ஒன்று, அது	—	One; It - Neutral gender
ஒருவன், அவன்	—	Man, He - Masculine gender
ஒருத்தி, அவள்	—	Woman, She-Feminine gender
ஒடுக்கம், பிரளயம்	—	Dissolution
ஒப்புமை, உவமானம்	—	Comparison
ஒருமைக் கொள்கை	—	Monism
ஒழுக்கம்	—	Discipline (Moral)
ஒழுங்குமுறை	—	Moral order
ஒற்றுமை	—	Unity
ஒற்றுமையும் வேற்றுமையும்	—	Unity - in - diversity
ஒருமையும் பன்மையும்	—	One - in - many
ஒருமைப் போக்கு	—	Syncretic spirit
ஓரிறைக் கொள்கை	—	Monotheism
ஓம், பிரணவமந்திரம்	—	Om, pranava mantra

க

கடவுள், ஆண்டவர், இறைவன்	—	God
கடவுள் கொள்கை	—	Theism
கடவுள்கொள்கை ஆளுமைச் சார்புள்ள	—	Personal Theism
கடவுள் கொள்கை, ஒன்று; ஓரிறைக் கொள்கை	—	Monotheism
கடவுள்கொள்கை, பல	—	Polytheism
கடமை	—	Obligation
கடமை (தன்பொருட்டு)	—	Personal obligation
கடமை (பிறர்பொருட்டு)	—	Social obligation

அறிவர்	Wisemen; Seers
அறிவளவை இயல்	Epistemology
கட்டளை	Imperative, command
கட்டளை (சார்பற்ற)	Categorical imperative
கட்டளை (சார்புள்ள)	Hypothetical imperative
கனவு	Dream
கல்வி	Education
கற்றல்	Learning
கற்பித்தல்	Teaching
கருத்து	Concept
கருத்துப் பொருள் கொள்கை	Idealism
கருத்திற்கும் பொருளுக்கும் உள்ள இணக்கம் பற்றிய கொள்கை	Correspondence theory
கருத்துநிலை ஒருமைக் கொள்கை	Idealistic monism
கருதுகோள்	Hypothesis
கலந்த நிலை	Immanence
கந்தழி, பரம்பொருள்	Absolute reality
காட்சி	Perception
காட்சி மனை	Museum
காட்சிப் பொருள் கொள்கை	Realism
காட்சிப் பொருள், பன்மைக் கொள்கை	Pluralistic realism
காரண-காரிய உறவு	Causation
காரணம்	Cause
காரணம் (உபாதானம்)	Material cause
காரணம் (நிமித்தம்)	Efficient cause
காரணம் (பயன்நிலை)	Final cause
காலச் சக்கரம்	Cyclic changes
காமுகன்	Sensualist
குலம்	Tribe
குலமரபுச் சின்னம்	Totem
குறிக்கோள்கள்	Ideals, Values
கூட்டு வழிபாடு	Collective worship
கூட்டு விவாதங்கள்	Panel discussions
கொள்கை	Doctrine, theory
கோட்பாடுகள், அடிப்படை	Principles
கைவல்யம், மோட்சம்	Liberation

ச

சடங்கு	—	Ritual
சடங்குக் கொள்கை	—	Ritualism
சடஆவிக் கொள்கை	—	Hylozoism
சடக் கொள்கை	—	Materialism
சடம், அறிவற்றது	—	Matter
சகிப்புத் தன்மை	—	Tolerance
சமயம்	—	Religion
சமயநூல்	—	Scripture religious work
சமுதாயம், சங்கம்	—	Society
சமூகச் சூழ்நிலை	—	Social environment
சமூகத்தில் பொருந்தி வாழல்	—	Social adjustment
சமூக நலன்	—	Social good
சமூகப் பொதுவுடைமைக் கொள்கை	—	Socialistic view
சிந்தனை	—	Thinking, Reason
சிற்றறிவு	—	Finite knowledge
சிற்சத்தி	—	Divine knowledge
சுவை உணர்வாற்றல், அழகுணர்வாற்றல்	—	Aesthetic appreciation
சொற்போர்	—	Debate
சூரியன்	—	Sun
சூக்குமப் பொருள்	—	Substance

த

தத்துவம், மெய்ப் பொருளியல்	—	Philosophy
தத்துவ மேதை, ஞானி	—	Philosopher
தத்துவ நிலை, ஒருகடவுள் கொள்கை, ஓரிறைக் கொள்கை	—	Philosophic Monotheism
தற்செயல் நிகழ்ச்சி	—	Chance, accident
தற்செயல் நிகழ்ச்சிக் கொள்கை	—	Accidentalism
தற்பயிற்சி	—	Self - training
தன்னலம்	—	Selfish, egoistic

தனித்தன்மை	—	Individuality
தன்னிறைவு	—	Self-sufficiency
தன்மாத்திரைகள்	—	Subtle elements
தாரணை	—	Concentration
தியானம்	—	Meditation
திரிபுக் காட்சி	—	Illusion
திருமறை	—	Canon (religious)
திருமேனி பற்றிய நம்பிக்கை	—	Belief in personality (of God)
தீமை, இன்னா	—	Evil
தீமை, அறநிலை (பாவம்)	—	Moral evil; Sin
தீர்வு	—	Solution
தீர்ப்பு	—	Judgement
துன்பம்	—	Evil (physical)
துறவு	—	Renunciation
துறவி	—	Ascetic
தொகுப்புமுறை (அளவையியல்)	—	Deduction
தொழில் உறுப்புகள்; கன்மேந்திரியங்கள்	—	Motor organs
தோற்றம்	—	Appearance
தேவைகள்	—	Needs

ந

நடத்தை	—	Behaviour, Conduct
நனவு	—	Waking
நுகர்வோன் (போக்தா)	—	Enjoyer
நியதி	—	Process, law
நினைவு	—	Memory, remembering
நிறுவனம்	—	Institution
நுகர்வு, நுகர்தல்	—	Consumption
நுண்ணறிவு	—	Intelligence
நுண் கலைகள்	—	Five arts
நுண்முறை	—	Technique
நேரனுபவம்	—	Direct experience
நோக்கம்	—	Purpose

நோக்க அமைப்பு	— Teleology; Design
நோக்குடைச் செயல்	— Purposeful action

ப

பயன்	— Usefulness; Utility
பயனுடைமைக் கொள்கை	— Utilitarianism
பகுப்பு முறை	— Induction
பகுத்தறிவுக் கொள்கை	— Rationalism
பட்டி மன்றம்	— Club, debating
பரம்பொருள், கந்தழி	— Absolute Reality
பரம்பொருள் கொள்கை	— Absolutism
பரிணாமம்	— Evolution
பற்றுறுதி, வைராக்கியம்	— Detachment
புத்துணர்ச்சி	— New spirit
புத்தொளி	— Limelight
பழக்கங்கள்	— Habits
பழங்காலச் சமயம்	— Primitive religion
பாழ்	— Void
பிரச்சினை, சிக்கல்	— Problem
பிரபஞ்சம், அண்டம்	— Universe
பிரபஞ்ச இயல்	— Cosmology
பிரமாணம்	— Premise
பிரமாணம் (துணிபொருள் பத)	— Major premise
பிரமாணம் (பக்கப்பொருள் பத)	— Minor premise
பிழை, தவறு	— Error
புலன்கள்	— Senses
புலன்களைக் கடந்த	— Beyond senses; Suprasensible
புராணம், பழங் கதைகள்	— Mythology
புறச் சமயங்கள்	— Orthodox systems (religions)
புறத் தரிசனங்கள்	— Orthodox systems (philosophical)
புறப்புறச் சமயங்கள்	— Heterodox system (religions)
புறப்புறத் தரிசனங்கள்	— Heterodox systems (philosophical)
பேரின்பம், வீடு	— Bliss; Salvation
பேரினம்	— Genus

பொதுமை	—	Universal
பொதுவான	—	General; common
பொதுவான புலக்காட்சி	—	Common (ordinary) perception
பொருள் (திரவ்யம்) சூக்குமம்	—	Substance
பொறிகள், ஞானேந்திரியங்கள்	—	Sensory organs

ம

மத்திம பதம்	—	Middle term
மரபு	—	Tradition
மரபுவழி (ஆத்திகம்)	—	Orthodox
மரபுவழிவாரா (நாத்திகம்)	—	Heterodox
மறுமை	—	Immortality
மறுபிறப்பு	—	Rebirth
மறத்தல்	—	Forgetting
மனித இயல் பேற்றுக் கொள்கை	—	Anthropomorphism
மன்றம்	—	Club
மன்றம் (சொற்போர் நடைபெறும்)	—	Debating society
மூர்த்தம், வெளிப்பாடு	—	Manifestation, Revelation
முக்கூற்று முடிபு	—	Syllogism
முக்கூற்று முடிபு உருவம்	—	Syllogistic form
முதல் நிலை	—	Primary
முத்தர்	—	Perfected one, Mystics
முடிநிலை	—	Ultimate
முற்கோள்	—	Assumption; postulation
முற்றொருமை	—	Identity
முற்றொருமை, அகத்தன்மையில்	—	Identity of essence
முற்றொருமை வேற்றுமையில் (பேதாபேதம்)	—	Identity in difference
முன்னோர் வழிபாடு	—	Ancestor worship
மும்மலம்	—	Three malas - Anavam, kanmam and mayai
முழுமை	—	Whole, Totality

மாயைக் கொள்கை	—	Doctrine of maya
மோட்சம், கைவல்யம்	—	Liberation

வ

வரம்	—	Gift
வரம்பற்ற, எல்லையற்ற	—	Infinite; unlimited
வரம்புள்ள, எல்லைக்குட்பட்ட	—	Finite; limited
வரலாறு, சரித்திரம்	—	History
வரையறை	—	Definition
வரையறையற்ற (நிர்விகல்பக)	—	Indeterminate
வரையறையுள்ள (சவிகல்பக)	—	Determinate
வழக்காறு	—	Convention
வழக்கங்கள்	—	Usages
வழிகாட்டி	—	Guide
வழிபாடு	—	Worship
வழியளவை, அனுமானம்	—	Inference, Anumana
வாய்மை	—	Truth; Satya
வானம்	—	Sky
வானொலி	—	Radio
வினா	—	Question
விடை	—	Answer
விடுதலை, கட்டற்ற நிலை	—	Liberation
வீடு, பேரின்பம்	—	Salvation, Bliss
வெளிப்பாடு, முகூர்த்தம்	—	Manifestation; Revelation
வேள்வி	—	Sacrifice (ritual)
வேண்டுகோள், விண்ணப்பம்	—	Prayer
வேறான	—	Contrary
வேறுபாடு	—	Difference
வேறுபடுத்தும் தன்மை	—	Differentia
வெஃகுதல்	—	Coveting
வெஃகாமை	—	Non-coveteousness
வேடன்	—	Hunter
வேந்தன்	—	King
வேல்	—	Spear
வெல்க	—	Be successful
வாழ்க, வாழிய	—	Be blessed.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
சென்னை--600031

தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்
(Tamil Medium Books for Colleges)
1975 ஏப்ரல்வரை 650 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன

மேலும், விரைவில் வெளிவருபவை

பொறியியல்	...	39	நூல்கள்
சட்டம்	...	17	,,
மருத்துவம்	...	18	,,
இயற்பியல்	...	23	,,
வேதியியல்	...	20	,,
தாவரவியல்	...	13	,,
விலங்கியல்	...	14	,,
கணிதம்	...	17	,,
வணிகவியல்	...	37	,,
பொருளாதாரம்	...	21	,,
புவியியல்	...	11	,,
வரலாறு	...	29	,,
மனையியல்	...	1	,,
தத்துவம்	...	4	,,
உளவியல்	...	8	,,
புள்ளியியல்	...	8	,,
கல்வி	...	14	,,
நிலப்பொதியியல்	...	6	,,
அரசியல்	...	19	,,

கிடைக்குமிடம் :
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு
(கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகச் சுற்றுக்குள்)
கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை-600006

கல்லூரிப் பாடநூல்களுக்கு 20% கழிவு வழங்கப்படும்